எண்பத்து மூன்றில் தமிழ்

பகுதி - 2

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

டாக்டர் அன்னி தாமசு

எண்பத்து மூன்றில் தமிழ்

பகுதி-2

பதிப்பாசிரியர்

டாக்டர் அன்னி தாமசு

இணைப் பேராசிரியர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை-113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Eṇpattumūṉṟil Tamiḻ-Part-II
Editor	:	Dr. ANNIE THOMAS Associate Professor International Institute of Tamil Studies, Madras-113
Publisher and copy right	:	International Institute of Tamil Studies, Madras-113
Publication No.	:	213
Edition	:	First
Date	:	September 1995
Language	:	Tamil
Paper Used	:	16 kg white Printing paper
Printing types used	:	10, 12, 14, pts
Size of book	:	21 × 14cms
Price	:	Rupees Thirty only (Rs. 30/-)
No. of pages	:	VI + 170
No. of copies		1200
Printers		N. D. S. Printers, 42, Vellala Street, Aminjikarai, Madras-600 029.
Artist	:	A. S. Natarajan
Subject	:	Tamil in 1983

முன்னுரை

முனைவர் டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

அன்னைதந்த பால் ஒழுகும்
குழந்தை வாய் தேன் ஒழுக
அம்மா என்று
சொன்னதுவும் தமிழன்றோ!
அக் குழந்தை செவியினிலே
தோய்ந்ததான
பொன் மொழியும் தமிழன்றோ!
புதிது புதிதாய்க் கண்ட
பொருளினோடு
மின்னியதும் தமிழன்றோ!
விளையாட்டுக் கிளிப் பேச்சும் தமிழேயன்றோ!
வானத்து வெண்ணிலவும்
வையத்தின் ஓவியமும்
தரும் வியப்பைத்
தேனொக்கப் பொழிந்ததுவும்
தமிழன்றோ!

எனத் தமிழ் மொழியின் இனிமையையும் வன்மையையும் பாடியவர் பாரதிதாசன். தமிழின் வரலாறு நீண்டது; நிலைத்தது; சுவையானதும்கூட. இத் தமிழின் வரலாற்றினை மு. அருணாசலம், மயிலை. சீனிவேங்கடசாமி போன்ற அறிஞர் பெருமக்கள் நூற்றாண்டுகள் வாயிலாக நோக்கி வெளியிட்டனர். ஆண்டுகளில் காண விழைந்தவர் முன்னாள் இயக்குநர் ச. வே. சுப்பிரமணியன்.

அவ்விழைவின் விளைவாக வெளிவந்த 'ஆண்டுகளில் தமிழ்' நூல்கள் மூன்று. நான்காவதாக, எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி-1 முன்னரே வெளிவந்து விட்டது. தொடர்ந்து பகுதி இரண்டு இப்போது வெளி வருகின்றது.

இந்நிறுவனத்தின் செயல்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலாளர் அவர்கள் ஆகியோர்க்கு நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிழைதிருத்தம் செய்து உதவிய பேராசிரியர் இராம. சுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த என். டி. எஸ். அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

9-10-1995 இயக்குநர்

பதிப்புரை

தமிழ், வளமான மொழி, வாழும் மொழி, வளரும் மொழி. நாடோறும் தமிழில் நன்னூல் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் முறையான பட்டியல்களும் ஆழமான மதிப்புரைகளும் தெளிந்த இலக்கிய வரலாற்றுக் களனாய் அமையும். அதற்கொரு ஊன்றுதலாக, தூண்டுதலாக, நூற்றொகைகளை இன்றியமையா இணைவுப் பகுதிகளாகக் கொண்டு 'ஆண்டுகளில் தமிழ்' நூல்கள் வெளிவருகின்றன. 1983-இல், தமிழில் 1145 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளமையை அறியும்போது மலைப்பும் வியப்பும் ஏற்படுகிறது.

இத்தகு முயற்சியின் தேவையை அறிஞர்-ஆய்வாளர்-எழுத்தாளர் உணர்ந்து வரவேற்றுள்ளனர்.

எண்பத்து மூன்றில் தமிழ், இரண்டாவது தொகுதியில், தமிழகத்தில் மட்டுமன்றி, தமிழர் கல்விக்காகவும் வாழ்வுக்காகவும் குடியேறிப் பரந்த பிற நாடுகளும் நிலப்பகுதிகளும்கூட, தமிழைப் பயனுறக் கையாள்வது புலப்படுத்தப்படுகின்றது. இசை, இலக்கணம், சமயம், சுவடி, மனையியல், வரலாறு எனப் பிற பல் துறையில் ஆய்வுப் பார்வை பரந்துள்ளது. தனி நபர் மட்டுமன்றி நிறுவனங்களும் தத்தமளவில் தமிழுக்குத் தொண்டாற்றுவதைப் பல்கலைக் கழகங்களில் தமிழின் பங்கு எடுத்துக் காட்டுகின்றது.

இத்திட்டத்திற்கு ஒத்துழைத்த கட்டுரையாளர்க்கு எம் பாராட்டும் நன்றியும்.

நாள்: 9-10-1995

நன்றியுடன்,

அன்னி தாமசு

கட்டுரையாளர்

1. வே. இரா. மாதவன், விரிவுரையாளர், ஓலைச் சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. ஆ. சிவலிங்கனார், தொல்காப்பியத் திட்ட மேனாள் முதுநிலை அலுவலர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

3. ஆர். ஆளவந்தார், மேனாள் முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

4. ப. அருட்செல்வி, மேனாள் ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5. பிரசன்னா அழகப்பராசு, ஆராய்ச்சி உதவியாளர், பேரறிஞர் அண்ணா சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம், அண்ணா நகர், சென்னை.

6. வி. சி. சசிவல்லி, முதுநிலை ஆராய்ச்சியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

7. தே. ஆல்பர்ட் (மறைவு). மேனாள் இணைப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

8. இல. குளோரியா சுந்தரமதி, பேராசிரியர், தமிழ்த் துறை, கேரளப் பல்கலைக் கழகம், காரிய வட்டம், திருவனந்தபுரம்.

9. எஸ். எஸ். சர்மா, பிளாக் 547, 06-161 ஜூரோங் வெஸ்ட் ஸ்டிரீட் 42, சிங்கப்பூர் 2264.

10. இரா. தண்டாயுதம் (மறைவு). மேனாள் பேராசிரியர்-தலைவர், இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக் கழகம், கொலாலம்பூர், மலேசியா.

11. Vijaya Chandra Jayaram and Suseela Jayaram 16, Hercules Street. Ash Field, New South Wales 2131, AUSTRALIA.

உள்ளே

			பக்கம்
1.	தமிழ்ச் சுவடிப் பதிப்பு	— வே. இரா. மாதவன்	1
2.	இலக்கண ஆய்வு	— ஆ. சிவலிங்கனார்	19
3.	இசை நூல்கள்	— ஆர். ஆளவந்தார்	42
4.	சமய நூல்	— பா. அருட்செல்வி	51
5.	மனையியல் நூல்	— பிரசன்னா அழகப்பராசு	81
6.	வரலாற்று நூல்	— வி. சி. சசிவல்லி	98
7.	பல்கலைக் கழகங்களில் தமிழ்	— தே. ஆல்பர்ட்	114
8.	கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் (காரிய வட்டம்) தமிழ் ஆய்வு	— இல. குளோரியா சுந்தரமதி	130
9.	சிங்கப்பூரில் தமிழ்	— எஸ். எஸ். சர்மா	136
10.	மலேசியாவில் தமிழ்	— இரா. தண்டாயுதம்	152
11.	Activities of Sydney Tamil Sangam	— Vijaya Chandra Jayaram & Suseela Jayaram	165
	சொல்லகராதி		167

தமிழ்ச் சுவடிப் பதிப்பு

வே. இரா. மாதவன்

ஏட்டுச் சுவடிகளைத் தனிப்பட்டோர்மட்டுமே பதிப்பித்து வந்த நிலை மாறி, நூலகங்களும், நிறுவனங்களும், பதிப்பகங்களும் சுவடிப் பதிப்புகளை வெளிக்கொணரும் நிலை இன்று உருவாகியுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், சுவடியியல் பட்டயப் பகுதி நிறைவாக 1979-80 முதல் சுவடிப் பதிப்புகள் தட்டச்சில் உருவாதல் தனித்துக் குறிப்பிடத்தக்கது. 83இல் அச்சில் 10 சுவடி நூல்களும் ஓர் அட்டவணையும், தட்டச்சில் 5 பட்டய ஆய்வேடுகளும் ஆக்கம் பெற்றன. இவற்றுள் சிந்து இலக்கியம், ஊஞ்சல் இலக்கியம் என்பன பல நூல்களை உட்கொண்டவை.

முன்னுரை

தமிழ்மொழி வரலாற்றுப் படிகளை விளக்கும் இலக்கிய, இலக்கண நூல்கள் யாவும் வழிவழியாகப் பயிலப்பெற்று, எழுத்துருவமாய் ஏட்டுச் சுவடிகளில் இன்றளவும் கிடைக்கின்றன. காலச்சூழல், வேற்றுமொழி, இன, சமயத் தாக்குதல்களுக்கு உட்பட்ட போதிலும் ஆயிரக் கணக்கான சுவடிகள் பாதுகாக்கப் பட்டு வருதல் தமிழர் செய்த தவப் பயனேயாகும். பொதுநூலகங்களும் தனிப்பட்டோரும் அரிதின் முயன்று பாதுகாத்துவரும் இத் தகு தமிழ்ச் சுவடிகள் வெறும்சுவடிகளாய்மட்டுமே காட்சிக்கு இருப்பதனைக் காட்டிலும் அவற்றைப் பதிப்பித்து நூலாக்கி அச்சில் கொண்டுவரின் சமுதாயப்பயன் விளையும் என்னும் நோக்கில் சில தமிழ் உள்ளங்கள் செயலாற்றி வருகின்றன. உ. வே. சாமிநாதையர், வையாபுரிப் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை போன்ற அறிஞர்களின் அரிய முயற்சிக்குப் பின்பும் தமிழ்ச் சுவடிப் பதிப்புகள் அவ்வளவாய் வெளிவரவில்லை. எனினும், 1980 ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தமிழகத்தில் இதற்கென ஒருதனிநிலை உருவாகியுள்ளதனை

எவரும் மறுத்தற்கியலாது. 1983 ஆம் ஆண்டில்மட்டும் தமிழ்ச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ள நிலையை ஓரளவு ஆராயும் முகமாய்ச் சிலவற்றை இவண் காண்போம்,

பதிப்புப் பணி

சுவடிகளைப் படித்தறிதலிலும், அவற்றைப் பெயர்த்து எழுதுதலிலும், அவற்றின் முறையான பாடங்களை அறிந்து தெளிவு காண்பதிலும் இடர்ப்பாடுகள் மிகுதி. ஓரளவு இலக்கண, இலக்கிய அறிவு நிரம்பியவர் கூட இதற்காக அஞ்சுதல் இயல்பு. இவற்றை ஆராய்ந்த ஆர்வலர் முயற்சியின் பயனாய் நல்ல பல நூல்கள் வெளிவருவதலும் உண்டு. இந் நிலை தனிப்பட்டோருக்கே பொருந்தும். சுவடிகளையும் பொது நூலகங்களில் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்னும் முறை தோன்றிய பின்பு, இவற்றை வேறு பல ஆய்வாளரும் அறிஞரும் பார்க்கவும், பதிப்பிக்கவும் வாய்ப்புகள் பெருகின. ஏட்டுச் சுவடிகளைத் தனிப்பட்டோர்மட்டுமே பதிப்பித்துவந்த நிலை மாறி, நூலகங்களும் பொதுநிறுவனங்களும் சுவடிப் பதிப்புகளை வெளிக்கொணரும்நிலை இன்று உருவாகியுள்ளது. இதனால் இந்த நூற்றாண்டில் பலப்பல சுவடிப் பதிப்புகள் வெளியாகி யுள்ளன.

தஞ்சை சரசுவதிமகால் நூல் நிலையம், உ. வே. சாமி நாதையர் நூலகம், சென்னை அரசினர் சுவடி நூலகம் போன்ற பொதுநூலகங்களின் பணி இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியம், இலக்கணம். அறிவியல் போன்ற பல்துறை நூல் களைச் சுவடிப் பதிப்புகளாய்ப் படைத்திருத்தல் அறியத் தக்கது.

இதுபோன்ற பொதுநிறுவனங்களின் பதிப்புப் பணி என்பது சிலவற்றில் தொடர்ச்சியாய் அமைவதும், சிலவற்றில் விட்டு விட்டு அமைவதும் உண்டு.

1983ஆம் ஆண்டில் பதிப்பித்த சுவடிப் பதிப்புகளைப் பின் வருமாறு பகுத்தறியலாம் :

1. உ. வே. சாமிநாதையர் நூல் நிலையப் பதிப்புகள்.
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள்.
3. தனியார் பதிப்புகள்.
4. ஆய்வேட்டுகுரிய பதிப்புகள்.

உ. வே. சாமிநாதையர் நூல்நிலையப் பதிப்புகள்

தமிழ்ச் சுவடிகளின் தனிநிலையை உலகிற்கு எடுத்துக்காட்டி நிறுவிய முறையில் உ. வே. சாமிநாதையர்க்கு இணையாய் எவரையும் கூறுதல் இயலாது. ஒவ்வொரு இடங்களுக்கும் தாமே சுவடிகளைத் தேடிச் சென்று, தொகுத்துத் தந்த பெருமை அவருக்கே உரியது. தம் காலத்துப் பதிப்பிக்க முடிந்ததைத் தவிரப் பிறவற்றையும் சேகரித்துச் சிறந்ததொரு சுவடி நூலக மாக உருவாக்கியுள்ளார். பெரும்பாலும், தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் அடங்கிய சுவடிகள் இந்நூல் நிலையத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

நூல்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் பதிப்பிக்கவும் முயற்சி செய்து, தொடர்ந்து இந் நிறுவனம் செயலாற்றிவருவது குறிப்பிடத் தக்கது. 1983ஆம் ஆண்டில் மட்டும் நான்கு சுவடிப் பதிப்புகளை இந்த நூல்நிலையம் வெளிக்கொணர்ந்துள்ளமை பாராட்டற்குரியது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள்

தமிழிற்காகவும், தமிழருக்காகவும், தமிழ்மொழி ஆய்விற் காகவும் உலகளாவிய நிலையில் இருந்து பணியாற்றிவரும் இந் நிறுவனம், 1980 ஆம் ஆண்டிலிருந்து சுவடிக்கென ஒருதனி இயலையும் இயக்கிவருகிறது. அதன் தொடர்பாய்ச் சுவடிப் பதிப்புகளையும், அச்சில் வாராத அருந்தமிழ்ச் சுவடிகளையும் வெளியிடுவதிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வகையில் சுமார் பதினைந்து நூல்களையும் வெளியிட்டுள்ளமை அறியத்தக்கது. அவற்றுள் ஆறு பதிப்புகள் 1983இல் வெளிவந்தன.

தனியார் பதிப்புகள்

தற்காலக் கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், அறிவியல் நூல்கள் என வெவ்வேறு தலைப்புகளில் ஆர்வங் காட்டிவரும் தனியார் பதிப்பகங்கள் பெரும்பாலும் வணிக நோக்கம் கொண் டுள்ளமையால் சுவடிப் பதிப்புகளை வெளியிடுதலை விரும்புவ தில்லை. எனவே, சுவடிப் பதிப்புகள் தனியார் வெளியீடாய் வரும் வாய்ப்பும் அரிதாகிறது. இதற்கு விதிவிலக்காக 'மெய் யம்மை பதிப்பகம்' ஒருபதிப்பை இவ்வாண்டில் வெளியிட் டிருப்பது அறியத்தக்கது.

ஆய்வேடுகள்

'தமிழ் இலக்கியக் கலையின் ஒருபகுதியாய் அமையும் சுவடிப் பதிப்பு' என்பது ஒரு தலைஇயலாய் உருவாக்கப்பட்ட பின்பு இதற்கான ஆய்வேடுகளும் அமைகின்றன. '80ஆம் ஆண்டுமுதல் இத்தகைய ஆய்வேடுகள் சுவடிப் பதிப்புகளாக உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்தில் அளிக்கப்படுகின்றன. இவ்வாண்டில், இவ்வகையில் ஐந்துஆய்வேடுகள் சுவடிப் பதிப்புகளாக உருப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் தட்டச்சு வடிவில் உள்ளவை; வெளியிடப் பெறாதவை.

உ. வே. சாமிநாதையர் நூலகப் பதிப்புகள்

1. அகராதி நிகண்டு (பதிப்பாசிரியர் டாக்டர் இரா. நாகசாமி)

உ. வே. சாமிநாதையர் திரட்டிய சுவடிகளிலிருந்து, அவர் நூலகத்தாரால் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை வெளிவந்துள்ள நிகண்டுகள் போன்ற ஓர் அமைப் பினைப் பெற்றிருப்பினும், இது ஒருபுதுநூலாகவே உள்ளது. இந்நிகண்டில் சுமார் 7500 மூலச் சொற்களும், மொத்தம் 22,500க்கு மேற்பட்ட சொற்களும் இடம்பெற்றுள்ளன. அகரம், இகரம், ககரம், சகரம் என ஒவ்வொரு பகுதியிலும் சொற்கள் அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டினதாக அறியப்படும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சிதம்பரம் ரேவண சித்தர் எழுதிய அகராதி நிகண்டினின்றும் இந்நூல் வேறான தாகத் தெரிகிறது. அகராதித் தொகுப்புக் கலைக்கு மேலும் அணிசேர்க்கும் ஒருபதிப்பாக இஃது அமைகிறது.

2. வடமலை நிகண்டு (பதிப்பாசிரியர் டாக்டர் இரா. நாகசாமி, உரையாசிரியர் வித்துவான் சு. பாலசாரநாதன்)

இதுவும் இந்நூலகச் சுவடியே. 'ஈசுர பாரதி இயற்றிய வட மலை நிகண்டு' என்னும் இந்நூல் கி.பி. 1700இல் எழுதப்பட்ட தாகத் தெரிகிறது. இந்நூல் மூன்று காண்டங்களைக் கொண் டது; என்றாலும், சுவடியில் இரண்டாம்காண்டம்மட்டுமே உள்ளது. அது, ஒருபொருள் பல பெயர்க் காண்டம் ஒன்று மட்டுமே யாம். அதிலும், உயிர்வருக்கத் தொகுதி முதல் வகர வருக்கத் தொகுதிவரை பத்துத் தொகுதிகளே உள்ளன.

3. காஞ்சிப்புராணம் (பதிப்பாசிரியர் எஸ். கே. இராமராசன்)

இந்திய நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றான காஞ்சிமாநகரின் பெருமை பேசும் புராணங்கள் பல உள. ஆயினும், 'பழைய காஞ்சிப்புராணம்' என்றழைக்கப் பெறும் பழைய நூல் இவ்வாண்டில்தான் முதன் முதலாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. உ. வே. சா. திரட்டிய அருஞ்சுவடிகளில் இதுவும் ஒன்று. இது, பிரெஞ்சு நாட்டு வின்ஸோன் துரையின் மாணாக்கர் பொண்டெனூ என்பார் மிகவும் ஆர்வமுடன் கேட்டுப் பெற்றுப் படித்துத் தந்த ஒரு சுவடி யாகையால் இதைக் 'கடல் கடந்த தமிழ்' என உ. வே. சா. அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

'காஞ்சியம் புராணம்' எனக் கணபதி காப்பில் காண்பதுடன், 'காமாட்சி ஏகம்பவாணர் புராணம்' என்றும் 'ஏகம்பர் புராணம்' என்றும், 'கம்பர் புராணம்' என்றும் இந்நூல் வழங்கப்பெறுகிறது.

இந்நூலாசிரியர் 'கச்சாலையார்' ஆவார். இவர், கச்சாலை அகளங்கர் என்றும், பூரண லட்சண கச்சாலை போதர் என்றும் அழைக்கப்பெறுகிறார். இவர், காழி வள்ளல் சந்தானத்துச் சோமானனன் என்ற பெரியாரின் சீடரெனவும் தெரிகின்றது. கச்சிக்கோவை, பாரதம் போன்ற வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

இந்நூல் பன்னிரண்டு சருக்கங்களையும் ஆயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு விருத்தங்களையும் கொண்டுள்ளது.

பதிப்பாசிரியர் எஸ். கே. இராமராஜன் (கம்பராமன்) சுமார் இருபத்து நான்கு பக்கங்களில் சிறந்த ஆய்வுரையுடன் நூலை அறிமுகப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு பக்கத்திலும் பாடல்களுக்கேற்ற அடிக்குறிப்புகளை அங்கங்கே அமைத்திருப்பதுடன், விளக்க உரைகளைத் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் சிறப்பு.

'ஆளவந்தார் ஆதீனக் கச்சாலையர் இயற்றிய காஞ்சிப் புராணம்' என்னும் தலைப்பில் இந்நூல் சுவடிப் பதிப்பாக மலர்ந்துள்ளது. நூல் தொடக்கத்திற்காணும் சுமார் 81 பக்கங்களில் 'காஞ்சித் திருத்தலங்களைப்பற்றிய குறிப்புகள்' என்னும் தலைப்பில் சுமார் 84 தலங்கள் அகர வரிசையில் விளக்கப் பெற்றுள்ளன.

'தமிழ்த் தெய்வம் ஐயர் அவர்கள் பழைய காஞ்சிப் புராணத்தைப்பற்றி வரைந்த பகுதியை நினைக்கும் போது, பிரெஞ்சு நாட்டுப் பெருமகனுக்கு இருந்த தமிழ்ப்பற்று நமக்கு இல்லையே என்று நினைந்து நினைந்து மனம் வருந்துகிறது; வாடுகிறது; நைகிறது; நாணுகிறது'' என்று பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் குறித்திருப்பது எண்ணத்தக்கது.

இத்தகு சிறப்பு மிக்க ஒரு சுவடி முதன்முறையாக மிகவும் அருமையான முறையில் பதிப்பிக்கப்பெற்றிருப்பது சுவடிப் பதிப்புத் துறைக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைகிறது. வேறு பல புராணங்களுடன் ஒப்பீடு செய்யவும், களஞ்சியமாகவும் இந்நூல் அமையும் என்பதில் ஐயமில்லை.

4. தனிப்பாடல்கள் (பதிப்பசிரியர் வி. அருணாசலம்)

உ. வே. சா. நூல் நிலையத்தில் உள்ள 37 தனிப்பாடல் ஓலைச் சுவடிகள் 16 கையெழுத்துப் படிகள் ஆகியவற்றிலிருந்து இதுவரை அச்சாகாத பாடல்களைத் தொகுத்து, இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. மொத்தம் 218 பாடல்கள் இவ்வாறு பதிப்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் உ. வே. சா. பாடிய பாடல்களும், அவர்களைப்பற்றிப் பிறர் பாடிய பாடல்களும், பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இவ் வகையில் 64 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆக, மொத்தம் 282 பாடல்கள் உள்ளன.

பாடல் ஒவ்வொன்றற்கும் கருத்துரையும் விரிவுரையும் பதிப்பாசிரியரால் அமைக்கப்பெற்றுள்ளன. தனிப்பாடல்கள் பற்றியும் சில குறிப்பிடுகிறார். பிற தனிப்பாடல் திரட்டு நூல்களில் இல்லாத பாடல்களே இதில் பெரும்பாலாக உள்ளதாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

சுமார் இருபது பக்கங்களில் ஆராய்ச்சிக் குறிப்புகள் அளிக்கப்பெற்றுள்ளன. அவற்றிவ், அரசர், ஆசிரியர், ஆண்கள், இசை, உழவு, ஊர்கள், தெய்வங்கள், பாடப்பட்டோர், பாவகை, புராணக் கருத்துகள், உவமைகள் எனப் பல செய்திகள்பற்றிய பட்டியல்கள் தனித்தனியே எடுத்துக்காட்டியிருப்பது ஆய்வாளர்க்கு மிகவும் பயன்படும். இந்நூலுள், பல சிலேடை நயம் மிக்க பாடல்களும், வேடிக்கையாய் அமைந்த பாடல்களும் உள்ளன. இன்குரல் அமைய மருந்து (பா. எண் 44, 137) மூல நோய் நீங்க மருந்து (பா. எண். 94) போன்ற மருத்துவச் செய்தி அடங்கிய பாடல்களும் ஆங்கிலச் சொற்கள்

கலந்த பாடல்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது; அருஞ்சொல் அகராதி, பாடல் முதற்குறிப்புப் போன்றவை மிகவும் பயனு டையவை.

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள்

கடந்த சில ஆண்டுகளாக நிறுவனத்தில் ஏட்டுச் சுவடிகள் திரட்டிப் பாதுகாக்கப்படுகின்றன. ஆயினும், வெளியிடங்களி லிருந்தும் தமிழ்ச் சுவடிகள் படி யெடுக்கப்பட்டும் பதிப்பிக்கப் பட்டும் வருவது குறிப்பிடத் தக்கது. இவ்வகையில், இவ்வாண்டு மட்டும் ஆறு சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன.

1. ஊஞ்சல் இலக்கியம் (பதிப்பாசிரியர் த. அழகப்பராசு)

இதுவரை வெளிவாராத பத்து ஊஞ்சல் இலக்கியங்களின் தொகுப்பு நூலாக இப்பதிப்பு அமைகிறது. பொதுவாக ஊஞ்சல் இலக்கியம்பற்றிய ஆய்வு முன்னுரையுடன் சுவடிப்பதிப்பு பற்றிய விளக்கங்களும் இந்நூலில் அமைந்துள்ளன.

		பாடல்கள்
1.	ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் ஊஞ்சல்	27
2.	திருக்கோளூர் வைத்த மாநிதிப் பெருமாள் ஊஞ்சல்	... 17
3.	சடகோபர் ஊஞ்சல்	... 23
4.	மதுரகவியாழ்வார் ஊஞ்சல்	... 8
5.	கோயில் வெள்ளாற்று அம்மன் ஊஞ்சல்	... 11
6.	தருமபுரம் தேனமிர்த நாயகி ஊஞ்சல்	... 10
7.	திருக்கோவலூர்ப் பெரியநாயகியம்மன் ஊஞ்சல்	... 10
8.	ஆறுமுக தேசிகர் ஊஞ்சல்	... 12
9.	வள்ளிதெய்வானை ஊஞ்சல்	... 7
10.	திருமண ஊஞ்சல்	... 12

மேற்கண்ட பத்து ஊஞ்சல் இலக்கியங்களும் தனித்தனியே பதிப்பிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றின் முகப்பிலும் அது

பற்றிய விளக்க உரைகளும் அமைக்கப் பெற்றுள்ளன. இவை எல்லாவற்றிற்கும் சேர்ந்தாற்போலப் 'பதிப்பு விளக்கம்' என்ற பெருந்தலைப்பில் பதிப்புரை வரையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னுரையை அடுத்து அமையும் பகுதியில் ஊஞ்சல் இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் விளக்கப்பட்டுள்ளன. ஊஞ்சல் - சொல்லாய்வும், பாட்டியல் நூல்கள் கூறும் ஊஞ்சல் இலக்கியம்பற்றியும் இப்பகுதி விளக்குகிறது. ஒவ்வோர் ஊஞ்சலின் முற்பகுதியில் அப்பாடல்களால் விளங்கும் தலங்களின் சிறப்பும், தலைவன் சிறப்புப் போன்றனவும் தேவைக்கேற்ப எடுத்து இயம்பப்பெற்றுள்ளன. பிற்பகுதியில் 'விளக்கம்' என்ற தலைப்பில் சில சொற்பொருள் விளக்கங்கள் அமைகின்றன.

பின் இணைப்பு-1இல் 38 ஊஞ்சல் இலக்கியங்கள் (பதிப்பானவை) பற்றிய விவரங்களும் பின் இணைப்பு-2இல் பெயரளவில் அறியப்படும் 108 ஊஞ்சல் இலக்கியங்களும், பின் இணைப்பு 3 இல் 46 சுவடி வடிவில் உள்ள ஊஞசல் இலக்கியங்களின் பெயர்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

சிற்றிலக்கிய வகையை எடுத்துக்காட்டும் முறையில் இத்தகைய சுவடிப்பதிப்பு ஒருபுதிய முயற்சியாகும்.

2. மீனாட்சியம்மன் திருப்புகழ் (பதிப்பாசிரியர் வே. இரா. மாதவன்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திவரும் சுவடியியல் பட்டய வகுப்பில் அளிக்கப்பெற்ற ஆய்வேடுகளில் ஒன்றான 'மீனாட்சியம்மன் திருப்புகழ், இவ்வாண்டு அச்சுநிலையில் உருப்பெற்றுள்ளது. மதுரை மீனாட்சியம்மன் திருப்புகழைப் பாடும் ஒப்பற்ற இந்நூல், முத்தமிழுலகம் பயனுறும் வகையில் முதன் முறையாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

திருப்புகழ் சந்தங்களுக்கேற்பப் பாடற் பகுதிகளையும் பிரித்துப் பதிப்பித்திருப்பதுடன், சந்தக்குறிப்புகளையும் தெளிந்தறிந்து ஒவ்வொரு பாடலின் தலைப்பில் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

'நூல் ஆய்வு' என்ற தலைப்பில் திருப்புகழ்ச் சொல்லாய்வும் தமிழிலக்கியத்தில் திருப்புகழ் பெறுமிடமும் விளக்கம் பெறு

கின்றன. அதனுடன், அம்மை வழிபாட்டின் தொன்மையும் வளர்ச்சியும் கூறப்பெறுகின்றன. மீனாட்சி என்னும் பெயராய்வும் சிறப்பும் எடுத்துரைக்கப்படுகின்றன.

பின் இணைப்பு-1இல் சுவடியிலுள்ள வடிவம், திருத்தம் பெற்ற வடிவம் எனப் பட்டியலிட்டுக் காட்டப்பெற்றுள்ளது. பின் இணைப்பு-2இல் நூலிலுள்ள பாடல்களுக்கான சந்தக் குறிப்புகள் பற்றிய விவரங்களும், பின் இணைப்பு-3இல் இறைவி யின் பெயர்களும் பிறவும் தொகுக்கப்பெற்றுள்ளன.

சுவடிப் பதிப்பிற்கு வழிகாட்டும் விளக்க நூல் வரிசையில் இப்பதிப்பு இடம் பெற்றுள்ளமை சுட்டத் தக்கது.

3. சிந்து இலக்கியம் (பதிப்பாசிரியர் பழ. முத்தப்பன்)

இதுவரை வெளி வாராத, பழநியாண்டவர் காவடிச் சிந்து (11 பா.) கந்தன் மணம்புரி சிந்து (31 பா.), சுப்பிரமணியர் பேரில் சிந்து (279, கண்ணி), சித்தராரூட நொண்டிச் சிந்து (355 வரிகள்), எண்ணெய்ச் சிந்து (81 வரிகள்) ஆகிய ஐந்து சிந்து நூல்கள் அச்சு வடிவில் அளிக்கப்பெற்றுள்ளதாக இந்நூல் தெரிவிக்கிறது.

தமிழ் இலக்கியக் கொள்கைக் கருத்தரங்கில் வெளியிடப் பட்ட 'சிந்து இலக்கியம்' என்ற கட்டுரையை இந்நூலின் முன்னுரையாகவும் அமைத்துள்ளனர்.

பிற்பகுதியில் இதுவரை அச்சாகியுள்ள 52 சிந்து நூல்களின் பட்டியல், பெயரளவில் தெரிந்த 27 சிந்து நூல்கள்பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

சித்தராரூட நொண்டிச் சிந்தில் பாம்புகள் பற்றிய சுவை யான செய்திகள் பல உள்ளன.

கேரளப் பல்கலைக் கழகத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளிலிருந்து இவை பிரதி செய்யப் பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

4. வெள்ளைக்காரன் கதை (பதிப்பாசிரியர் ஏ. என். பெருமாள்)

கதைப் பாடல் வரிசையில் ஒருபுதிய நூல் ஏட்டுச் சுவடியி லிருந்து பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பல வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஒருவெள்ளைக்காரன் நாட்டுப்புறத்

தெய்வமாக்கப்பட்டு வணங்கப்படுதலையும் அவன் கதை வில்லில் பாடப் பெறுதலையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் காண முடிகிறது. தமிழ் நாட்டிலிருந்து பல வல்லுநரைக் கப்பல் கட்டுவதற்காக இங்கிலாந்து நாட்டுக்கு அழைத்துச் சென்ற செய்தி, குமரிமுனைக்கு மேற்கே இருந்த மண் கோட்டை வஞ்சி நாட்டு மன்னரால் கட்டப்பட்டது என்ற செய்தி போன்ற பல வரலாற்றுச் செய்திகள் இதில் இடம்பெற்று உள்ளன. வெள்ளைக் காரனின் கப்பல் இங்கிலாந்திலுள்ள டோவர்த் துறைமுகத்தி லிருந்து கன்னியாகுமரி நோக்கி வரும்போது வழியிலுள்ள சுமார் 75 இடப் பெயர்களை வரிசையாகக் கூறும் இந்நூற் செய்திகள் மிகவும் பயனுடையன. சிறு தெய்வ வழிபாட்டில் காணும் நம்பிக்கைகள் போன்றன இந்நூலில் அமைகின்றன.

496 அடிகளால் அமைந்த இந்நூலுக்கு அங்கங்கே குறிப் புரையும், பிற்பகுதியில் ஊர்கள் பற்றிய விளக்க உரைப் பகுதி யும், அமைத்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

5. தமிழ்ச் சுவடிகள் அட்டவணை (பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவி)

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்தில் சுமார் 3260 தமிழ்ச் சுவடிகள் இருப்பதாக அறியப்படுகிறது. இவற்றை முறையாகத் தொகுத்து வெளி யிடும் முதல் நூலாக இது அமைந்துள்ளது. சுமார் 1091 சுவடிகளுக்குரிய விவரங்களைத் தொகுத்து இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. பொதுவாக, தமிழ்ச் சுவடிபற்றிய செய்திகள், திருவனந்தபுரம் நூலகம் பற்றிய செய்திகள், அங்குள்ள சுவடி களின் நிலை, அவற்றை ஒழுங்கு படுத்திய முறை, அறிந்த செய்திகள் போன்றவற்றை முன்னுரையாக ஆசிரியர் அளித் துள்ளார்.

மருத்துவம், வேதாந்தம், யோகம், ஞானம், இலக்கியம், வரலாறு, சமயம், சோதிடம், இரசவாதம், காவியம் போன்ற பல தலைப்புகளிலும் காணும் சுவடிகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சுவடியின் பெயர், எண், ஏடுகளின் எண்ணிக்கை, அளவு, நிலை, செய்யுள் எண்ணிக்கை எனத் தனித்தனியே குறித்திருத்தல் ஆய்வாளர்க்கு மிகவும் பயனுடைய தாகும்.

6. திருமயிலை உலா (பதிப்பாசிரியர் மு. கோ. இராமன்)

பொதுவாக உலாப் பற்றிய மரபு செய்திகளுடன் திருமயிலையைப் பற்றிய பல செய்திகளையும் இந்நூல் தருகிறது. சிறந்த முன்னுரையுடன் கூடிய இந்நூலின் ஒவ்வொரு கண்ணிக்கும் குறிப்புரை அமைத்திருத்தல் குறிப்பிடத் தக்கது.

நூலின் முன்னுரையில் சிற்றிலக்கியங்கள் பற்றியும், திருமயிலைச் சிறப்பும் உலாச் சுருக்கமும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

இந்நூலில், பல புராண மரபு செய்திகள் பொதிந்துள்ளன.

3. தனியார் பதிப்புகள்

1. விராலிமலை வேலவர் குறவஞ்சி (பதிப்பாசிரியர் வே. இரா. மாதவன்)

2

சுவடிப் பதிப்புகளைப் பொறுத்தவரை தனியார் பதிப்புகள் என்பன மிகமிக அரிதாகவே உள்ளன. இவ்வாண்டில் காரைக்குடி மெய்யம்மை பதிப்பகத்தார் மட்டுமே ஒரு நூலை பதிப்பித்து அளித்துள்ளனர்.

பிள்ளைப் பெருமாள் கவிராயர் இயற்றிய விராலிமலை வேலவர் குறவஞ்சி முதன் முறையாக இப்பொழுது அச்சு வடிவம் பெற்றுள்ளது; 83 பாடல்கள் இந்நூலில் உள்ளன.

பதிப்பு முன்னுரையில் சுவடி பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன; பதிப்பில் நிகழ்ந்தவைபற்றியும், விராலிமலைத் திருத்தலச் சிறப்பு, குறவஞ்சி இலக்கியச் சிறப்புப் போன்றவை சுருக்கமாக விளக்கம் பெற்றுள்ளன.

விராலிமலை வேலவர் குறவஞ்சியில் காணும் கதையமைப்பும், நூல் நுவலும் செய்திகள் பலவும் விரிவாக ஆராய்ந்துரைக்கப் பெற்றுள்ளன.

ஆராய்ச்சிக் குறிப்புகள் என்னும் தலைப்பில் தெய்வங்கள், தலங்கள், தேசங்கள், மலைகள், நதிகள், போன்ற செய்திகள்

நூலில் காணக் கிடைப்பன எடுத்துத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

4. ஆய்வேடுகள்

சுவடிப் பதிப்புகள் பலவாறு பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைச் செம்மையுறச் செய்தல் வேண்டும் என்ற நோக்கில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடிப் பயிற்சியை அளித்து வருகிறது. 'ஆண்டுதோறும் பயிலும் ஒவ்வொரு மாணவரும், தேர்வின் ஒருபகுதியாக, ஒரு சுவடிப் பதிப்பினைச் செய்து அதைத் தட்டச்சு வடிவில் அளித்தல் வேண்டு' மென விதிக்கப்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படுகின்றன. அவற்றுள் தகுதியானவற்றை முதலிலும், பிறகு ஒவ்வொன்று மாக அச்சாக்குவது என்ற நிலையிலும் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இவ்வகையில், ஆய்வேடாக அளிக்கப்பெற்ற பணவிடு தூது மற்றும் மீனாட்சியம்மன் திருப்புகழ் ஆகிய இரண்டு நூல்கள் இதுவரை அச்சாகி வெளிவந்துள்ளன.

1982-83ஆம் கல்வியாண்டில் பயின்ற சுவடியியல் மாணவர்கள் அளித்த ஐந்து ஆய்வேடுகளும் சுவடிப் பதிப்பாகத் தட்டச்சு வடிவில் அமைந்துள்ளதனைக் காணலாம்.

1. சித்தர் வெண்பா (பதிப்பாசிரியர் சென்னி துரேந்திர நாதன்)

சென்னை அரசினர் சுவடி நூலகத்திலுள்ள ஒரு சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இது, 222 வெண்பாக்களால் ஆன ஒரு நூல். கற்பம், செந்தூரம், மூலிகை போன்றவற்றைப்பற்றி விளக்குகிறது.

அறிமுகம், ஆய்வுரை, மூலநூல், விளக்கவுரை, பிற்சேர்க்கை என்னும் 5 இயல்களாக இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அறிமுகப் பகுதியில், சுவடி பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. சுவடி கிடைத்த இடம், அக, புற அமைப்பு, நிலை, பொருள், பிழைகள், திருத்தம் பெற்ற இடங்கள் போன்றன விளக்கமாக அளிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுரை என்னும் பகுதியில் சித்தர்கள் பற்றியும், சித்த மருத்துவம் பற்றியும் கூறப்படுகின்றன. வெண்பா நூல்கள் பற்றியும் கூறப்படுகிறது. பிறகு, நூலாசிரியர் பற்றியும் நூலமைப்புப் பற்றியும், கற்பங்கள் பற்றியும், நூலில் காணும் பிற செய்திகளும் தனித்தனியே ஆராயப்பட்டுள்ளன.

மூலநூல் என்னும் பகுதியில் 222 வெண்பாக்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைந்துள்ளன. அனைத்தும் அந்தாதித் தொடையிலானவை. ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்புரையும் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது. விடுபட்ட இடங்களும் சுட்டப் பட்டுள்ளன.

விளக்க உரை என்ற பகுதியில் மணி மந்திர வாயு, உவரசம், மாரசம், நவமணி, ரசம், மகா மூலிகைகள், கற்ப மூலிகைகள் இவை பற்றிய விளக்கங்கள் பல நூல்களிலிருந்தும் தொகுக்கப் பட்டுள்ளன. தேவையானவற்றிற்கு விளக்கப்படங்களும், மூலிகைகளும் சேர்த்தளிக்கப்பட்டுள்ளன.

பிற்சேர்க்கையில் சித்தர்கள் பெயர் அகரவரிசை, மூலிகைப் பெயர், படங்கள், பாடல் முதனிணைப்பு, சொல்லடைவு, துணைநூற்பட்டியல் ஆகியனவும் முறையாக அமைக்கப் பட்டுள்ளன.

சுவடிப் பதிப்பு ஆய்வேடு நிறைவுபெறப் பதிப்பாசிரியர் முழு முயற்சியையும் மேற்கொண்டுள்ளமை நன்கு விளங்குகிறது.

2. சுப்பிரமணியர் நூறு (பதிப்பாசிரியர் ச. இராசராசன்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள ஒருசுவடியி லிருந்து இந்த நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, ஞானம், தத்துவம் பற்றிய விளக்கங்கள் அடங்கிய இந்நூல் 101 பாடல்களைக் கொண்டுள்ளது.

ஆய்வேட்டின் முதலில் சுமார் 70 பக்கங்களில் முன்னுரைப் பகுதி அமைகிறது. இதில் சுவடிபற்றிய செய்திகள் சுருக்க மாகவும் ஞானம், தத்துவ, சித்தாந்த நூல் விளக்கங்கள் பற்றிய ஆய்வுரை மிகச் சுருக்கமாகவும் செறிவாகவும் அமைக்கப் பெற்றுள்ளன. பல நூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக் காட்டியிருப்பது ஆய்வுக்கு மிகவும் பயனுடையதாகும்.

சமயம், மதம், மனம், ஆசான். ஓங்காரம், யோகம், மந்திரம், குண்டலினி, வாதசித்தி, பிராணாயாமம், தாரணை, தியானம், சமாதி, பஞ்சாட்சரம் போன்ற பலவற்றுக்கும் சொற்பொருள் விளக்கங்களை அமைத்திருக்கிறார் பதிப்பாசிரியர்.

பக்கம் 117 முதல் 125 வரை 'சுவடியிலுள்ள வடிவம், திருத்தப்பட்ட வடிவம், என ஒரு பகுதியை எழுதிச் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. சுவடிப் பதிப்பில் என்னென்ன நிகழ்கிறது, நிகழ வேண்டுமென்பதனை அறியவும் பிற்கால ஆய்வுக்கும் இப்பகுதி மிகவும் பயன்படும்.

3. சூரிய வாகட வெண்பா (பதிப்பாசிரியர் வே. விநாயகம்)

சென்னை அரசினர் சுவடி நூலகத்திலுள்ள ஒருசுவடியிலிருந்து இந் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பலவித நோய்களுக்கான மருத்துவங்கள் கொண்ட ஒரு தொகுப்பு நூலாக இது அமைந்துள்ளது. மொத்தம் 132 பாடல்கள் உள்ளன.

அசீரணம், வாதம், சுரம், குன்மம், கரப்பான், பித்தம், சிலேத்துமம், மேகம், நீரிழிவு, பிரமியம், கல்லடைப்பு, நீர்க்கடுப்பு, மலச்சிக்கல், யோனிப்புண், தோசம், எலிக்கடி, நாய்க்கடி போன்ற பல நோய்களுக்கும் மருத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலுக்கும் குறிப்புரை அவ்வப் பக்கங்களிலேயே உள்ளமை சிறப்புடையது.

விளக்கவுரை என்னும் பகுதியில் பாடல்களில் காணும் நோய்களைத் தனித்தனியே பிரித்தறிந்து விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அந்நோய் உண்டாகக்காரணம், அறிகுறிகள், மருத்துவம் போன்றன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நூலிற் காணும் மூலிகையின் பெயர்கள், அவற்றின் பயன்கள், தனித்தனியே அளிக்கப்பட்டுள்ளன; பாடல் முதல் நினைப்பும் சொல்லகராதியும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளமை பயனுடையது.

4. சூதர் வாக்கியம் (பதிப்பாசிரியர் சத்திய பாமா)

சென்னை அரசினர் சுவடி நூலகத்திலுள்ள ஒரு சுவடியிலிருந்து இந் நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

இந்நூல் முழுவதிலும் இரசவாதம் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன. இதே பெயரில் வெளிவந்துள்ள வேறு சில நூல்களுடன் ஒப்பிடக் கூடியது.

குறிப்புரை, விளக்கவுரை, மூலிகைப் பயன்கள் போன்றவையும் விரிவாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

5. வர்ம சூத்திரம் (பதிப்பாசிரியர் ஜான் செல்வராசு)

சென்னை அரசினர் சுவடி நூலகத்திலுள்ள சில சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு வேறு சில சுவடிகளும் ஒப்பிடப்பட்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி போன்ற தென்மாவட்டங்களில் மட்டுமே தற்போது வழங்கி வரும் வர்மாணி மருத்துவம் பற்றிய செய்திகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மனித உடலில் காணும் வர்ம இடங்கள், முறிவு, இளகல், எண்ணெய், மருந்து போன்றவை தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. விளக்கப் படங்களும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளமை சிறப்புடையதாகும்.

பதிப்புகள்

1983ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள சுவடிப் பதிப்புகள் எண்ணிக்கையில் குறைவேயாயினும் பல்வேறு வகையினவாக அமைந்துள்ளமை அறியத் தக்கது.

அகராதி நிகண்டு, அட்டவணை, புராணம், தனிப் பாடல், சிற்றிலக்கியம், கதைப்பாடல், மருத்துவம், இரசவாதம், யோகம், ஞானம், வர்மக் கலை எனப் பல பொருள்களையும் எடுத்துக்காட்டுவதாக அவை அமைந்துள்ளன.

பதிப்பு முறைகள்

சுவடிப்பதிப்புகள் ஒவ்வொன்றும் சுவடிகளுக்குத்தக்கவாறும், நூலின் பொருளுக்கேற்றவாறும் மாறுபடக் கூடும். ஆயினும், பதிப்பு முறையில் சில குறிப்பிட்ட ஒழுங்கு முறைகள் தேவை என்பது பொதுவான கருத்து. இவ்வாண்டு வெளிவந்துள்ள

சுவடிப் பதிப்புகளிலும் இத்தகு நிலையை எண்ணிப் பார்க்கலாம்.

உ. வே. சாமிநாதையர் நூலகத்தின் 'அகராதி நிகண்டு' என்ற பதிப்பில் சொற்களின் முதல்எழுத்துமட்டுமே அகர வரிசையில் உள்ளது. அதை அப்படியே பதிப்பித்துள்ளனர். நூலுள் பலவிடங்களில் மாறிமாறியும் உள்ளன. அகராதியின் பயனே அகரவரிசையில்தான் அடங்கியுள்ளது. சுவடியில் உள்ளது என்றாலும், அதனைப் பதிப்பித்து அச்சாக்குமிடத்து நாம் சமுதாயப் பயனை நினைவு கொளல் வேண்டும். பதிப்பு வெறும் சுவடிப் பதிப்பாக மட்டுமே இல்லாமல் பலருக்கும் பயன்படக் கூடிய வகையில் அமைதலே சிறப்பு.

'காஞ்சிப் புராணப்' பதிப்பில் செய்யுள் முதற் குறிப்பையும், அருஞ்சொற்களையும் தொகுத்தளித்திருப்பின், ஆய்வாளர்க்கு மிகுந்த பயனை நல்கும்.

இந்நூல் நிலையம் வெளியிடும் சுவடிப் பதிப்புகள் மிகவும் பாராட்டத் தக்கன. பதிப்பாசிரியர்கள் மிகவும் அரிதின் முயன்றே பதிப்பினைச் செய்து வருகின்றனர். ஆயினும், அச்சுப் பிழைகளும் வேறு சில பிழைகளும் தவிர்க்கப்பட்டால் மேலும் சிறப்புடன் விளங்கும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடும் சுவடிப் பதிப்புகள் தனித்தன்மையில் அமைந்து வருகின்றன. இவ்வகையில் பல இளஞர்களை இத்துறைக்கு அறிமுகப்படுத்தியுள்ள பெருமையும் இந்நிறுவனத்தைச் சேரும். இத்தகு புதிய முயற்சியின் காரணமாக ஒரு சில பிழைகளும் அச்சுப் பிழைகளும் இயல்பாக அமைந்துவிடுகின்றன.

நிறைவுரை

சுவடிப் பதிப்புகள் மேலும்மேலும் பெருகுவதில் தமிழ் உள்ளங்கள் அனைத்தும் ஈடுபடுதல் மிகவும் தேவை. பொது நூலகங்களும், தனியாரும் சுவடிகளைப் பதிப்பிக்குமிடத்து, முன்வந்துள்ள பதிப்புகளை நுணுகி ஆராய்வதுடன், எளிதில் விளங்கும் படியாகவும் தகுந்த ஆய்வு மனப்பான்மையுடனும் சுவடிப் பதிப்புகளைச் சிறப்புறச் செய்ய வேண்டியது கடமையாகும். இன்னும் ஆயிரக் கணக்கான தமிழ்ச் சுவடிகள் பதிப்பிக்கப்படாமலேயே கிடக்கின்றன. ஒவ்வொரு துறையிலுமுள்ள நூல்களைத் தேடித் தொகுத்து வெளியிடின் தமிழின் சிறப்பு மேலும் தெளிவாகும் என்பது உறுதி.

இணைப்பு

1983ஆம் ஆண்டில் வெளிவந்த சுவடிப் பதிப்புகள் (முதற் பதிப்புகள்)

வரிசை எண்	பெயர்	பதிப்பாசிரியர்	பதிப்பகம்	பக்கம்	விலை (ரூ)
1.	அகராதி நிகண்டு	இரா. நாகசாமி	உ.வே.சா. நூல்நிலையம், சென்னை-600 040	156	15-00
2.	வடமலை நிகண்டு	இரா. நாகசாமி	,,	288	15-00
3.	காஞ்சிப் புராணம்	எஸ். கே. இராமராசன்	,,	453	25-00
4.	தனிப் பாடல்கள்	வி. அருணாசலம்	,,	263	20-00
5.	ஊஞ்சல் இலக்கியம்	த. அழகப்பராசு	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113	221	10-00
6.	மீனாட்சியம்மன் திருப்புகழ்	வே. இரா. மாதவன்	,,	230	10-00
7.	சிந்து இலக்கியம்	பழ. முத்தப்பன்	,,	168	8-00
8.	வெள்ளைக்காரன் கதை	ஏ. என். பெருமாள்	,,	120	7-00

வரிசை எண்	பெயர்	பதிப்பாசிரியர்	பதிப்பகம்	பக்கம்	விலை (ரூ)
9.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	இரா. நிர்மலா தேவி	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113	120	6-00
10.	திருமயிலை உலா	மு. கோ. இராமன்	,,	120	7-00
11.	விராலிமலை வேலவர் குறவஞ்சி	வே. இரா. மாதவன்	மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி-1	92	6-00
12.	சித்தர் வெண்பா (தட்டச்சு வடிவு)	சென்னி துரேந்திர நாதன்	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113	246	—
13.	சுப்பிரமணியர் நூறு (தட்டச்சு வடிவு)	ச. இராசராசன்	,,	155	—
14.	சூரிய வாகட வெண்பா (தட்டச்சு வடிவு)	வே. விநாயகம்	,,	135	—
15.	சூதர் வாக்கியம் (தட்டச்சு வடிவு)	திருமதி சத்தியபாமா	,,	—	—
16.	வர்ம சூத்திரம் (தட்டச்சு வடிவு)	ஜான். செல்வராசு	,,	—	—

இலக்கண ஆய்வு

ஆ. சிவலிங்கனார்

மரபிலக்கணம் தொடர்பாகப் பதினைந்தாவது ஆய்வுக் கோவையிலும் பிற சில இதழ்களிலுமாக 27 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. உவமையணிபற்றிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கில் 36 கட்டுரைகள் ஆக்கம் பெற்றுள்ளன. தொல்காப்பிய உரைவளப் பதிப்பு நூல்கள் ஏழும் இலக்கண வரலாற்று நூல் ஒன்றும் வெளிவந்தன. பாட்டியல் நூல்கள்பற்றியெழுந்த இத் தனி இலக்கண வரலாறு சிறப்பாய்க் குறிப்பிடத் தக்கது.

1. கட்டுரைகள்

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் (அண்ணாமலை நகர்) ஆண்டுதொறும் பல்வேறு துறைகளில் கருத்தரங்கு நடத்திவருகின்றது; அவற்றுள் இலக்கணத் துறையும் ஒன்று. 1983இல் பதினைந்தாவது கருத்தரங்கு நடத்தியது; ஆய்வுக் கோவைத் தொகுதிகள் நான்கு வெளியிட்டது. அவற்றுள் இரண்டாவது தொகுதி இலக்கணக் கட்டுரைகளைத் தாங்கி வந்தது. அதில் அறுபத்தெட்டுக் கட்டுரைகள் உள்ளன. அவற்றை மரபிலக்கணக் கட்டுரைகள், மொழியியற் கட்டுரைகள் என இருவகைப்படுத்தலாம். மரபிலக்கணக் கட்டுரைகள் இருபத்து மூன்றும் மொழியியற் கட்டுரைகள் நாற்பத்தைந்தும் உள்ளன. மரபிலக்கணக் கட்டுரைகளுள்ளும் சில மொழியியற் கூறுடையனவாய் உள்ளன. முன்னரே அறிஞர் பலரால் ஆராயப்பட்ட கருத்துகளே சிறிது மாறுபட்டு அமைந்த கட்டுரைகளும் உண்டு. இங்கே தொகுத்துத் தரப்படுவன மரபிலக்கணக் கட்டுரைகளேயாகும்.

1. எழுத்து

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவுகளுள் எழுத்துப்பற்றிய கட்டுரைகள் மூன்றே வந்துள்ளன.

ஆய்தம்

ஆய்த எழுத்து உயிரிலும் சேராமல் மெய்யிலும் சேராமல் இருப்பது; அதனால் அது, தனியெழுத்தாகக் கருதப்பட்டது. அஃது ஒருசொல்லில் வருவதால், சார்ந்து வருவதால் 'சார் பெழுத்து' எனப்பட்டது. 'பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தும்போது ஆய்தம் பெரிதும் பயன்படும்' என்பது பா. வே. மாணிக்க நாயக்கர் போல்வார் முடிபு. ஆய்தம்பற்றி மீ. ரா. பூபதி என்பார் "விருத்தப்பாவில் ஆய்தத்தின் நிலை" என்னும் கட்டுரையில் கூறும் கருத்து வருமாறு: "ஆய்த எழுத்து விருத்தப்பாவில் அலகு பெறும் நிலையிலும் அலகு பெறா நிலையிலும் ஆக இருநிலையில் ஆளப்படுகின்றது. சங்க காலத்துக்கு முன்னர் ஆய்தம் அலகு பெறா நிலையிலேயே ஆளப்பட்டது. அஃது என்பது தேமாச்சீராகக் கருதப்பட்டது. சங்க காலத்தில் வாழ்ந்த ஒருவள்ளலின் பெயர் அஃதை என்பது. அஃது, அகுதை எனவும் வழங்கப்படுகின்றது. எனவே சங்க காலத் தில் ஆய்தம், அலகு பெறாமலும் அலகு பெற்றும் வழங்கப் பட்டது எனலாம். 'அஃது' என்பது தேமாச் சீராகவும் 'அகுது' என்பது புளிமாச் சீராகவும் வழங்கப்பட்டன எனலாம். இவ் விரு வகை நிலையிலும் ஆய்தம் இன்றுவரை வழங்கப்பட்டு வரு கிறது. ஆய்தம் வழக்கில் இல்லையென்றாலும் செய்யுளில் பயின்று வருதற்குக் காரணம் தளை, தொடைகளின் செல் வாக்கே எனலாம்." இவ்வாறு கூறி விருத்தப்பாக்களில் ஆய்தம் ஆளப்பட்டவாற்றை விவரித்துள்ளார் கட்டுரையாளர் (ஆய்வு 2, பக். 233).

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள், 414)

"நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்" (குறள், 171)

இக் குறள்களில் அலகு பெறாதும் பெற்றும் வந்தமை காணலாம். அலகு பெறாதபோது மெய்த் தன்மையும் பெறும்போது உயிர்த் தன்மையும் ஆய்தம் அடைகிறது.

மெய் மயக்கம்

இடைநிலை மெய்ம்மயக்கம்பற்றி இருவர் ஆராய்ந்துள்ளனர். தொல்காப்பியர் நூன்மரபிற் கூறிய மெய் மயக்கம் என்பது ஒருமொழிக்கண்ணே வருவது; புணர்மொழிக்கண் வருவதன்று. இக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார் **பி. பெ. சுயம்பு** என்பார் (ஆய்வு 2. பக், 172-176). அதற்கு அவர் கூறும் காரணங்கள்:

(1) **ய்ங்-ர்ங்-ழ்ங்** என்பன மயங்கும் என நூன்மரபில் (29) கூறியுள்ளார் தொல்காப்பியர். அம் மயக்கங்கட்குத் தனிமொழிகள் காணப்படவில்லை; எனினும், புணர்மொழிக்கண் வருமோ எனின், நகரம் மொழிமுதலில் வாராது; அதனால், புணர்மொழி மயக்கம் கூறுதற்கில்லை, ய்ங்-ர்ங்-ழ்ங் என்பன ஒருமொழி மயக்கத்துக்கே கூறப்பட்டன என்னலாம்.

(2) **ம்வ்** மயக்கம் நூன்மரபில் கூறப்பட்டுள்ளது (28). இதற்கும் தனிமொழி உதாரணம் கிடைக்கப்பெறவில்லை. புள்ளிமயங்கியலில் (36) ம்வ் மயங்கும் என்றும், அவ்விடத்தில் மகரம் தன் அரை மாத்திரையிற் குறுகும் என்றும் கூறப்பட்டுள்ளன. இதற்கு உதாரணம் 'தரும் வளவன்' என்பது. இது புணர்மொழி மயக்கம். ஒன்றனையே இரண்டிடத்திற் கூற வேண்டுவதில்லை. அதனால், நூன்மரபிற் கூறப்பட்டது மெய் மயக்கத்திற் கென்றும், புள்ளி மயங்கியலிற் கூறப்பட்டது மகரக் குறுக்கத்திற் கென்றும் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு எழுதிய கட்டுரையாளர், **ண்ய்-ல்ய்** முதலிய மயக்கங்கட்குத் தனித்தமிழ்ச் சொற்கள் தற்போது கிட்டாமையால் வடசொற்களின் ஆக்கத்தையும் தொல்காப்பியம் கருத்திற் கொண்டுள்ளதாகவும், பொதுமையும் எளிமையும் கருதித் தனித்தமிழ்ச் சொல்லுள் வாராதவற்றையும் இணைத்து மெய் மயக்கம் கூறப்பட்டுள்ளதாகவும் **செ. வை. சண்முகம்** கூறியவற்றை (எழுத்துச் சீர்திருத்தம்-1978. எழுத்திலக்கணக் கோட்பாடு-1980) மறுப்பது சிறப்பாகவே அமைந்துள்ளது.

ஆசிரியர் தொல்காப்பியர் புள்ளிமயங்கியலிற் கூறிய மெய்ம்மயக்கங்களை நன்கு ஆராய்ந்து, **'புதிய மயக்கம்'** என்னுந் தலைப்பில் ஒருகட்டுரை வரைந்துள்ளார் **மா. அய்யாச்சாமி** என்பார். நூன்மரபில் கூறப்பட்ட மயக்கங்கட்கு மாறாக வரும் புள்ளி மயங்கியல் மயக்கங்களைப் **'புதிய மயக்கம்'** என்றார் அவர் (ஆய்வு 2, பக்.1-6). எடுத்துக்காட்டாக ஒன்று:

ண்த் மயக்கம் நூன்மரபில் கூறப்படாதது. 'மண்+தீது' என்பது 'மண்டீது' என வரும்போது 'ண்' என்பதையடுத்து வரும் 'த்' என்பது 'ட்' ஆகத் திரிந்து வரும் என்றார் தொல் காப்பியர் (எழுத்து. 15-1). அவரே, 'மண்' என்பதன் ணகரம் இயல்பாக நிற்கும் என்றார் ஓரிடத்தில் (எழுத்து. 148). **ண்த்**, மயக்கம் இல்லாமையாலும் **'ண்ட்'** மயக்கம் உண்மையாலும் (உ-ம். வண்டு) 'மண் தீது' என்பதில் தகரம் டகரமாகத் திரியும் என்றார். இந் நிலையில் கட்டுரையாளர் **'ண்த்'** மயங்கும் எனக் கொண்டு அவை **'ண்ட்'** எனத் திரிந்து மயங்குவது 'புதிய மயக்கம்' என்றார்.

'மண்+தீது' என்பது' 'மண்டீது' என வருமிடத்து **'ண்ட்'** மயக்கமாகக் கொள்ள வேண்டுமே தவிர **'ண்த்'** என்பனவற்றின் புதிய மயக்கமாகக் கோடல் சிறப்பின்று.

கட்டுரையாளர், 'தருகிறான்' என்பதைச் சில வட்டாரங் களில் 'தர்ரான்' என வழங்குவதைக் காட்டி, 'ரகரமெய் தன்னொடு தான் மயங்கல் (உடனிலை மயக்கம்) இல்லை எனத் தொல்காப்பியம் கூறினாலும் பேச்சு வழங்கில் மயங்குதல் உண்டு' என்று கூறியுள்ளார். அதனுடன் ரகரமெய் தனிக் குறிலைச் சாராது (எழுத்து. 49) என்பதற்கும் மாறாக இவ் வழக்கு அமைந்துள்ளது என்பதையும் காட்டுகிறார், 'தரு கிறான்' என்பதைத் 'தரான்' என்றும் வழங்குவர். 'தரான்' என்பதையே அழுத்தமாகத் 'தர்ரான்' என்று வழங்குகின்றனர். எனவே உடனிலை மயக்கம் இதில் இல்லை; தனிக்குறிலைச் சார வும் இல்லை எனலாம்.

உலக வழக்கில் இன்று பெரும்பாலும் சொற்கள் சிதைத்தே வழங்கப்படுகின்றன. அவற்றைத் தனியே கொண்டு பார்ப்ப தாயின் மொழியே தனிமொழியாகிவிடும். அதனால், அவற்றை மரபிலக்கணத்துக்கேற்பக்கொண்டு பார்ப்பதே சிறந்த தாகும். அதுவே மொழி சிதையாமல் என்றுமுள மொழியாக அமைதற்கு வழியாகும்.

இக் கட்டுரை மொழியியல் அடிப்படையைத் தன்னகத்துக் கொண்டு எழுதப்பட்டதாகலின் மரபிலக்கண முறைக்குச் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றது; எனினும், சிறந்ததோர் ஆய்வு கட்டுரையாக உள்ளது.

சொல்

பெயர்

பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு சொற்களுள் பெயர்ச்சொல்பற்றிய கட்டுரை இரண்டேயுள. பத்துப் பாட்டுள் பெயர்ச் சொற்களைக் குறித்து அவற்றுள் தொல் காப்பியாரால் கூறப்பட்ட பெயர்ச்சொற்களிவை; கூறப் படாதன இவை எனக் கூறும் கட்டுரை **''பாட்டுள் பெயர்ச் சொற்கள்''** என்னும் தலைப்பில் **சு. மகாலட்சுமி** என்பவரால் எழுதப்பட்டது (ஆய்வு 2. பக். 248-253).

''காப்பியர் நோக்கில் விரவுப் பெயர்'' எனும் தலைப்பில் **சு. சுடலைமுத்து** என்பார் ஒருகட்டுரை வரைந்துள்ளார். 'கோதை' என்பது ஒருமை சுட்டிய பெயர்; யானை என்பது பன்மை சுட்டிய பெயர்; கோதை வந்தான், கோதை வந்தாள், கோதை வந்தது எனக் கோதை என்பது உயர்திணையிருபாற்கும் அஃறிணை ஒன்றன்பாற்கும் வரும். ஆனால், யானை என்னும் சொல், யானை வந்தான், யானை வந்தாள், யானை வந்தது, யானை வந்தன என உயர்திணை யிருபாற்கும் அஃறிணை யிருபாற்கும் ஆக நான்கு பாலுக்கு வரும். உயர் திணைப் பலர்பாலுக்கு வாராது. ஒரே மாதிரியான இருசொற் கள் தனித்தனியான இலக்கண அமைப்பு உடைமைக்குத் தொல் காப்பியர்கால வழக்கே காரணம் ஆகலாம் என்பது கட்டுரை யாளர் முடிபாகும். இஃது ஏற்கத் தக்கதே.

வினை

வினைச்சொல்பற்றிய கட்டுரைகள் இரண்டு வந்துள. **'வினைத்தொகை காலம் காட்டுமா?'** (ஆய்வு 2. பக். 45-50), **'துணை வினைகள்'** (செந்தமிழ்ச் செல்வி-சிலம்பு 57, பரல் 9.10) என்பன அவை.

வினைத்தொகைபற்றிப் பலர் பல காலங்களில் ஆய்வு செய் துள்ளனர். வினைத்தொகையின் முன்மொழி. பெயரா வினையா என் ஆய்வுசெய்து பெயரே என முடிவு கொண்டோரும் (சேனாவரையர்) உளர்.

வே. இசக்கி முத்து என்பார் வினைத்தொகை காலம் காட்டுமா? எனும் கேள்வியை எழுப்பித் தமது முடிபாக,

> 'காலம் மறைந்த பெயரெச்சம் வினைத்தொகை' என்னும் அளவில் நிறுத்திக்கொண்டு, தோய்தயிர், உயர்கொடி என்று சான்றுகளைக் காட்டி வினைத்தொகை எனக் கூறி முடித்துக்கொள்ளலாம்'

என்று முடித்து, இறுதியில், 'முன் பின் வரும் சொற்களைக் கொண்டு வினைத்தொகையின் காலத்தை யுணரலாம்; நேற்று, இன்று, நாளை என்னும் சொற்களைப் பெற்றுக் காலத்தை யுணர வேண்டுவதில்லை' என்ற முடிபினைத் தந்தார். இக் கருத்தும் பலரும் ஒப் பியதே.

ஒருதொழில் நிகழ்ச்சி கூறும்போது வரும் வினைத்தொகை அந் நிகழ்ச்சியின் காலத்துக் கேற்ப ஒருகாலத்தைச் சாரும். புலியைக் கொன்று ஓடும் யானையைப் பார்த்துக் 'கொல்யானை ஓடுகிறது' என்றால், 'கொல்யானை' இறந்தகால வினைத் தொகை. நிகழ்ச்சியில்லாமல் 'கொல்யானை' என்றால் அது முக்காலத்துக்கும் உரியதாகும். முக்காலத்துக்கும் உரிய வினைத் தொகைகளின் முன்மொழிகள் தொடர்ந்துள்ள பின்மொழி களின் இயல்பினை, குணத்தைக் காட்டுவனவாகவே அமையும். அதனால்தான் உரையாளர்கள் வினைத்தொகைக்குக் 'கொல் யானை', 'தோய்தயிர்', 'பழுமரம்' முதலியவாகக் காட்டினர். பொருள்களின் குணங்களே அடைமொழிகளாக வருதலின் அத் தொடர்கள் பிரித்துப் புணர்க்கப்படா (''புணரியல் நிலையிடை யுணரத் தோன்றா'' (எழுத்து. 432) எனத் தொல் காப்பியர் கூறினார். எனவே நாம், வினைத்தொகை காலம் காட்டுமா? என்ற கேள்விக்குக் குணமாக அடையடுத்து வரும் வினைத்தொகை, முக்காலத்துக்கும் உரியது என்றும், தொழில் நிகழ்ச்சியில் வரும் வினைத்தொகை, தொழில் நிகழும் காலத்துக் கேற்ப, இறப்பு, நிகழ்வு, எதிர்வு காலங்களுள் ஒன்றனைக் காட்டும் என்றும் கொள்ளல் வேண்டும்.

இரா. கிருட்டினன் என்பார் படு, பெறு என்னும் இரண்டு துணை வினைகளைப்பற்றி விளக்குகின்றார் (செந்தமிழ்ச் செல்வி-சிலம்பு 57. பரல் 9); இக் காலத்தில் அவ் விரண்டும் இட மறிந்து ஆளப்படாமல் ஒரே நிலையில் ஆளப்படுவதாகக் குறை பட்டுள்ளார். 'கூறும் கருத்து' என்பது, 'கூறப்படும் கருத்து' என வருவது 'படு' என்னும் துணைவினை பெற்றது என்றும், 'கூட்டம் நாளை நடக்கும்' என்பது 'கூட்டம் நாளை நடை பெறும்' என வருவது 'பெறு' எனும் துணைவினை பெற்றது என்றும் கூறுகிறார். முன்னது செயப்பாட்டு வினை. 'படு'

என்பது எங்கும் செயல்பாட்டு வினையிலேயே வருவது. 'பெறு' என்பதும் அத் தகையதே. 'கூட்டம் நடத்தப்படும்' என்பதே 'கூட்டம் நடைபெறும்' என வருகின்றது. அதுவே நடத்தப் பெறும் எனவும் வரும். அதனால் இவ்விரண்டும் சொல்லளவில் வேறுபட்டவை தவிரப் பொருளள்வில் ஒன்றேயாம். அதனால்) இவை துணைவினை என்றல் அவ்வளவு சிறவாது. சொல்லி விட்டான், சொல்லியொழிந்தான், சொல்லியருளினான் என்னு மிடங்களில் வரும் விடு, ஒழி, அருள் என்பன போல்வனவே துணைவினை எனற் குரியன.

துணைவின்ன என்பது தனக்கென ஒருபொருளின்றித் தான் சார்ந்த சொல்லின் பொருளைச் சிறப்பிக்க, ஓர் அழுத்தம் கொடுக்க வருவது. கட்டுரையாசிரியர் காட்டிய எடுத்துக்காட்டு களில் படு, பெறு என்பன அவ்வாறு பொருட்கு அழுத்தமோ சிறப்போ தரவில்லை. மேலும் அவை தமக் கெனச் செயப் பாட்டுப் பொருளுடையன.

இடைச்சொல்

இடைச்சொல்பற்றிய கட்டுரைகள் சில வெளிவந்துள்ளன. சாரியை யிடைச்சொல், உருபிடைச் சொல், விகுதியிடைச் சொல்பற்றியன அவை.

சாரியைகளைப்பற்றித் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களின் துணைகொண்டு ஆராயத் தொடங்கிச் சாரியை என்பதன் பொருளும், அவை சொல்லின் பொருளுக்கு உதவி செய்யுமாறும், பிறவும் கூறிச் சாரியைகளின் வளர்நிலையை விவரிக்கத் தொடங்கினார் **சி. அரசமுத்து.** ஆனால், அவர் கட்டுரை, ஆய்வு கோவையில் முழுதும் இடம்பெறவில்லை; கட்டுரை முடிவு பெறவில்லை (ஆய்வு 2, பக். 17-22).

வேற்றுமை யுருபுகள் உலக வழக்கில் வழங்குமாற்றை விளக்கி, ஒருகட்டுரை எழுதினார் **இரா. பாலகிருஷ்ணன்;** உருபுகளுக்குப் பதில் சொல்லுருபுகள் வருவதையும் குறிப்பிட்டார்; ஆறாம் ஏழாம் வேற்றுமையுருபுகள்பற்றிக் குறிப்பிடவில்லை; கட்டுரை யும் முடிவு பெறவில்லை (ஆய்வு. 2, பக். 210-216).

''நண்பர்கள் விரைவாக வருமாறு வேண்டுகிறோம்'' - இத் தொடர் ''நண்பர்களே (நாங்கள் உங்களை) விரைவாக வரு மாறு வேண்டுகிறோம்'' என்னும் தொடரின் சுருக்கம் என்றும்,

'அத் தொடர் பிழையானது; தவிர்க்கப்பட வேண்டுவது' என்றும் குறிப்பிட்டுள்ளார் அவர். 'நண்பர்கள் விரைவாக வருமாறு (அவர்களை) வேண்டுகிறோம்' என்ற தொடரின் சுருக்கமாகக் கொண்டால் அத் தொடர் தவறானதன்று. **அவர்களை** என்பது தோன்றாச் செயப்படுபொருள். விரைவாக வருதற்கு **நண்பர்** கள் எழுவாய். இக் கட்டுரை தொல்காப்பியர் கூறிய வேற்றுமை மயக்கத்தையும் தழுவிச் செல்கிறது.

'அது என்னும் குறிப்புப் பெயரெச்சம்' என்னும் தலைப்பில் **எஸ். எம். சரோஜினிபாய்** ஒருகட்டுரை எழுதியுள்ளார் (ஆய்வு. 2, பக். 110-116). 'அது' என்பது ஆறாம் வேற்றுமை யுருபு என்பது மரபிலக்கண நூலாரின் துணிபு. 'முருகனது வாள்' என்றால் 'முருகனுக்கு உரிய வாள்' எனப் பொருள்படு தலின், ''அது' என்பது 'உரிய' என்னும் பொருளாதாகின்றது. அப்படியாயின் 'உரிய வாள்' என்பது குறிப்புப் பெயரெச்சத் தொடர் என்பதுபோல, 'முருகனது வாள்' என்பதையும் குறிப்புப் பெயரெச்சத் தொடர் என்னலாம்'' என்னும் கருத்தினை மொழியியல் அடிப்படையில் நிறுவுகிறார் அவர்.

'முருகன் உடைய வாள்' என்ற தொடரில் உடைய என்னும் குறிப்புப் பெயரெச்சத்துக்கு முருகன் எழுவாயாம். அப்போது 'உடைய' என்பது வினைச்சொல்லாம். 'முருகனது வாள்' என்பதில் 'அது' என்பது வினையாகாது; அதற்கு 'முருகன்' என்பது எழுவாயும் ஆகாது. அதனால், 'அது' என்பது உரு பிடைச் சொல்லேயாம். உரையாசிரியர்கள் 'அது' என்னும் உருபினை இவ்வாறு கருதாமையால்தான் 'முருகனது வாள், வாள் முருகனது' என்பனவற்றையே கொண்டு அது என்பது உருபா அல்லது அகரச் சாரியையும் துவ்விகுதியும் சேர்ந்ததா என்பதில் உரைமாறுபாடு கொண்டனர்.

''வீரமாமுனிவரும் வினைமுற்று விகுதிகளும்'' என்னும் கட்டுரை **பா. மாணிக்கம்** என்பவரால் எழுதப்பட்டது (ஆய்வு. 2, பக். 265-268).

''வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கத்தில் அவர் கூறிய வினைமுற்று விகுதிகள்பற்றிக் கூறுவது இக் கட்டுரை. தன்மை யொருமை வினைமுற்று விகுதிகளாகத் து, று, டு என்று மூன்று கூறியவர், துவ்வின் திரிபுகளே றுவ்வும் டுவ்வும் என்பர். அதனால், துவ்வொன்றுமே கூறின் அமையும்; றுவ்வும் டுவ்வும் கூறல் வேண்டுவதில்லை'' என்பார் கட்டுரையாளர். ''படர்க்கைப்

பலர்பால் விகுதிகளாக மார், மனார், மரு என்பனவற்றைக் கூறியுள்ளார் வீரமாமுனிவர். 'மார்' சாரியை பெற்று 'மனார்' என்றாகியது'' என்றும் கட்டுரையாளர் கூறினார். மன் + ஆர்— மனார் என்பதால் வரும் தவறு என்ன?

தொல்காப்பியத்தில் வரும் இடனுமார், இயல்புமார், மொழியுமார், பெயருமார், தொகையுமார், ஒன்றுமார் எனும் சொற்கள் 'மார்' ஈற்றுச் சொற்களா என்று ஆய்ந்துள்ளார் **ஏ. ஆதித்தன்**. இவை 'ஆர்' ஈற்றுச் சொற்களே என்பது முடிபு (ஆய்வு. 2, பக். 34-38).

இந்த 'ஆர்' என்பது தொல்காப்பியத்தின்படி (இடையியல் 23) அசைநிலையாகும்.

'மார்' என்னும் இடைச்சொல் உயர்திணைப் பலர் பாலுக்கே உரியது என்று வரையறுக்கப்பட்ட பின்னர் (கிளவி யாக்கம் 7, வினையியல் 10) மேலே காட்டிய ஏழ் சொற்களும் உயர்திணைப் பலர்பாலுக்குரியன அல்ல வாகலின் அவற்றை 'மார்' ஈற்றனவாகக் கொள்வதே பொருந்தாது. அடுத்து 'மார்' விகுதி தனக்கு முன்னர்ப் பெரும்பாலும் ண், ன் என்பன இருக்க வரும்; உண்மார் சென்மார் எனக் காணலாம். உகரச் சாரியையிருக்க வருதலும் உண்டு; எள்ளுமார், உண்ணுமார் எனக் காண்க. உகரச் சாரியையின்றி உகரம் இருக்கவும் வரலாம்; தருமார் எனக் காண்க. எனவே பலர்பாலல்லா விடங்களில் மார் ஈறுபோலக் காணப்படினும் அவை 'ஆர்' ஈறாகவே கொள்ளப்படும்.

3. பொருள்

அகப்பொருள் புறப்பொருள் ஆய்வு கட்டுரைகள் காணப் படவில்லை. சா. கிருட்டினமூர்த்தி என்பார், **''இளம்பூரணரும் பொருளதிகாரமும்''** என்னும் தலைப்பில் ஒருகட்டுரை வரைந் துள்ளார் (ஆய்வு 2 ,பக். 75-78). இன்றுள்ள தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இளம்பூரணர் உரை, அவரால் எழுதப் பட்டிருக்குமா என்ற வினாவுக்குரியதாக இருக்கிறது என்பது அவர் கருத்து. அதற்கு அவர் கூறும் காரணம் மூன்று.

1. நச்சினார்க்கினியம் இளம்பூரணரை (உரையாசிரியரை) எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றில் பெயர் சொல்லிச் சுட்டியிருப்பது போலப் பொருளதிகாரத்தில் சுட்ட வில்லை.

2. பிற்கால மேற்கோள் பாடல்கள் இளம்பூரணத்தில் காணப்படுகின்றன.

3. எடுத்துக்காட்டுகளுள் மாறுபாடுகள் இளம்பூரணர் உரையில்.

இம் மூன்று காரணங்களும் சிறப்புடையனவே.

''கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே''

என்னும் ஔவையார் பாடல், பிசி என்பதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டுள்ளது (பொருள். செய். 174). இவ் வௌவையார் கி.பி. 12ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவர். கி. பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அறநெறிச்சாரம் என்னும் நூலிலிருந்து ''தலைமகனிற் றீர்ந்தொழுகல்'' என்னும் பாடலும் காட்டப்படுகின்றது. இவற்றைக்கொண்டு முடிவு கூறும்போது கட்டுரையாளர், இவற்றை இடைச் செருகல் எனலாமா என்றும் கேட்டுள்ளார். இது மேலும் ஆய்விற் குரியதாகும்.

''மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்'' (சொல். எச்ச. 52) என்னும் நூற்பாவில் 'மந்திரமாவது திரி திரி சுவாகா, என்று கொண்டு கறவையும் வந்திக்க சுவாகா என்றவாறு'' என்ற இளம்பூரணர், ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' (செய்யு. 176) என்னும் நூற்பாவில், ''மந்திரத்தை வல்லார்வாய்க் கேட்டுணர்க'' என்றார். இது முரண்பாடு. இக் கருத்தும் ஆய்விற்குரியதே. எனினும், முன்னர் மந்திரம் என்பது இப்படியிருக்கும் எனக் கூறினார் என்றும், பின்னர் அதனைக் கையாள வேண்டின் அது வல்லார்வாய்க் கேட்டுணர வேண்டும் எனக் கூறினார் என்றும் கொள்வதில் தவறில்லை.

4. யாப்பு

சங்க இலக்கியத்தில் வந்துள்ள ஆசிரியப் பாக்களை மூவகைப்படுத்தி ஒருகட்டுரை வரைந்துள்ளர் **அ. பிச்சை** என்பார். மண்டில ஆசிரியம், நேரிசையாசிரியம், மயங்கிசைசிரியம் என்பன அவை (ஆய்வு. 2, பக். 227-232).

நாற்சீரடிகள் தம்முள் ஒத்துவந்து முடிவது மண்டில ஆசிரியம் என்றும், ஈற்றயலடி முச்சீரடியாய் அமைய மற்றையன நாற்சீர் அடிகளாய் அமைவது நேரிசையாசிரியம் என்றும் யாவரும் கூறிவந்த முறையே கூறி, இணைக்குறளாசிரியம் என்று கூறியதை மயங்கிசையாசிரியம் எனப் பெயர் கொடுத்துக் கூறினார் அவர். அதற்கு அவர் கூறும் காரணம், 'பாட்டின் இடையே இருசீரடிகள் வருவது மட்டுமன்றி முச்சீர், ஐஞ்சீர், அறுசீர் அடிகளும் கலந்து வருதலின், இருசீர் மயங்கிய குறளடிப் பெயரால் கூறுவதைவிடப் பொதுவில் பல சீரடிகள் மயங்கி வருதலின் மயங்கிசையாசிரியப்பா என்றே கூறலாம்' என்பது அவர் கருத்து. இஃது ஏற்கக் கூடியதே.

அடுத்துக் குறிப்பிட்ட யாப்புப்பற்றி இன்றி, யாப்பு இலக்கணம்பற்றியின்றிப் பாட்டியல் நூல்கள்பற்றிய கட்டுரைகள் இரண்டு வந்துள்ளமை யீண்டுக் குறிப்பிடலாம். 1. **பாட்டியல் இலக்கண வரலாறு**பற்றி **அரங்க. நலங்கிள்ளி** எழுதியுள்ளார் (புலமை, தொகுதி 9, பகுதி. 1, பக். 40-53).

'தொல்காப்பியத்தில் பாட்டியல் செய்திகள்', 'தண்டியலங்காரத்தில் பாட்டியல் செய்திகள்' 'நிகண்டுகளில் பாட்டியல் செய்திகள்' எனும் தலைப்புகளில் பாட்டியல் இலக்கணத்தின் தோற்ற வரலாறுபற்றியும், 'மறைந்த பாட்டியல் நூல்கள்', 'பாட்டியல் நெறிகள்' எனும் தலைப்புகளில் மறைந்துபோன பாட்டியல் நூல்களின் பெயர்கள், பாட்டியல் நூல்கள் பின்பற்றிய நெறிகள்பற்றியும்; 'கிடைக்கின்ற பாட்டியல் நூல்கள்' 'பாட்டியல் இலக்கண யாப்பு வரலாறு', 'பாட்டியல் இலக்கண உரைவரலாறு, எனும் தலைப்புகளில் இன்றுள்ள பாட்டியல் நூல்களின் பெயர், நூலாசிரியர் பெயர், நூலின் காலம், நூல் செய்யப்பட்ட யாப்பு, உரைகளின் போக்கு ஆகியவற்றைப் பற்றியும் சுருக்கமாகத் தெளிவாக விவரித்துள்ளார் கட்டுரையாசிரியர்.

தமிழ் இலக்கண நூல்கள் யாவும் நூற்பா யாப்பில் அமைந்திருக்கப் பாட்டியல் இலக்கணம்மட்டும் கூறும் பாட்டியல் நூல்கள் வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் எனப் பலவகைப் பாக்களால் அமைந்தமைக்குக் கட்டுரையாசிரியர் கூறும் காரணம் சிறப்பாக அமைந்துளது. அது :

"இத்தகைய யாப்பு மாற்றப் போக்கிற்கு நாம் பின்வரும் காரணத்தைக் கருத வேண்டியுளது. கி. பி. 8—10ஆம்

நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கிய வுலகில் பல புதிய புதிய யாப்பமைப்புடன் சிற்றிலக்கியங்கள் எழுந்தன; பல புதிய பாவிகற்பங்கள் தோன்றின; யாப்பிலக்கணம் எனும் ஒரு தனிவகை இலக்கணம் செய்ய வேண்டிய நிலைக்கு யாப்பு வளர்ந்தது. இந்த யாப்பு வகைகளின் வளர்ச்சி உச்ச நிலையை யடைந்தபோது பாட்டியல் இலக்கண ஆசிரியர் களும் யாப்பிலக்கண நூல்கள் கூறிய புதிய யாப்பு வடிவங் களை வைத்து இலக்கணம் செய்யத்தொடங்கினர். இதனால் தான் பாட்டியல் இலக்கண நூல்கள் பலவகையான யாப்பு வடிவங்களைக் கொண்டு எழுந்தன.

அன்னிமிருதுல குமாரி தாமசு, 'பிரபந்த தீபிகை' எனும் நூலைப்பற்றி அறிமுகப்படுத்தியுள்ளார் (ஆய்வு. 2, பக். 28-33). ''தமிழ் இலக்கணமரபில் பாட்டியல் வகையில் அடங்கும் பல நூல்களின் வரிசையில் பிரபந்த தீபிகையும் அமைகின்றது. ''பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரிய இந்நூல் வேம்பத்தூர் முத்து வேங்கட சுப்பைய நாவலர் என்பவரால் இயற்றப் பட்டது'' என்று தொடங்கிப் பிற பாட்டியல் நூல்கள், பிரபந்தத் திரட்டு முதலிய நூல்களோடு ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு தெளிவுபடுத்தியுள்ளார் கட்டுரையாசிரியர்.

5. அணி

'பொருளணியின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிய கட் டுரையைச் செ. ப. சுருளிவேல் எழுதியுள்ளார். இதுகாறும் பல ராலும் கூறப்பட்டுவந்த கருத்தினை யடிப்படையாய்க்கொண்டு, தொல்காப்பிய உவமவியலே தோற்ற மூலம் என்றும், அதனை யடியொற்றியே பிற அணியிலக்கண நூல்கள் வடநூற் சார் புடன் தோன்றின என்றும், இனியாவது தமிழிலிருந்து தோன்றித் தமிழுக்காக வாழும் அணியிலக்கணம் தோன்றுதல் வேண்டும் என்றும் அவர் எழுதினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெள்ளிக்கிழமைதோறும் நிறுவன ஆய்வாளர்களைக்கொண்டு கருத்தரங்கு நடத்திவரு கின்றது. 1983 ஆம் ஆண்டில் 'உவமையணி' பற்றியே யமைய வேண்டும் என்று கொண்டு (சில வாரங்கள் தவிர) முப்பத்தாறு கருத்தரங்கு நடத்தியுள்ளது. சங்க இலக்கிய முதலாக இக் கால இலக்கியம் வரையுள்ள பல்வேறு இலக்கியங்களில் உவமையணி ஆளப்பட்டவாற்றை ஆய்வாளர் எடுத்துக் கூறியுள்ளனர். அவற்றின் பட்டியலைப் பின்னிணைப்பிற் காணலாம்.

6. நூற்பாவிற்கு உரை

நூலுக்கு உரை கூறுதல்பற்றிக் கூறவந்து, தொல்காப்பியனார் பொதுவுரை என்பது எப்படி அமைதல் வேண்டும் என்று கூறியிருப்பதுபற்றி விவரித்து எழுதிச் சென்றார் **சி. பாலசுப்பிரமணியன்**. ஆனால், கட்டுரை முடிவுபெறவில்லை (ஆய்வு. 2, பக். 221-226).

''தொல்காப்பியத்தில் குற்றியலுகரமும் அதன் குறுக்கமும்'' எனும் தலைப்புக் கட்டுரையில், **க. பாலசுப்பிரமணியன்,**

''அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்'' (தொல். குற்றிய.3)

என்னும் நூற்பாவுக்கு 'இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறிய உரைகளுள் இளம்பூரணர் உரையே சிறக்கும்' என்று நிறுவியுள்ளார் (ஆய்வு. 2, பக். 216-220).

மேற்சூத்திரத்தில் 'நிறையும்' என்பது இளம்பூரணர் பாடம்; 'நிலையும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம். 'உகரம் நிறையும்' என்பதற்கு உகரம் நிறைந்தே நிற்கும் என இளம்பூரணர் எழுதியதை யாவரும், 'உகரம் நிறைந்த உகரமாக அஃதாவது முற்றியலுகரமாக நிற்கும்' என எழுதியதாகக் கொண்டனர்; அதனால் அவர்க்கு மறுப்பு எழுதினர். உகரம் நிறையும் என்பதற்குக் 'குற்றியலுகரம் அதுவாகவே நிறைவுற்று நிற்கும்; அஃதாவது குற்றியலுகரமாகவே நிற்கும்' என்று அவர் உரைக்குப் பொருள் கொண்டால் மறுப்பிற்கே இடமில்லை. இதுபற்றிய விவரம் ''தொல்காப்பிய உரைவளம்—எழுத்ததிகாரம்—குற்றியலுகரப் புணரியல்'' என்னும் நூலில் அந் நூற்பாவுரையில் காண்க. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு (1983).

இரா. முருகேசன் என்பார் 'ஒன்றறிவதுவே' (மரபியல், 27) என்னும் நூற்பாவைப்பற்றி விவரித்து அதில் 'மன அடிப்படையில் உயிர்கள் பகுக்கப்பட்டிருப்பது நல்லதன்று. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளின் அடிப்படையில் பகுப்பதே சிறந்ததாகும்' என்று எழுதியுள்ளார். இக் கருத்து மேலும் ஆய்விற் குரியதாகும்.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம், ஐவகை மரபின் அரசர் பக்கம், இருமூன்று மரபின் ஏனோர் பக்கம் என்பன

வற்றுக்கு உரையாளர் கூறும் பொருள்களுக்கு மாறாகப் பின் வருமாறு கூறப்பட்ட பொருளுடைக் கட்டுரை யொன்றும் ஆய்வு கோவை 2 இல் காணப்படுகின்றது. அதிற் கண்டவை :

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் : ஓதலந்தணர் (ஆசிரியர்), வேள்வியந்தணர், முனிவரந்தணர், ஆறறியந்தணர், ஏவல் அந்தணர், குறிசொல்பவர் (வேலன் போல்வார்).

ஐவகை மரபின் அரசர் பக்கம் : பேரரசர், அரசர், குறு நிலமன்னர், அமைச்சர், படைத் தலைவர்.

வணிகர் அறுவர் : கூலவாணிகர், அறுவை வாணிகர், பொன் வாணிகர், நறும்பொருள் வாணிகர், உப்பு வாணிகர், பல் பொருள் வாணிகர்.

வேளாளர் அறுவர் : நால்நில உழவர், மட்பாண்டம் செய் வோர் போல்வார், இசைவேளாளர் போல்வார்.

இப்படிக் கூறிய கட்டுரையும் ஆய்விற்குரியதாகும் (ஆய்வு 2' பக். 139-144).

தொல்காப்பியத்திலுள்ள புறனடைச் சூத்திரங்கள், அதி காரத்தின் இறுதியிலும், இயல்களின் இறுதியிலும், இயல்களின் சிறப்பு விதிகளின் இடையிடையேயும் அமைந்துள்ளன. அவற்றை நன்கு பார்த்து,

> ''தொல்காப்பியப் புறனடை நூற்பாக்கள்மூலம், புற னடைச் சூத்திரங்கள், நூலின்கண் கூறிவருகின்ற கொள்கை களுக்கு விதிவிலக்குக் கொள்கைகளைச் சுட்டவும், கொள் கைகளைத் தொகுத்துக் கூறவும், விதிகளின் பொதுக் கொள்கைகளைத் தனியே சுட்டவும், கொள்கைகளின் சிறப்புத் தன்மைகளைத் தனியாக உணர்த்தவும் கூறிவரு கின்ற கொள்கைகளில் கால மாற்றத்தால் ஏற்படும் வளர்ச்சி நிலைகளை ஏற்கக்கூறவும் பயன்படுகின்றன எனக் கொள்ளலாம்''

என நிறைவுரை கூறியுள்ளார் சு. அழகேசன் (ஆய்வு. 2, பக். 12-16).

7. பிற

'அந்த ணாளர்க்கு அரசுவரை வின்றே'' (மரபியல், 75) என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொருள், ''அந்தணர்க்கு அரசாளும் உரிமை நீக்கும் நிலையில்லை'' என்பதாய்க்கொண்டு,

'அந்தணனாகிய மயூரசன்மன் கி. பி. 348இல் அரசேற்றதைக் காட்டி, அவனுக்குப் பின்னரே இச் சூத்திரம் இயற்றப்பட்டது' என்றும், 'அதனால் தொல்காப்பியர் காலம் கி. பி. 4 ஆம் நூற்றாண்டாகலாம்' என்றும் **சி. கோவிந்தன்,** இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பதினான்காம் கருத்தரங்கு ஆய்வுக் கோவைத் தொகுதி 4 இல் ஒருகட்டுரை யெழுதியுள்ளார். அவரை மறுத்து. ''அந்தணர்க்கு அரசாளும் உரிமையில்லை'' என்பதை அச் சூத்திரப் பொருள் எனப் பிறர் (சிவலிங்கனார்) கூறியதைக் காட்டித் தொல்காப்பியர் காலம் முற்பட்டதென்றும், வேதத்துக்கும் முற்பட்டதென்றும் சில சான்றுகளுடன் கூறியுள்ளார் **க. வா சச்சிதானம்** (ஆய்வு 2, பக். 107-116)

'தொல்காப்பியத்தில் நடை, சொல்லாட்சி' எனும் தலைப்பில் **பா. வீரப்பன்** என்பார் ஒருகட்டுரை வரைந்துள்ளார். இக் கட்டுரை இலக்கணம்பற்றியதன்று; தொல்காப்பியத்தில் 'நடை' எனும் சொல் எவ்வெப் பொருளில் ஆளப்பட்டுள்ளது' என்பதுபற்றியதாகும். (ஆய்வு. 2, பக். 340-345) ''நடையெனும் சொல்லைத் தொல்காப்பியர் இன்றைய விடையியலார் கூறும் பொருளுணர்த்தும் திறன், சொல்நடந்து முடியும்போக்கு, சொல்பெறும் இடங்கள், ஓசைநயம் எனும் நடைக்கூறுகளை உள்ளடக்கியே கையாண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது'' என்று முடிவு கூறுகிறார் கட்டுரையாளர்.

தண்டபாணி சுவாமிகளின் அறுவகையிலக்கணம் என்னும் நூலில் பொருளிலக்கணம் கூறப்பட்டவாற்றைத் தொல்காப்பியப் பொருளிலக்கணத்துடன் ஓரளவு ஒப்பிட்டுக் கண்டு எழுதப்பட்ட கட்டுரை **'புதுமைப் பொருளிலக்கணம்'** என்பது. தண்டபாணி சுவாமிகள் பொருளிலக்கணத்தை அகப் பொருள், புறப் பொருள், அகப் புறப் பொருள் என மூவகைப்படுத்திக் கூறியுள்ளார். அவற்றுள் அகப்பொருள் உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமையியல்பு, துறையியல்பு என நான்கு பிரிவுடையது. இந் நான்கு பிரிவுகள்பற்றிமட்டும் கட்டுரையாளர் **நெல்லை சா. சொக்கலிங்கம்** விளக்கிச் சென்றுள்ளார் (செந்தமிழ். தொகுதி 77, பகுதி 2, பக். 82-91).

திருக்குறட்பாக்களில் வருவிக்கப்படும் சொற்கள் சிலவற்றைக் காட்டி அவை திருவள்ளுவரால் மேற்கொள்ளப்பட்ட தொடரியற் புதுமைகள் என்றார் **பொன். கோதண்டராமன்**

(ஆய்வு. 2, பக். 91-96). அவர் காட்டிய குறள்களின் முதற் குறிப்பும் வருவிக்கப்பட்ட சொற்களும் வருமாறு:

''பிறவிப் பெருங் கடல்'' (10) — இறைவனடி சேர்ந்தார் (நீந்துவர்)
''வஞ்ச மனத்தான்'' (271) — (படிற்றொழுக்கம்) கண்டு
''கணை கொடிது (279) — கணையின் செம்மை
''உடையார் முன்'' (595) — தலையாயவர்
''நீங்கான் வெகுளி'' (864) — அவனை வெல்லுதல்
''வழிநோக்கான்'' (855) — அவனது பகை

இக் கட்டுரையின் பயன் பரிமேலழகர் உரையின் சிறப்பு அறிவதும், செய்யுளை நேரே காணும்போது தோன்றும் குறைகளை எவ்வெச் சொற்களை வருவித்துப் போக்கிக் கொள்ளலாம் என்பது அறிவதும், இலக்கணப் புலமை பெறுவதும் ஆகும்.

செ. வை. சண்முகம், அண்ணாமலை பல்கலைக் கழக மொழியியல் துறைமூலம் **'விரவுத்திணை'** என்னும் தலைப்பில் நீண்டதொரு கட்டுரை (74 பக்க அளவில்) எழுதியுள்ளார். முதற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், எல்லாம் தாம் தான் எனும் பெயர்கள் ஆகிய விரவுப்பெயர்கள்பற்றித் தெளிவாக ஆய்வு செய்து மரபிலக்கணம் மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதியுள்ளார். மரபிலக்கணம் வல்லாரும் மொழியியல் வல்லாரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைந்த கட்டுரையிது.

2. நூல்கள்

1. **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,** தொல்காப்பிய நூல் உரைவளத்திட்டம் அமைத்து நூல்களை வெளியிட்டு வருகின்றது. அத் திட்டத்தின் நோக்கப்படி தொல்காப்பியத்தின் ஒவ்வோர் இயலுக்கும் ஒவ்வொரு நூலாக 27 நூல்களும் சிறப்புப் பாயிரத்துக்கு ஒருநூலும் ஆக 28 நூல்கள் வெளியிட வேண்டும். சிறப்புப் பாயிரத்துக்கும், எழுத்ததிகார ஒன்பது இயல்களுள் நூன்மரபுமுதல் உயிர்மயங்கியல்வரையுள்ள எட்டு இயல்களுக்கும், பொருளதிகாரத்தின் இறுதியியலாகிய மரபியலுக்கும் ஆகப் பத்து நூல்கள் வெளிவந்துள்ளன.

1983 இல் எழுத்ததிகாரப் புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல், சொல்லதிகார வேற்றுமையியல் ஆகிய மூன்று இயல் களுக்கும் உரைவள நூல்கள் வெளியிடப்பட்டன.

புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகியவை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், தற்கால அறிஞர் வே. வேங்கடாராசுலு ரெட்டியார், வெள்ளைவாரணனார், சுப்பிரமணிய சாஸ்திரியார் முதலியோர் கருத்துரைகளும், மொழியியலறிஞர் செ. வை. சண்முகம், ச வே. சுப்பிரமணியன் போல்வார் ஆய்வுரைகளும், பதிப்பாசிரியர் (சிவலிங்கனார்) கருத்துரைகளும்கொண்டு வெளிவந்துள்ளன.

சொல்லதிகார வேற்றுமையியல் உரைவள நூல், இளம் பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க் கினியர், கல்லாடர், பெயரறியப்படா ஒருவர் ஆகியோர் உரை களும், வெள்ளைவாரணனார், சுப்பிரமணிய சாஸ்தியார், ஆதித்தர், பதிப்பாசிரியர் ஆகியோர் கருத்துரைகளும், தற்கால மொழியியலறிஞர் ச. வே. சுப்பிரமணியன், அகத்தியலிங்கம், செ. வை. சண்முகம் போல்வார் ஆய்வுரைகளும் கொண்டு வெளிவந்துளது.

2. **மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்** தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரைவளம் வெளியிட்டு வருகின்றது. 1983 இல் புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய நான்கு இயல்களுக்குத் தனித்தனியாய் உரைவளம் வெளி யிட்டுள்ளது. அவற்றில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரை களும், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் உரையும், க. வெள்ளை வாரணனாரின் ஆய்வுரைகளும் அடங்கியுள்ளன.

3. மருதூர் **ச. அரங்கராசன், 'இலக்கணவரலாறு பாட்டியல் நூல்கள்'** என்றொரு நூல் வெளியிட்டுள்ளார். அந் நூலுக்கு அணிந்துரை வழங்கிய **பொன். கோதண்டராமன்** எழுதியுள்ள,

> ''இலக்கண வளர்ச்சிபற்றியும் பாட்டியலின் தோற்றம் பற்றியும் ஆராய்ந்து விளக்கிய பிறகு இன்று நமக்குக் கிடைக்கும் எல்லாப் பாட்டியல் நூல்களையும் ஆசிரியர் முறையாய் அறிமுகப்படுத்துகிறார். சில பாட்டியல் நூல் கள் நூல்வடிவில் இன்று நமக்குக் கிடைக்காமற்போனா லும் அவைபற்றி ஆங்காங்குச் சில குறிப்புகளாவது கிடைத்

கின்றன. அப்படிப்பட்ட பாட்டியல் நூல்களைப்பற்றிய செய்திகளையும் ஆசிரியர் இயன்றவரை முயன்று திரட்டி இந் நூலின் பிற்பகுதியில் வழங்கியுள்ளார்.

''பாட்டியல் நூல்கள் ஒவ்வொன்றாக ஆராயும்போது ஒவ்வொரு நூலுக்கும் உரிய ஆய்வுப் பகுதியில் 1. ஆசிரியரைப்பற்றிய செய்தி, 2, நூலமைப்பு, 3. உரைபற்றிய செய்தி, 4. பதிப்புப்பற்றிய செய்தி என நான்கு உட்பகுப்புகளை அமைத்துக்கொண்டு அரங்கராசன் முறையாகவும் தெளிவாகவும் இந்த ஆய்வை நிகழ்த்தியுள்ளார்''

எனும் பகுதிகளைக் கொண்டு இந் நூலின் சிறப்பு அறியலாம்.

நூல்கள் விவரம்

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள் :

பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனார்

1. தொல்காப்பியம் (உரைவளம்) எழுத்ததிகாரம் — புள்ளிமயங்கியல்

2. தொல்காப்பியம் (உரைவளம்) எழுத்ததிகாரம் — குற்றியலுகரப் புணரியல்

3. சொல்லதிகாரம் (உரை வளம்) சொல்லதிகாரம் — வேற்றுமையியல்

2. மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியீடுகள் :

ஆய்வுரையாளர் க. வெள்ளைவாரணன்

1. தொல்காப்பியம், புறத்திணையியல் — உரைவளம்
2. ,, , களவியல் — உரைவளம்
3. ,, , கற்பியல் — உரைவளம்
4. ,, , பொருளியல் — உரைவளம்

3. பால முருகன் பதிப்பக (மருதூர், உடையார்பாளயம் வட்டம், திருச்சிராப்பள்ளி) வெளியீடு:

'இலக்கண வரலாறு-பாட்டியல் நூல்கள்'

ஆசிரியர் மருதூர் ச. அரங்கராசன்

இணைப்பு—1

1. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றப் பதினைந்தாம் கருத்தரங்கின் ஆய்வுக்கோவைத் தொகுதி 2இல் வெளிவந்த இலக்கணக் கட்டுரைகள்.

எண்.	கட்டுரையாளர் பெயர்	கட்டுரைத் தலைப்பு	பக்கம்
1.	மா. அய்யாச்சாமி	புதிய மயக்கம்	1
2.	சு. அழகேசன்	தொல்காப்பியப் புறனடைச் சூத்திரங்கள்	12
3.	சி. அரசமுத்து	சாரியைகள்	17
4.	அன்னிமிருதுல குமாரி தாமசு	பிரயந்ததீபிகை	28
5.	ஏ. ஆதித்தன்	தொல்காப்பியத்தில் மார் ஈற்றுச் சொற்களா?	34
6.	வெ. இசக்கிமுத்து	வினைத்தொகை காலம் காட்டுமா?	45
7.	சா. கிருட்டின மூர்த்தி	இளம்பூரணரும் பொருளதி காரமும்	73
8.	பொன். கோதண்ட ராமன்	திருக்குறளில் சில தொடரியற் புதுமைகள்	91
9.	க. வா. சச்சி தானந்தம்	தொல்காப்பியர் காலம்	107
10.	எஸ். எம். சரோஜினி பாய்	'அது' எனும் குறிப்புப் பெயரெச்சம்	111
11.	ஆ. சிவலிங்கனார்	அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்	139
12.	பா. சீதாராமன்	தத்தம் திரிபே சிறிய வென்ப	145
13.	க. சுடலைமுத்து	காப்பியர் நோக்கில் விரவுப் பெயர்	158
14.	பி. பெ. சுயம்பு	மெய்மயக்கம்	172
15.	செ. ப. சுருளிவேல்	பொருளணியின் தோற்றமும் வளர்ச்சியும்	177

1	2	3	4
16.	இரா. பால கிருஷ்ணன்	வேற்றுமையுருபுகள் அன்றும் இன்றும்	210
17.	க. பாலசுப்பிர மணியன்	தொல்காப்பியத்தில் குற்றிய லுகரமும் அதன் குறுக்கமும்	216
18.	சி. பாலசுப்பிர மணியன்	நூற்கு உரை கூறுதல்-பொது வுரை என்பது தொல்காப் பியனார் கூறுவது	221
19.	அ. பிச்சை	சங்க கால ஆசிரியப்பா வகைகள்	227
20.	ம. ரா. பூபதி	விருத்தப் பாக்களில் ஆய்தத் தின் நிலை	233
21.	சு. மகாலட்சுமி	பாட்டுள் பெயர்ச்சொற்கள்	248
22.	பா. மல்லிகா	வீரமாமுனிவரும் வினைமுற்று விகுதிகளும்	265
23.	பா. வீரப்பன்	தொல்காப்பியத்தில் நடை சொல்லாட்சி	340
II புலமை. தொகுதி 9. பகுதி 1இல் வெளிவந்தது.			
24.	அரங்க. நலங்கிள்ளி	பாட்டியல் இலக்கணவரலாறு	40
III செந்தமிழ். தொகுதி 77. பகுதி 2இல் வெளிவந்தது.			
25.	நெல்லை நா. சொக்கலிங்கம்	புதுமைப் பொருளிலக்கணம்	82
IV செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 57 பரல் 9இல் வெளிவந்தது.			
26.	இரா. கிருட்டினன்	துணைவினைகள்	
V அண்ணாமலை பல்கலைக் கழக மொழியியல் துறை வெளியீடு. மொழியியல் 6, 4-1983			
27.	செ. வை. சண்முகம்	விரவுத்திணை	1-74

இணைப்பு—2

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1983இல் வெள்ளிக் கிழமை வாரக் கருத்தரங்கில் நிகழ்த்திய 'உவமையணி' பற்றிய கட்டுரைகள்.

எண்	நாள்	கட்டுரையாளர் பெயர்	கட்டுரைத் தலைப்பு
1.	4- 2-83	டாக்டர் தா. வே. வீராசாமி	பதிற்றுப்பத்தில் உவமை
2.	18- 2-83	டாக்டர் ச. சிவகாமி	இலக்கண நூல்களில் உவமை
3.	25- 2-83	டாக்டர் ந. கடிகாசலம்	அஷ்டப் பிரபந்தத்தில் உவமை
4.	4- 3-83	த. அழகப்பராசு	முத்தொள்ளாயிரத்தில் உவமைகள்
5.	18- 3-83	டாக்டர் கே. பகவதி	கலித்தொகையில் உவமைகள்
6.	31- 3-83	டாக்டர் எஸ். சசிவல்லி	திருமுருகாற்றுப்படையில் உவமைகள்
7.	8- 4-83	ஆ. சிவலிங்கனார்	திருவாசகத்தில் உவமைகள்
8.	22- 4-83	ஆர். ஆளவந்தர்	நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் உவமைகள்
9.	13- 5-83	வே. இரா. மாதவன்	ஐங்குறுநூறு தரும் உவமை நலம்
10.	20- 5-83	டாக்டர் அன்னி தாமசு	உவமை-பத்துப்பாட்டு (முருகு நீங்கலாக)
11.	24- 6-83	மெய். சந்திரசேகரன்	திருமந்திரத்தில் உவமைகள்
12.	1- 7-83	ஆ. சிவலிங்கனார்	முதற்குறள் உவமை
13.	8- 8-83	அகமது மரைக்காயர்	சீறாப்புராண உவமைகள் (நாட்டுப் படலம் மட்டும்)

1	2	3	4
14.	15- 7-83	டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்	உவமை, வகை, இடம், பயன்
15.	22- 7-83	டாக்டர் க. த. திருநாவுக்கரசு	பழந்தமிழ் இலக்கியத்துள் நாடு நகர உவமைகள்
16.	29- 7-83	டாக்டர் தா. வே. வீராசாமி	வள்ளுவர் உவமையும் வாழ்வியலும்
17.	5- 8-83	டாக்டர் ஏ. என். பெருமாள்	சாத்தனாரின் உவமைத் திறன்
18.	12- 8-83	டாக்டர் அரங்க. இராமலிங்கன்	பாண்டியன் பரிசில் உவமைகள்
19.	19- 8 -83	டாக்டர் அன்னி தாமசு	உவமை-நற்றிணை
20.	26- 8-83	டாக்டர் ர. விஜய லட்சுமி	சங்கப்பாக்களில் தொடர் உவமைகள், அகநானூறு சிறப்புப் பார்வை
21.	2- 9-83	டாக்டர் கே. பகவதி	பரிபாடலில் உவமைகள்
22.	9- 9-83	டாக்டர் எஸ். சசிவல்லி	அற்புதத் திருவந்தாதியில் உவமைகள்
23.	23- 9-83	பூ. சுப்பிரமணியன்	மெய்க்கீர்த்திகளில் உவமை
24.	30- 8-83	ஆர். ஆளவந்தார்	கம்பன் உவமையில் ஆளினம்
25.	7-10-83	த. அழகப்பராசு	பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம் பாடல்களில் உவமை
26.	14-10-83	மா. சேசையா	ஐங்குறுநூறு உவமைகள் (ஓரம்போகியார் பாடல்கள் மட்டும்)
27.	21-10-83	வே. இரா. மாதவன்	மருத்துவ நூல்தரும் உவமை நலம்

1	2	3	4
28.	28-10-83	டாக்டர் ச. சிவகாமி	புறநானூற்று உவமைகள்
29.	7-11-83	பூ. சுப்பிரமணியன்	நன்னூலில் உவமைகள்
30.	11-11-83	டாக்டர் வே. கீதாலட்சுமி	குறுந்தொகையில் உவமைகள்
31.	18-11-83	தி. இரா. சின்னப்பன்	மனோன்மணீயத்தில் உவமைகள்
32.	25-11-83	வெ. அழகர் ராமாநுசம்	ஒன்பதாம் திருமுறையில் உவமைகள்
33.	2-12-83	அகமது மரைக்காயர்	அழகின்சிரிப்பில் உவமை, உருவகம் உணர்த்தும் முறை
34.	9-12-83	வை. சோமசுந்தரம்	சிலப்பதிகாரத்தில் உவமைகள்
35.	23-12-83	பா. அருட்செல்வி	திருவருட்பாவில் உவமைகள்
36.	20-12-83	டாக்டர் க. த. திருநாவுக்கரசு	உவம வுருபுகள்

இசை நூல்கள்

ஆர். ஆளவந்தார்

ஏழ் இசை நூல்கள்பற்றியே அறிய முடிகின்றது. இவை எல்லாம் தமிழ் இசை எனத் தக்கன அல்ல. பாரதியின் இசைப் புலமை அவரது ஆளுமையின் மற்றொரு பரிமாணத்தைக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழ் மக்கள் இசையை ஒருதனிக்கலையாகவே வளர்த்தனர். மற்ற நுண்கலைகள் எல்லாம் பின்னர்தான் தோன்றின. தொழில்களிலும், மதச் சடங்குகளிலும் இசை இடம்பெற்றிருந்தது. இசை இறைதன்மை வாய்ந்ததாய்க் கருதப்பட்டு வந்தது. விழா அல்லது சடங்குகளில் இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாய்க் கருதப்பட்டுவந்தது. இசை இன்றேல் அவ் விழாவோ, சடங்கோ குறையுடைய ஒன்றாகவே கருதப்பட்டது.

மக்களின் அன்றாட வாழ்வில் இசை பெற்றிருந்த முக்கிய இடத்தை நம் இலக்கியங்களும் புராணங்களும் நமக்கு அறிவிக்கின்றன. மன்னர்களால் இசை போற்றப்பட்டது. இச் சிறப்பு இசைக்கலை ஒன்றற்கே உரியதாய் இருந்தது. மற்றக் கலைகள் எல்லாம் இந்த அளவு மதிக்கப்படவில்லை. இசையைப் போற்றிய மன்னர்களும், இசைக் கலைஞர்களும் மிகப் பண்டைக் காலந்தொட்டே தொடர்ந்து வளர்ந்து வரும் இசைக்கலையை நமக்கு அளித்துள்ளனர்.

இசைக் கருவூலமாகிய நம் தமிழ்நாட்டின் இசைக்கலையைச் சித்திரிக்கும் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் உலக வரலாற்றிலேயே ஒர்ஒப்பற்ற இடத்தை நம் நாட்டிற்கு அளித்துள்ளன. தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை எந்தவித மாற்றமும் அடையாது ஒரே தன்மையாய் நிலைத்துநிற்பதால், இடைச் செருகல் போன்ற குறைகள் எதுவுமின்றி நம் இசைக் கலையின் உண்மைத் தன்மையை ஆய்ந்தறிய நமக்கு அவை உதவுகின்றன.

இதே போன்று பல்வகைக் கல்வெட்டுகள் போன்றவையும் அவை தோன்றிய காலத்தின் இசையின் உண்மை நிலையை நமக்குக் காட்டிநிற்கின்றன. குடுமியான்மலை, தஞ்சைப்பெரிய கோயில் போன்ற இடங்களில் அமைந்துள்ள கல்வெட்டுகள் தரும் செய்தி களை நாம் சான்றாய்க் கூறலாம். இச் செய்திகள் இசையின் ஆய்வுக்கும் வளர்ச்சிக்கும் பயன்படும் நிலையில் அமைந்துள்ளன.

இசை நூல்கள் பல பண்டே தோன்றியுள்ளன. அகத்தியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், தாளவகையோத்து, பஞ்ச பாரதீயம், பஞ்சமரபு, பெருங்குருகு, பெருநாரை, தாள சமுத்திரம், சச்சபுட வெண்பா, பதினறுபடலம், இசைத்தமிழ்ச் செய்யுட் கோவை போன்ற பல இசைநூல்கள் பண்டே தோன் றியவை. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம் உரைப் பாயிரத்தில் பல பண்டைய இசை நூல்களின் பெயர் களைத் தந்துள்ளார். அந்த இசை நூல்களில் பல அழிந்து போய் விட்டன.

காலப் போக்கில் இசை இறை பத்தியைப் பரப்பும் சாதன மாய் அமைந்து, பல அடியார்களால் போற்றி வளர்க்கப்பட்டது. பத்திப் பாடல்கள் இசையைத் தாங்கி இசைநூல்களாய் அமைந்தன. நாள்கள் செல்லச்செல்ல அயல்மொழியினரின் தொடர்பால் தமிழிசை கருநாடக இசையாய் மாறியது. அதனால், பின் தோன்றிய இசைநூல்கள் பெரும்பான்மையும் அதன் தொடர்புடையனவாகவே அமையலாயின.

1983இல் மிகச் சில இசைநூல்களே வெளிவந்துள்ளன.

அருட்பா இசையமுதம்

இந் நூல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொரு ளுதவியுடன் வெளியிடப்பெற்றது; 228 பக்கங்கள் கொண்டது.

இந் நூல் தமிழரசு இயக்கக் கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாக்களி லிருந்து தொகுக்கப்பட்ட 101 பாடல்களைக் கொண்டதாகும். நல்ல இசைஞானமுடைய கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்க ளாலும், இசைப்பாடகி அருட்பா இசையரசி கலைமாமணி குருவாயூர்ப் பொன்னம்மாள் அவர்களாலும் இந்த 101 பாடல் களுக்கும் இசையமைக்கப்பட்டுள்ளது.

பாரதியின் இசைப் புலமை

இந்நூல், 'நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாரதி, பாட்டுகள் இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவர்; கருநாடக

இசையை நன்கு அறிந்தவர்; இசையைப்பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் பல எழுதியவர்' என்ற அரிய செய்திகளைக் கொண்டதாகும்.

இந்நூல் 76 பக்கங்களையும் ஐந்து அத்தியாயங்களையும் கொண்டது. முதல் அத்தியாயம் பாரதியின் இசைப் புலமையைப் பொதுவாய் விளக்குகிறது. இரண்டாம் அத்தியாயம் 'சங்கீத விஷயம்' குறித்து எழுதிய பாரதியாரின் கட்டுரைகளைக் கொண்டது. (பாரதியார் தம் கருத்துளை ஆறு கட்டுரைகள் வாயிலாய்ச் சுதேசமித்திரன் நாளிதழில் தொடர்ந்து வெளியிட்டார். அவை முறையே மேமாதம் 3, 4, 11, 27 தேதிகளிலும், ஜுன் மாதம் 19-ஆம் தேதியிலும், 1916 ஆண்டு வெளியிடப்பட்டுள்ளன.) மூன்றாம் அத்தியாயம் பாரதியாரின் பாடும் திறமையை விளக்குவதாய் அமைகிறது. நான்காம் அத்தியாயம் பாரதியின் பாட்டுக்களைத் திறனாய்வதாய் அமைகிறது. ஐந்தாம் அத்தியாயம் பாரதியின் பாடல்களைப் பரப்பியவர்களைப்பற்றிய விவரங்களைக் கொண்டு அமைகிறது.

வர்ணங்கள், அபூர்வராகக் கீர்த்தனைகளும், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பஞ்சரத்தினமும்.

சங்கீத வித்துவான் கானரத்ன இசை வள்ளல் கடலூர் எம். சுப்பிரமணியன், எம்.ஏ.,பி.ஏ., அவர்கள் இந் நூலின் ஆசிரியர்.

இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டது. முதல்பாகம் வர்ணங்கள்; 19 வர்ணங்களைக் கொண்டது. இரண்டாம் பாகம் அபூர்வராகக் கீர்த்தனைகள். இது 15 கீர்த்தனைகளைக் கொணடது. மூன்றாம் பாகம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பஞ்சரத்தினம். இது 5 பாடல்களைக் கொண்டது.

72 மேளகர்த்தா ராகங்களில் க்ருதிகள்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் ஸ்வர அமைப்புக் கொண்டது. வித்துவான் கானரத்ன இசைவள்ளல் கடலூர் எம். சுப்பிரமணியன் எம்.ஏ.,பி.ஏ., அவர்கள் இந் நூலின் ஆசிரியர்.

மகாராஜா ஸ்ரீஸ்வாதி திருநாள் அவர்களின் க்ருதிகள் இரண்டாம் பாகம்.

ஸ்வர அமைப்புடன் கூடியது. டாக்டர் செம்மங்குடி ஆர். ஸ்ரீநிவாசய்யர் இந் நூலின் ஆசிரியர். 1970இல் 57 உருப்படிகளுடன் வெளியான இசை நூல் முதல் பாகத்தின் தொடர்ச்சியாய் இந்நூல் இரண்டாம் பாகமாய் வெளியிடப்படுகிறது.

இந் நூலில் 24 கீர்த்தனங்களும், மலையாளம், வடமொழி ஆகிய இருமொழிகளும் கலந்த மணிப்பிரவாள பதங்கள் 9உம், தெலுங்கு பதம் ஒன்றும், ஜாவளி ஒன்றும், மணிப்பிரவாள தானவர்ணம் ஒன்றும், வடமொழியில் தானவர்ணம் ஒன்றும், வடமொழியில் தானவர்ணம் ஒன்றும், நாட்டியத்திற்கான பத வர்ணங்கள் வடமொழியில் 12உம் ஆக உருப்படிகள் 50 அடங்கியுள்ளன. இதனுடன் ராகலக்ஷணங்களும், மலையாள மொழியிலும் ஸம்ஸ்க்ருத மொழியிலும் ஸாஹித்யங்களும் தனியாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினீ

எட்டயபுரம் ஆஸ்தான வித்துவானாய் இருந்த ஸ்ரீசுப்பராம தீக்ஷிதர் இயற்றியது. தமிழ் எழுத்துப் பதிப்பு; புதுடெல்லி ஸங்கீத நாடக அகாடமியின் முழுஉதவிகொண்டு தயாரிக்கப் பெற்றது.

தமிழில் எழுதியவர்கள்: டாக்டர் எஸ். இ. இராமநாதன் வித்துவான். பி. இ. இராஜமய்யர்

இந் நூலில் இராகாங்க இராகங்கள் சதுராங்கனி, ஸந்தான மஞ்சரி, ஜோதி, தௌதபஞ்சமம், நாஸாமணி, குஸமோகரம், ரஸமஞ்சரி ஆகியவற்றின் இராகலக்ஷணங்கள், இலக்ஷ்யகீதங்கள், கீர்த்தனங்கள், ஸஞ்சாரிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

அநுபந்தம் 'ஏ' இல் இராமசாமி தீட்சிதர், முத்துசாமி தீட்சிதர், சுப்பிரமணிய தீட்சிதர் ஆகியோர் இயற்றிய 16 இராகமாலிகைகளும், அநுபந்தம் 'பி'இல் 55 உருப்படிகளும் இடம்பெற்றுள்ளன.

திருத்தணி கேசன் இதயாஞ்சலி

இயற்றியவர் ஆண்டவன் பிச்சை. பதிகம், கண்ணிகள், நாமாவளி, கீர்த்தனை ஆகிய வகைகளில் 53 பாடல்கள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

மதிப்பீடு

அருட்பா இசையமுதம்: இசைப் பாவலரும், இசைப் பாடகியும் பெருமுயற்சி எடுத்து இந்நூலைப் படைத்துள்ளனர். திருவருட்பாவிலுள்ள பாடல்கள் அனைத்துமே பத்திரசம்

நிறைந்தவை. அவற்றுள்ளும் மிகச் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து, இந் நூலில் பதிப்பாசிரியர் தந்துள்ளார். வெண்பா, விருத்தப்பா, அகவற்பா, கீர்த்தனைகள் எனப் பல வரிசையில் இப் பாடல்கள் அமைந்திருந்திருந்தாலும் இவை எல்லாம் இசைப் பாடல்களாய் வடிவமைக்கப்பட்டு, இசை யரங்குகளில் பாடப்படுகின்றன.

கலைமாமணி குருவாயூரம்மாள், வள்ளலாரின் விருத்தப் பாக் களையும், அகவற் பாக்களையும் இசைப் பாடல்களாக்கியுள்ளார். அறுசீர்களால் அமைந்த 32 செய்யுள்களைக்கொண்ட திருவடிப் புகழ்ச்சியிலிருந்து 10ஆம் செய்யுளைப் பிரித்தெடுத்து, அதற்கு இராகமும் தாளமும் அமைத்து, தனியொரு இசைப் பாடலாய்த் தந்துள்ளார். மேலும் விருத்தப் பாக்களைப் 'பல்லவி, அனுபல்லவி, சரணம்' என்று மூன்று வகையாய்ப் பிரித்து இராகம், தாளம் அமைத்து, இசைப்பாட்டாக்குவதில் சிரமம் இருக்கிறது. இசையமைத்தவர் அந்தச் சிரமத்தைவென்றிருக் கிறார். இசையமைத்தவர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற வட சொற்களுக்கு மாற்றாக எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

வள்ளலார் தம் இசைப் பாடல்களுக் கெல்லாம் தாமே இன்னராகம், இன்னதாளம் எனத் தந்துள்ளார். அவற்றில் சிலவற்றிற்குத் தாளங்களுக்குப் பிடித்தமான இராகத்தையும் தாளத்தையும் தொகுப்பாசிரியரும், இசையாசிரியரும் தந்துள்ள னர். ''வருவாரழைத்து வாடி'' என்ற அருட்பா இசைப் பாடலுக்கு வள்ளலார், 'பியாகடை' என்ற இராகத்தைத் தந்துள்ளார். அதனைக் 'கரகரப்ரியா' வாகக் குருவாயூரம்மாள் மாற்றியுள்ளளார். ''தெண்டனிட்டேனென்று சொல்லடி'' என்ற இசைப்பாடலுக்கு வள்ளலார் தோடி இராகத்தைத் தந்துள்ளார். இதனைச் 'சங்கராபரணமாய்' மாற்றியுள்ளார். இந்த வகையில் திருவருட்பாப் பாடல்களுக்குப் புத்தணிபூட்டி, புதுமெருகேற்றி மக்களுக்கு வழங்கியுள்ளனர் இந் நூலாசிரியர்கள்.

கோடீஸ்வர ஐயர் 91 பாடல்களுக்கும். சி. ஆர். ஸ்ரீநிவா சயங்கார் 21 பாடல்களுக்கும் சுரக் குறிப்புகள் எழுதியதைத் தொகுத்துத் 'திரு அருட்பாக் கீர்த்தனைப் பகுதி' என்னும்தலைப் பில் ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்கள், 50 ஆண்டுகளுக்கு முன்பே ஒருநூலை வெளியிட்டுள்ளார். அதற்குப் பிறகு இப் போது 'அருட்பா இசையமுதம்' என்ற பெயரில் இராக, தாள,

சுரக் குறிப்போடு இந்நூல் வெளிவந்திருப்பது பாராட்டிற் குரியது.

இசைக் கலைக்கும், தமிழிசை இயக்க வளர்ச்சிக்கும் இந் நூல் பயன்படும்.

பாரதியின் இசைப்புலமை : பாரதி என்ற வைரத்தின் மற்றொருபுறம் பலருக்குத் தெரியாது. பாட்டுகள் இயற்றுவதிலும், பாடுவதிலும் அவர் வல்லவர்; கருநாடக இசையை நன்கு அறிந்தவர்; இசையைப்பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் பல எழுதியவர். அவர் இயற்றிய குயில் பாட்டில் இசையின் இலக்கணங்களைப் பின்வருமாறு கூறுகிறார்.

1. நாதம், நாதம், நாதம்
   நாதத்தேஓர் நலிவுண் டாயின்,
   சேதம், சேதம், சேதம்.

2. பண்ணே, பண்ணே, பண்ணே
   பண்ணிற்கேஓர் பழுதுண் டாயின்,
   மண்ணே, மண்ணே, மண்ணே.

3. தாளம், தாளம், தாளம்
   தாளத்திற்கோர் தடையுண் டாயின்,
   கூளம், கூளம், கூளம்.

'நல்ல இசைக்கு நாதம், பண், தாளம் மூன்றும் இன்றியமையாதன. இவற்றில் எந்த ஒன்றனுக்குக் குறை ஏற்பட்டாலும் இசை கெடும். அது முழுமையானதாய் விளங்காது' என்பதனை எதுகை மோனைச் சந்தங்களுடன் பாரதியார் எளிமையாய் விளக்கியுள்ளார்.

'நம் நாட்டு இசை மற்ற நாடுகளின் இசைக் கலையைவிட மேலானது' என்பது பாரதியாரின் முடிந்த துணிபு. அவர் காசியில் வாழ்ந்த காலத்தில் வட இந்திய இசை முறைகளையும் கற்றிருக்க வேண்டும். தம் பாட்டுகளில் சிலவற்றிற்கு இந்துஸ்தானி இராகங்களைக் கொடுத்துள்ளார். அவர் கட்டுரைகளிலும் வடநாட்டு இசைவல்லுநர்கள் எவ்வாறு தங்கள் தொண்டையைச் சரிவரப் பழக்கி, அருமையாய் வைத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டு நம் நாட்டில் அத்தகைய சாதனை மிகக் குறைவு தான் என்று வருந்தியிருக்கிறார். அதனால், நம் நாட்டு இரண்டு வகை இசைகளையும் நன்கு அறிந்து, ஆராய்ந்தவர் பாரதி, புதுச்

சேரியில் வாழ்ந்த காலத்தில் மேற்கத்திய இசையையும் அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஒருபிரெஞ்சு நாட்டுப் பாட்டின் மெட்டில் ஒருபாட்டையும் இயற்றியுள்ளார்.

57 பாடல்களுக்குப் பாரதியாரே இராகங்கள் கொடுத்துள்ளார். பாரதியாரின் பாடல்களைப் பாடிப் பரப்பியவர் **தேவ நாராயணன்** என்பவர். **கே. சக்கரபாணி** நாடகங்களில் பாடிப் பரப்பினார். சினிமாக்களின்மூலமும் பாரதி பாடல்கள் பரப்பப்பட்டுள்ளன. முழுதும் பாரதி பாடல்களைமட்டுமே கொண்ட ஒரே படம் 'கப்பலோட்டிய தமிழன்.' அது 11 பாடல்களைக் கொண்டது. 'வறுமையின் நிறம் சிவப்பு' 'இரண்டு பாடல்களையும்', 'கைகொடுத்த தெய்வம்', 'திருமால் பெருமை', 'தெய்வத்தின் தெய்வம்', 'படிக்காத மேதை', 'பெண்', 'ஓர் இரவு', 'வாழ்க்கை' ஆகிய படங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலையும், 'வேதாள உலகம்' நான்கு பாடல்களையும், 'நாம் இருவர்' ஐந்து பாடல்களையும், 'ஏழாவது மனிதன்' பதின்மூன்று பாடல்களையும் கொண்டனவாகும். இசைத்தட்டு, ஒலிநாடா, கச்சேரிகள்மூலமும் பாரதியின் பாடல்கள் பரப்பப்படுகின்றன. டி. கே. பட்டம்மாள், மதுரை மணிஐயர், எம். எஸ். சுப்புலட்சுமி, எம். எல். வசந்தகுமாரி, ஜி. என். பாலசுப்பிரமணியன், செம்மங்குடி சீநிவாசய்யர், சீர்காழி கோவிந்தராஜன், டி.எம். சௌந்தரராஜன், டி. என். சேஷகோபாலன், எஸ். இராமநாதன், என். சி. வசந்தகோகிலம் ஆகியோர் அவர் பாடல்களைப் பாடிப் பரப்பியுள்ளனர். பாரதியாரின் கொள்ளுப்பெயரன் இராஜ்குமார் பாரதியும் இந்தவரிசையில் இடம் பெறுகிறார். தொலைக்காட்சியும் வானொலியும்கூட இந்தப் பணியைச் செய்கின்றன.

வர்ணங்கள், அபூர்வராகக் கீர்த்தனைகள், ஸ்ரீராஜராஜேஸ்வரி பஞ்சரத்தினம் ஆகியவை கொண்ட இசைநூல் :

'கருநாடகச் சங்கீத பாட முறையில் ஒருமுக்கியமான இடத்தைப் பெற்றுள்ள' வர்ணங்கள்', முன்னமேயே பல முக்கியமான இராகங்களில் பல வித்துவான்களால் பாடப்பட்டிருந்தும், இன்னும்சில இராகங்களில் வர்ணங்களிருந்தால் இசை பயில்பவர்களுக்கும், வித்துவான்களுக்கும் உதவியாயிருக்கும்' என்ற நோக்கத்துடன் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

ஓர் அபூர்வராகத்தை எல்லோரும் எளிதில் பாட, அந்த இராகத்தில் ஸ்வரப்படுத்திய கீர்த்தனை இருக்க வேண்டும் என்ற

தேவையை உணர்ந்து அபூர்வராகக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளன.

72 மேளகர்த்தா ராகங்களில் க்ருதிகளைக் கொண்ட இசை நூல்: முக்கியமாக 72 மேளராகங்களுக்கும் கீர்த்தனைகள் செய்து, எளிய முறையில் ஸ்வர தாளக் குறிப்புடன் இந் நூல் அமைந்துள்ளது; தமிழிலும், ஆங்கிலத்திலும் ஸ்வர, தாள அமைப்புடன் உள்ளது.

மகாராஜா ஸ்ரீஸ்வாதி திருநாள் அவர்களின் க்ருதிகள் இரண்டாம் பாகம்: மகாராஜா ஸ்ரீஸ்வாதிதிருநாள் அவர்கள் கீர்த்தனங்களைப் பரப்பும் பெரிய பொறுப்பினை ஏற்றுக் கொண்ட காலஞ் சென்ற ஹரிகேசவ நல்லூர் காயகசிகாமணி டாக்டர் எஸ். முத்தய்யா பாகவதர் அவர்கள், தாம் சேகரித்த கீர்த்தனங்களை இந் நூல் ஆசிரியர் டாக்டர் செம்மங்குடி ஆர். சீநிவாசய்யர் அவர்களிடம் ஒப்படைத்தார். அவற்றைப் பரப்பும் பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் இந் நூல் வெளிவந்துள்ளது.

திருவாங்கூர் மாட்சிமை தங்கிய மகாராணி சேதுபார்வதி பாய் அவர்களுடைய நினைவு மலராய் இந் நூல் சமர்ப்பிக்கப் படுகிறது.

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினீ: இந் நூலாசிரியர் ஸ்ரீஸுப்ப ராமதீட்சிதர், ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதர் சகோதரர் பெயர்.

திருத்தணிகேசன் இதயாஞ்சலி: இந் நூலில் அடங்கிய பாடல்கள் அனைத்தையும், 'கல்வி அறிவோ, இசை அறிவோ ஒன்றுமே இல்லாத தம்மை, ஆண்டவனே புனைந்து பாடவைத்தார், என்று ஆசிரியரே கூறிக்கொள்கிறார். பல ஆண்டுகள் திருமுல்லை வாயிலில் இந் நூலாசிரியர் 'வைஷ்ணவி கோவிலில் தங்கியிருந்தபோது தேவி, 'தன்மேல் பல பாடல்களைப் பாட வைத்தார்' என்றும் கூறுகிறார்.

இசை நூல்கள் மேலும் பல வெளிவந்து இத் துறையை வளமுறச் செய்தல் தேவை.

1983இல் வெளிவந்த இசைபற்றிய நூல்கள்

1. அருட்பா இசையமுதம் (தொகுப்பு) கலைமாமணி கு. கா. கிருஷ்ணமூர்த்தி; இசையமைப்பு: அருட்பா இசையரசி, கலைமாமணி, குருவாயூர்ப் பொன்னம்

மாள்; வெளியீடு: முத்தமிழ்ப்பண்ணை, 5, சாரதா புரம், மயிலாப்பூர், சென்னை 600 004. விலை ரூ. 15

2. பாரதியின் இசைப்புலமை, K. R. இராசகோபாலன், புள்ளியியல் துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை-59.

3. Varnams, Keerthanas in Apoorva Ragas and Sri Raja Rajeswari Pancharathnam, Sangeetha Vidwan Ganarathna Isai Vallal Cuddalore M. Subramanian. Price Rs. 6-50

4. Kritis in 72 Melakartha Ragas, Sangeetha Vidrwan Ganarathna Isai Vallal Cuddalore M. Subramanian.

5. Maharaja Sri Swati Triunal Kritis Part II with Swara Notation. Rajyaseva Nirata Dr. Semmangudi R. Srinivasier, Retd. Principal, Sri Swati Trinal College of Music, Trivandram, Published by Sri Swati Trunal Kritis Publication Comittee, Trivandram. Price Rs. 35

6. ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சிநீ ஸ்ரீமுத்து ஸ்வாமி தீக்ஷிதர் ஸகோதரர் தௌஹித்ரரும், எட்டயபுரம் ஆஸ்தான வித்வானாய் இருந்தவருமான ஸ்ரீஸுப்புராம தீக்ஷிதர் இயற்றியது. தமிழ் எழுத்துப்பதிப்பு, புதுடெல்லி ஸங்கீத நாடக அகாதமியின் முழுஉதவி கொண்டு தயாரிக்கப்பெற்றது. தமிழில் எழுதியவர் டாக்டர் எஸ். இராமநாதன், வித்துவான், பி. இராஜமய்யர்; பதிப்பு; டி. எஸ். பார்த்தசாரதி, ஸங்கீத வித்வத் ஸபை காரியதர்சி: வெளியீடு: சென்னை ஸங்கீத வித்வத் ஸபை, 306, டி. டி. கே. ரோடு, சென்னை-14. விலை ரூ. 35

7. திருத்தணிகேசன் இதயாஞ்சலி, ஆண்டவன் பிச்சை; வெளியீடு: ஆண்டவன் பிச்சை பஜன் மண்டல், ப்ளாட் 66, 2 ஆம் தெரு, தண்டாயுதபாணி நகர், கோட்டூர்புரம், சென்னை-85. விலை ரூ. 4

சமய நூல்

பா. அருட்செல்வி

சமயம் தொடர்பாய் 41 நூல்கள் 1983 இல் கிடைத்தன. சைவம், வைணவம், கிறித்துவம், இசுலாம்பற்றி இவை கூறுகின்றன. 'இவை சமய விளக்கம், சமயவுணர்வூட்டல்' எனும் நோக்கமுடையன. பிள்ளைத் தமிழ் உத்தி, கற்பனைப் பேட்டி, கதை கூறி விளக்கல், ஒப்பிடுதல், வழிபாட்டு முறைகள் கூறுதல் என்பன இவற்றில் காணப்படுகின்ற அணுகு முறைகள்; சமயச் சார்பு நூல்கள் புதிய பதிப்பாய் உரையுடன் வெளிவந்துள்ளன. பிரதிபா பிரசுரம் பல சமய நூல்களை வெளியிட்டுள்ளது. இசுலாமிய நூல்கள் பல இவ் வாண்டு மறுபதிப்பும் பெற்றமை சுட்டத்தக்கது.

சமயத் தோற்றம்பற்றிக் கூறும் போது ''அச்சமும் குற்ற உணர்ச்சியும் சமயத்தின் பிறப்பிற்குப் பெரிதும் உதவியுள்ளன. கடவுள், பிரார்த்தனை, பலியிடுதல் முதலாய சமயப் பொருள்கள் யாவும் மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும்' குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாயிருப்பதாய்ப் பிராய்டு கூறுகிறார்''[1] என்பர்.

''சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக் காலத்தும் காணப்படுவதொன்று என்று கொள்வதே பொருத்தமாய்த் தோன்றுகிறது.''[2] இத் தகைய உணர்வின் அடிப்படையில் தோன்றியவை பலதிறப்பட்ட சமயங்கள். இவற்றின்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, ப. 448.
2. மேற்படி, ப. 451.

தொடர்பாய் அமைந்த சடங்குகள், நம்பிக்கைகள் போன்றன சமய உணர்வினை வளர்க்கவல்லன.

சமய உணர்வினை வளர்க்கும் வகையில் சமய நூல்கள் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. 1983ஆம் ஆண்டில் வெளிவந்த சமயம் சார்ந்த நூல்கள்மட்டுமே இக் கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டில் கட்டுரையாளருக்குச் சமயத் தொடர்பாய் 41 நூல்கள் கிடைத்தன. அவற்றுள் சைவம், வைணவம், கிறித்துவம், இசுலாம் நூல்களே இடம்பெறுகின்றன.

வரலாற்று நூல்கள்: சமய நூல்களைப்பற்றிய ஆய்வில் வரலாற்று நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, போன்றனவற்றை அறிய, இந் நூல்கள் துணைபுரிகின்றன. இவ்வாண்டின் சமயம் சார்ந்தவை எல்லாம் பதினொரு வரலாற்று நூல்களுள் அடங்குகின்றன. அவற்றைத் தல வரலாறு சமயச் சான்றோர் வரலாறு எனப் பகுக்கலாம்.

தல வரலாறு: இறைவன், இறைவி எழுந்தருளியிருக்கும் தல வரலாற்றைப் பின்வரும் ஆறுநூல்கள் கூறுகின்றன.

மதுரை மீனாட்சி: இந் நூல் இருபத்தாறு தலைப்புகளைக் கொண்டது. பாண்டிய நாட்டின் தொன்மையும் இலக்கியத்தில் 'தமிழ்கெழு கூடல்,' 'மாடமதுரை' என மதுரை போற்றப்படும் நிலையும் கூறப்படுகின்றன. மதுரை மாநகரில் மீனாட்சி கோவில் அமைந்திருக்கும் அழகும், அதனைச் சுற்றியுள்ள பழைய சொக்கநாதர் கோவில், காஞ்சனமாலை கோவில், அநுமார் கோவில், பைரவர் கோவில், செல்லத் தம்மன் கோவில் போன்றன அமைந்திருக்கும் சிறப்பும் விளக்கப்படுகின்றன. கோவிலிற் காணப்படும் சிறப்பங்கள், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குத் திருப்பணி செய்தவர்கள், நடைபெறும் திருவிழாக்கள், கோவில் வருமானம், தல இலக்கியங்கள் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன; மேலும், மதுரைப் பல்கலைக் கழக இருப்பிடமும் பல்கலைக் கழக வரலாற்றுச் செய்திகளும் கூறப்படுகின்றன. நூலின் பெயருக்கு ஏற்ப மதுரை மீனாட்சிக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார் ஆசிரியர். தல வரலாற்றைச் சிறுசிறு தலைப்புகளாய் விளக்கியுள்ளார். தலவரலாறு, தலப்பெயர், தலப்பெருமை மூன்றனையும் ஒரே தலைப்பிற் கூறியிருக்கலாம். நூலைப் படிப்

பார்க்கு எளிமையாக்கும் நோக்கில் இத் தகைய உத்திகளைக் கையாண்டிருப்பாரோ? என்று எண்ணுதற்கும் இடமுண்டு. மதுரையையும் மீனாட்சியையும் அறிய இந் நூல் உதவி புரியும்.

காஞ்சிக் காமாட்சி: காஞ்சி நகர் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பே கல்வியில் சிறப்பிடம் பெற்றிருந்தமையும், அக் கால மன்னரும் செல்வரும் அங்குக் கல்வி கற்ற செய்தியும், இலங்கையிலிருந்து வந்த புத்த பிக்குகள் யோகப் பயிற்சி பெற்ற மையும், கலைகள் வளர்ந்திருந்த தன்மைகளும், சைவ, வைணவக் கோவிகளின் அமைப்பும், சிறப்பும், 'காம கோட்டம்' எனப்படும் காமாட்சி கோவிலின் சிறப்பும், எழிலும், புத்தர் சிலை அங்குள்ளதால் புத்தகோட்டம் என்றும் அது வழங்கப் படும் மரபும், 'குமரக் கோட்டத்தில்', கந்தபுராணம் கச்சியப்ப ரால் எழுதப்பட்ட செய்தியும், 'கச்சபேசர்' திருக்கோயில் 'கச்சி' என வழங்கற்குக் காரணமும், 'காஞ்சிக்காமகோடி பீடம்' தோன்றி வளர்ந்த வரலாறும், புத்தர், சமணர் காஞ்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தமையும் கூறப்படுகின்றன. இறுதியாய் மாமல்ல புரக் கலைஅழகு, குகைக்கோபில்கள், காஞ்சியில் பட்டுத் தொழில் நடைபெறும் செய்திகள் இடம்பெறுகின்றன.

இந் நூல் காஞ்சி மாநகரின் அனைத்துச் சிறப்புக் கூறுகளை யும் ஒருசேர எடுத்துரைக்கிறது. நூலின் தலைப்பினை மனத்துட்கொண்டு 'நூல்முழுதிலும் காஞ்சியில் கோவில் கொண்டுள்ள காமாட்சி அம்மனைப்பற்றிய செய்திகளே இடம் பெற்றிருக்கும்' என்று எண்ணிப் புகுவார்க்கு ஏமாற்றமே விளையும்.

காஞ்சி மாநகரைப்பற்றிய தொன்மைக் காலமுதல் தற்கால வரையிலாய நாகரிகச் செய்திகள் அனைத்தும் இந் நூலில் காணப்படுகின்றன. இவை காஞ்சி மாநகரைப்பற்றிய நூலாசிரியரின் அறிவினைப் புலப்படுத்துகின்றன.

முத்தி தரும் மூகாம்பிகை : ஏழ்தலைப்புகளில் அமைந் துள்ள இந் நூலில், மூகாம்பிகை மகிமை, ஆலய மகிமை, மூகாம்பிகை கோவிலைச் சுற்றியுள்ள ஆலயங்கள், நாகவழிபாடு, வழிபாட்டுப் பாடல்கள் போன்றன தெளிவாய்ச் சுட்டப்படு கின்றன.

மூகாம்பிகை அம்மனை 'மகாகாளி, மகாலட்சுமி, மகா சரஸ்வதி எனும் மூவரும் சேர்ந்த வடிவம்' என்பர். தென்கர் நாடகாவிலுள்ள கொல்லூரில் இவ் வம்மன், கோவில் கொண்டிருக்கிறார். ஆதிசங்கரரே முதன்முதலில் அம்மனைப் பிரதிஷ்டை செய்தார். ஆலயத்துள் தெற்குச் சுற்றுப் பிரகாரத்தில் பத்துக் கைகளுடன் கூடிய கணபதியும், (சலவைக் கல்லால் ஆயது) மேற்குப் பிரகாரத்தில் ஆஞ்சநேயரும், கிழக்குப் பிரகாரத்தில் வீரபத்திரரும் தெய்வத் திருவுருவங்களாய்க் காட்சி அளிக்கின்றனர். இக் கோவிலுக்குச் சொந்தமான அணிகலன்களின் மதிப்பு ஐம்பது லட்சம் ரூபா என்கின்றனர். இந் நூலின் இறுதியில் நாகவழிபாட்டின் முக்கியத்துவம், நாகவழிபாட்டிற்குப் புராணங்கள் கொடுக்குமிடம், நாகபஞ்சமியன்று நடைபெறும் வழிபாட்டுத் தன்மைகள், மூகாம்பிகை அம்மனைச் சுற்றியுள்ள புண்ணியத் தலங்கள்பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவை மூகாம்பிகையை அறிமுகம் செய்யும் நிலையில் கல்லார்க்கும் கற்றார்க்கும் தெளிவாய் விளங்குமாறு அமைந்துள்ளன. மூகாம்பிகை பத்தர்க்கு இந் நூல் ஓர் அரிய படைப்பு.

திருமால் நின்ற திவ்விய தேசங்கள்: இது குருவாயூரில் கோவில் கொண்டுள்ள குருவாயூரப்பனையும், மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமானின் திருக்கோவிற் சிறப்பினையும் எடுத்தியம்புகிறது. குருவாயூர்த் திருத்தலம் கேரளாவில் உள்ளது. இங்குள்ள கிருஷ்ணன் கோவில் 'குருவாயூரப்பன் கோவில்' என்று சுட்டப்படுகிறது. பகவானை 'உண்ணிகிருஷ்ணன்-குருவாயூரப்பன்' என்று கொண்டாடுகின்றனர். விடியற்காலம் மூன்று மணிக்கே கோவில் பூசை தொடங்கிவிடுகிறது. இக் கோவிலில் முப்பத்தாறு யானைகள் உள்ளன. யானைமீது உற்சவ மூர்த்தியை எழுந்தருளச் செய்து. பரிவார தேவதைகட்குச் சீவேலி (ஸ்ரீ பலி) பூசை மிகவும் சிறப்பாய்ச் செய்யப்படுகிறது.

நூலின் இரண்டாம் பகுதியில் மயிலை ஆதிகேசவப் பெருமாள் வரலாறு கூறப்படுகிறது. இத் திருத்தலத்தில்தான் பேயாழ்வார் அவதரித்தார்; அவர் கோவிலுக்கு அருகிலேயே ஆதிகேசவப் பெருமாள் கோவிலும் அமைந்துள்ளது; அதனால், இத்தலத்திற்கு 'ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் தேவஸ்தானம்' என்ற பெயர் வழங்குகிறது; முதல்மூன்று ஆழ்வார்களாலும் பாடப்பெற்று, மங்களாசாசனம் பெற்றிருக்கிறது. குருவாயூரப்பன் வரலாற்றை இனிய தமிழில் கதை வடிவில்

ஆசிரியர் எழுதியுள்ளார்; தலத்தைப்பற்றித் தெளிவாய் விளக்கி 'கோவில் வாயில் மிகவும் குறுகியது; நெருக்கி அடித்துக் கொண்டுதான் உள்ளே செல்லவேண்டும்; பகவான் இருக்கும் சொர்க்கத்துக்குச் செல்லும் பாதையும் இவ்வாறே குறுகலாய் இருக்கும்; நரகத்திற்குச் செல்லும் பாதை மிக விரிவாய் இருக்கும்' என்று ஆசிரியர் கூறுவது குறிப்பிடத் தக்கது.

சேக்கிழார் வழியில் சிவத் தலங்கள்: பெரிய புராணம் என்னும் 'திருத்தொண்டர் புராணம்' சைவ சமயத்தின் வழிபாட்டிற்குரிய அடியவர்களின் வரலாற்றை எடுத்தியம்புகிறது. இந் நூலுக்கு வசன நடையில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவ் வரிசையில் எண்ணத்தக்க நூல் எனினும், பல சிறப்புகளும் அமையும் வண்ணமாய்ச் **சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்** எனும் இந் நூல் காணப்படுகிறது. அறுபத்து மூன்று சிவனடியார் வரலாறும், ஒன்பது தொகையடியார் வரலாறும் திருமலைச் சருக்கம் முதலாய், வெள்ளானைச் சருக்கம் ஈறாய்ப் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டதாய் இந் நூல் விளங்குகிறது. நூலின் தலைப்பிற்கு ஏற்ப, நூலின் உள்ளே இடம்பெறும் திருத்தலங்களைப்பற்றிய விளக்கம் தெளிவாய்க் கூறப்படுகின்றது. நூல் முகப்பில் நாடு, பேருந்து வசதி, புகைவண்டிப் பாதை, தலச்சிறப்பு, வழிபட்டோர், பாடியோர், இறைவன், இறைவி திருப்பெயர்கள், தலபுராணச் செய்திகள், பராமரித்து வரும் ஆதீனப் பெயர், பதிகப் பாடல்கள், முதலாய விவரங்கள் தரப்பட்டுள்ளன (ப-12). நூலின் பிற்சேர்க்கையில் திருமுறைகளை அருளிய அருளாளர், குருவழிபாடு செய்தோர், இலிங்க வழிபாடு செய்தோர், சங்கம் (அடியார்) வழிபாடு செய்தோர்பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இந் நூல் பெரிய புராண நூலின் மறுபதிப்பாயினும், சேக்கிழார் கூறும் தலங்களின் செய்திகளைத் தருவதே இதன் நோக்கமாய் அமைகிறது. தலக் குறிப்புகள் அடிக்குறிப்பில் மிகத் தெளிவாய் இடம்பெற்றுள்ளன. ஆய்வு நோக்கில் தலவரலாற்றுச் செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டுதல், நூலாசிரியரது ஆழ்ந்த புலமையைக் காட்டுகிறது.

சான்றோர் வரலாற்று நூல்கள்: மேற்கண்ட தல வரலாற்று நூல்களைப் போன்றே, சமயச் சான்றோர் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் வண்ணம், இவ் வாண்டில் பின்வரும் ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன.

மாணிக்க வாசகர் : மாணிக்க வாசகர் சைவ ஆசாரியர் நால்வருள் ஒருவர்; அவர் இயற்றியன திருவாசகம், திருக் கோவையார்; அவர் பாண்டிய நாட்டில் மதுரை மாநகரி லிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் வைகை யாற்றின் கரையிலுள்ள வாதவூரில் 'அமாத்தியர்' என்னும் அந்தணர் குலத்தில் பிறந்தார். அவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் வாதவூரன். பதினாறு அகவை நிறைதற்கு முன்பே கல்வி கேள்விகளால் அவர்சிறந்து விளங்கினார்; இருபது அகவை நிரம்பு முன் பாண்டிய மன்னனின் அமைச்சராகிவிட்டார். 'இவர் வாக்கு வன்மை கண்டு இறைவனே 'மாணிக்க வாசகர்' எனப் பெயரிட்டார்' என்பர். பாண்டியனுக்குக் குதிரை வாங்கச் சென் றமை, குருவின் அருள்பெற்றமை, குதிரை வாங்க வேண்டிய பணத்தில் திருப்பெருந்துறைக் கோயில் கட்டியமை முதலிய செய்திகளுடன் மாணிக்க வாசகர் வரலாறு முழுமையாய் இதில் கூறப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் தமிழ், ஆங்கிலப் புலமை இந் நூல் மேற் கோள்களினின்று புலனாகிறது. நூல் முழுதும் திருவாசக ஆய்வுதிறன் வெளிப்படுதலை உணரலாம். 'ஆங்கிலத்தில் டேவிட் (David) என்பார் பாடிய முறையீட்டுப் பாடல்களுடனும் தாமஸ் கெம்பிஸ் (Thomas A. Kempis) இயற்றிய 'இயேசு நாதர் அடிச்சுவட்டில் (Imitation of Christ)' என்னும் நூலுட னும் திருவாசகத்தை ஒப்பிடலாம்' என்று நூலாசிரியர் எழுதி யுள்ளமையால் அவரது ஆழ்ந்த இருமொழிப் புலமையை நன்கறி யலாம்.

ஆழ்வார்கள் வரலாறு : இது பன்னிரு ஆழ்வார்களின் வரலாற்றை எடுத்தியம்பும் ஒருசிறிய நூல். அவர்களுள் ஒருவர் பொய்கையில் பிறந்தமையால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார்; அவர் திருவரங்கப் பெருமானைத் தரிசிக்கத் திருவரங்கம் சென்று, திருமாலை நினைத்துப் பாடிப் பணிந்தார்; முதல்திருவந்தாதியை இயற்றினார்.

'என்பூதம் (உயிர்) திருமாலுக்கே' என்று வாழ்ந்த ஒருவர் 'பூதத்தாழ்வார்' என்றழைக்கப்பெற்றார்; அவர் மல்லையில் குருக்கத்திக் கொடியில் மலர்ந்து மணம் பரப்பிய நீலோற்பவ மலரில் தோன்றினார்; இரண்டாம் திருவந்தாதியை இயற்றினார். இவ்வாறே ஏனைய ஆழ்வார் வரலாறு களையும் இந் நூல் எடுத்தியம்புகிறது.

92 பக்கங்களைக் கொண்ட சிறிய நூலாயினும், பன்னிரு ஆழ்வார்களை அறிமுகம் செய்யும் நிலையில், அவர்களின் வரலாற்றைத் தெளிவாய்த் தமிழில் தந்துள்ளது; நூலைப் படித்து முடித்தவுடன் ஒருமனநிறைவு ஏற்படுகிறது.

குருராசர் பிருந்தாவன மகிமை : மகான் இராகவேந்திர சுவாமிகளைப்பற்றிய நூல் இது. இவரே 'குருராசர்' என அழைக்கப்பெற்றார். 'இறையன்பர் பகவானைத் தேடிப் போனார் என்பதற்கு மாறாய்ப் பகவானே இவரைத் தேடி வந்தார்' என்பது வரலாறு. நான்கு பக்கங்களிலும் ஹரிபத்தியில் திளைத்துப் பாமரர்களும் ஆனந்தக் கூத்தாடும் நல்ல தருணத்தில் குருராசர் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் 'மாஞ்சாலை' என்னும் நல்லதோர் கேந்திர ஸ்தானத்தைத் தேர்ந்தெடுத்தது அவரது தீர்க்க தரிசனத்தைக் காட்டும். சாதி மத பேதமின்றி அனைவரும் அவரது மந்திராலயம் வந்தவண்ணமுள்ளனர். இராகவேந்திர சுவாமிகள் காலம் 1623-1671 ஆகும். தம் காலத்தில் அவர் பல அற்புதங்களை வெளிப்படுத்தினார். அவர் ஒருசித்தர். அவர் பிருந்தாவனப் பிரவேசமாகி முந்நூறு ஆண்டுகட்குமேலாகிறது. இதற்குள் ஏறக்குறைய முந்நூறு இடங்களில் பிருந்தாவனங்களை எழுப்பிப் பல்லாயிரக்கணக்காய் மக்கள் சேவைசெய்துவருகின்றனர்.

இந் நூலாசிரியர், உயர்ந்த குருராச பக்தர்; மகான் இராகவேந்திர சுவாமிகளின் பெருமை, மந்திராலய மகிமை, சுவாமிகளின் அதிஅற்புத விளையாட்டுகள் ஆகியவற்றை இந் நூலில் தெளிவுபடுத்துகிறார்.

தனிப் பிறவி: இயேசு பெருமானின் தனித்தன்மைகளும் வாழ்க்கை வரலாறும் இந் நூலில் இயம்பப்படுகின்றன. 'வனாந்திரத்தில், மக்கள் நடுவில், மக்களுக்காக வாழ்ந்தார், இறையரசின் புதுவாழ்வு, இறுதிமுறை யூதேயாவில், இறுதி நாள்கள், எல்லாம் நிறைவேறிற்று, இறைவர் வாழ்கிறார்' என்னும் எட்டுப் பெரும் தலைப்புகளில் இந் நூல் அமைகிறது. **யூதர்களின் வரலாறு** இந் நூலில் நன்கு ஆய்ந்து கூறப்பட்டுள்ளது. 'இறையரசின் தன்மைகள் இறைவன் அளித்தவை' 'கடவுளரசு நிலத்தில் விதையைப் போட்ட ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் இரவில் தூங்கினாலோ, பகலில் விழித்திருந்திருந்தாலோ, எவ்வாறென்று அவனுக்குத் தெரியாமல் விதைமுளைத்து வருகிறது (ப-57)' என்பன போன்ற விளக்கங்கள் இந் நூலில் உள.

இயேசுநாதர் மக்களுடன் வாழ்ந்தமை, உழைக்கும் மக்களுடனும், பாவிகளுடனும், சமூக அபலைகளுடனும் விருந்துண்டமை, நோயாளிகளைக் குணப்படுத்தியமை, செத்தாரை எழுப்பியமை போன்ற அருஞ்செயல்களைக் கூறி, அவை உண்மையா? கற்பனையா? என்ற ஆய்வினையும் நிகழ்த்தியுள்ளார் ஆசிரியர்.

இயேசு பெருமான் உயிர்த்தெழுலும், அவரைக் கண்டு ஐயுற்றோரைத் தொட்டுப் பார்க்கும்படி பணித்ததும் இதில் கூறப்படுகின்றன.

இந் நூலின் அட்டைப் படத்தைப் (இயேசு பெருமான் தோற்றத்தை) பார்த்தவுடன் நூலைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. இது சாதாரண வரலாற்று நூலாய் அமையாமல், பல ஆய்வு குறிப்புகளையும் தன்னகத்துக்கொண்டுள்ளது. யூதர்களைப்பற்றிய ஆய்வும், இயேசு பெருமான் நிகழ்த்திய அற்புதங்கள்பற்றிய ஆய்வும் நூலாசிரியரின் ஆய்வு திறனை விளக்க வல்லன. இது, சாதி, மத பேதமின்றி ஒவ்வொருவரும் படித்து இன்புறத்தக்க நூல்.

சொர்க்கத்தில் இயேசுவின் சீடர்கள் (ஒரு பேட்டி): சான்றோர் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்பும் இந் நூலில், ஒரு புதிய அணுகுமுறை கையாளப்படுகிறது. நூல் ஆசிரியர் மா. சேசையா, வானுலகம் சென்று, இயேசு சீடர் பன்னிருவருள் இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீடன் ஒருவனைத் தவிர, ஏனையோரை நேர்முகமாய்க் கண்டு அளவளாவும்வரை காண முடிகிறது. இராயப்பர், பிலவேந்திரர், யாகப்பர், அருளப்பர் பிலிப்பு, மத்தேயு, சிமியோன், பார்த்தலோமியோ, தோமையர் சின்னயாகப்பர், ததேயு ஆகிய சீடர்களைப்பற்றிய வரலாறுகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. இவ் வுலகினைக் காக்க வந்த இயேசு பெருமானைச் சிலுவையில் அறைந்து கொன்ற கதை பலரும் அறிந்த ஒன்று. அதனொடு அவருடன் இருந்த சீடர் பலரும் சிறந்த தியாக வாழ்வினை மேற்கொண்டு கிறித்துவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட செய்தியை அனைவரும் அறியும் வகையில் இந் நூல் உணர்த்துகிறது.

நகைச்சுவை உணர்வு தோன்ற நூல் அமைந்திருப்பினும், கூறவந்த பொருள் நோக்கம் மாறுபடாமல், நூலைப் படைத்திருத்தல், 'ஆசிரியர் இதுபோன்ற நூல்கள் பல வெளிவரச் சிறந்த வழிகாட்டியாய்த் திகழ்கிறார்' என்பதனைக் காட்டுகிறது.

கௌமது முஹிய்யித்தீன் பிள்ளைத் தமிழ் : இசுலாமியச் சான்றோர் வரிசையில் கௌமது முஹிய்யித்தீன் என்பவர் இரஷ்யாவில் நீப்பு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்டு, சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாய பிள்ளைத் தமிழ் இலக்கியமாய் இந் நூல் அமைகிறது. முஹிய்யித்தீன் ஹிஜ்ரி நானூற்று எழுபதாம் ஆண்டு ரமலான் முதல்நாள் திங்கட் கிழமை இரவு (கி.பி. 1078 மார்ச்சு 9) தோன்றினார். முஹிய்யிதீன் என்னும் பெயருக்கு மார்க்கத்தை நிலைநிறுத்துபவர் என்பது பொருள். இந் நூலின் பாட்டுடைத் தலைவராய முகைய்யிதீன் ஏழைகளின் இன்னல் கண்டு இரங்குவார்; 91 வயது வரை வாழ்ந்து ஹிஜ்ரி ஐநூற்று அறுபத்தொன்று ரபீஉல் பதினொன்றாம்நாள் மறைந்தார். இவர் நினைவுநாள் உலகெங்கும் கொண்டாடப்பட்டுவருகிறது. நூறு பாடல்களால் இந் நூல் அமைந்துள்ளது.

கவிதைகளை எளிமையாய்த் திறம்பட நூலாசிரியர் அமைத்திருக்கின்றார். பாட்டுடைத் தலைவன் கௌமது முஹிய்யித்தீனின் வரலாற்றை முகமதிய இனத்தார் அன்றி, ஏனையோரும் அறிதற்கு இந் நூல் பெரிதும் துணை புரிகிறது.

2. இலக்கிய நூல்கள்

இலக்கியங்களில் பத்தி இலக்கியத்திற்குத் தனித்த இடம் உண்டு. இவ் வாண்டில் வெளியான சமயம் சார்ந்த நூல்களுள், பத்தி இலக்கியங்களில் சமயக் கூறுகள்பற்றிய நூல்களும், பத்தி இலக்கியம் அல்லாத பிற இலக்கியங்களில் காணப்படும் சமயத் தொடர்பாய செய்திகள் அமைந்த நூல்களும் கிடைக்கின்றன. அவைகளில் நேரிடையாகவே சமயம் சார்ந்த நூல்களாய்த் **திருவாசகத் தேனமுதம், காசிம்புலவர் திருப்புகழ், நெஞ்சினையள்ளும் சீறா, ஆத்ம ரக்ஷாம்ருத ரஹஸ்யம்** ஆகியவை இடம்பெற்றுள்ளன.

பத்தி இலக்கியம் அல்லாதனவாயினும் சமயக் கொள்கைகள் இடம்பெற்றனவாய்க் **கம்பரின் சமயக் கொள்கை, கம்ப ஓவியத்தில் ஆன்மீகமும் அறநெறியும், பாரதி கண்ட இஸ்லாம், மகாகவி இலக்கியத்தில் பத்திநெறி** ஆகியன காணப்படுகின்றன. இவ்விரு பகுப்பின் வாயிலாய் **இலக்கிய நூல்களில் சமயம்** இடம்பெறும் முறைமையை அறியலாம்.

திருவாசகத் தேனமுதம்: மா. சண்முக சுப்பிரமணியம், திருவாசகத் தேனமுதம் என்னும் தலைப்பில் தினமணி நாளிதழில் வாரந்தோறும் எழுதிவந்த கட்டுரைகளின் தொகுப்பாய் இந் நூல் வெளிவந்துள்ளது. கட்டுரைகளும் ஒன்றனுடன் ஒன்று தொடர்புடையனவாய்த் திகழ்கின்றன. கட்டுரைத் தலைப்புகள் சீரிய செந்தமிழில் அமைந்துள்ளன. **'ஆனந்தமாய தேன்', 'சொல்லும் பொருளும் இறந்த சுடர் 'உணர்வே போற்றி'** என்பன சிறந்த சான்றுகள். திருவாசகத் தேனை நுகர்தற்குத் திருக்குறள், தாயுமானவர் பாடல்கள், திருவருட்பா, பாரதியார் பாடல்கள் பயன்பட்டுள்ளன.

இந் நூலாசிரியர் அரிதின் முயன்று இந் நூலை யாத்திருக்கிறார். அண்டம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம், அவரது அறிவியல் அறிவினையும், மெய்ஞான அறிவினையும் காட்டுகிறது (பக். 22-23). இறைவனை அறிதல் என்பது உணர்வின் வயப்பட்டது. இதனை 'வால்ட் விட்மன்' என்னும் அறிஞர் கருத்தினைக் கொண்டு விளக்குகிறார் (ப. 127).

'காசிம் புலவர் திருப்புகழ் - ஆய்வு: இந் நூலில், இவரால் எழுதிய ஐந்து ஆய்வு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. காசிம் புலவரின் திருப்புகழுக்கு உரைவிளக்கமும் இதனில் உண்டு. 'காசிம் புலவரின் திருப்புகழ்' என்னும் ஆய்வு கட்டுரையில் திருப்புகழ் அமைப்பு, சந்தங்களில் (அருணகிரியாருக்கும், காசிம்புலவருக்கும்) உள்ள வேறுபாடு, நபிகள் நாயகத்தைப்பற்றிய செய்திகள், உவமைகள், உருவகங்கள் போன்றன இடம்பெறுகின்றன. 'காசிம் புலவரின் இசைத் திறன் எனும் கட்டுரையில், திருப்புகழ் விளக்கம், சந்தப்பா விளக்கம், திருப்புகழுக்கு முன்னோடியாய அருணகிரியாருடன் காசிம் புலவரைப்பற்றிய ஒப்பீடு, காசிம் புலவரின் தமிழ்ப் புலமை முதலியன ஆராயப்படுகின்றன. 'ஏனைய இஸ்லாமியத் திருப்புகழ்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் பதின்மூன்று திருப்புகழ் நூல்கள் இருக்கும் செய்தி புலனாகிறது. 'இஸ்லாமும் இசையும்' என்பது 'நவீன இசைக் கருவிகளின் கூட்டிசை, மனிதனை விலங்கு நிலைக்குத் தள்ள வல்லது' என்னும் முடிபினைக் கூறுகிறது. இறுதியாய்த் திருப்புகழில் இசைச் சொற்கள் இடம்பெறும் முறைமை ஆராயப்படுகிறது.

காசிம் புலவர் திருப்புகழ்மூலம், அதற்கு நயமான உரை விளக்கம், ஆய்வு கட்டுரைகள் ஆகியன இடம்பெற்றதால் இந் நூல் மேலும் சிறப்பினைப் பெறுகிறது. தமிழில் உள்ள இலக்கி

யங்கள் அனைத்திற்கும் இவ் வமைப்பில் (திறனாய்வும், மூலமும்) நூல்கள் வெளிவரின் சிறந்த நலன் பயக்கும் என்பதில் ஐய மில்லை.

சீறாப் புராணத்தின் விளக்கமாய் இந்நூல் அமைந்து, இந் நூலாசிரியரின் புலமையை வெளிப்படுத்துகின்றது. நூல் முக வுரையில் ஆசிரியர், 'இப் பொழிவுகளில் என் கருத்தோ, ஆராய்ச் சியோ எதுவும் இல்லை; இது, சீறாவில் உள்ளதனை உள்ளவாறே எடுத்துரைக்கும் ஓர் இலக்கிய விரிவுரையேயாகும் (ப.8)' என்று கூறுகிறார்.

நெஞ்சையள்ளும் சீறா (முதல் பகுதி): இந் நூல் சு. செல்லப் பனின் ஓராண்டு காலச் சொற்பொழிவின் சாரமாகும். இதன் முதல்பாகம் இவ் வாண்டில் வெளிவந்துள்ளது. சீறாப் புராணம் இயற்றக் காரணம், சீறாவின் உட்பொருள், உமறுப் புலவர் வாழ்க்கை வரலாறு ஆகியன இதனில் சுட்டப்பட்டுள்ளன. சீறாப் புராணக் கடவுள் வாழ்த்துத் தொடங்கி, உமறுப் புலவர் திருமணம் வரையிலாய செய்திகள் அனைத்தும் விளக்கமாய் இதனில் இடம்பெற்றுள்ளன.

ஆத்ம ரக்ஷாம்ருத ரஹஸ்யம்: 'இந் நூலாசிரியர் வைணவ பத்தர்; மறந்தும் புறந்தெழாத மாண்பினர்' என்பது தெரிகிறது. பகவத்கீதை, பிரம்ம சூத்திரம், பாகவதம், மனுநீதி, இராமாயணம், பாரதம், ஆழ்வார் பாசுரங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றின் நுட்பமான கருத்துகளை இந் நூலிற் காணலாம். ''ஆத்மா தனக்கு சரீரம் இல்லா மல், நமது சரீரத்திலேயே சாட்சி பூதமாய் மாத்திரம் இருக் கிறது' என்பதனைப் பல சாத்திரங்கள் மூலமாய் விளக்கி யுள்ளார்.

இந் நூலாசிரியர் பல்வேறு வைணவ நூல்களைப் பயின்று, ஆராய்ந்து, அவற்றின் சாரத்தைத் திறம்பட எழுதியுள்ளார். விசிட்டாத்துவைத, சித்தாந்த விளக்கம்பற்றி வினா விடை முறையில் ஆசிரியர் விளக்கியுள்ளமை அவரது மதிநுட்பத்தைக் காட்டுகிறது. இறுதியாய் நூற்றுப்பத்தொன்று கண்ணன் துதிப் பாடல்கள் அமைகின்றன.

பிற இலக்கியங்களில் சமயக் கூறுகள் : மேற்கண்டவாறு பிற இலக்கியங்களை ஆயும்போது, கம்ப இராமாயணமும், பாரதியார் பாடல்களும் இடம்பெறுகின்றன.

கம்பர் சமயக் கொள்கை : கம்பரின் வாழ்க்கை வரலாறு நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. இராமன் பாத்திரத்தில் மறைந்து விடுவதால், கம்பன் வரலாறு அறியக் கூடவில்லை. கம்பன் தோன்றிய தமிழகம் சமயப் பொதுமையைப் பொறையை மேற்கொண்டது. அதனால், கம்பரும் சைவ சமயத்தைச் சார்ந்தவராயினும் வைணவர் தனித் தெய்வமாய திருமால் அவதாரக் காப்பியத்தைப் படைப் பதில் தடை ஏதும் இருக்கவில்லை. கம்பர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் சைவ, வைணவப் பூசல் மிகுதி.

சமயப் போராட்டங்களுக்கு வழிவகுக்காமல் புராண காலத்தில் வாழ்ந்த கம்பர், சமய வழிப்பட்ட புராணம் ஒன்ற னைப் படைக்காமல், ஆறுவகை உபமதங்களுக்கும் பொதுவாய் இதிகாசத்தைப் படைத்தார். இராமாயணக் காப்பியக் காப்புச் செய்யுளே இதற்குச் சான்றாகும். ஆறுசமயங்கட்கும் பொது வான நூலைப் படைத்த கம்பருக்கும் பெருமை படைத்திருக் கிறார் நூலாசிரியர்.

கம்பர் ஓவியத்தில் ஆன்மீகமும் அறநெறியும்: இந் நூலில் பதினான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'கடவுள் வணக்கம்' என்னும் தலைப்பில் கம்பரின் 'உலகெலாம்' என்னும் பாடற் பொருளையும் இலக்கிய மரபாய கடவுள் வணக் கத்தை முதற்கண் கூறும் இயல்பினையும் சுட்டிக்காட்டுகிறார். இதில் கம்பர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கருத் தினை வலியுறுத்துவதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். கம்ப ராமாயணம் வான்மீகி இராமாயணத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூலாயினும், முதல்நூலில் கொள்வன கொண்டு விடுப்பன விடுத்து அஃது எழுதப்பட்டுள்ளது. தாடகை யொடு இராமன் போர்செய்து, வென்றதைக் **கன்னிப்போர்** என் னும் தலைப்பில் தருகிறார். **'வரன்முறை திறம்புதல்'** என்னும் தலைப்பில் இராமனுக்கு முடிசூடா நிலையும் கூனியின் செயலும் விளக்குமுறுகின்றன. **'நல்வினை தீவினையும் மறுபிறப்பும்'** என் னும் தலைப்பிற் 'கம்பர் மறுபிறப்புக்கொள்கையை ஆதரிப்பவர்' எனக் கூறி, மேலும் கம்பராமாயணக் காட்சிகள் பலவற்றை எடுத்தியம்பி, இறுதியாய்த் திருமுடி சூட்டுதலொடு இந் நூல் முடிகிறது.

இந் நூலில் ஆன்மீகத்தைவிட அறநெறிக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. நூலின் நோக்கம், கம்ப ராமாயணக் காட்சி கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றைவெளிப்படுத்தலாகும். இராமன்

தாடகையைக் கொல்லவில்லை; அவளிடம் உள்ள இராக்கதத் தன்மையைத்தான் கொன்றார், என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கது. வழிவழியாய் வந்த முறை தவறுமாயின், பெரியோர் வருந்துவர் என்னும் செய்தியை 'வரன்முறை திறம்புதல்' என்னும் தலைப்பில் கூறுகிறது. கம்பராமாயணச் செய்திகளைத் தெளிவாய் உணர்த்தும் நூல் இது.

பாரதி கண்ட இஸ்லாம் : தமிழ்க் கவிஞர் பாரதியாரையும் இஸ்லாம் கவர்ந்துள்ளது; அவர் இந்து மதத்தில் அழுத்தமான பற்றுடையராயினும், பிற சமயத் தெய்வங்களை வெறுத்தவர் அல்லர்; ஏக இறைவனாகிய அல்லாவையும் இயேசு கிறித்துவையும் போற்றிப் புகழ்ந்துள்ளார்; அல்லாவையும் நபியையும் புகழ்ந்து பாடல்கள் இயற்றியுள்ளார். திருநெல்வேலி மாவட்டம் 'ரவண சமுத்திரம்', 'பொட்டல் புதூர்' போன்ற ஊர்களில் இஸ்லாத்தின் பெருமை பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். மேலும், 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை', 'நம் முகமதிய சோதரர்கள்', 'முகம்மதிய ஸ்தீரிகளின் நிலைமை' 'ஹிந்து முகம்மதிய ஒற்றுமை' என்னும் தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். புதிய ஆத்திசூடியில்; **'முகம்மது நபிக்கு மறையருள் புரிந்தோன்'** என்று குறிப்பிடுவதிலிருந்தும் பாரதியாருக்கு இஸ்லாம் பற்று இருந்ததை அறிய முடியும்.

பாரதியார் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் முழுதும் ஆராய்ந்து பாரதிக்கு 'இஸ்லாம்' மதத்தில் ஏற்பட்டிருந்த ஈடுபாட்டினை மிகத் தெளிவாய் விளக்கியுள்ளார்.

> **''தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்**
> **திக்கை வணங்கிடும் துருக்கர்''**

என்ற பாரதி பாடலில் 'திக்கை வணங்கிடும் துருக்கர்' என்று பாடியது தவறு என்று ஆசிரியர் சுட்டியிருப்பது, ஆசிரியரின் இஸ்லாமியப் பற்றா? தாம் விரும்பும் பாரதி பாடல்களிலும் ஒருநிலைமையுடன் ஆராயும் கண்ணோட்டமா? என்று இரு நிலைகளில் வாசகர்களை எண்ண வைப்பதாயுள்ளது.

மகாகவியின் இலக்கியத்தில் பத்திநெறி: பாரதியார் பாடல்களில் பத்தி புலப்பாடுபற்றி ஆராயும் வகையில் அமைந்தது இந் நூல். நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் பத்தி என்பது யாது? என்பதனை விளக்குகிறார். பாரதி பாடல்களில் 'குழந்தைகட்குப் பத்திநெறி' என்னும் தலைப்பில் குழந்தை

யின் உடல், உள்ள வளர்ச்சிபற்றிப் பாரதியார் கருத்து யாது? என்பதனைக் காட்டுகிறார். பாரதி எல்லாத் தெய்வ வழிபாட்டிற்கும் தம் பாடல்களில் இடமளித்துள்ளார்; அப்பர், மாணிக்க வாசகர், இராமலிங்கர், விவேகானந்தர் ஆகியவர் பத்திநெறியுடன் பாரதி பத்திநெறியையும் விளக்குகிறார் இந் நூலாசிரியர். 'பொருட்பற்றில்லாப் பக்தி', 'பிறர்க்கு உழைப்பதற்காகவே நாம், 'கல்விக் கடவுள்' போன்ற தலைப்புகளில் பாரதியின் பத்தி உணர்வினை ஆராய்கிறார்,

சமயமும், கதையும் இணைந்த நூல்கள் : ஒருபடைப்பாளன், அல்லது கவிஞன், தான் சொல்லவந்த கருத்தினைச் சுவைபட விளக்குதற்குத் தன்னாலாய உத்திகளைப் பயன்படுத்துவான். அவ் வகையில் கதைகள் வாயிலாய் விளக்குவதும் உண்டு. 1983இல் சமயக் கருத்துகளை, நீதிகளைப் படிப்போர் உளங் கவரும்வண்ணம் கதைகளில் புகுத்தி எழுதிய நூல்கள் மூன்று. பாகவதத்தைப் பின்புலமாய்க் கொண்டு, அதன் உட்பொருளைச் சிறார் சிறுமியர்க்குப் புகட்டும் தன்மைத்தாய் அமைந்த நூல் பாகவதக் கதைகள், ஏனைய இருநூல்களும் பகவத் கீதையின் நீதிகளை மையமாய் வைத்து, எழுதப்பட்டுள்ளன. மாணவருக்குக் கீதைக் கதைகள் பாகம் ஒன்று, பாகம் இரண்டு என்பன அவை.

பாகவதக் கதைகள் : வியாசர் எழுதிய பதினென் புராணங்களுள் ஒன்று ஸ்ரீபாகவதம். திருமால் அவதாரங்களின் பெருமையையும், கண்ணபெருமான் திருவிளையாடல்களையும் கூறுவதே ஸ்ரீபாகவதம்' என்று நூல் முகப்பில் ஆசிரியரே கூறியுள்ளார். கலியுகத்தில் சுக முனிவரால் பரீசித்து மகாராசனுக்கு இது கூறப்பட்டது. இதன் கதைகளைச் சிறார் சிறுமியர்க்குக் கூறுமுகத்தான் இந் நூல் அமைந்துள்ளது. இருபத்தொன்பது தலைப்புகளில் இக் கதைகளை ஆசிரியர் விளக்குகிறார். முதற்கண் பரீட்சித்து மன்னன் யார்? என்பதற்கு விளக்கம் அளித்துவிட்டுப் பின்னர் ஒவ்வொரு கதையையும் கூறுகிறார்.

இந் நூல், சிறுவர் சிறுமியர்க்குப் புராணக் கதைகளை விளக்குமுகமாய் அமைந்துள்ளது. அரிய கதை சொல்வதையே நோக்கமாய்க் கொள்ளாமல் உயர்ந்த நீதிகளையும் அவற்றின் வாயிலாய் விளக்க முற்படுவதால், 'இந் நூலாசிரியர் சமயத்

தொண்டு புரிவதொடு, சமுதாயத் தொண்டும் ஆற்றியுள்ளார், என்பது தெரியவருகிறது.

மாணவர்க்குக் கீதைக் கதைகள் (பாகம்-1) : இந் நூலில் மாணவர்க்கென எழுதப்பட்ட கதைகள் பத்து அடங்கியுள்ளன. ஒவ்வொரு கதையும் பகவத் கீதையிற் கூறும் நீதிகளுள் ஏதேனும் ஒருநீதியை அடிப்படையாய்க் கொண்டுள்ளது; '**தெய்வம் தந்த பரிசு**' என்னும் முதற்கதை செய்யாத குற்றத்திற்குத் தண்டனையைச் சரவணன் அநுபவித்தாலும் இறைவனே இறுதியில் அவனைக் காப்பாற்றுவதாய் அமைந்துள்ளது. '**அளவு தந்த பாடம்**' என்னும் கதை, 'எதிலும் (உணவு, உடை, செய்யும் செயல், உறக்கம்) அளவாய் இருப்பவனே யோகத்தைக் கடைப்பிடிப்பவன்' என்னும் கருவினை அடிப்படையாய்க் கொண்டுள்ளது. '**கோபத்தின் எதிரொலி**' என்பது, கோபத்தினால் ஒருவன் தனக்குத் தானே மரணத்தைத் தேடிக் கொள்வதை உணர்த்துகிறது. சமுதாயத்தில் ஒருமனிதன் எதனைச் செய்தாலும் அதனில் குறைகாணும் போக்கினைச் சுட்டிக் காட்டும் முகமாய்ச் 'சாந்தாவின் சந்தேகம்' என்பது அமைந்துள்ளது.

மாணவருக்குக் கீதைக் கதைகள் (பாகம்-2) : மேற்கூறிய நூலினைப் போன்றே இந் நூலும் இரண்டாம் பாகமாய் வெளிவந்துள்ளது. '**தெய்வம் தந்த ஆடல்**' என்பது மயிலுருவாய் வந்து, தீமை செய்ய நினைத்தவனைத் தெய்வம் தண்டணைக்கு உட்படுத்துகிறது; 'தெய்வத்தை நினைத்தால் எவ்வாறேனும் அது காப்பாற்றும்' என்பதனை விளக்கும் கதையாய் இஃது அமைந்துள்ளது. ''நான் வெளிப்படையாய்த் தெரிவதில்லை; ஆனால், நான்தான் எல்லாப் பொருள்களிலும் மாயையாய் இருந்து எல்லாப் பூதங்களையும் தாங்குகிறேன்'' என்னும் கீதையின் கருத்திற்குச் சான்றாய் இக் கதை கூறப்படுகிறது. '**வெள்ளத்தால் மாறிய உள்ளம்**' என்னும் கதை, தற்பெருமை கொண்டு இழிந்த சாதியினரைப் புண்படுத்திய 'தாண்டவன்' என்பவனைப்பற்றியது; இது சிறந்த நீதியைப் புகட்டுகிறது. '**அனுஷாவின் சந்தேகம்**' என்னும் கதை இறைவனை எவ்வெவ்வாறு வழிபடுவது? என்பதனை உணர்த்துகிறது. '**அரக்கன் மாயாண்டி**', 'பாவம் செய்தவர் இறைவனைச் சரண் அடைவதில்லை' என்னும் கீதையின் கருத்தினை வற்புறுத்துகிறது. '**கஜேந்திரன் சபதத்தில்**' 'ஆடம்பர வாழ்வினை

வெறுத்தொதுக்க வேண்டும்; இறைவன் எளிமையையே விரும்புவான்' என்று பகவத்கீதை கூறும் அறிவுரையையே கருத்தாய்க் கொண்டுள்ளது. **'ஆதாயத்தால் வந்த ஆபத்து'** என்பது 'பயன் கருதாது பணி செய்யவேண்டும்' எனும் நீதியை உணர்த்துகிறது.

முதல்பாகத்தில் நான்காம் கதையில் 'கணவனிடம் பணிந்து செல்லக் கூடாது' என்ற காரணத்தால் வீட்டில் திருடர் நுழைந்து பொருளைக் கவர்ந்து செல்லும்போதுகூட 'கணவனை எழுப்பினால் போட்டியில் தான் தோல்வியுற்றுக் காலம் முழுதும் அவனுக்கு அடிமையாய் இருக்க வேண்டுமே என எண்ணிச் சும்மா இருந்துவிட்டாள் [ப-38-39]' என்பது ஒரு குடும்பத் தலைவி மேற்கொள்ளும் முடிவாய்த் தோன்றவில்லை. **'உதவி என்பது யாது?' 'தெய்வமே தெய்வமே', 'சாந்தாவின் சந்தேகம்'** என்னும் கதைகள் சிறந்த கதைகளாகும்.

பாகம் இரண்டில், **மனத்தின் மகத்துவம், கஜேந்திரனின் சபதம், ஆசிரமத்தில் ஓர் ஆராய்ச்சி** எனும் கதைகளில் கதைக்குள் கதை அமையும் பாங்கினைக் காணமுடிகிறது. 'பயன் கருதாமல் கருமம் இயற்ற வேண்டும்' என்பதனை **'ஆதாயத்தால் வந்த ஆபத்து'** என்னும் கதையில் விளக்குகிறார். அம்மன் சத்திய நாதனின் இருகதை நூல்களும் பள்ளிக் குழந்தைகட்கு நல்ல விருந்து.

4. சமயம் சார்ந்த ஒப்பீட்டு நூல்கள்

'சமய ஒப்பீடு' என்று எண்ணும்போது, இருவேறு சமயங்களை ஒப்பிடுதல், ஒரே சமயத்தைச் சார்ந்தோரை ஒப்பிடுதல் எனும் இருகருத்துகள் புலனாகின்றன. இவ் வாண்டில் இருவேறு சமயங்களை ஒப்பீடு செய்யும் முகமாய் அமைந்த நூல்கள் கிடைக்கவில்லை. ஆனால், ஒரே சமயத்தைச் சார்ந்த சான்றோரை ஒப்பிடும் முகமாய் அமைந்த இருநூல்கள் கிடைத்துள்ளன. தாயுமானவரைத் திருநாவுக்கரசரொடும் திருமூலரொடும் ஒப்பிடும் நிலையில் இருநூல்களும் அமைந்துள்ளன.

நாவுக்கரசர் பத்திநெறியையும், தாயுமானவர் யோக நெறியையும் பின்பற்றினர். **'இருவரும் கண்ட கடவுட் காட்சி'** என்னும் தலைப்பில் 'எங்கும் இறைநிறைந்துள்ளது' 'எல்லாம் இறை, செயல்' என்று கூறி, **'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்'** என்னும் கருத்தமைந்த அப்பர் பாடலையும் **'அவனன்றி ஓரணுவும் அசையாது'** எனும் தாயுமானவர் பாடலையும்

ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் ஆசிரியர். இறைவன் எல்லாமாய் விளங்கும் தன்மையும், பிறப்பு, இறப்பு இல்லாத நிலைமையும் இருவர்தம் பாடல்களைச் சான்று காட்டி விளக்கப்படுகின்றன; சமய உலகில் சைவத்தின் மேன்மை, இருவரும் ஆற்றிய பொதுநலப் பணிகள், இலக்கிய வளம் ஆகிய செய்திகள் இருவர்தம் பாடல்களாலும் சுட்டப்பட்டு இறுதியாய்த் தாயுமானவர் அப்பரைப் போற்றும் முறைமை கூறப்படுகிறது.

தாயுமானவர், திருநாவுக்கரசர் இருவரையும் பொது நிலையில் ஒப்பிட்டுக் காட்டும் நூலாயினும், திருநாவுக்கரசர் வரலாறு இடம்பெறுமளவிற்குத் தாயுமானவர் வரலாறு கூறப்படவில்லை. 'பட்டினத்தாரும், தாயுமானவரும்' நூலில், 'தாயுமானவர் வரலாற்றைக் காண்க' (பக்-16-17) என்று குறிப்பிடுகிறார்; இவ்வாறு எழுதி, தாயுமானவர் வரலாற்றைத் தொட்டுக் காட்டியிருக்கலாம். **'சிறுநெறிபற்றிய விளக்கங்கள்'** என்னும் தலைப்பில், மூன்றும் மூன்றும், ஐந்தும் எட்டும், மூவகை மனிதர் என்பனவற்றை மிகவும் தெளிவாய் விளக்குகிறார். பொதுவாய்த் தாயுமானவரொடு பலரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கு ஆசிரியரது புலமையைக் காட்டுகிறது.

தாயுமானவரும் திருமூலரும்: 'தாயுமானவர், திருமூலர் இருவரும் காலத்தால் வேறுபட்டவ ராயினும், கருத்தால் ஒன்றுபட்டவர்' என்பதனை இந் நூல் உணர்த்துகிறது. இறைவன் அருட்பண்புகளும், பேரியல்புகளும் திருமந்திரத்திலும், தாயுமானவர் பாடல்களிலும் இடம்பெற்றுள்ள நிலை நவிலப்படுகிறது. இறைவனே இருவருக்கும் குருவாய் வந்து அருள் செய்தமை, அன்பு ஒன்றனையே பொருளாய்க் கொண்டு இருவரும் பெற்ற இறை அநுபவங்கள், உடலுக்குக் கொடுத்த முக்கியத்துவம், யோகநெறியில் இருவர் உள்ளங்களும் திளைத்தமை ஆகியனவும் இந் நூலுள் காணப்படுகின்றன; இருவர்தம் சமரச நோக்கும் தத்துவ நோக்கும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன; இருவர்தம் சமுதாயச் சிந்தனைப் போக்குகளும் இயம்பப்பட்டுள்ளன.

தாயுமானவர், திருமூலர் இருவர்தம் சமயத் தொண்டும் இந் நூலில் விளக்கமுறுகின்றன. 'இருவருடைய பாடல்களிலும் எந்தெந்த கூறுகள் ஒத்துக் காணப்படுகின்றன' என்பது ஆய்வு நோக்கில் வெளிவாக்கப்படவில்லை. ஆனால், அறிமுக நிலையில்

இருவரைப்பற்றிய செய்திகளையும் அறிந்துகொள்ள இந் நூல் உதவி புரிகிறது.

5. சமயக் கொள்கை விளக்க நூல்கள்

உலகில் தோன்றியுள்ள ஒவ்வொரு சமயத்திற்கும் தனிப்பட்ட கொள்கைகளும், கோட்பாடுகளும், காணப்படுதல் இயற்கை. 'இறைவன் ஒருவனே' என்றாலும், அவனை அணுகும் முறைகளில் பல வேறுபாடுகளைச் சமயங்கள் தோற்றுவித்துள்ளன. உருவ வழிபாடு, அருவ வழிபாடு இரண்டும் இவ் வகையில் எழுந்தவையே. சமயத்தைப்பற்றிய நம்பிக்கைகளும் மனப்பான்மைகளும் சமயக் கொள்கை விளக்கத்தை அடிப்படையாய்க் கொண்டனவே. 1983ஆம் ஆண்டு வெளியான நூல்களில் சமயக் கொள்கைகளை விளக்குவனவாய் 13 நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் பொதுவாய சமய விளக்கங்களை உணர்த்துவன ஏழ் நூல்களாகும். சிறப்பாய்ச் சில தெய்வங்களை மட்டும் வழிபாடு செய்யும் முறைகளைக் கொண்டனவாய் ஆறு நூல்கள் அமைகின்றன.

பொதுவாய்ச் சமய விளக்கங்களை உணர்த்துவன : 'சௌபாக்கியத்திற்குச் சிவ சக்தி வழிபாடுகள்' என்னும் நூலைச் 'சிவம், சத்தி வழிபாட்டு முறைகள்', என இருபிரிவுகளாய்ப் பகுத்து ஆராயலாம். சிவ வழிபாட்டில், சிவ வழிபாடு, சிவமானச பூசை, சிவராம சிந்தனை, கவசதாரணை. சிவகவசம் என்னும் தலைப்புகளிலும், சத்தி வழிபாட்டுப் பிரிவில் சக்தியே சித்தி தருவாள், தேவி மானச பூசை, சத்தி போற்றிகள் நூற்றெட்டு, சக்தி கவசம், பராசக்தி கவசம், தேவியைப் பரவுதல் என்னும் தலைப்புகளிலும் வழிபாடுகள்பற்றிய செய்திகளைப் பெற முடிகிறது.

நூற்றெட்டுப் போற்றிப் பாடல்களையும், பதினொன்று சிவ கவசப் பாடல்களையும் இறுதியாய் இந் நூலிற் காண முடிகிறது. சக்தி வழிபாடுபற்றிக் கூறும் பகுதியில் தாய் தெய்வ வழிபாட்டின் சிறப் ம், வழிபாடு செய்யும் முறைகளும் அடங்கியுள்ளன. இதனிலும் நூற்றெட்டுப் போற்றிகளும் சத்தி கவசமாய்ப் 'பராசக்தி கவசமும்' இணைக்கப்பட்டுள்ளன.

சிவம், சத்தி ஆகிய இரண்டன் சிறப்பினையும் வழிபாட்டு முறைகளையும் தமக்கே உரித்தான (எதனையும் எளிமையாக்கல்) பண்புடன் ஆசிரியர் எழுதியுள்ள திறன், பாராட்டத்தக்கதாகும். மிக்க கல்வியறிவு இல்லாதார்கூட எளிதில் கற்று உணர,

இந் நூல் உதவுகிறது. தெளிவாய் வழிபாட்டு முறைகளை விளக்கியுள்ளதால், சிவ, சத்தி வழிபாடியற்றுவார்க்கு இந் நூல் சிறந்த படைப்பாய் அமைந்துள்ளது.

வாழ்வும் வழிபாடும்: மனித வாழ்வின் அடித்தளமாய் அமையும் வழிபாட்டினைப்பற்றிய செய்திகளை இந் நூல் தருகிறது. இதில் பகுத்தறிவுள்ள மனிதன், 'மனத்தை அடக்கி அன்பினால் இறைவனை அடையமுயல வேண்டும்' என்பதனையும் 'அன்பும் பத்தியும் ஒன்றே' என்பதனையும் விளக்கி, 'அன்பெனும் துடுப்பினால் வாழ்க்கைக் கடலைக் கடக்க வேண்டும்' என்பதனையும் குறிப்பிடுகிறார். 'சிறந்த ஒழுக்கத்துடன் இறைவழிபாடு செய்தல் தேவை' என்பதனைத் துரோணாச்சாரியர், ஏகலைவன் கதை மூலமாய் அறிவுறுத்துகிறார். 'வழிபாட்டிற்கு இறைநம்பிக்கை இன்றியாமையாதது' என்பதனை அபிராமி பட்டர், பௌர்ணமியை அமாவாயன்று வரவழைத்த செய்தியால் விளக்குகிறார். ஆலய வழிபாட்டின் நோக்கமும், திருவிழா நடைபெறுதலின் நோக்கமும், சமயச் சின்னங்கள், வேதங்கள், பிராணாயாமம் போன்றவை வழிபாட்டிற்குத் துணைபுரியும் திறனும் விளக்க முறுகின்றன. இறுதியாய் 'வழிபாட்டில் பத்திநெறி' புராணங்களில் எவ்வாறு கூறப்படுகிறது? என்பது அமைகிறது.

இஃது ஆன்மீக வாழ்வின் அடித்தளமாய் விளங்கும் வழிபாட்டின் இன்றியமையாமையை விளக்குகிறது. இந் நூலின் இடையிடையே புராணக் கதைகளை எடுத்தியம்பியுள்ளார். இஃது எல்லா வயதினருக்கும் ஏற்ற நூல்; தலைப்புகளை மேலும் முறையாய் வரிசைப்படுத்தி இருக்கலாம். பொதுவாய் வழிபாடுபற்றி அறிய முயல்வோர் இந் நூலைப் பயின்று பயன் அடையலாம்.

உயர்வளிக்கும் உபாசனை : இருபத்திரண்டு தலைப்புகளால் அமைந்துள்ள இந் நூலில், இறைவனைத் துதிக்கும் மந்திரங்களும் அவற்றைக் கையாளும் முறைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. **'ஷோடச கணபதி'** என்னும் தலைப்பில் விநாயகப் பெருமானைப் பதினாறு பெயர்களில் வழிபாடு செய்வதும், அவற்றின் திருவுருவ அமைப்புகளும் விளக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாய்ப் ''பாலகணபதி வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவைகளைத் தம் நான்கு கைகளிலும் தாங்கியிருப்பார்; துதிக்கையில் மோதகத்தை வைத்துக்கொண்டிருப்பார்; உதய சூரியனுக்கு ஒப்பாய

செந்நிறம் தோய்ந்த மேனியொடு விளங்குவார். இவர் விளையாட்டாகவே பக்தர்கட்கு வேண்டுவன வழங்கி அருள் புரிவார். (பக் 9-10)'' என்னும் பகுதியைச் சான்றாய்க் காட்டலாம். அடுத்துப் பாலா உபாசனை, பாலா பஞ்சரத் தினம் என்னும் இருதலைப்புகளில் பாலாம்பிகையைப்பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. காயத்திரிதேவி, துளசி அம்மன் போன்ற தாய் தெய்வ வழிபாட்டு முறைகளும் கூறப்படுவதொடு, **'காலைப் பொழுதில் கடவுளைத் தேடு', 'உபாசனா மார்க்கம்' 'உங்கள் திட்டம் எளிதில் நிறைவேற' 'உயர்வளிக்கும் உபாசனை'** என்னும் தலைப்புகளில் வழிபாட்டின் தத்துவம், வகைப்பாடு, பயன், போன்றவற்றை ஆசிரியர் தெளிவாய் விளக்குகிறார்.

இதுதான் இஸ்லாம்: இஃது இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கும் நூலாகும். **'இஸ்லாம்'** என்னும் தலைப்பில் பெயர்க் காரணம், இஸ்லாம் எனும் சொல்லின் பொருள், இறைநிரா கரிப்பின் பொருளும் அதன் விளைவுகளும், இறை நிராகரிப் பினால் ஏற்படும் இழப்புகள், இஸ்லாத்தின் நன்மைகள் ஆகியன கூறப்படுகின்றன.

'நம்பிக்கையும் (ஈமானும்) கீழ்ப்படிதலும்: இத் தலைப்பிற் கீழ்ப்படிதலுக்குரிய அறிவு, உறுதியான நம்பிக்கை களின் அவசியம், நம்பிக்கையின் விளக்கம், அறிவு பெறும் வழி, புலனுணர்விற்கு அப்பாற்பட்டவற்றின்மீது நம்பிக்கை ஆகிய விளக்கங்கள் இடம்பெறுகின்றன.

'இறைதூது' என்னும் தலைப்பில் இறைதூதின் உண்மை, இறைதூதரை அறிதல், இறைதூதருக்குக் கீழ்ப்படிதல், இறை தூதர்மீது நம்பிக்கைகொள்ள வேண்டிய அவசியம், இறைதூதின் வரலாற்றுச் சுருக்கம், இறைதூதின் முடிவு, இறைதூது முடிவுற் றமைக்கு ஆதாரங்கள் ஆகியன நவிலப்படுகின்றன. இறுதியாய் இறைவன்மீது நம்பிக்கை கொள்ளல், **'லாகிலாஹ இல்லல்லாஹீ'** வின் பொருள், 'லாகிலாஹ இல்லல்லாஹீ' வின் தத்துவம், மனித வாழ்வில் ஏக தெய்வக் கொள்கையால் ஏற்படும் நன்மை கள், இறைவேதங்கள், இறைதூதர், வானவர்களின் மீதுள்ள நம்பிக்கைகள், மறுமைபற்றிய கொள்கை, அவற்றைப்பற்றிய அறிவார்ந்த சான்றுகள் போன்றன [இதன்கண் காணப்படு கின்றன.

இஸ்லாமியப் பண்பாட்டையும், அறிவு மேம்பாட்டையும் விளக்கும் அரிய நூலாகிய இந் நூல் பலரும் படித்து இன்புறத்

தக்கது. வேதாந்த நூல்களைப் போன்ற கடின நடையிலன்றி இஸ்லாத்தின் உண்மையான உணர்வுகள், இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டம், வணக்க முறை, பிரார்த்தனை முறைகளின் தத்துவம், ஆகியவற்றைத் தெளிவாய் இந் நூல் படம் பிடித்துக்காட்டுகிறது.

குற்றவாளிக் கூண்டில் முஸ்லிம்: இந் நூல், ஒருநாடகம் போலமைந்து இஸ்லாம் நெறியை விளக்குகிறது. 'வரலாறு' என்னும் நீதிமன்றத்தில் விசித்திர வழக்கு, வாய்தாப் போட்டுத் தள்ளிப் போடாமல் வழக்கு வந்த அன்றே விசாரணைக்கு எடுத்துத் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவ் வழக்கில் வாதி, மனித இனமாயும், பிரதிவாதி, முஸ்லீமாயும், நீதிபதி, வரலாறாயும் உருவகிக்கப்பட்டுள்ளன. மனித இனத்துக்கு முஸ்லீம் (இஸ்லாம் மார்க்கம்) ஆற்ற வேண்டிய கடமைகளை இந் நூல் விவரித்துள்ளது. உருது மொழியில் அமைந்த இந் நூலினை **ரஷீதா** தமிழ் வடிவம் கொடுத்து எழுதியுள்ளார். முற்றிலும் புதுமையான முறையில், நாடக முறையில் இஸ்லாம் மார்க்கச் சிறப்பினையும், வரைமுறையினையும் இந் நூல் விளக்குகிறது.

இந் நூல் எல்லா நெறியினரும் படித்து இன்புறத்தக்க நூலாகும். 'சத்திய நிலையில் வாழவேண்டிய முஸ்லீம், தன் கடமைகளைத் தவறாது நிறைவேற்றினால் தனக்கும், மனித இனத்திற்கும் நன்மை உண்டாகும்' என்பதனை விளக்குவதில் ஆசிரியர் ஒருபுதிய உத்தியைக் கையாண்டுள்ளார்; படிப்போர்க்குச் சலிப்பேற்படாவாறு எழுதியிருக்கிறார்; இந் நூலாசிரியர் தொண்டு போற்றற்குரியது.

வரலாற்றில் ஒரு திருப்பம்: ''இஸ்லாமிய இயக்கத்தை வழி நடத்துவதும் அதனை நிலைநாட்டுவதும் எவ்வாறு? எனும் கேள்விக்கு ஓர்அருமையான பதிலாய் அமைந்துள்ளது இந் நூல்'' என்று பதிப்புரையில் (ப-3) கூறிவிடுவதால் நூலின் நோக்கம் தெளிவுகிறது. **'இறைவன் ஒருவன்'** எனும் கோட்பாட்டைக் கொண்டது இஸ்லாம். இவ் வியக்கத்திற்குத் தலைவர்களாய் இருந்தவர் இறைதூதர் எனப்பட்டனர்; அதனால், இறைதூதராய நபியைப் பின்பற்ற வேண்டும். நபிகள் ஒரேஒரு செய்தியைமட்டுமே அனைவருக்கும் போதித்தார். ''இறைவன் ஒருவனே! அவ் வொருவனைத் தவிர, பிற தெய்வங்களையும், கடவுள்களையும் விட்டுவிடுங்கள்! அந்த ஒரு இறைவனுக்கு மட்டுமே அடிபணிந்து வாழ்வதற்கு முன்வாருங்கள்'' என்று

அழைப்பு விடுத்தார். அதனால், நபியைப் பின்பற்றுதல் இஸ்லாமியரின் முக்கியக் கடமையாகிறது. நபிகள் நாயகத்தின் பெருமை, அவர் ஆற்றிய தொண்டுகள் ஆகியன இந் நூலில் கூறப்படுகின்றன. 'என்றும் வழிகாட்டக் கூடிய ஒரேவழி நபிகள் நாயகத்தின் வழிமுறைதான்' என்றும் 'அந்த வழிமுறையை உலகம் முழுதும் பின்பற்றினால் இன்றைய வரலாற்றிலும் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்த முடியும்' என்றும் இந் நூல் ஆசிரியர் கூறுகிறார்; சமூகத்தையே சீர்திருத்த விரும்பும் இந் நூல் அனைவராலும் வரவேற்கத் தக்கதாகும்.

இஸ்லாத்தை அறிந்து கொள்ளுங்கள்: இவ் வுலகினையும், மனித இனத்தையும் படைத்த இறைவன் வகுத்த வாழ்க்கையே இஸ்லாம்; இவ் வுலகினை ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் வல்லவன் அவன் ஒருவனே; இவ் வுலகின் ஒவ்வோர் அணுவும் இறைவன்கட்டளைக்குக் கட்டுப்பட்டதே; இறைவனுக்கு இணை, துணை எவருமிலர்; அவன் ஒப்பற்றவன்; ஆணல்லன்; பெண்ணல்லன்; அலியுமல்லன்; தன்னைத் தானே படைத்துக்கொண்டவனோ, தற்செயலாய் உருவானவனோ, பரிணாம வளர்ச்சி அடைந்தவனோ அல்லன்; இறைவன் மனிதனைப் படைத்தன் குறிக்கோள்கூட 'அவன் தன்னை வணங்கித் தனக்கு அடி பணிந்து வாழ வேண்டும்' என்பதே. இவ்வாறு இறையைப்பற்றியும், மனிதனைப்பற்றியும் கூறும் இந் நூலில் தொழுகை செய்தல் ரமளான், ஹஜ் போன்ற வணக்கங்கள், முஸ்லிம் இனத்தவன் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகியன சுட்டப்பட்டுள்ளன.

இந் நூலாசிரியர் இஸ்லாம் மார்க்கத்தின் நுட்பமான கருத்துகளைத் தெளிவாய் விளக்கியுள்ளார். ஐந்துமுறை தொழுகையின் காரணம், ஜக்காத் வருமானத்தில் இரண்டரை சதவீதம் ஏழை எளியர்க்கு அளித்தலாகிய அறம், ரம்ஜான் நோன்பு, ஹஜ் யாத்திரையின் பயன் ஆகியவற்றை எல்லாரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாய்க் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். இஸ்லாத்தை அறிந்துகொள்ள உதவும் நூல் இது.

சமய நூல்களில் கொள்கை விளக்கமாய் அமைந்தவை: மேற்கண்டவை பொதுவான விளக்கங்களாய் அமைந்தன. அவற்றில் தனித்தெய்வங்களைப்பற்றிய விளக்கமோ, சமயக் கூறுகளில் குறிப்பிட்ட சிலவற்றின் விளக்கமோ காண இயலவில்லை. ஆனால், அப் பகுதியில் கூறப்படும் நூல்கள் சைவ, வைணவ மதங்களில் கூறப்படும் குறிப்பிட்ட சில தெய்வங்களைப்பற்றியன. அதனால், அவை சிறப்பாய் இப் பகுதியில் ஆராயப்பட்

டுள்ளன. இவ்வாறு அடங்குவன **வரிவஸ்யா ரகசியம், சிதம்பர ரகசியம், வாக்வாதின், சுதர்ஸன சசர்வஸ்வம்** என்பனவாம்.

வரிவஸ்யா ரகசியம்: இந் நூலாசிரியர் ஸ்ரீவித்யா உபாசகர்; உரையாசிரியர் நஜன்; ஸ்ரீவித்யா தேவி உபாஸகர்; இந் நூலின் பயனை நன்கு உணர வாய்ப்புண்டு. 'ஸ்ரீவித்யை' என்பது 'மந்திர ராஜம்' என்ற பெயருடைய மந்திரம். பெண் தெய்வங்களில் ஸ்ரீவித்யா தேவிக்கு உரிய மந்திரமே இது. மனம் செம்மையாதற்குப் பார்வையால் ரூபம், கேட்பதால் சப்தம் மிக அவசியம்; மனம் தெய்வீக சம்பந்தத்தில் ஈடுபட உருவமும், சப்த ரீதியில் மந்திரங்களும் மிகவும் பயன்படும். அம்பிகையின் பஞ்சரசீ மந்திரம், ஸ்ரீசக்கரம் முதலியவற்றை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

சிதம்பர ரகசியம்: ஆகாச லிங்கம் இருக்குமிடமே **சிதம்பரம்;** எதுவும் இல்லாத வெட்ட வெளியே ஆகாசம். இதனை எவ்வாறு இலிங்கமாய் அமைப்பது? அதுவே இரகசியம். 'லிங்கம்' என்றால் கண்ணால் காணப்படும் லிங்கம் அன்று; 'லிங்க' என்ற சொல், 'அடையாளம்' என்று பொருள்படும். நமது இதய ஆகாசத்தில் அங்குஷ்டப் பிரமாணம் ஜீவன் இருப்பதாய் உபநிடதம் கூறுகிறது; அதுவே நடராசர். 'ஆன்ம சிவ ஐக்கிய நிலையே நடராசர்' என்று தாயுமான சுவாமிகள் விளக்கியுள்ளார்; சிதம்பரம் நடராசருக்கு வலப்புறத்தில் 'சிதம்பர ரகசியம்' உள்ளது. அது பட்டுத் திரையால் மறைக்கப்பட்டுள்ளது. அதனில் ஐம்பத்தொரு அட்சரங்கள் தங்க வில்வ இலையில் பொறிக்கப்பட்டுள்ளன. நடராச தத்துவம், நடராச திருவுருவ விளக்கம், திருச்சிற்றப்பலம், தில்லை வாழ் அந்தணர் என்னும் தலைப்புகளில் பல்வேறு செய்திகள் இந் நூலின்கண் விளக்கப் படுகின்றன.

வாக்வாதினி: வெண்டாமரையில் வீற்றிருக்கும் செல்வியாகிய சரஸ்வதியே **'வாக்வாதினி'** என்பர். உலகில் யாவரும் பேசுதற்குக் காரணம் வாக்வாதினியே ஆவாள். **சொல்லின் செல்வி, எழுத்திற்கு அரசி, புத்தக ரூபினி, ஞான சொரூபிணி, மகான்கள் கண்ட வாக்வாதினி** என்னும் தலைப்புகளில் ஆசிரியர் இத் தெய்வத்தின் பெருமையைச் சுட்டுகிறார்; இடைஇடையே சரஸ்வதியைப் போற்றும் துதிப் பாடல்கள் இடம்பெறுகின்றன.

சுதர்ஸன சர்வஸ்வம் : 'எல்லாத் தெய்வங்களுக்குமே அருள் வழங்கும் ஆற்றல் உண்டு. ஏனெனில், இத் தெய்வங்கள் பிரம்மம்

என்பதிலிருந்து தோன்றியவை; இருந்தாலும், உபாசனைக் கென்று சிலசிறப்புத் தெய்வங்கள் உள. அவற்றைச் ''சுதர்சனர், நிருசிம்ஹர், ஹயக்கிரீவர், ஆஞ்சநேயர், கருடன்'' (ப-7) என ஆசிரியர் தம் முன்னுரையில் கூறுகிறார்; ஒவ்வொரு தெய்வ வழிபாட்டுப் பாடல்கள், வழிபடும் முறைகள் ஆகியவற்றை எட்டுத் தலைப்புகளில் விளக்கிச் செல்கிறார்; வடமொழிச் சுலோகங்களைத் தமிழில் எழுதியுள்ளார். பிரதிபா பிரசுரத்தின் எழுபத்து மூன்றாம் வெளியீடாய் இஃது அமைகிறது.

மங்களகர மகாலக்ஷ்மி : வடமொழி சுலோகங்களுக்குரிய விளக்கங்களை இதனிற் காணலாம். 'சத்தியின் பெருமையைக் காட்டவே இந் நூல் இயற்றப்பட்டது' எனலாம். பிரம்மா தன் நாவிலும் விஷ்ணு தன் மார்பிலும், சிவன் தன் இடப்பாகத்தி லும் சக்தியை வைத்துக்கொண்டிருப்பதாய்க் கூறுவதெல்லாம் சத்தியின் பெருமையைக் காட்டவே; 'பரம்பொருளே தம் திரு விளையாடல் காரணமாய் ஆணாயும், பெண்ணாயும் இரு வடிவங் கொண்டான்' என்பது வேதாந்திகளின் சித்தாந்தம். 'கணவன் மனைவி ஒற்றுமைக்குக் **கேதாரி கௌரி விரதமும்,** தீர்க்க சுமங்கலியாய் வாழச் **சாவித்திரி கௌரி பூசையும்** பெண் களுக்கு அவசியம்' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ சுப்பிரமணிய ஹிருதயம் : இது முருக பக்தர் ஓதி உணர வேண்டிய நூல். பிரமஞானம் என்றால் என்ன? 'பிரமத்தை அறிந்தால் எல்லாவற்றையும் உணரலாம்' என்று சான்றோர் கூறுவர். இவ்வாறு சுப்பிரமணிய ஹிருதயத்தை உணர்த்த ஆசிரியர், அருணகிரியார், பட்டினத்தார், இராமலிங்கர் கருத் துகளை மேற்கோள் காட்டியுள்ளார். சுப்பிரமணியம், முருகன், குகன், கலிதெய்வம், தகப்பன் சுவாமி, தமிழ்க் கடவுள் என்று பலவாறு போற்றும் தெய்வமான சுப்பிரமணிய சுவாமியின் தத்துவங்களை இந் நூல் விளக்குகிறது.

பிரதிபா பிரசுர நூல்கள் அனைத்தும் நடராசன் என்பவ ரால் எழுதப்பட்டவை. சைவ, வைணவ சமயங்களைப்பற்றிய முழுமையான விளக்கம் அடையும் பொருட்டுச் சிறுசிறு நூல்க ளாய் ஒவ்வொரு தெய்வத்தையும்பற்றியனவாய் வெளியிடப்படு கின்றன. 'வழிபாடு செய்வதில் குறிப்பிட்டதொரு தெய்வத்தைப் பற்றிய மந்திரங்களை உருவேற்றினால் அதற்கே தனித்ததொரு பயன் உண்டு' என்னும் சான்றோர் வாக்கிற்கு ஏற்ப, வடமொழி சுலோகங்கள் பலவற்றைத் தந்து, அவற்றுட்கு இயன்றவரை

விளக்கமும் இந் நூல்களில் தரப்படுகிறது. 'தூய தமிழிற்கு இந் நூல்களில் இடம் இல்லை' என்பது வருந்தற்குரியது.

6. புதிய பதிப்புகளும், உரைகளும்

இவ் வாண்டில், புதிய பதிப்புகளாய்ச் சீறாப் புராண நுபுவத்துக் காண்டம், பாகம்-1, பாகம்-2 என்னும் தலைப்புகளில் **க. மு. ஷெரீபு அவர்கள்** எழுதிய உரை விளக்கத்தொடு வெளிவந்துள்ளது. திருப்பாவை நூலும், புதியதாய் பதிப்பிக்கப்பட்டு, இறுதியில் வினா விடைகளுடன் வெளிவந்துள்ளது. விராலிமலை வேலவர் குறவஞ்சி என்னும் நூல், சுவடியிலிருந்து புதியதாய்ப் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

1983 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள சமய நூல்களின் கட்டுரையாளருக்குக் கிடைத்த 41 நூல்களில் பெரும்பாலானவை சமயக் கொள்கை விளக்க நூல்களாகவே அமைந்துள்ளன. ஆயினும், அவற்றை வெளியிடும் திறனில் வேறுபட்ட அணுகு முறைகள் பயன்பட்டுள்ளன என்பது சுட்டத் தக்கது.

இணைப்பு -1

1983இல் வெளியான சமய நூல்கள்

1. **அப்துர் ரவூர் பாகவி** (மொழி பெயர்ப்பாசிரியர்), '**இஸ்லாத்தை அறிந்துகொள்ளுங்கள்,**' இஸ்லாமிய டிரஸ்ட், சென்னை.

2. **அம்மன் சத்திய நாதன், 'மாணவருக்குக் கீதைக் கதைகள்** (பாகம்-1); வைரவன் பதிப்பகம், மதுரை.

3. **அம்மன் சத்திய நாதன், 'மாணவருக்குக் கீதைக் கதைகள்',** (பாகம்-2), வைரவன் பதிப்பகம், மதுரை.

4. **அறிவொளி, அ, 'காஞ்சிக் காமாட்சி',** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

5. **அநந்த பத்மநாபன், திருப்பாவை** (வினா-விடை வடிவில்), சேலம்.

6. சண்முக சுப்பிரமணியம், மா., **'திருவாசகத் தேனமுதம்'** *கழக வெளியீடு, சென்னை.*

7. சாயபு மரைக்காயர், மு.சி., 'பாரதி கண்ட இஸ்லாம்', *பாத்திமா பதிப்பகம், காரைக்கால்.*

8. சிவஞானம், ம. பொ., 'கம்பரின் சமயக் கொள்கை', *பூங்கொடி பதிப்பகம், சென்னை.*

9. **செந்துறை முத்து, 'தாயுமானவரும் திருமூலரும்'** *மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.*

10. **செந்துறைமுத்து, 'தாயுமானவரும் திருநாவுக்கரசரும்'** *மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.*

11. செல்லப்பன், சு., 'நெஞ்சையள்ளும் சீறா', *மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை.*

12. **சேசையா, மா., 'சொர்க்கத்தில் இயேசுவின் சீடர்கள்** *(ஒரு பேட்டி)', மாணிக்கம் பதிப்பகம், சென்னை.*

13. துர்க்கை சித்தர், 'உயர்வளிக்கும் உபாசனை' *பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை.*

14. நஜன், 'சிதம்பர ரகசியம்', *பிரதிபா பிரசுரம், சென்னை.*

15 நஜன், சுதர்சன சர்வஸ்வம், *பிரதிபா பிரசுரம், சென்னை.*

16. நஜன், சுப்பிரமணிய ஹிருதயம், *பிரதிபா பிரசுரம், சென்னை.*

17. நஜன், 'மங்களகர மஹாலக்ஷிமி', *பிரதிபா பிரசுரம், சென்னை.*

18. நஜன், 'முத்திதரும் மூகாம்பிகா', *பிரதிபா பிரசுரம், சென்னை.*

19. நஜன், 'வரிவஸ்யா ரகசியம்', *பிரதிபா பிரசுரம், சென்னை.*

20. நஜன், 'வாக்வாதினி', *பிரதிபா பிரசுரம், சென்னை.*

21. பாஸ்கர மார்த்தாண்டன், பொன்., 'திருமால் நின்ற திவ்ய தேசங்கள்', *அம்பாள் பதிப்பகம், சென்னை.*

22. புலியூர்க் கேசிகன், சௌபாக்கியத்திற்குச் சிவசக்தி வழிபாட்டு முறைகள், மாருதி பதிப்பகம், சென்னை.

23. மணவாளன் கா. சே., ஸ்ரீபாகவதக் கதைகள், ரேவதி பதிப்பகம், சென்னை.

24. மஹதி, (மொழி பெயர்ப்பாசிரியர்), ஹி ஹாப் (பதிப்பாசிரியர்), 'இதுதான் இஸ்லாம்,' இஸ்லாமிய நிறுவனப் டிரஸ்ட், சென்னை.

25. மாதவன், வே. இரா. (பதிப்பாசிரியர்), 'விராலிமலை வேலவர் குறவஞ்சி', மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி.

26. மாருதிதாசன், 'ஆழ்வார்களின் வரலாறு' நர்மதா பதிப்பகம், சென்னை.

27. மிழலைத் தொண்டன், 'வாழ்வும் வழிபாடும்', ஹேமா பதிப்பகம், சென்னை.

28. மிழலைத் தொண்டன், 'மகாகவி இலக்கியத்தில் பத்தி நெறி', ஹேமா பதிப்பகம், சென்னை.

29. முகம்மது காசீம் மிஸ்பாஹி, எஸ். (மொழிபெயர்ப்பாசிரியர்), 'வரலாற்றில் ஒருதிருப்பம்', இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், சென்னை.

30. முகம்மது தாஹா, மு., கௌமது முஹிய்யித்தீன் பிள்ளைத் தமிழ், சிங்கைப் பதிப்பகம், சென்னை.

31. முஸ்தபா, மணவை., (தொகுப்பாசிரியர்) காசிம் புலவர் திருப்புகழ், மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

32. மெய்யப்பன், மதுரை மீனாட்சி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

33. ரதிராசு, 'தனிப் பிறவி', கிறிஸ்தவ முரசு பதிப்பகம், மதுரை.

34. ரஷீதா, 'குற்றவாளிக் கூண்டில் முஸ்லிம்', இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், சென்னை,

35. லங்குபள்ளி சின்னசாமி நாயடு, ''ஆத்ம ரக்ஷாம்ருத ரஹஸ்யம், ஆசிரியர் வெளியீடு, திருநின்றவூர், சென்னை.

36. வன்மீக நாதன், கோ., 'மாணிக்க வாசகர்', சாகித்ய அகாதமி, புதுடில்லி.

37. **வெங்கட்ராவ், வே., 'குருராசர் பிருந்தாவன மகிமை',** *நித்தியா பதிப்பகம், சென்னை.*

38. **வேலாயுதனார், மு. த., 'கம்ப ஓவியத்தில் ஆன்மீகமும் அறநெறியும்,** *சேகர் பதிப்பகம், சென்னை.*

39. **ஐய செந்தில்நாதன், 'சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்'** *இந்து சமய மன்றம், காஞ்சிபுரம்.*

40. **ஷெரீபு, கா. மு.** *(உரையாசிரியர்), சீறாப் புராணம், நுபுவத்துக் காண்டம், மூலமும் உரையும், (பாகம்-1) சீதக்காதி வெளியீட்டகம், சென்னை.*

41. **ஷெரீபு, கா. மு.,** *சீறாப் புராணம், நுபுவத்துக் காண்டம், மூலமும் உரையும், (பாகம்-2) சீதக்காதி வெளியீட்டகம், சென்னை.*

இணைப்பு - 2

1983இல் மறுபதிப்பாய் வெளியான சமய நூல்கள்

1. அண்ணல் நபி, மௌலானா அப்ஸல் ஹுசைன், இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை.

2. அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக் கோயில் வரலாறு, அழகர் இராமானுசம், அணியகம், மூன்றாம் பதிப்பு, சென்னை.

3. ஆத்ம குஹாசிதானந்த மயம், நஜன், பிரதிபா பிரசுரம், இரண்டாம் பதிப்பு, சென்னை.

4. இறை நம்பிக்கை வாழ்வின் அடிப்படை, மௌலானா சையித் அபுல் அஃலா மௌது அப்துல் வஹ்ஹாய், இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், எட்டாம் பதிப்பு, சென்னை.

5. இஸ்லாமிய இயக்கம், ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் (தொகுப்பாசிரியர்), அப்துர் ரவூஃப் பாக்கவி (தமிழாக்கம்), ஹிஹாப் (பதிப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், ஐந்தாம் பதிப்பு, சென்னை.

6. இஸ்லாத்தில் இறைவழிபாடு, மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி, அப்துல் வஹ்ஹாப், *இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், ஆறாம் பதிப்பு, சென்னை.*

7. இஸ்லாம் உங்களுடையதே, முஹம்மத் சுலைமான் பர்ருகாபாதீ, ஸையித் முஹம்மத் *(தமிழாக்கம்)*, கலீல், *இஸ்லாமிய டிரஸ்ட் நிறுவனம், நான்காம் பதிப்பு, சென்னை.*

8. இஸ்லாம் ஓர் அறிமுகம், குர்ஷித் அஹ்மத், அஹமது, எம். பி. *(மொழிபெயர்ப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், நான்காம் பதிப்பு, சென்னை.*

9. இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள், ரஹ்மான், எம். ஏ., *நர்மதா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

10. இஸ்லாமிய வாழ்க்கை முறை, மௌலானா சையித், அபுல் அஃலா மஙதூதி, அப்துர் ரஹ்மான், முஹம்மத் ஹில்மி *(பதிப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், மூன்றாம் பதிப்பு, சென்னை.*

11. இளஞனே விழித் தெழு, சையத் அபுல் மௌதூதி, குத்புத்தின் அஹ்மத், முஹம்மத் ஹில்மி *(பதிப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், மூன்றாம் பதிப்பு.*

12. எதிர்பார்க்கப்பட்ட அந்த நபியார், ஐக்கி, செய்யதுஅலி *(மொழி பெயர்ப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

13. குத்பாப் பேருரைகள், இஸ்லாமிய வாழ்வு, மௌலானா மௌதூதி, அப்துல் வஹ்ஹாப் பாக்கவி, காஞ்சி அப்துர் ரவூப் *(மொழிபெயர்ப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிாஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

14. குர்ஆனை அணுகும் முறை, அபுல் அஃலா மௌதூதி, *தமிழ்நாடு இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், மூன்றாம் பதிப்பு, சென்னை.*

15. வட்டி ஒருகொடுமை, அப்துல் ரவூப் பாக்கவி, *இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், முதற் பதிப்பு, சென்னை.*

16. சரவண பவ சரணம், நஜன், *பிரதிபா பிரசுரம், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

17. **தேன் துளிகள், அப்ஸல் ஹீசைன்** *(தொகுப்பாசிரியர்),* **மஹுதி, அப்துர் ரஹ்மான், ஷிஹாப்** *(பதிப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், நான்காம் பதிப்பு, சென்னை.*

18. **நவீன இப்னுபதூதா** *(முதற்பதிப்பு),* **மாயில் கைராபாதீ, அப்துல் வஹ்ஹாப்** *(மொழிபெயர்ப்பாசிரியர்), இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

19. **வட்டி ஒருகொடுமை, அப்துல் ரவூப் பாக்கவி,** *இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை.*

மனையியல் நூல்

பிரசன்னா அழகப்பராசு

இல்வாழ்வில் பெண் அறிந்திருக்க வேண்டிய சில செய்திகள் தொடர்பாய 14 நூல்கள் இத் தலைப்பில் அடங்குகின்றன. அவை சமையல், தையல், அழகு குறிப்பு, வீட்டு மருத்துவம், காய்கறித் தோட்டம்பற்றிய உண்மைகளும், சுகாதாரம், முதலுதவி குறித்த பொதுஅறிவும் ஊட்டுகின்றன. வீடு கட்டுதல், நீச்சல் கற்றல் என்பனவும் இதனில் உள.

1983 இல் வெளிவந்த மனையியல் தொடர்பாய நூல்கள் கூறும் செய்திகளை விளக்கியும் ஆய்ந்தும் இக் கட்டுரை கூறுகிறது. சில நூல்கள் இத் துறையுடன் நேரடித் தொடர்பு கொண்டவையாயும் சில மறைமுகத்தொடர்பு கொண்டவையாயும் அமைந்துள்ளன. சில நூல்களின் சில பகுதிகள் இவ் வியலொடு தொடர்பு கொண்டனவாய் உள. மருத்துவ நூல்களிற் சில வீட்டு மருத்துவத்தைப்பற்றி நுவல்கின்றன. அவை '**மருத்துவ நூல்கள்**' எனும் பிரிவில் அடங்கும். அதனால், அவை இங்குச் சுட்டிச் செல்லப்படுகின்றன.

மனையியல்

மனை என்பதற்கு வீடு, இல்லம் என்னும் பொருள்கள் உள. இல்லத்திலுள்ள, இல்லம் தொடர்பாய அனைத்துச் செய்திகளும் இவ் வியலுள் அடங்கும். பெண்கள் இல்லில் பெரும்பங்கு கொள்கின்றனர். அதனால், சமையல், அழகுகலைகள், போன்றன இவ் வியலுள் காணப்படும். மனைமாட்சிக்கு மங்கலமாய் விளங்கும் குழந்தைச் செல்வத்திற்குத் தேவையானவையும் இதன்கண் உள்ளன.

இல்லத்தரசியர்க்குரிய செய்திகள், வாழ்வின் குறைபோக்கும் மக்கட் செல்வம், அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள், வீட்டிலுள்ளோர் பொதுவாய் அறிய வேண்டிய விளக்கங்கள், வீட்டிற்குத் தேவையாய பல குறிப்புகள் போன்றவற்றை எல்லாம் தன்னுட்கொண்டு மிளிர நிற்பதே **'மனையியலாகும்'**.

சமையல்

சமையற் கலையைப்பற்றிக் கூறும் நூல்களுள் **பழரசம், ஜாம், ஊறுகாய் செய்முறை எனும் நூல்,** அவற்றைச் செய்யும் முறையைக் கூறுகிறது. நூலின் தலைப்பிற் பழரசம், ஜாம், ஊறுகாய் என்னும் மூன்றனைமட்டுமே குறிப்பிட்டிருந் தாலும் பழரசம், கிரஷ், பன்னா (Panna) ஃபெவரேஜ், நெக்டர், சர்பத், ரோஸ்மில்க், மொரபா (Muraba), சட்னி, ஜெல்லி (Jelly), ஜாம், ஊறுகாய் போன்ற பலவற்றைப்பற்றி யும் கூறுகிறது.

திராட்சை, சாத்துக்குடி, எலுமிச்சை, மாம்பழம், ஆரஞ்சு, அன்னாசி, பாலப்பழம், கிரினிப்பழம் போன்றவற்றை முதன் மையாய்க்கொண்டு பழரசம், கிரஷ் தயாரிக்கும்முறை கூறப் பட்டுள்ளது. நெல்லிக்காய், பூசனி, கேரட், தக்காளி, கிடாரங் காய், மிளகு, மாகாளிக் கிழங்கு, மிளகாய், பச்சைமிளகாய், உருளைக் கிழங்கு, பூண்டு, வெங்காயம், முருங்கை போன்ற வற்றால் ஊறுகாய் செய்யும் முறையை விளக்கமாயும் சுருக்க மாயும் ஆசிரியர் கூறியுள்ளார்.

பழரசம், கிரஷ் போன்றவற்றின் தயாரிப்பில் சிட்ரிக் ஆசிட், சர்க்கரை இரண்டும் மிகுதியாய்ப் பயன்படுகின்றன. ஒன்றனைத் தயாரிக்கும் முறையைக் குறிக்கும்போது, 'தேவையான சமான் கள்' என்று முதலிற் குறிப்பிட்டுப் பின் அவற்றின் அளவினையும் குறிப்பிடுகிறார். அடுத்துச் **'செய்யும் முறை'** எனத் தலைப் பிட்டுச் செய்யும் பக்குவத்தை விளக்குகிறார். ஒருகுறிப்பிட்ட பொருளின் தயாரிப்பு முறையே மீண்டும்மீண்டும் வருங்கால் அதனைப் போன்றே செய்ய வேண்டுமென்பதனைக் குறிப் பிட்டுச் செல்கிறார். 'செய்யும் முறை' எனும் பகுதி 1, 2 என எண்ணிட்டு விளக்கப்படுகிறது. விளங்காத் தொடர்களை அடைப்பில் ஆங்கிலத் தொடர் தந்தும் சில நேரங்களில் தமிழ் படுத்த முடியாதபோது ஆங்கிலப் பெயரைத் தமிழ் வரிவடிவில் தந்தும் ஆசிரியர் விளக்குகிறார். ஆங்கிலத் தொடரையும் அடைப்பில் தருகிறார்.

ஜாம், மொரபா, பழமிட்டாய் (Fruit taffee), ஜெல்லி (Jelly) போன்றவற்றில் முன்னுரை போன்ற பொதுவிளக்கம் காணப்படு

கிறது. இதனிற் குறிப்பிட்ட அவ் வுணவுத் துணைப் பொருள் செய்முறையின் பொதுவாய கூறுகளும் பயனும் எடுத்துரைக்கப் படுகின்றன. மொத்தமாய் 65 தலைப்புகளில் உணவுத் துணைப் பொருள்களைப்பற்றி இந் நூல் விரிவாய்க் கூறுகிறது.

உருளைக் கிழங்கு, ஆவக்காய், முருங்கைக்காய் முதலியவற் றால் செய்யப்படும் பொருள்களை விளக்குவதாலும் ஊறுகாய் செய்முறை கூறுதலாலும் ஆசிரியரின் பழக்கத்தையும் திறனை யும் உணர முடிகிறது. சில பொருள்களின் தயாரிப்பில் நுண் பிரிவுகளைத் தந்திருப்பது (சான்று: ஊறுகாய், தொக்கு, போன்றன) அவரின் அனுபவத்தையே காட்டுகிறது.

அளவு முறைகளைக் குறிக்கும்போது சில இடங்களில் கிரா மில் குறிக்கிறார். அதனையே சில இடங்களில் தேக்கரண்டியால் அளவிட்டிருக்கிறார்; மேலும் சில இடங்களில் இரண்டனையும் தருகிறார். இவற்றில் ஏதேனுமொரு முறையைப் பின்பற்றியிருக் கலாம்; பொட்டாசியம் மெடா சல்பைடைக் குறிக்கும்போது **K.M.S.** என்று சுட்டுகிறார். அது பொருத்தமானதாய்த் தெரிய வில்லை. **KM_2504** என்று அதனைக் குறித்திருக்க வேண்டும்; அல்லது முழுப் பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

மொத்தத்தில் எளிய முறையில் விளங்கிக்கொள்ளும் வண்ணம் உணர்த்தியிருப்பின் இந் நூல் மேலும் பயனுடையதாய் அமைந்திருக்கும்.

அடுத்துச் சமையலில் காய்கறிகளால் செய்யப்படும் பொரி யல், கூட்டு, பச்சடி, துவட்டல், அவியல், மசியல், வாட்டல் போன்ற வகைகளைப்பற்றிக் கூறுகிறது.

பக்குவமாய காய்கறிச் சமையல் : பக்குவமாய் உயிர்ச்சத்துப் போகாமல் சமைக்க வேண்டிய காய்கறிகள் பலவற்றின் சமையல் முறைகளை இந் நூல் கூறுகிறது. கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய் போன்ற சாதாரணக் காய்களின் பொரியல் வகை களும் பலாப் பிஞ்சு, வெள்ளரிக்காய், இளநீர் வழுக்கை போன்ற அசாதாரணப் பொருள்களின் பொரியல் வகைகளும் கூறப்பட்டுள் ளன. மொத்தத்தில் 20 வகைகள் இயம்பப்பட்டுள்ளன.

வதக்கல்களும் 21 வகைப் பச்சடிகளும் 23 வகைக் கூட்டு களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அனைத்தும் காய்கறிகளால் செய்யப்படுவனவே. மலையாள அவியல், குருமா, சாம்பார் வகைகள், கறிவடகம், கறிமாப்பொடி போன்றவை செய்யும்

முறைகள் இயம்பப்பட்டுள்ளன. மொத்தத்தில் 77 தலைப்புகள் (செய்முறைகள்) கூறப்பட்டுள்ளன.

இதனில் கிராம், தேக்கரண்டி என்னும் இரண்டு முறைகளா லும் அளவிடப்பட்டுள்ளன. முதலில் தொடங்கும் பொரியலுக்கு மட்டும் தேவையாய பொருள்கள், செய்யும்விதம் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. பின்னர் எதற்கும் அவை குறிப்பிடாமை குறையே. ஒருகாயிலேயே பலவிதப் பொருள்கள் செய்யும் முறையை இவர் சிறப்பாய் இயம்புகிறார்; சான்று: கத்தரிக் காய், நெய்ப் பொரியல், கத்தரிக்காய்ப் பொரியல், கத்தரிக் காய்த் தயிர்ப் பச்சடி. கத்தரிக்காய்ச் சாம்பார், கத்தரிக்காய்ப் புளிக்கூட்டு என்பன. இந் நூல் அன்றாடச் சமையலில் மகளிர்க்கு மிகவும் பயன்படுவதாயுள்ளது.

'பண்டிகை, பலகாரம், மந்திரம், மகிமை: திருவிழாக் காலங்களில்மட்டும் செய்யப்படும் சிறப்பான பலகாரங்களின் செய்முறைகளையும், 'எந் தெந்தத் திருவிழாவில் என்னென்ன செய்ய வேண்டு'மென்பதனையும் இந் நூல் கூறுகிறது. 19 தலைப்புகள் இந் நூலில் உள்ளன. விநாயகச் சதுர்த்தி' பதினெட்டாம் பெருக்கு, ஸ்ரீவரலட்சுமி விரதம், கருடபஞ்சமி விரதம், ஆவணி அவிட்டம், ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி, நவராத்திரி, சரசுவதி பூஜை, தீபாவளி. கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, திருவாதிரைத் திருநாள், பொங்கல், சிவராத்திரி, காரடையான் நோன்பு, ஸ்ரீராமநவமி, சித்திரை வருடப் பிறப்பு, சித்திரா பௌர்ணமி பண்டிகைகளுக்காய 'பலகாரக் குறிப்புகள்' போன்ற தலைப்புகளில் செய்திகள் பல தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் எல்லாப் பூசைகளுக்கும் முதலாவதாய்ப் பொதுவானதாய்ச் செய்யும் பூசை கூறப்பட் டுள்ளது.

ஒவ்வொரு விழாவின் சிறப்பு, அதற்குரிய இறைவன் சிறப்பு, மகிமை, வரலாறுகள். புராணக் கதைகள், விழாவினைக் கொண் டாடும் விதம், செய்ய வேண்டிய பலகாரங்கள் போன்றவை நிரல் பட அமைந்துள்ளன. பூசை விதிகளைக் கூறும் ஐந்து மந்திரங் களும் வடமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனொடு தமிழ் மொழியில் அவ் விறைவனைப்பற்றிப் பாடப்பட்ட இலக் கியங்களில் சில பாடல்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாய்க் கிருஷ்ண ஜயந்திபற்றிக் கூறுமிடத்து **'கண்ணன் போற்றி', 'கண்ணன் தாலாட்டு', 'கண்ணனும்**

பாரதியும்', 'கண்ணனை அழைத்தல்' போன்ற பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

18 தலைப்புகளில் இம் முறை பின்பற்றப்படுகிறது; 19ஆம் தலைப்பில் ஒவ்வொரு விழாவிற்குரிய பலகாரங்களும் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுக்குத் தேவையாய பொருள்களும், அளவும், செய்முறையும் வரிசையாய்த் தரப்பட்டுள்ளன.

'புண்டிகை பலகாரம் மந்திரம் மகிமை' என்னும் தலைப் பிடப்பட்ட இதனில் பண்டிகை, மந்திரம், மகிமை போன்ற வையே மிகுதியாய்க் கூறப்பட்டுள்ளன. பலகாரங்கள் மிகுதி யாய்க் கூறப்படவில்லை. சில விழாக்களுக்குமட்டுமே பலகாரங் கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் சிலவற்றிற்குமட்டுமே செய்முறை தனியாய், இறுதியாய்ப் பிற்பகுதியில் கூறப்பட்டுள் ளது. தலைப்பிற்கேற்றவாறு பலகாரங்கள், அவற்றிற்கேற்ற செய்முறைகள் மிகுதியாய்க் கூறியிருப்பின் சிறப்பாய் இருந்திருக் கும்.

ஒவ்வொரு விழாவும் அமைக்கப்பட்ட வரலாறு, மகிமை என்னும் பகுதியில், அவ் விழாவிற்காய பல காரணங்களும் கதைகளும் சொல்லப்பட்டுள்ளன.

ஆவாஹனம், ஆஸனம், ஆர்க்யம், பாத்யம், ஆசமனீயம், சுத்தோதகஸ்நாநம், பூஜாவிதிகள், தியானம், நிவேதனம், தர்ப்பணம், ஸங்கல்பம், அஷ்டோத்திரம் போன்ற பல வட மொழிச் சொற்கள் இதனுள் பயின்றுள்ளன. வடமொழிப் பூசை விதிகள் கூறப்பட்டதால் இவை இடம்பெற்றன.

பலகாரங்கள் செய்முறை எளிமையாய்க் கூறப்பட்டுள்ளது. தேவைப்படும் பொருள்களை அளவுடன் குறிப்பிட்டுச் செய் முறையும் கூறப்பட்டுள்ளதால் மகளிர் எளிமையாய்ப் பின்பற்ற அவை உதவி செய்கின்றன. இவ் வகையில் இந் நூல் மிகச் சிறப் பாய ஒன்றாய்க் கருதப்படுகிறது.

மருத்துவம் : 'மருத்துவ நூல்கள்' எனும் பகுதியில் மருத்துவ நூல்கள் அனைத்தும் அடங்கு மென்றாலும் இல்லத்திற்குத் தேவையாய வீட்டு மருந்துகளைக் குறிப்பிடும் நூல்களைமட்டும் இங்குக் குறிப்பிட்டுச் செல்வது நலம். அத்தகு நூல்கள் இரண்டு **சீரகத்தின் சிறப்பு மருத்துவம், வெந்தயத்தின் சிறப்பு மருத்துவம்** வெளிவந்துள்ளன. முதலாவது, சீரகத்தின் வகைகளையும், சீரகத்தால் செய்யப்படும் சூரணம், இலேகியம், பொடி, தைலம்

போன்ற பொருள்களையும் 'எவ்வெந் நோய்களுக்கு எவ்வெவ் வாறு எந்தெந்த முறையில் மருத்துவம் செய்ய வேண்டும்' என்ப தனையும், அளவு முறைகளையும், எவ்வாறு பயன்படுத்த வேண்டு மென்பதனையும் நன்றாய் எடுத்தியம்புகிறது.

இரண்டாவது, வெந்தயத்தின் குணங்களையும், எவ்வெந் நோய்களுக்கு எவ்வெவ்வாறு செய்ய வேண்டும் என்பதனையும் செய்முறை, அளவுமுறை, பயன்படுத்தும் முறை போன்றவற்றை யும் இயம்புகிறது. மருந்து உண்ணும்போது, தள்ள வேண்டியவை, கொள்ள வேண்டியவை' போன்றவை கூறப்பட்டுள்ளன. 'மருந் தினைமட்டுமே மருந்தாய்க் கொள்ளாது, உணவினையே மருந் தாய்க் கொள்ளும் சிறப்பு, மனையியலுக்கு மிகவும் இன்றியமை யாதது' என்பதனை இது தெளிவுறுத்துகிறது.

கருவுற்ற மகளிர்க்குக் கைகண்ட மருந்துகள் : இந் நூல், இல்லத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் மாதர் கருவுற்றிருக்கும் போது, குழந்தை பிறத்தற்கு முன்னர்ச் செய்ய வேண்டிய செயல் களையும், பிறந்த பின்னர்க் கொள்ள வேண்டிய மருந்து முறை களையும் எடுத்தியம்புகிறது. திருமணத்தின் நியதி, வருமுன் காக்க, மருந்துகள் என மூன்று பகுதிகளாய் நூல் பிரிக்கப்பட் டுள்ளது.

வருமுன் காக்க எனும் பகுதியில், 'கருவுற்ற மகளிர்க்குப் பேறு காலத்தில் இருக்கும் மனநிலையே பிறக்கும் குழந்தைக்கும் அமை யும்' என்ற கருத்தினைக் கூறுகிறார். இதன் முற்பகுதியில் கரு வுற்ற மகளிர்க்குக் குழந்தை பிறத்தற்கு முந்திய காலங்களில் ஏற்படும் மயக்கம், சோகை, வீக்கம் போன்றவற்றைக் கூறு கிறார்; மேலும், மனநிலை வகையிலும் அப் பெண் பாதிக்காத வாறிருக்கச் சில வழிமுறைகளையும் விளக்குகிறார்.

மருந்துகள் : இப் பகுதி, இடுப்புவலி, கருவுறு நிலை போன்றவற்றுக்கு மருந்து சொல்கிறது; பால்சுரத்தல், முலை வெடித்தல், கபம் குறைவு, தலைவலி, வயிற்றுவலி போன்ற பல வற்றிற்குத் தொடர்ந்து தமிழ் மருந்துகளை எடுத்துரைக்கிறது.

இது திருமணம் தொடங்கி மகப்பேறு முடிய உள்ள காலங் களைத் தெளிவாய் வரையறைசெய்து விளக்குகிறது. கூறுமுறை கள், எளிமையாய்த் தெளிவாய் அமைந்திருத்தல் நூலின் சிறப் பாகும். மிக எளியவரும் பயன்படுத்தும் அளவிற்கு மருத்துவ முறைகளின் செலவு குறைவானதாய் உள்ளது,

மொத்தத்தில் 47 பக்கமே உள்ள இந் நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்றாகும். பல இடங்களில் சொன்ன செய்திகளே மீண்டும் இடம்பெறுகின்றன. அதனைத் தவிர்த்திருக்கலாம். அச்சுப் பிழைகள் பல உள; அவற்றை நீக்கின் இந் நூல் மிகவும் சிறப்பாய் அமையும்.

அழகியல் : அழகு என்பது அனைவருக்கும் தேவையாய ஒன்று; அதனிலும், மனைக்கு விளக்கமாய மகளிர்க்கு மிகவும் தேவை. 'இயற்கையழகுடன் செயற்கை அழகும் சிறப்பு மிக்கது; இன்றியமையாதது' என்பதனை **அழகு குறிப்புகள்** விளக்குகின்றன.

செயற்கை அழகிற்கு அடிப்படையாய 'பவுண்டேஷன்' போடுதலைப்பற்றி ஆசிரியர் விளக்கமாய்க் கூறுகிறார்; கண் புருவத்திற்கு மைதீட்டுதல், கண்ணிற்கேற்ற நிழல்களைக் காலை மாலை நேரத்திற்கேற்பத் தேர்ந்தெடுத்தல் எனக் கண்ணிற்கு அழகு கூட்டுவனவற்றை நவின்றுள்ளார்; முகத்திற்குப் பவுடர், சாயம் உதட்டுக்கு லிப்ஸ்டிக் போன்றவற்றை எவ்வெவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை அழகுபட விளக்குகிறார்; 'இயற்கையில் உள்ள சில குறைகளையும் செயற்கையால் நீக்க முடியும்' என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

முகப் பருக்கள் வரக்காரணம், வாராமல் தடுக்கும் வழிகள், கைக்கொள்ளும் முறைகள், உணவுகள், போக்கும் மருந்துகள் தரப்பட்டுள்ளன. முகப்பருவினை நீக்கவும், தோலை மிருதுவாக்கவும், தழும்புகளை நீக்கவும் கிரீம்கள், டானிக்குகள், தைலங்கள் போன்றவை கூறப்பட்டுள்ளன.

கால்களைத் தூய்மையாய் வைத்துக்கொள்வனவும் காலணிகள் அணியும்போது கவனிக்க வேண்டுவனவும் கூறப்பட்டுள்ளன. கண்கள், முகவாய்க்கட்டை, காதுகள், நெற்றி, மூக்கு, கழுத்துப் போன்றவை அழகாய் இருக்க, பொதுவாய வழிமுறைகள் நயம்படக் கூறப்பட்டுள்ளன.

இல்லத்திலுள்ள அனைவருக்கும் தேவையாய சுகாதார, அழகு குறிப்புகளை எளிமையாய்க் கூறியிருப்பது சிறப்பாயுள்ளது; பயன் தரவல்லது. இவர் அழகு சாதனங்களைக் கூறும் போது சாதாரண மக்களுக்கு ஏற்றவாறும் உயர்தரக் குடும்பங்களுக் கேற்றவாறும் எடுத்தியம்பியுள்ளமை சிறப்பு; கிரீம், டானிக், செண்ட் போன்ற ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியே கூற

வேண்டிய கருத்தைப் புரிய வைக்கிறார். இதனுள் பொருளடக்கம் அமையாதிருத்தல் ஒருகுறையாயுள்ளது. கூறிய செய்தியே மீண்டும் வாராமல் தடுத்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும்.

அழகியற் கலையில், பெரும்பாலும் மகளிர், தம் இல்லத்தில் செய்யும் தொழிற்சாலையாய, பயன்கலையாய தையற்கலையும் ஒன்றாய் வைத்து எண்ணப்படுகிறது. பெண்களுக்கென நாகரிகத் தையலை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென வெளிவந்த நூல் இது.

சுரிதார், குர்தா, பெல்ட்சோளி, மிடிசெட், கட்டோரி, கட்சோளி, சிலீவ் லெஸ் பிராக், அம்பரல்லா, கட்பிராக் போன்ற பெண்களின் நாகரிக உடைகளைத்தைக்கும் முறைகளை ஆசிரியர் இதனில் இயம்பியுள்ளார். 21 தலைப்புகளில் 21 உடைகளைப் பற்றிக் கூறவேண்டிய செய்திகளைக் கூறியுள்ளார். தையல் கற்பதற்குமுன் கற்போர் செய்ய வேண்டிய முறையை எடுத்தியம்பியுள்ளார். சிலவற்றிற்குக் 'குறிப்பு' என்று தந்துள்ளமை போல் அனைத்திற்கும் கொடுத்திருப்பின் சிறப்பாய் இருந்திருக்கும். அளவுகளை அங்குல அளவில் கொடுத்துள்ளார். மொத்தத்தில் நாகரிக உடுப்புகளைத் தைப்பதற்குப் பெண்களுக்கு ஒருவழி காட்டி நூலாய், மாதிரி நூலாய் இந் நூல் அமைந்துள்ளதெனலாம்.

30 நாள்களில் ஆண்களுக்கு டெய்லரிங்: ஆண்கள் தங்கள் உடைகளைத் தாங்களே தைத்துக்கொள்ள இந் நூல் கற்றுத் தருகிறது. ஆண்களின் சாதாரண உடைகள், நாகரிக உடைகள் போன்றவற்றுக்கு அங்குல அளவுடன் தைக்கும் முறையையும் ஆசிரியர் இயம்பியுள்ளார்; 24 உடைகளை, 24 தலைப்புகளில் தந்துள்ளார். இதனில் அங்கங்குக் குறிப்புகளும் உடைகளைப்பற்றிய சிறப்புகளும் உள. 'தோற்றுவாய்' எனும் பகுதியில் தையல் கற்கத் தேவையாய பொருள்கள் அளவு எடுக்கும் முறை ஒவ்வொன்றற்கும் கூறப்பட்டுள்ளன.

'30 நாள்களுக்குள் தையற்கலையைக் கற்றுக்கொள்ளலாம்' என்று இந் நூலில் கூறுகிறார் ஆசிரியர். செய்திகளைத் தொகுத்துள்ள முறை சிறப்பு. 'டெய்லரிங்' என்னும் பெயரை மட்டும் தமிழ்ப்படுத்தியிருக்கலாம். மேற்கூறிய இரண்டு நூல்களிலும் பொருளடக்கம், படங்கள் போன்றவை சிறப்பாய் அமைந்துள்ளன.

பொது அறிவு : இல்லத்திலுள்ளவர்களுக்கு இல்லம்பற்றிய அறிவுமட்டுமிருப்பின் போதாது; சுற்றுப்புறத்தைப்பற்றிய அறிவும் தேவை. இல்லச் சுகாதாரத்தொடு சுற்றுப்புறச் சுகாதாரமும் அறிந்திருந்தால் வரும்நோய்களைத்தடுத்து, நோயற்று, குறைவற்ற செல்வத்துடன் வாழ வழிவகுக்கும்.

சுற்றுப்புறமும் சுகாதாரமும் : சுற்றுப்புறத்தையும் சுகாதாரத்தையும் எடுத்தியம்புகிறது இந் நூல். 14 தலைப்புகளாய்ப் பகுக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. 'சுற்றுப்புறமும் சுகாதாரமும்' எனும் முதல் தலைப்பு நூலுக்கு முன்னுரை போன்று அமைகிறது. 'Growth and Development of the Human Beings depend upon the Envionment' என்னும் கோட்பாட்டின் விளக்கமாய்த் திகழ்கிறது.

'நீரினால் உண்டாகும் நோய்கள்' எனும் பகுதி காலரா, டைபாய்டு, பேதி, கல்லீரல் அழற்சி போன்றவை உண்டாகும் விதத்தைக் கூறுகிறது. வைரஸ், பாக்டீரியா, சிட்டுண்ணி போன்றவற்றால் பரவும் நோய்கள், நீர்மூலம் பரவும் நோய்கள் என்பனவற்றை 'வைரஸ்' எனும் பகுதி விளக்குகிறது. தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றுக்கு வரும் நோய்கள் கூறப்படுகின்றன.

தொழிற்சாலைக் கழிவுகளாலும் இரசாயனப் பொருள்களாலும், இயற்கை வளங்கள் அழிவதாலும், உயரமான கட்டடங்களாலும், ஒலி அதிர்வுகளாலும் ஏற்படும் சீர்கேடுகள் அனைத்தையும் கொண்ட செய்திகளே இறுதித் தலைப்பாய் அமைகின்றன.

பல பொதுஅறிவியல் நூல்களின் ஆசிரியர், டி.எம் சௌந்தரராசன் இந் நூலை எழுதியுள்ளார். நூலின் கவர்ச்சியான அட்டை காண்பாரை இந் நூலைக் கற்க வைக்கிறது. சுற்றுப்புறக் கேடுகளைக்களையும் விதத்தைக் கூறும் ஆசிரியர், பல இடங்களில் அதற்காய வழியைக் காட்டுகிறார். சில இடங்களில் 'மனித சமுதாயத்தின் தவிர்க்க முடியாத நிலையில் அறிவியல் உலகமே அதற்கு விடைதர வேண்டும்' என்கிறார் (சான்று: உயரமான கட்டடங்களால் ஏற்படும் கேடுகள்). நூலில் பல இடங்களில் கவனமாய் இருக்க வேண்டிய சிறுசிறு செய்திகளைப் பற்றித் தெளிவாய்க் கூறுகிறார். மொத்தத்தில் இந் நூல் 'மாணவர்க்கு' என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு மனையிலும் இருக்க வேண்டிய ஒன்று.

'முதலுதவி', **'மருத்துவ நூல்கள்'** எனும் பிரிவில் அடங்க வல்லது. என்றாலும், இல்லிலுள்ளார் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று இது; பரபரப்பான இவ் வறிவியல் உலகில் அன்றாடம் நிகழும் தீ, நீர், மின்விபத்துகள், போக்கு வரத்து விபத்துகள் போன்றவற்றுக்கு உடனடியாய்ச் செய்ய வேண்டுவது முதலுதவியே.

14 தலைப்புகளில் முதலுதவியாய்ச் செய்ய வேண்டிய பணி கள் அனைத்தையும் இந் நூல் விளக்குகிறது. காயங்கள் பலவகை; அவற்றுக்கு எவ்வெவ்வாறு சிகிச்சை செய்ய வேண்டுமென்பதைக் **'காயங்களுக்கு முதலுதவி'** எனும் பகுதியும், விக்கல், வாந்தி (பல வகை), மூர்ச்சை அடைதல்,வயிற்றுப் போக்கு,புரையேறல், பல்வலி போன்ற சிறுதொல்லைகளுக்குச் சிகிச்சையைச் **'சிறு தொல்லைகட்கு முதலுதவி'** எனும் பகுதியும் இயம்புகின்றன; காக்கை வலி, குழந்தை வலி போன்றவற்றுக்கு **'வலிப்பிற்கு முதலுதவி'** என்பதும், எலும்பு முறிவுகளுக்கு **'மூட்டுப்பிசகு, எலும்பு முறிவுகளுக்கு முதலுதவி'** எனும் பகுதியும் சிகிச்சையைத் தருகின்றன.

'மின் விபத்து', **'தீ விபத்து'**, **'நீரில் மூழ்குதல்'**, **'விஷங்கள்'**, **'அதிர்ச்சியும் இரத்தப் போக்கும்'**, **'மூச்சடைப்புப்'** போன்ற வற்றுக்குச் செய்ய வேண்டிய உடனடி நிகழ்ச்சிகள் அடுத்துவரும் தலைப்புகளில் கூறப்பட்டுள்ளன.

செய்திகள் எளிமைப்படப் பத்தி பிரிக்கப்பட்டு, படிப்போர் மனத்தில் நிலைபெறுமாறு இயம்பப்பட்டுள்ளமை சிறப்பு. புரி யாத அறிவியல் பெயர்களுக்குப் பிறைக்குறிகளைப் பயன்படுத்தி ஆங்கிலப் பெயர்களைக் கூறியிருப்பதும், அறிவியல் பெயர்களைப் பிறையில் தமிழில் தந்திருப்பதும், ஒற்றை மேற்கோளிட்டுச் சில பெயர்களைக் காட்டியிருப்பதும் பயன் தருவனவாயுள்ளன. சான்று: 1. விளக்குகள் பொருத்தும் இடங்கள் (Holders), 2. சமையல் சோடா உப்பு (சோடியம்-பை-கார்பனேட்), 'அல்பீச்சியா'.

சாதாரண முறைகளும். அறிவியல் முறைகளும் கூறப்பட் டுள்ளன. 'பாம்புக்கடிக்கு வாழைமரத் தண்டின் சாறு கால்படி கொடுக்கக் குணமாகும்' என்று தமிழ் நூல்களில் குறிக்கப்பட் டுள்ளது' என்னும் பழைய, எளிய முறையை இயம்பியுள்ளார். பயன் மிகுந்த செய்திகளை நன்கு இயம்பியுள்ள 96 பக்கங்கள்

கொண்ட இந் நூல் ஒவ்வொரு மனையிலும் இன்றியமையா திருக்க வேண்டிய ஒன்று.

ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய, இன்றியமை யாத பயனுடைய கலை, **நீச்சற் கலை.** ஒருமுறை கற்பின் இறுதிவரை மறக்க முடியாத ஒரு சிறப்புக் கலை இது. இதன் பயனையும் சிறப்பினையும் எடுத்துக்கூறும் வகையில் 'சுலபமாய் நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள்?' எனும் நூல் வெளிவந்துள்ளது. 'வயது வரம்பின்றி அனைவரும் கற்றுக்கொள்ளக் கூடிய நீச்சல், உடல் வளத்தையும் மனமகிழ்ச்சியையும் தரவல்லது' என்கிறது. மிக விரைவில் கற்கும் எளிமை படைத்த இது, இளம்பிள்ளை வாதத்தைப் போக்க வல்லது; சிந்தனைத் திறனை வளர்த்துக் கவலைகளை மறக்கச் செய்யும் திறனுடையது; ஒரே நேரத்தில் அனைத்துறுப்புகட்கும், அனைத்துத் தசைகட்கும் பயிற்சி யளிக்கும் சிறப்புக் கொண்டது; இதற்கேற்ற நேரம், உடை, உண்வு முறைகளையும் ஆசிரியர் கூறுகிறார்.

பத்திகளாய்ப் பிரித்தியம்பாவிட்டாலும் வினாக்களை எழுப்பி, விடை கூறுதல் வாயிலாய்ச் செய்தியைத் தந்துள்ளமை, படித்தற்கு ஆர்வ மூட்டுவதாயுள்ளது. தேவைப்பட்ட இடங் களில் படங்கள் வாயிலாய் விளக்கம் தரப்பட்டுள்ளமை சிறப்பு. உடல் மனங்களின் நலனை மேம்படுத்தும் நீச்சற் கலையைக் கூறும் இந் நூல் படித்தறியத் தக்கது.

ஒருவர் அறிய வேண்டியவற்றுள் **'மனையடி சாத்திரமும்'** ஒன்று. 'நற்சகுனம் பார்த்தல்' என்பது தொன்றுதொட்டு வரும் ஒருகலை. அவ்வாறே 'மனையடி சாத்திரம்' எனும் கலையும் பரம்பரை பரம்பரையாய் வளரும் ஒருகலையாகும். இது பழக்கத்தால் வளரும் ஒருகலையாகும். அப் பழக்கத்தால் பலரும் பலமுறை கலந்து பேசிச் செயல்படும்போது அது குறிப் பிட்ட வரைமுறைகளைப் பெறுகிறது; விதிமுறைகளாகிறது. **'மனையியல் நூல்கள்'** எனும் தலைப்பில், 'மனையைக் கட்டு தற்கு அறிந்திருக்க வேண்டிய வழிமுறைகள்' என்னும் வகை யில், மனையடிசாத்திரம் எனும் நூலையும் அடக்கலாம்.

இந் நூல் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது; அவை: **மனையடி சாத்திரம், பொருத்தமும் பயனும், வீட்டுக்கு முன்பு வாசல், மண முகூர்த்தம் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள், வீடுகட்டும் பயன்கள், புற்றும் பயனும், கிரகப்பிரவேசம்,**

வீடுகட்டும்போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கியக் குறிப்புகள், நட்சத்திர வாரி பயன்.

'மனையடி சாத்திரம்' அல்லது 'மனை சாத்திரம்' எனும் கலையைப் பண்டைய மக்கள் செய்யுள் நூலாய்ப் படைத்தனர். அதனை உரைநடையில் எழுதியிருத்தல் சிறப்பு. விளக்கங்கள் எளிதாயும் தெளிவாயும் அமைந்துள்ளன. 'ஆங்காங்கே உள்ள பல படவிளக்கங்களும் வரைபட விளக்கங்களும் தெளிவிற்கு வழி வகுக்கின்றன.

சாத்திரம் பார்த்து வீடு கட்டுவது எவ்வாறு? என்பதனை விட 'மனையடி சாத்திரம்' என்பதனைப் பெரிய எழுத்தில் அட்டையில் விளக்கியுள்ளனர். ஆனால், முகப்புப் பக்கத்தில் (Title Page)' சாத்திரம் பார்த்து வீடு கட்டுவது?' என்பதனைப் பெரிதாயும் 'மனையடி சாத்திரம்' என்பதனை மிகச் சிறிதாயும் பிறைக் கோடிட்டு அமைத்துள்ளமை சிறுமாற்றத்தைத் தரு கிறது. ஆசிரியர் சோதிடராகையால் சில விளக்கங்கள் ஆருடத் தொடர்பாய் அமைகின்றன.

சில இடங்களில் தெளிவின்மையைக் காண்கிறோம். சான்றாய்க் கரண பயன் விளக்கத்தில் (ப. 43) பவம், பாலவம், கௌல்வம், தைதுலை. கரசை, பத்திரை ஆகிய கரணங்களின் வகைகள் வடமொழிச் சொற்களாயும் மேலும் விளக்கப்பட வேண்டியவையாயும் உள்ளன.

பயன்பாட்டு நிலையில் இது மிகவும் தேவையான ஒன்றாய் அமைகிறது. நம்பிக்கையையே வாழ்வாக்கிக் கொண்டிருக்கும் இம் மனித உலகம், இதனை மிகுதியாய் வரவேற்பதால் 1983ஆம் ஆண்டிலேயே (ஜூன், திசம்பர்) இஃது இருபதிப்புகளைப் பெற்றுள்ளது.

காய்கறிச்சாறுபடி: உணவைத் தயாரிக்கும் சமையல் குறிப்பு களும் முறைகளும் முன் கூறப்பட்டன. 'உணவு எத்தகையதாய் இருக்க வேண்டும்? அதனை எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும்' என்பவவற்றை இந் நூல் எடுத்துக்கூறுகிறது. 12 தலைப்புகளில் இது செய்திகளைக் கூறுகிறது.

'மனித உணவில் காய்கறிகளின் பங்கு' என்னும் முதற்பகுதி யில் காய்கறிகளின் சிறப்பினையும் அவற்றில் அடங்கியுள்ள

ஊட்டச் சத்துகளையும் குறித்துள்ளார் ஆசிரியர். கால்சியம், இரும்பு, பாஸ்பரம் போன்ற சத்துகளும், வைட்டமின் 'ஏ', 'பி' 'சி' 'டி', 'பி2' போன்றவையும் அடங்கியுள்ள காய்கறிகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. புரதச்சத்துக் குறைவை முறியடிக்கக் காய்கறிகள் எவ்வாறு துணை புரிகின்றன? என்பதும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வரும் நோய்களும் அவற்றைத் தடுக்க உதவும் காய்கறிகளும் கூறப்பட்டுள்ளன.

'ஒவ்வொரு மனிதன் உணவிலும் இருக்க வேண்டிய தேவையாய சத்துகள் எவை எவை?' என்பதும், எவ்வளவு கிராம் இருத்தல் வேண்டும்?' என்பதும், எவ்வெக் காய்கறிகளில் அவை இருக்கின்றன?' என்பதும் படங்களுடன் தரப்பட்டுள்ளன.

காய்கறிகளைச் சமைக்கும்போது ஊட்டச்சத்துக் குறையாதவாறு செய்ய வழிமுறைகள் பலவற்றை ஆசிரியர் வரிசைப் படக் கூறியுள்ளார். 'காய்கறிகளின் தோலை மிகுதியாய்ச் சீவுதல் கூடாது; மிகச் சிறியனவாய் வெட்டல் கூடாது; மிகுதியாய்க் கழுவுதலும் நெடுநேரம் வேகவைத்தலும் கூடா' என்பவை அவை. அவற்றுள் சில காய்கறிகளுள் உள்ள ஊட்டச்சத்துகளைக் குறிப்பிடுதற்கும் சமச்சீர் உணவிற்கு அன்றாடம் தேவைப்படும் உணவுப் பொருள்களைத் திரட்டுதற்கும் (ஆண்கள், பெண்கள் குழந்தைகள்) அட்டவணைகள் போட்டுக் காட்டியுள்ளமை பயன்தருவதாய் உள்ளது.

வீட்டுக் காய்கறித்தோட்டம் எவ்வாறு அமைய வேண்டு மென்பது படத்துடன் விளக்கப்பட்டுள்ளது. இதனுள் மாற்றுக் காலப் பயிர்களின் அட்டவணையும் தரப்பட்டுள்ளது.

காய்கறிகளின் தேவை, ஊட்டச் சத்துப்பற்றிய தோட்டம் அமைத்துப் பயன்பெறும் முறை போன்றவற்றைப் படம், அட்டவணை இவற்றுடன் எளிமைப்பட இயம்பியிருத்தல் சிறப்பு. ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் தேவையாய நூல் இது. சில பிழைகளை நீக்கின், இந் நூல் பெரும்பயனுடையதாகும்.

குடும்பக் கட்டுப்பாடு: இல்லத்தில் பொருட் செல்வம் மட்டு மிருப்பின் போதாது; மக்கட் செல்வமும் இருத்தல் சிறப்பு; அதுவும் அளவுடன் இருத்தலே சிறப்பு; 'அளவிற்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்பது முதுமொழி. அதனால், 'இரண்டனுக்குமேல் குழந்தைகள் இருப்பின் நல்லதன்று' என்பதனை உணர்த்தும் திட்டம், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்.

அதனை எதிர்த்துக் கூறும் நூல், **குடும்பக் கட்டுப்பாடு-ஓர் ஆராய்ச்சி** என்பது. இதனுள் 17 தலைப்புகளுள.

'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் அரசியலமைப்புச் சட்டமும்' என்பதில் 'இந்து மதத்திற்கு எதிரானது இத் திட்டம்' என்கிறார்.

'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும், நம் நாட்டுக் கலாசாரமும்' 'என்பதில் இந்தியப் பண்பாட்டுக்கு எதிரானது' என்று கூறப்பட்டுள்ளது.

'குடும்பக் கட்டுப்பாட்டால் ஏற்படும் பயங்கர விளைவுகள்', 'குடும்பக் கட்டுப்பாட்டின் தத்துவமும் சோஸிலிசக் கொள்கையும்', 'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் சுதந்திரமும்', 'குடும்பக் கட்டுப்பாடும் இந்திய ஒற்றுமையும்', 'இந்தியா பாரதம் என்று அழைக்கப்படுவது ஏன்?' என்னும் தலைப்புகள் பொருத்தமில்லாச் செய்திகளை இயம்புகின்றன.

நாட்டின் இன்றைய நடப்பிற்கு ஒவ்வொரு வீடும் இத் திட்டத்தை மேற்கொள்ளல் இன்றியமையாததாகும். அவ்வாறிருக்க, இந் நூல் 17 தலைப்புகளை அமைத்துக்கொண்டு அவற்றில் 'இத் திட்டத்தில் சிறப்பில்லை;பயனில்லை; தீமையே; அது நாட்டின் நிலைமையையே மாற்றிவிடும்' என்ற தேவையில்லாக் கருத்துகளை இயம்புதல் போற்றத் தக்கதன்று; எடுத்த பொருளின் சிறப்பும் அதனை எடுத்துச் சொல்லும் முறையும் சிறப்பாய் அமையவில்லை; மனையியலுக்கு ஆக்கம் தரும் நூலாயில்லை.

பொதுவாய் மனையியல் தொடர்பாய நூல்களைக் கூறும் கட்டுரை, கிடைத்த நூல்களைமட்டும் அடிப்படையாய்க் கொண்டு எழுதப்பட்டுள்ளது. நேரடித் தொடர்புள்ளனவும் மறைமுகத் தொடர்புள்ளனவும் இங்கே ஆய்விற்கு உட்படுத்தப் பட்டுள்ளன. இதனுள் முதற்பகுதி நூலிலுள்ள செய்திகளின் தொகுப்பாயும் அடுத்த பகுதி திறனாய்வாயும் அமைந்துள்ளன

நூல்கள், சமையல், மருத்துவம், அழகியல், பொதுஅறிவு காய்கறிச் சாகுபடி, குடும்பக்கட்டுப்பாடு என்று பல பிரிவுகளாய் ஆய்வினை மேற்கொண்டுள்ளன. சமையல் தொடர்பாய் நூலால் முந்தைய பிந்தைய ஆண்டுகளை நோக்க, அவை குறைவாகவே உள்ளன. அனுபவம் என்ற நிலையில் பங்கு பெறுதலைக் காட்டிலும் நூலறிவும், சில வேளைகளில் தம்மைப் படைப்பாளராய்க் காட்டிக்கொள்ளும் எண்ணமும் இந் நூலில்

மேலோங்கி நிற்கின்றன. இந் நிலையில் பண்டிகை, பலகாரங் களே மிகுந்திருக்கக் காண்கிறோம். சிலவிடங்களில் இத்தகு நூல் கள் பண்டிகைக்குரிய பலகாரங்களைவிடப் பண்டிகைகளையே மிகுத்துக் கூறுகின்றன.

மருத்துவம்பற்றிச் சில நூல்கள்மட்டும் பேசப்பட்டன. அவை வாழ்க்கையுடன் நேரடித் தொடர்பு பெறும் வண்ணம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கர்ப்பிணியின் மருத்துவம் தொடர் பாய நூல் எடுத்துச் சொல்லும்படி உள்ளது. அழகிய இந்துமதி யின் 'அழகுகுறிப்புகள்' விரிவாய், விளக்கமாய் ஏற்றுக்கொள்ளக் கூடினவாய் உள்ளன. இவற்றொடு மகளிர் அழகு கலைத் தொடர்புடைய தொழிற்சாலைகளும் கூறப்பட்டுள்ளன.

பொதுஅறிவு எனும் பகுதி தன்னுள் பெரும்பான்மை நூல் களை அடக்கிக்கொண்டுள்ளது. '**சுற்றுப்புறமும் சுகாதாரமும்**' என்னும் நூல் சுற்றுப்புறக் கேடுகளை அகற்றி, வாழ்வைத் தூய் மைப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

'**முதலுதவி**' எனும் சிறுநூல் இல்லம் ஒவ்வொன்றிலும் இருக்க வேண்டிய நூல்.

சுலபமாய் நீச்சல் கற்றுக்கொள்ளுதலும்' சாத்திரம் பார்த்து வீடு கட்டுவதும்' விளக்கப்பட்டுள்ளன.

'**காய்கறிச் சாகுபடி**' சாகுபடியைமட்டும் கூறாது சத்துள் ளன, அல்லன எனப் பிரித்துணர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பக் கட்டுப்பாடு' ஆய்வு நிலையில் 'தேவையில்லை' என்ப தனைப் பழைய நூல்களின் சான்றுகளால் ஆசிரியர் விளக்க முற் பட்டுள்ளார். அவற்றையெல்லாம் அறிவியல் மயமான வளர்ச்சி மறுத்துவிட்டது என்பதனை ஆசிரியர் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

'மனையியல்' என்னும் வகையில், '**குழந்தை வளர்ப்பு**', '**வீட்டுச் சூழல் அமைப்பு**', '**கோலமிடுதல்**' போன்றவற்றையும் இணைத்துக்கொண்டிருக்கலாம்.

1983இல் வெளியான மனையியல் நூல்கள்

1. **பண்டிகை, பலகாரம், மந்திரம், மகிமை**, அம்பாள் பதிப்பகம், அம்பாள் வெளியீடு, அக். 1983, விலை ரூ. 12-00; ப. 224

2. இந்துமதி, **அழகு குறிப்புகள்**, சங்கீதவாணி பதிப்பகம், ஆகஸ். 1983, விலை ரூ. 8-50; ப. 136

3. இராசேந்திரன், முருகு, **சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுவது எப்படி?** (மனையடி சாஸ்திரம்), பாரதி பதிப்பகம், சென்னை, ஜுன், திசம்பர், 1984. ப. 180

4. சௌந்தரராசன், டி.எம்., **சுற்றுப்புறமும் சுகாதாரமும்**, தமிழரசி பதிப்பகம், சென்னை 1983, விலை ரூ. 6-00; ப. 96.

5. சௌந்தரராசன், டி. எம்; **முதலுதவி**, தமிழரசி பதிப்பகம், சென்னை, ஜனவரி 1983, விலை ரூ. 6-00; ப. 96

6. ஜானகியம்மாள், **பக்குவமான காய்கறி சமையல்**, சங்கீதவாணி, நவம்பர், 1983, விலை ரூ. 7-00; ப. 112.

7. திருமலை நடராசன், **சீரகத்தின் சிறப்பு மருத்துவம்**, சங்கீதவாணி, டிசம்பர் 1983, விலை ரூ. 5-00; ப. 80

8. திருமலை நடராசன், **வெந்தயத்தின் சிறப்பு மருத்துவம்**, சங்கீதவாணி, டிசம்பர் 1983, விலை ரூ. 4-75; ப. 72

9. நடராசன், எம்., **பெண்களுக்கு நாகரிகத் தையல்**, சங்கீதவாணி, ஜுன் 1983 (மறுபதிப்பு, ஆகஸ்ட் 1984), விலை ரூ. 6-00; ப. 88

10. நடராசன், எம்., **30 நாள்களில் ஆண்களுக்கு டெய்லரிங்**, சங்கீதவாணி, ஏப்பிரல். 1983 (மறுபதிப்பு, செப்டெம்பர் 1984), விலை ரூ. 6-25; ப. 104

11. பூபதி, இரா., **சுலபமாக நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள்**, வசந்தா பிரசுரம், சென்னை, ஜுன். 1983, விலை ரூ. 4-50; ப. 67

12. முத்துக்கிருஷ்ணன், கோ. ரா., & சுந்தரராசன், சிவ., **காய்கறிச் சாகுபடி**, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, மார்ச்சு 1983, விலை ரூ. 15-00; ப. 259

13. இலட்சுமணன், கே. எஸ். & நாகசண்முகம், **கர்ப்பினிகளுக்குக் கைகண்ட மருந்துகள்**, தமிழ்நாடு பதிப்பகம், ஜூன் 1983, ப. 47

14. விசாலாட்சி, **பழரசம்**, ஜாம், **ஊறுகாய்கள் செய்முறை**, திருமகள் நிலையம், சென்னை, 1893. விலை ரூ. 360 ப. 64

16 வரலாற்று நூல்

வி.சி. சசிவல்லி

பல்வகைகளில் வரலாற்றுத் தொடர்பாய் 13 நூல்கள் அமைகின்றன. தமிழ்மொழியில் இயன்ற பிறநாட்டு வரலாறும், ஆங்கிலத்தில் எழுந்த தமிழக வரலாறும், கல்வெட்டு, செப்பேடு, ஊர்ப்பெயர்பற்றிய நூல்களும், தமிழகச் சமுதாயப் பண்பாட்டு வரலாறும், பழங்குடிகள், கோயில் கட்டடங்களைப்பற்றிய ஆய்வுகளும் இதனுள் அடங்கும். ஆங்கிலத்தில் மேலும் பல நூல்கள் வெளிவருதல் தமிழின் சிறப்பினைத் தமிழனின் பெருமையைத் தமிழக வரலாற்றை உலகளாவ ஒளியுறச் செய்யும்.

வரலாறு என்பது 'ஓர் இனத்தின், ஒருநாட்டின் நாகரிகத்தினை விளக்குவதாய்ப் பண்பாட்டினைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைய வேண்டும்' என்பது அறிஞர் கருத்து.

1983 ஆம் ஆண்டில் தமிழில் வரலாற்று நூல்கள் குறிப்பிடத்தக்க அளவு வெளிவந்துள்ளன. அவற்றுள் பல தமிழ்நாட்டைப் பற்றியன; அவை சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கண்ணோட்டத்தொடு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. தமிழரின் பண்பாடு, வரலாறு போன்ற செய்திகளைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் தரவல்லன. ஆதலின், அவற்றின் செய்திகளைத் திரட்டி நூல்களாய் வெளியிட்டவையும் வரலாற்று நூல்கள் என்னும் இக் கட்டுரையிற் 'சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் எழுதிய பிறநாட்டு வரலாற்று நூல்களும், ஆங்கிலத்தில் எழுதிய தமிழக வரலாற்று நூலும் இக் கட்டுரையிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவ் வாண்டில் இத் தகைய வரலாற்று நூல்கள் வெளிவந்துள்ளமை, இத் துறையின் வளர்ச்சிநிலையையே குறிக்கும். இம் முயற்சி மேலும் தொடருமாயின் தமிழரின் வரலாற்றை முழுநிலையில் அறியப் பெரிதும் பயன்படும்.

வரலாறும் பண்பாடும்: தமிழநாட்டு வரலாறு (சங்ககாலம்-வாழ்வியல்): கடந்த கால மக்களின் வாழ்க்கைப் படிவுகளை உள்ளவாறு காட்டவல்லது வரலாறு. நிகழ்கால வாழ்க்கைப் படிவுகளோடு ஒப்புநோக்கி, எதிர்காலப் போக்கினை உய்த்துணர வைப்பது அதன் நோக்கம்.

தமிழ்நாட்டு அரசு வெயிடாய்த், தமிழர்தம் பழம்பெருமைகளை எண்ணிப் பெருமைப்படும் வகையில் 'தமிழ்நாட்டு வரலாறு (சங்ககாலம்-வாழ்வியல்)' என்னும் நூல் அமைந்துள்ளது. இந் நூவில் ஒன்பது அறிஞர் பெருமக்களின் ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை முறையே சமுதாயம், பொருளியலும் வாணிகமும், நாகரிகமும் பண்பாடும், அறிவியற் கோட்பாடுகள், மெய்ப்பொருளியல் கலைகள், இசைக்கலை, கட்டடக் கலையும் நகரமைப்பும், பண்டைத் தமிழரும் சிந்துவெளி நாகரிகமும் என்பன. இவை சங்ககால மக்களைப் பற்றியன.

'சங்க காலத் தமிழ்ச் சமுதாயம் சமய நம்பிக்கையைமட்டும் அடிப்படையாய்க் கொண்டது அன்று; 'மனிதன் மனிதனாய் வாழவேண்டும்' என்னும் மனித நலக் கோட்பாட்டினையும் அடிப்படையாய்க்கொண்டு அமைந்திருந்தது.

பண்டைத் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலவடிப்படையில் நானிலமாய்ப் பகுக்கப்பட்டிருந்தது. நானிலத்து ஐந்திணை மக்களுள் ஆயர்குடி, குறவர்குடி, வேட்டுவர் குடி, கானவர்குடி, உழவர்குடி, பரதவர்குடி, நுளையர்குடி, எயினர்குடி, மறவர்குடி என்பன அத் தமிழ்க்குடிகளுள் சில வாகும். அக் குடிகளொடு தொழில்வழிக் குடிகளும் நாளடைவில் தோன்றலாயின.

பண்டைத் தமிழரிடையே நாளடைவில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் எனக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் நால்வகைச் சமுதாயத் தலைமக்கள் தோன்றினர்.

சங்க கால மக்கள் மரவுரி, மான்தோல் ஆடைகளை அணிந்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும், குடியமைப்பிற்கும் ஏற்ற வகையில் அவர்கள் உணவுமுறை அமைந்திருந்தது. சங்கத் தமிழர் நாளிடத்தும், கோளிடத்தும், கிரகணம், விண்மீன் விழுதல், பேய்கள், கண்ணேறு, கொல்லிப்பாவை, நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், கனவு, பல்லிசொல் போன்றவற்றிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். பழைய தமிழகத்தில்

தமிழர் விளக்கீட்டு விழா, ஓணம், தைநீராடுதல், வீரர் விழா, இந்திரவிழாப் போன்ற பல விழாக்கள் கொண்டாடப்பட்டன. மகளிர் விளையாட்டுகள், சிறுவர், ஆடவர் விளையாட்டுகள் பல வழக்கிலிருந்தன. இவ்வாறாய்ச் சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒவ்வொரு கூறும் தெள்ளத் தெளிவாய் விளக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் இயலாய 'பொருளியலும் வாணிகமும்' என்பதில் 'ஏற்றத் தாழ்வுகள் மலிந்த பொருளியலையே சங்க காலத் தமிழ்நாட்டுச் சமுதாயம் கொண்டிருந்தது' என்பது விளக்கப் பட்டுள்ளது. பொருளியலுக்கு அடிப்படையாய தொழில்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஒருநாட்டின் பொருளியல் நிலையை மதிப்பிட உதவும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன.

'நாகரிகமும் பண்பாடும்' என்னும் தலைப்பில் ஆசிரியர் முதற்கண் தமிழன் கண்ட நாகரிகம் யாது? என்பதனை விளக்கு கிறார். 'உள்ளப் பண்பாடும் உணர்ச்சிக் கனிவும் இயைந்து, மனித உள்ளத்தில் மாட்சியைப் புலப்படுத்தும் அகவாழ்க்கைக் கூறுகளும், உளமார்ந்த வாழ்க்கையை வெளிப்படுத்தும் புற வாழ்க்கைக் கூறுகளும், இணைந்தும், இழைந்தும் இயக்குவத னையே 'நாகரிகம்' எனப்போற்றுவது நம் நாட்டு மரபு' என்பர். தமிழர் நாகரிகத்தின் சிறப்பு இயல்புகளாய் இல்வாழ்க்கை, விருந்தோம்பல், திருமணமுறை, சாதி வேறுபாடற்ற சமுதாயம், கல்வி கற்கும் உரிமை, உழவுத் தொழில், கடலக வாழ்வு, போர் நெறி, மனிதநலம், வள்ளல்களின் கொடைத்திறன் போன்ற வற்றைக் குறிப்பிடுகின்றார். சங்க காலத் தமிழரின் வாழ்வியல் நோக்கம் யாது? என்பது தெளிவுபட விளக்கப்பட்டுள்ளது.

'அறிவியற் கோட்பாடுகள்' என்னும் கட்டுரை, 'காட்சித் திறனும், ஆராய்ச்சி உள்ளமும் இருக்கும் எந்த ஒரு நாட்டிலும் அறிவியல் தோன்றி வளரும்' என்னும் கருத்தினை வலியுறுத்து கிறது. காட்சி, ஐயம், துணிவு, தெளிவு என்னும் நான்கு படி களைக் கொண்ட தமிழரின் இந்த ஆய்வுமுறையினையே இன்று பேகனின் முறை (Beconic Method) என்று அறிவியார் அழைத்துப் பின்பற்றி வருகின்றனர். சங்க கால மக்களின் வான நூல் அறிவு புறநானூறு, பரிபாடல் முதலிய நூல்களிலிருந்து தெரியவருகிறது. சூரியன், சந்திரன், சுக்கிரன், செவ்வாய், வடமீன், வளிதொழில் ஆண்டு கப்பலோட்டும் கலை, புயலின் கொடுமை, கால அளவுகள், எடை, ஒளியும் ஒலியும் ஆகியவை இலக்கியச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வுலகில் கண்ணுக்குக் காட்சியாய் அறியக்கூடியனவும், அறிய முடியாதனவுமாய் உள்ளவற்றை ஆய்ந்து, அவற்றி லடங்கிய உண்மையினைக் காண்பதே மெய்ப்பொருள் ஆகும். 'பொருள் தன்மைகளை ஆராய்ந்து, மெய்மையினை நிலை நாட்டும் அறிவுக் கலையே 'தத்துவம்' என்னும் குறியீட்டால் அறியப்படுகிறது. மெய்ப்பொருளைப்பற்றிச் சங்க காலத் திலேயே புலவர் அறிந்திருந்தனர். தொல்காப்பியர் கூறும் பொருண்மொழிக் காஞ்சி, வாயுரை வாழ்த்து, செவியறிவுறூஉ முதலிய துறைகள் பழந்தமிழரின் மெய்ப்பொருள் உணர்விற்கும்' ஒழுக்கநெறிக்கும் சான்று பகர்கின்றன. இவற்றை அடிப்படை யாய்க்கொண்டே மற்றப் புறப்பாடல்களும் அமைந்துள்ளன. புற நானூறு கூறும் 'பட்டாங்குகள்' என்னும் பகுதியில், சங்க கால மக்களிடையே வழக்கிலிருந்த தத்துவக் கோட்பாடுகள் பல விளக்கப்பட்டுள்ளன. இதனையடுத்துச் சங்க இலக்கியத்தில் சைவம், வைணவம் போன்ற சமயம்பற்றியும், சிவன், திருமால் கொற்றவை, செவ்வேள் வழிபாடு குறித்தும் கூறப்படுகின்றன. அவற்றையடுத்துத் திருக்குறளிற் காணும் மெய்ப்பொருளியல் விளக்கப்படுகிறது. இவையே அன்றிப் புத்த சமண சமயங் களிற் காணும் தமிழர் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

பண்டைய மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறி தற்கு அவர்கள் விட்டுச் சென்ற கலைச் செல்வங்களே உதவு கின்றன. கலைகளைச் சிற்பம், ஓவியம் போன்று காலத்தால் நிலைத்து நிற்கக்கூடிய கலைகளை' 'நிலைக்கலைகள்' என்றும், காலந்தொறும் மாறுதல்பெற்று வளர்ச்சியடையும் இசை முதலிய கலைகளை 'வளரும் கலைகள்' என்றும் இரண்டாய்ப் பிரிப்பர். 'கலைகள்' என்னும் தலைப்பில் ஓவியக் கலை, சிற்பக் கலை, எழுத்து ஆகிய மூன்றன் தோற்றம், வளர்ச்சி ஆகியவை இலக் கியச் சான்றுகளுடன் சிறப்பாய் விளக்கப்பட்டுள்ளன. இந் நூலில், இறுதி இயல், இசைத் தமிழின் சிறப்பியல்புகளைக் கூறிப் பண்டைய இசைத்தமிழ் அலகு முறைகளைப் பயன் கொண்டு இக் காலத் துறைமையிலும் அலகறியும் நிலையைத் தெளிவுபட விளக்குகிறது.

தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும் : தமிழ்நாட்டு வரலா றும் பண்பாடும் உலகிற்கு ஒளியூட்டக் கூடியன. வரலாற்றின் தொடக்கக் காலத்திலேயே தனக்கென ஒரு தனி வரலாறும், பண் பாடும் கொண்டு நிகழ்ந்த இனம், தமிழ்இனமாகும். தமிழகம் நீண்ட வரலாற்றுப் பெருமை மிக்க திருநாடு. தமிழ்ப் பெருநாட் டின் வரலாற்றினைச் சிறந்த ஆராய்ச்சி ஏடுகளில் காணப்பெறும்

அரிய பல ஆராய்ச்சிக் கருத்துகளைக் கொண்டு, 'தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும்' என்னும் தலைப்பில் இரண்டு தொகுதிகளாய் எழுதியுள்ளார். இரண்டாம் தொகுதியில் நாயக்கர் காலம் முதல், 1971 வரை உள்ள அரசியல், சமுதாய, பண்பாட்டு வரலாறு சிறப்புற நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு, சமுதாயச் சீர் திருத்தம், கல்வி வளர்ச்சி ஆகியவை நன்கு விளக்கமாய் இந் நூலில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. பல்கலைக் கழகத்தேர்வு எழுதுவோருக்கு இந் நூல் பெரிதும் பயன்படும்.

தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டு வரலாறு : தமிழ் நாட்டுச் சமுதாயப்-பண்பாட்டு வரலாறு எனும் நூலை டாக்டர் ஏ. சுவாமிநாதன் எழுதியுள்ளார். இந் நூலைச் சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், மராத்தியர் காலம், தற்காலம் எனப் பிரித்துக்கொண்டு அவ்வக் கால இலக்கியம், நுண்கலை, பண்பாடு, பொருளாதாரம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் மக்கள் எங்ஙனம் வாழ்ந்தனர்? என்பதனைத் தெளிவாய்ப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். நுண்கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒவ்வொரு காலத்திலும் கட்டப்பட்ட கட்டடக் கலை வளர்ச்சியும், பிற கலைகளும் சிறப்புற அமைத்து எழுதப்பட்டுள்ளன.

இந் நூல், வரலாற்றுத் துறை, தமிழ்த்துறை முதுகலை மாணவர்க்குமட்டு மன்றித் தமிழரின் சமுதாயப்-பண்பாட்டு வரலாற்றினை அறிந்துகொள்ள விழையும் ஒவ்வொருவருக்கும், தெளிவாய் விளங்கக்கூடிய சிறந்த வரலாற்று நூலாகும்.

மெய்க்கீர்த்தி : பழந்தமிழர் வரலாற்றை அறிய, நாகரிகத்தைப் பண்பாட்டை உணர, இலக்கியங்களை, அக் காலச் சிற்ப ஓவியங்களை, நாணயங்களை நாடவேண்டி உள்ளது. எனினும், அவற்றால் எல்லா வகையிலும் தெளிவுபெற இயலுவதில்லை. இந் நிலையில் வரலாற்று ஆசிரியர்க்கு முழுமையாய அளவு என்று கூற இயலுவதில்லை; ஆயினும், மிகுதியாய அளவு துணை செய்வன கல்வெட்டுகளும் செப்பேடுகளுமே என்றால் அது மிகையன்று; அதனால், இவ் வாண்டில் கல்வெட்டுச் செய்திகள் அடங்கிய ஒருநூலும், செப்பேடுகள் குறித்த ஒருநூலும் வரலாற்றுத் துறையில் வெளிவந்துள்ளமை போற்றுதற்குரியது.

மெய்க்கீர்த்திகள் : இவ் வரலாற்று நூலினை ஆக்கித் தந்தவர் பூ. சுப்பிரமணியம். மெய்க்கீர்த்திபற்றி வருகின்றமுதல்

தமிழ் நூல் இது. இந் நூலில் 75 முழு மெய்க் கீர்த்திகளையும், 23 ஒருவரி, இருவரி உடைய மெய்க்கீர்த்திகளையும் வரன் முறைப்படுத்தி ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கமும் தரப்பட்டுள்ளது; இது மொத்தம் 450 பக்கங்களைக் கொண்டது.

ஒவ்வொரு மெய்க் கீர்த்தியும் அதனை வெளியிடும் மன்னன் வரலாறு, அறக் கட்டளைகள், ஆணைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. 'மெய்க்கீர்த்திகள்' என்று பெயரிடப்பட்ட இந் நூலில் தமிழ் மன்னர் வரலாற்று இலக்கியங்களாய் விளங்கும் பகுதிகள் மட்டும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந் நூல் முன்னுரை, கல்வெட்டு, மெய்க்கீர்த்தி, மெய்க்கீர்த்தியின் இலக்கணம், மெய்க் கீர்த்தி இலக்கியமா?, கொள்கைகள் என்னும் ஆறுதலைப்புகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளது.

செப்பேடுகள் : தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50 : இந் நூலில் தஞ்சையின் பல்வேறு பகுதிகள், மைசூர், சென்னை, வடகால், தருமபுரம், திருப்பனந்தாள், திருவாரூர், மாயவரம், கோயிலூர், சித்தாய்மூர், ஒன்பத்துவேலி, பாப்பாநாடு, சிங்கவனம், மதுக்கூர் முதலிய பல இடங்களுக்கும் சென்று செப்பேடு பற்றிய பல தகவல்களைச் சேகரித்து 'மராட்டியர் செப்பேடுகள் 50' தொகுக்கப்பட்டுள்ளது. இச் செப்பேடுகள் கி. பி, 1654 முதல் 1886 வரை சுமார் 232 ஆண்டு எல்லைக்குள் பொறிக்கப்பட்டவை. இவற்றை மொழிவாரியாய் முறையே தமிழ்ச் செப்பேடுகள், மராத்திமோடிச் செப்பேடுகள், மராத்திச் செப்பேடுகள் எனப் பிரிக்கலாம். தஞ்சை மராட்டியரின் செப்பேடுகள் அனைத்தும் நீண்ட சதுர வடிவில் ஒரே ஏடாய்ப் பெரிதாய்க் காணப்படுகின்றன. எல்லாச் செப்பேடுகளின் மூலபாடம் கொடுக்கப்பட்டுள்ளது. செப்பெழுத்துகளைப்பற்றிய குறிப்பு விளக்கமும், சொல்லடைவும் இந் நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. கி.பி. 17 ஆம் நூற்றாண்டுமுதல் 19ஆம் நூற்றாண்டு வரையிலாய தஞ்சைச் சீமையின் வரலாறு, சமூகநிலை, அரசியல் உறவு, மொழிநிலை, பொருள்நிலை, மதநிலை முதலாயின இச் செப்பேடுகள் வாயிலாய்த் தெளிவுபெறுகின்றன.

இங்ஙனம் கல்வெட்டுகள், செப்பேடுகளை ஆய்வதால் வரலாற்றுத் துறையில் பல புதுத்தெளிவுகள் வெளிவருகின்றன. முன்னர்ச் சான்றுகள் கிடைக்காமையால் உண்டாய அறிவெல்லையின் இடையீடுகள் இவற்றால் நிரப்பப்பட்டுள்ளன.

இந்தியக் கோவில் கட்டடக்கலை வரலாறு : 'இந்தியக் கோவில் கட்டடக்கலை வரலாறு' எனும் நூல் இக் கலையின்

தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை வரலாற்றுக் காலத் தொடக்கம்முதல் அக் கலையின் முழுவளர்ச்சிக் காலம்வரை ஏற்பட்ட மாற்றங்களொடு விளக்குகிறது. இந் நூல் இந்தியக் கோயில்களைப்பற்றிப் பொதுவாயும், தமிழ்க் கோயில்களுள் கலை யடிப்படையில் முக்கியமானவற்றைச் சிறிது விளக்கமாயும் கூற முற்படுகிறது. இந்தியக் கோவில் கட்டடக் கலையின் பல்வேறு நுட்பங்களைப் புலப்படுத்துவதொடு மட்டுமல்லாது அவற்றை வரலாற்றுப் போக்கிலும் இந் நூல் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

முன்னுரையில், மனிதன் பரிணாம வளர்ச்சிக்கு விஞ்ஞானமும், மெய்ஞானமும் இருகண்கள் போன்றவை; 'மெய்ஞானத்தின் விளைவு இறைபற்று; இறைபற்றினால் எதனையும் சாதிக்க முடியும்' என்ற நம்பிக்கை; இந் நம்பிக்கையின் விளைவாய், ஆதாரமாய் அமையும் குறியீடுகள் கோயில்கள், சிலைகள் இயந்திரங்கள் போன்றவை என்னும் கருத்துகள் விளக்கப்படுகின்றன.

உலக வரலாற்றில் சில நாடுகளுக்கே தொன்மையாய கட்டடக்கலை வரலாறு உண்டு. இவற்றுள் இந்திய நாடு பெருமை கொள்ளத்தக்க பல கட்டடங்களின் எச்சங்களைச் சிந்து சமவெளி நாகரிகம் தொட்டே (கி.மு. 3000) பெற்றுள்ளது.

கி, மு. 1500 இல் இந்திய வரலாற்றில் வேதகால ஆரியரின் கட்டடக்கலை காடுகளில் கட்டப்பட்ட குடிசைகளில் தொடங்குகிறது. இவர்களுடைய மரக் கட்டடங்களின் எச்சங்கள் ஏதும் கிடைக்காவிடினும் அவற்றைப்பற்றிய வருணனைகள் வேதப் பாடல்களிலே காணலாம்.

ஆரியர் வருகைக்கும், புத்தரது காலத்திற்கும் இடைப்பட்ட காலத்திற் கட்டடங்கள் மரங்களாலும், களிமண், செங்கற்களாலும் கட்டப்பட்டன. இவை காலத்தால் அழிந்துபோயின. அந் நாளில் நிலையாய கோயில்களையும் விக்கிரகங்களையும்விட அவ்வப்போது புதிதாய் உருவாகும் கோயில்கள், விக்கிரகங்களையே வழிபாட்டிற்கு மக்கள் ஏற்கும் மரபு இருந்திருக்கிறது.

'நிலையாய கற்கோயில்கள் கட்டும் பழக்கம் வட இந்தியாவில் பௌத்தர்களால் மௌரியர் காலத்தில் உருவாகியது' எனலாம். மரத்திலிருந்து கல்லிற்குத் தாவிய மாற்றத்திற்குக் கிரேக்கப் பாரசீகத் தொடர்பும் ஒருகாரணமாகலாம். இந்து மதத்திற்கு இக் கல் மரபினை வடக்கே குப்தர்களும், தெற்கே

மேலைச் சாளுக்கியரும், பின்னர்ப் பல்லவரும், சோழரும், பாண்டியரும் அறிமுகப்படுத்தினர்.

கருவறைக்கு மேலே ஏற்பட்ட செங்குத்தான வளர்ச்சியே இந்தியக் கோயில்களின் சிறப்பாய அம்சம். இதன் அடிப்படையில் இந்தியக் கோயில்களை இருபெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். 1. வெளிப்புறம் வளைந்த 'ரேகாதியோல்' எனப்படும் சிகரத்தைக் கொண்ட வட இந்தியப் பாணி, 2. அடுக்கடுக்காய விமானம் எனப்படும் திராவிடப் பாணி.

ஒரு கோயிலின் அமைப்பில் அஃது அமைந்த இடத்தின் தட்ப வெப்ப நிலைகட்கும் பங்குண்டு. வெப்பம் மிகுதியாய தமிழகத்தில் கோயிலைச் சுற்றி, பிரகாரங்கள் அமைப்பதனால் நல்ல காற்றோட்டம் உண்டாகிறது. இதே காரணத்திற்காக, கோயிலைச் சுற்றித் தோட்டங்களும், தெப்பக் குளமும் அமைக்கப்படுகின்றன. அதிக மழை பெறும் கேரளத்தில் கோயிற் கூரைகள் மிகச் சரிவாய் இருக்கும்.

கோயில் அமைப்பு, ஒருமதத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுகிறது. கோயிலில் கருவறை பரம்பொருளின் உறைவிடம். அதன் இருள் நம் அறிவிற்கெட்டாத பரம்பொருளின் தன்மையை உணர்த்துவ தாகும். அது நம் அறிவிற்கு அப்பாற்பட்ட இறை தன்மையைக் குறிக்குமே தவிர, சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் பிரதிபலிப்பு அன்று.

'இந்தியக் கட்டடக் கலை நூல்கள் : இத் தலைப்பில், கட்டடங்களைப்பற்றிய நூல்களை **1. விளக்க நூல், 2. ஆய்வு நூல்** என இருபிரிவுகளாய்ப் பிரித்து, அவை சான்றுகளோடு விளக்கப்பட்டுள்ளன. **'இந்தியக் கட்டடக் கலையின் தொடக்கம்'** பௌத்த ஆசிவகக் குடவரைகள்பற்றி **விவரிக்கிறது.** இந்தியாவில் இன்று நாம் காணும் முழுமையாய நிலையிலுள்ள கட்டடங்களுள் மிகத் தொன்மையானவை அசோகனால் அமைக்கப்பட்ட குடைவரைகளேயாகும். பௌத்தரின் முக்கியமான மூன்று கட்டட அமைப்புகளாய் **1. ஸ்தூபி, 2. சைத்தியம், 3. விஹாரம்** ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. 7ஆம் நூற்றாண்டொடு இந்தியாவில் பௌத்தரின் குடவரைக்கலை முடிவுற்றது எனலாம்.

குடைவரைக் கோயில்களைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் பல்லவரே. அசோகனது காலம் முதல் நிலவிவந்த குடைவரை மரபினைத் தென்னகத்தே புகுத்திய சாளுக்கியருக்கும் பல்லவருக்குமிடையே சில வேறுபாடுகளைக் காணலாம். சாளுக்

பியர் தங்கள் பணிக்காக, மென்மையாய மணற் கற்களைத் தேர்ந்தெடுத்தனர்; ஆதலின், சாளுக்கியரின் குடைவரைகளில் புடைப்புச் சிற்பங்களைச் செதுக்குதல் எளிதாயிற்று. ஆனால் பல்லவர்களோ, மிகக் கடினமான கற்களையே தேர்ந்தெடுத்தனர். குகைக் கோயில்களை அடுத்து, ஒற்றைக்கல் தேர் (cut out temples) அஃதாவது ஒருபாறையின் உள்ளும் புறமும் செதுக்கிக் கட்டப்படும் கோயில் நடைமுறைக்கு வந்தது.

அடுத்துச் செங்கற்களாலும், கருங்கற்களாலும் ஆய கட்டுமானக் கோயில்கள் (Structnral temples) நடைமுறைக்கு வந்தன. முதலாம் பரமேஸ்வரவர்மனால் தமிழகத்தில் முதற் கோயில் கட்டப்பட்டது. இவன் மகன் இராசசிம்மன் மாமல்லைக் கடற் கோயிலையும் காஞ்சிக் கைலாசநாதர் கோயிலையும் கட்டினான். பிற்காலச் சோழர் (985-1070) காலத்தில் இக் கோயிற் பணி மிக்க உயர்நிலையடைந்தது.

'கோயில் இலக்கணம்' என்னும் இயலில், தென்னிந்தியக் கோயில் அமைப்புமுறை, வடஇந்தியக் கோயில் மரபு ஆகியவற்றைச் சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார்.

'கேரளத்துக் கோயில்கள்' என்னுந் தலைப்பில், கேரளத்தின் புகழ்வாய்ந்த கோயில்கள் யாவும் மலை உச்சியிலோ, ஆற்றங் கரையிலோ, கடற்கரையிலோ பெரிதும் கிழக்கு நோக்கியனவாய் அமைந்துள்ளமை கூறப்பட்டுள்ளது. மேலும், கி. பி. 800க்கு முற்பட்ட சைவச் சார்புடைய குடைவரைக் கோயில்கள், 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய கட்டுமானக் கோயில்கள் யாவை என்பதனைக் குறிப்பிட்டுக் கேரளக் கோயில் கட்டட அமைப்பு முறை விவரிக்கப்பட்டுள்ளது.

பௌத்த, இந்து சமயங்கள் வாயிலாய் இந்தியக் கலைகள் தூரக் கிழக்கு நாடுகள் பலவற்றிலும் பரவின. இதனால், இந் நாடுகளைக் 'கடல்கடந்த இந்தியா' என வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர். இந்தியாவுக்கு வெளியே காணப்படும் இந்திய மரபு கட்டடங்கள் அளவில் மிகப் பெரியன. இவற்றுள் இலங்கை, கம்போடியா, சாவகக் கட்டடக் கலைகள் குறிப்பிடத்தக்கன.

இந் நூலின் பின்னிணைப்பில் கோயில் கலைச் சொற்களுக்கு விளக்கந் தரப்படுகிறது. தமிழக விமானவகைகள், சிகரவகைகள், போதிகை, வட இந்திய (ஒரிய) கோயில் அமைப்பு ஆகியவற்றின் வரைபடங்கள் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

பாரதப் பழங்குடிகள்: பண்டைக் காலத்தில் கொள்ளைக் காரர்களும், சிற்றரசர்களும் இந்தியாமீது படையெடுத்தனர்; மக்களைத் துன்புறுத்தி அடக்கினர்; கொன்றனர்; அவர்களுடைய பூமிகளைக் கைப்பற்றியதொடு அவர்களை அடிமைகள்போலவும் நடத்தினர். இக் கொடுமைக்குப் பயந்து கணக்கற்ற குடும்பத்தினர் நாட்டைவிட்டு விலங்குகள் வாழும் காட்டிலும், மலைகளிலும். குடியேறினர்; வேட்டையாடியும், வேளாண்மை செய்தும் வாழ்ந்து வந்தனர். நாட்டுப் பொதுமக்களொடு எந்தவிதத் தொடர்பும் இன்றித் தனித்தே காட்டிலும் மலையிலும் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, விலங்குகள் போன்றவற்றை உண்டு வாழ்ந்தனர். அந் நிலையினர் தற்போது 'பழங்குடி' என்று அழைக்கப்படு கின்றனர்; இவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளின்றிப் பிற்போக்கு நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பழங்குடிகள் இந்திய நாட்டில் இமயம்முதல் குமரிவரை ஆங்காங்கு மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்றனர். இவர் களுள் சுமார் 300 பிரிவினர் உளர்; தமிழ்நாட்டில் நூற்றுக்கு 0.76 பேர்வீதம் பழங்குடியினர். தமிழ்நாட்டில் மட்டும் பழங்குடி கள் என மொத்தம் 42 பிரிவினர் உளர். '**பாரதப் பழங்குடிகள்**' என்னும் இந் நூலில் பன்னிரண்டு பழங்குடிகளைப்பற்றிய வர லாறு, பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு, கலாசாரம், நுண் கலைபற்றிக் கூறப்படுகின்றன; மற்ற முப்பது பழங்குடியினர் யாவர் என்பதன் பட்டியலை ஆசிரியர் இந் நூலின் கடைசியில் சேர்த்துள்ளார். அதில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் இந் நூலாசிரியர் வேங்கடராமன் நேரில் அம் மக்களைப் பார்த்துப் பேசி அறிந்தவை. இந் நூலாசிரியரே எஞ்சியுள்ள முப்பது பழங் குடியினர் வரலாற்றினை எழுத முற்பட்டுள்ளார். அந் நூலும் வெளிவருமாயின் தமிழ்நாட்டுப் பழங்குடியினர் வரலாறு முழு மையாய்க் கிடைக்க வாய்ப்புண்டாகும்.

பிறநாட்டு வரலாறு

அமெரிக்க ஐக்கியநாட்டு வரலாறு: 'அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாறு (1865-1974)' எனும் நூல் மிக எளிய முறையில் மாணவர் நன்கு அறியுமாறு எழுதப்பட்டுள்ளது; புதிய பாடத் திட்டத்தை ஒட்டி வரிசையாயும், தேர்வில் கேட்கப்படும் வினாக் களுக்கு ஏற்ப முறைப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளது.

இந் நூலை, உள்நாட்டுப் போருக்குப்பின் அமெரிக்கா, அமெரிக்காவும் முதல் உலகப் போரும், இருஉலகப் போர்களுக்

கிடையே அமெரிக்கா, அமெரிக்காவும் இரண்டாம் உலகப் போரும், இரண்டாம் உலகப் போருக்குப்பின் அமெரிக்கா என்னும் ஐந்து இயல்களாய்ப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. குடியரசு தலைவர்களின் நிழற் படங்கள் முறையே தொகுத்துள்ள அழகு போற்றுதற்குரியது; அவர்கள் செய்த சீர்திருத்தங்கள், அவர்தம் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. பிற்சேர்க்கையில் **'அமைதிக் காலத்துப் போர்கள்'** என்று தனியே கொடுத்துள்ள முறையும் மாணவர்க்கு மிகவும் பயன்தர வல்லது.

வரலாறு என்னை விடுதலை செய்யும்: இந் நூலின் ஆசிரியர் **ஃபிடல் காஸ்ட்ரோ**. இந் நூல் 'கியூபாவை' கொடுங்கோலாட்சியிலிருந்து மீட்க இராணுவ முகாமின்மீது ஃபிடல் காஸ்ட்ரோ தாக்குதல் செய்தமை; அதில் தோல்வி அடைந்து, சிறையில் அடைக்கப்பட்டமை; சித்திரவதை செய்யப்பட்டமை; நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவர், ஆற்றிய வீர உரை ஆகியவற்றைக் கூறுகிறது. இவ் வுரை அன்றைய கியூபாவின் பொருளாதார, அரசியல் நிலைமைகளை விவரிக்கிறது; அஃது இன்றளவும் வரலாற்றில் நிலைத்திருக்கிறது; கியூபாவில் சோஷலிசப் புரட்சிக்குரிய தத்துவ அடிப்படையிலான திட்டத்தை உருவாக்கும் முன்னோடியாய்த் திகழ்ந்தமையே அதற்குக் காரணமாகும்.

ஃபிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டதுபோல், இவ் வுரை, மான்கடா படைத்தளத்தின்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், அந் நேரத்தில் புரட்சியின் வெற்றியைக் குறிக்கவில்லை. எனினும், அவருக் கெதிராய்த் தண்டனை வழங்கக் கோரியவர்களை அஃது அம்பலப்படுத்தியது. புரட்சிகர சக்திகளுக்கிடையே ஒற்றுமையை உருவாக்கியது; அவர்களுக்குத் திசை வழிகாட்டியது; வெற்றியின் மீதாய நம்பிக்கையை அவரிடையே தோற்றுவித்தது. அக் காலத் தேவைகளுக்கேற்ற தத்துவம் அவ் வுரையில் அடங்கியிருந்தது. கியூபாவின் அன்றைய நிலைமைகளுக்குப் பொருத்தமான திட்டமும் அதில் இருந்தது.

இன்றுகூடப் பல நாடுகளுக்குப் பொருத்தமான அவ்வுரை, பொருளாதாரச் சுதந்திரமும், முழுமையான சிறப்புரிமையும் பெற வேண்டிப் போராடும் நாடுகளுக்கு அரசியல் தத்துவ விளக்கத்தை அளிக்கிறது. அஃது இன்றுள்ள வளரும் நாடுகளின் தேசிய விடுதலைக்கும், சோஷலிசத்துக்குமாய அறிக்கையாகும்; ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கப் போராடும் போர்வீரர்களுக்கு உணர்வூட்டி, உதவி நல்கும் சிந்தனைகள் செறிந்த அழகாய பாடமுமாகும்.

கதை வடிவில் வரலாறு

சரித்திரம் போற்றும் சேரர் கதை: சங்க நூல்களுள் ஒன்றாய 'பதிற்றுப்பத்து' என்னும் நூலில் போற்றப்படும் சேர மன்னர்களுள் முதல்மன்னனாய்ப் புகழப்படும் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், அவன் மகன் இமயவர்மன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் எனும் மூவரின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, திருமணம், ஈடுபட்ட போர்கள், பெற்ற வெற்றிகள், பிற புகழ்கள் எனும் வரலாற்றுக் குறிப்புகளை அடிப்படையாய் எடுத்துக் கொண்டு, அவற்றைக் கதை வடிவில், படிப்பார்க்குச் சலிப் பூட்டாமல் இந் நூலில் புலவர் அரசுமணி கூறியுள்ளார். சுவையாய கதையினைப் படிப்பதுபோல் இருந்தாலும் வரலாற்றுப் பின்னணி பிசகாமல் ஆசிரியர் இதனை எழுதியுள்ள திறன் போற்றுதற் குரியது. இது சிறுவர்முதல் பெரியோர்வரை படிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. வரலாற்றுச் செய்திகளை மக்களிடையே பரவச் செய்ய இது போன்ற கதையமைப்பு முறை சிறந்த வாயிலாகும்.

ஆங்கிலத்தில் தமிழக வரலாற்று நூல் (Tamil Polity): தமிழக வரலாற்றின் இடைக்காலம் எனக் கருதப்படும் ஏழ் நூற்றாண்டுகளில் (கி. பி. 600-1300) நிகழ்ந்த தமிழரின் அரசியல், சமுதாய ஆட்சி அமைப்பு முறைகளை **'Tamil Polity'** என்னும் தலைப்பில், ஒருசிறந்த ஆங்கில நூலாய் டாக்டர் இராசலட்சுமி எழுதியுள்ளார். இஃது ஒருசெறிவாய, தெளிவாய, வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூல். முன்னுரை, அரசியல் அமைப்பு முறை, சமுதாய அமைப்புமுறை, பின்னிணைப்புகள் என இது பகுக்கப்பட்டுள்ளது.

தமிழரின் அரசியல், சமுதாய அமைப்பு முறைகளை விளக்கும் கல்வெட்டுகள், அயல்நாட்டார் குறிப்புகள், தமிழ் இலக்கியங்கள் ஆகியன இந் நூலுக்கு ஆதாரங்களாய்த் திகழ்கின்றன. இடைக்கால அரசியல், சமுதாய நிலைகளை விளக்க அக் காலத்தில் ஆக்கப்பட்ட சிறந்த இலக்கியச் சான்றுகளைப் பயன்படுத்தி எழுதிய முதல்நூல் இதுவாகும்.

'இடைக்காலத் தமிழர் ஆட்சி அமைப்பு' என்னும் பிரிவில் இடைக்காலத் தமிழரின் அரசியல் முறை, சங்க காலத் தமிழரின் ஆட்சி முறைக்கு ஒத்தும் மாறுபட்டும் காணப்படுதல் எடுத்தியம்பப்படுகிறது.

'உள்ளாட்சித்துறை' என்பதனுள் அரசர்களும், திறமை வாய்ந்த நிருவாகத்தினரும் அமைத்த நாட்டின் பிரிவமைப்புகள் குறித்தும், அவ் விடங்களில் பொறுப்பேற்கும் அலுவலர்க்குரிய பணிகள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளன. கிராம ஆட்சியில் தனிக் கவனம் செலுத்தப்பட்டமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'போர்' என்னும் தலைப்பில் கீழ்ப் போர் அறங்கள், போர் எழக் காரணங்கள், போர் அணிவகுப்பு, போர்க் கருவிகள், இயற்கை அரண், கடற்படை, போர் நடத்தும் முறை ஆகியன சுருக்கமாய்ச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

இடைக் காலத்தில் வழக்கிலிருந்த சட்டங்கள், குற்றங்கள் அவற்றிற்குரிய தண்டனைகள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. அக் காலத்தில் வசூலிக்கப்பட்ட பல்வேறு வரிகள், அக் காலத்திய நிதி நிலைமை, நாணயங்கள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

இடைக்காலச் சமுதாயத்தில் பிராமணர் ஓங்கிய நிலைமை, பிராமணர்க்கும் மற்ற வகுப்பார்க்கும் இடையே நடைபெற்ற பூசல்கள், அரசியல் சமுதாய நிகழ்ச்சிகளில் பிராமணர் பெரும் பங்கு வகித்த நிலைமை, அதனால், அவர்களின் பழக்க வழக்கங் கள், நாட்டில் பரவிய நிலைமை தெளிவாய் விளக்கப்பட்டுள் ளன. அக் காலத்து விளங்கிய பொருளாதார நிலை, சமய தத்துவக் கோட்பாடுகள், கல்விநிலை ஒவ்வொன்றும் கற்போர் மனத்தில் பதியுமாறு விளக்கப்பட்டுள்ளது.

நூலின் பின்னிணைப்பில், முதலாவதாய், இடைக் காலத்துத் தோன்றிய நூல்கள், அடுத்து நிகழ்ந்த குறிப்பிடத்தக்க போர் கள், அக் கால அளவைகள் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன.

இடைக் கால அரசின் ஆட்சி அமைப்புமுறை, சமுதாய அமைப்பு முறை என்னும் இரண்டும் ஆசிரியரால் ஆங்கிலத்தில் தெளிவாய நடையில் அழகாய்ச் சுருக்கமாய்க் கருத்துகள் நிறைந்த கட்டுரைகள் வடிவில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுக் குச் சான்றுகளாய்க் கல்வெட்டுச் செய்திகள், இலக்கியச் சான்று கள், வெளிநாட்டார் குறிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. இடைக் காலத் தமிழரின் ஆட்சி அமைப்பு முறையைச் சமுதாய நிலையத் தமிழர்களேயன்றிப் பிற மொழி வல்லுநர்களும் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் இந் நூல் ஆங்கிலத்தில் அமைந்திருப்பது பாராட்டற்குரியது. இதனைப் போன்றே ஒவ்வொரு கால கட்டத்திற்குரிய தமிழரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் ஆங்கில நூல் வடிவில்

அமைக்கப்படுமாயின், அருமை பெருமை வாய்ந்த தமிழரின் வரலாற்றினை உலகினரும் அறிய வாய்ப்புண்டாகும்.

ஊர்ப்பெயர் நூல்கள்

கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்: ஊர்ப்பெயர்கள்பற்றிய ஆய்வினால் சமுதாயம் அடையும் பயன் பெரிது. இதனை உலகினர் அனைவரும் உணர்ந்து செயல்பட்டுவரும் இவ் வேளையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஊர்ப்பெயர்கள்பற்றிய ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ளமை போற்றத்தக்கது. தமிழக ஊர்ப்பெயர்கள் அனைத்தையும் மாவட்ட வாரியாய் ஆய்ந்து வெளியிடும் திட்டத்தின் தொடக்க நிலையாய்க் **'கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்'** என்னும் நூலை **ஆர். ஆளவந்தார்** எழுதியுள்ளார்.

ஊர்ப்பெயரும் கல்வெட்டும், ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறைகள், அவற்றில் காலப்போக்கில் நிகழ்ந்த மாற்றம், ஊர்ப் பெயர்களால் நாம் அறியும் செய்திகள் என்னும் தலைப்புகளில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. இந் நூலின் பின்னிணைப்பும் கல்வெட்டுகளில் காணப்படும் மன்னர் பெயர், காலம், ஊர்ப் பெயர் ஆகியவை எவ்வித மாற்றமும் இன்றி, உள்ளவாறே கொடுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பு இரண்டில் கல்வெட்டிற் காணும் ஊர்பற்றிய பிறசெய்திகளும், மூன்றில் ஊர்ப்பெயர் ஆய்வு செய்வார்க்குப் பயன்படக்கூடிய வகையில் ஊர்ப்பெயர் ஆய்வு தொடர்பாய நூல்கள், கட்டுகள், ஆய்வேடுகள் ஆகியவற்றின் பட்டியலும் தரப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்: 'ஒருபொருளை மற்றொரு பொருளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வழங்கப்பட்ட குறியீடுகளே பெயர்கள்' எனலாம். மொழி, இனம், நாடு இவற்றின் மாறுபாட்டிற்கு ஏற்ப, ஒருகுறிப்பிட்ட பொருள் வேறுவேறு பெயர்கள் பெறுதல் உண்டு. இம் முறையில் ஊர்ப்பெயர்களும் காலம், மொழி, நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப ஒருகுறிப்பிட்ட பொருள் வேறுவேறு பெயர்கள் பெறுதல் உண்டு. இம் முறையில் ஊர்ப்பெர்களும் காலம், மொழி, நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்கள் பெற்றுள்ளமையைக் காணலாம். ஊர்ப்பெயர்களின் உண்மைக் காரணங்களையும் பெற்றுள்ள பல்வேறு மாற்றங்களையும் காணலாம். ஊர்ப் பெயர்களின் உண்மைக் காரணங்களையும் அவற்றின் பல்வேறு மாற்றங்களையும் ஆராய்ந்து ஆய்வாளர் மெய். **சந்திரசேகரன்**, **'தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள்'** என்னும் இந் நூலைச் சிறந்த முறையில் எழுதியுள்ளார்.

முதல் நிலையாய், நூலில் தஞ்சை மாவட்டப் பொதுச் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. அடுத்து வட்டங்களின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. அடுத்து ஊர்ப் பெயர்கள் முடிபுகள் அடிப் படையிலாய ஆய்வும், இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாட்டுக் கதைகள், நாட்டுப் பாடல்கள், கள ஆய்வின்போது வல்லார் வாய்க் கேட்டுணர்ந்த கூற்றுகள் அடிப்படையிலாய ஆய்வும் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக ஊர்ப் பெயர்கள் அகர நிரல், கல்வெட்டுப் பெயருக்குரிய இன்றைய பெயர்கள், சிறப்புக் கூறுகள் பட்டியல், ஊர்ப்பெயர்க் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டில் தமிழ் மொழியில் வெளிவந்துள்ள வரலாற்று நூல்களுள் பெரும்பாலானவை தமிழ்நாட்டைப் பற்றியனவே. அவற்றுள் சில நூல்கள் வரலாறு, தமிழ்இலக்கியம் பயிலும் மாணவர்க்குப் பெரிதும் பயன்படக் கூடியன. தமிழரின் அரசியல்' சமுதாய அமைப்பு முறைகளைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள 'Temil Polity' என்னும் ஒருநூலும் இவ் வாண்டு வெளிவந்துள்ளது. தமிழரின் வரலாற்றுக் காலகட்டங் களை விளக்கும் நூல்கள் பல ஆங்கில மொழியில் வெளிவரு மாயின், தமிழரின் வரலாறும் பண்பாடும், உலகளவில் ஒளிவீசித் திகழ அவை பெரிதும் துணை புரியும். தமிழ்நாட்டுக்கு நல்ல தொரு வரலாற்று நூல் இல்லை; 'தமிழ் நாட்டு மக்களுக்குத் தம் வரலாற்றினைப் பண்பாட்டினைப் போற்றும் உணர்வு இல்லை' என்னும் நிலை மாறும்; தமிழ் நாட்டின் சிறப்புப் பண்டைக் காலத்தில் எவ்வாறு இருந்தது? என்பதனை உணர்த்த இயலும்; தமிழ்நாட்டின் வரலாற்றினையும் பிறர்க்குத் தக்க சான்று களுடன் காட்ட இத் தகைய வரலாற்று நூல்கள் மேன்மேலும் வெளிவரல் வேண்டும். அது தமிழ்நாடு. மொழி, இலக்கியங்கள் உலகெங்கும் பரவத்தக்க வழியாய் அமையும்.

1983 இல் வரலாற்று நூல்கள்

1. **அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாறு** (1965-1974), டாக்டர் சுவாமிநாதன், தீபா பதிப்பகம், சென்னை-28
2. **இந்தியக் கோவில் கட்டடக் கலை வரலாறு**, டாக்டர் ஆர். வெங்கட்ராமன், Heritage of Tamil Series. No. 2
3. **கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள்**, ஆர். ஆளவந்தார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

4. **சரித்திரம் போற்றும் சேரர் கதை,** *புலவர் அரசுமணி, இலக்குமி நிலையம், சென்னை*

5. **தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50,** *செ. இராசு, தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்*

6. **தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள்,** *மெய். சந்திரசேகரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை*

7. **தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டு வரலாறு,** *டாக்டர் ஏ. சுவாமிநாதன், தீபா பதிப்பகம், சென்னை*

8. **தமிழ்நாட்டு வரலாறு** *(சங்ககாலம்-வாழ்வியல்), தமிழ் நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டரசு வெளியீடு, சென்னை*

9. **தமிழ் நாட்டு வரலாறும் பண்பாடும்,** *ந. க. மங்கள முருகேசன், கூடல் பதிப்பகம், மதுரை*

10. **பாரதப் பழங்குடிகள்,** *எஸ், ஆர். வேங்கடராமன், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை*

11. **மெய்க்கீர்த்திகள்,** *பூ. சுப்பிரமணியம், உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், சென்னை*

12. **வரலாறு என்னை விடுதலை செய்யும்,** *ஃபிடல் காஸ்ட்ரோ, தமிழாக்கம்: வி.பி. கணேசன், சென்னைப் புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை*

13. **TAMIL POLITY**, (C.A.D. 600-C. A. D. 1300), Dr. R. Rajalakshmi, N. S. Ennes Publication, Madurai

பல்கலைக் கழகங்களில் தமிழ்

தே. ஆல்பர்ட்

தமிழகத்துக்கு வெளியே. சுமார் 20 இந்தியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்க வாய்ப்புள்ளது. சான்றிதழ், கல்விச் சான்றிதழ், இளங்கலை, பொதுப்பாடம் அல்லது தனிப்பாடம் என்ற வகையில் இவை அமைந்துள்ளன. அலகாபாது, அலிகார், இலக்னோ பல்கலைக் கழகங்களில் இப் பல வாய்ப்பும் அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கது. முதுகலை, முதறிஞர் (எம். ஃபில். ஆராய்ச்சிக் கல்விக்கு உஸ்மானியா, கேரளம், தில்லி, திருவேங்கடவன் பல்கலைக்கழகங்கள் இடந்தருகின்றன. கல்கத்தாப் பல்கலைக் கழகம் ஆய்விற்கு இடம்அளிக்கிறது. தமிழகப் பல்கலைக் கழகங்களும், அவற்றின் (சில) அஞ்சல் வழி நிறுவனங்களும், இள, முதுகலைப் பாடங்கட்குத் தமிழைப் புகட்டு மொழியாய்க் கொண்டுள்ளன.

இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பு வெளியிட்டு வரும் நூல்[1] கொடுக்கும் முழுப்புள்ளிவிவரப் பட்டியலைப் பார்த்தால், 1983இல் இந்தியப் பல்கலைக் கழகங்களில், மன நிறைவு கொள்ளும் அளவிற்குத் தமிழ்ப் பாடத் திட்டங்களிலும் பயிற்சியிலும் பெரும்வளர்ச்சி காணப்படுவதாய்க் கூறவியலாது. 'இதற்குமுன் நடந்து கொண்டிருந்த பணிகள் தொடர்ந்து நடக்கின்றன' என்று எண்ணி மனநிறைவு அடைய வேண்டியுள்ளது. ஆயினும், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் ஆட்சி நிலப்பரப்பிற்கு வெளியிலும்கூட, ஏறத்தாழ 20 பல்கலைக் கழகங்களில் 'தமிழ் கற்றலும், பன்மொழி ஆராய்ச்சி நிலையில் தமிழ் பெற்றுவரும் பங்கும் பெருகிவருகின்றன' என்பதனைக்

---

1. **பல்கலைக் கழகங்களின் கையேடு 1983-84** (புது டில்லி) இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பு, 1984.

காணும் பொழுது ஓரளவு பெருமைப்பட்டுத்தான் ஆக வேண்டும். இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பு நூல் 81-82ஐ, நூல் 88-84 ஒப்பிட்டுப் பார்த்தால் இது புலனாகும்.

ஆராய்ச்சி நிறுவனங்கள் : 'தமிழிற்குக் கிடைத்த உயர்விற்குக் காரணம், பல்கலைக் கழகங்களின் பணிமட்டுமே' என்று சொல்லிவிட முடியாது'. தமிழ் நாட்டிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களும் வேறு மாநிலமாகிய மைசூரிலுள்ள இந்திய மொழி மைய நிறுவனம், லக்னோவிலுள்ள தென்னிந்திய மொழிக் கல்வி நிறுவனம் போன்றனவும், தம் பங்கினை ஆற்றியுள்ளன' எனக் கூற வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் : கீழ்வரும் பட்டியல் பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ்க் கல்விக்குக் கிடைக்கும் வாய்ப்பினைமட்டும் காட்டுகிறது.

எண்	பல்கலைக் கழகம்	சான்றிதழ்[1]	கல்விச் சான்றிதழ்	இளங்கலை[2] பொதுப் பாடம்	தனிப் பாடம்
1.	அலகாபாது[3]	உண்டு	உண்டு	இல்லை	இல்லை
2.	அலிகார்	,,	,,	உண்டு	உண்டு
3.	ஆக்கிரா	,,	,,	,,	இல்லை
4.	ஆந்திரா	,,	இல்லை	,,	,,

1. சான்றிதழ், கல்விச் சான்றிதழ்ப் படிப்புத் தமிழ் புதிதாய்க் கற்போருக்கும், பொதுப்பாடம், தனிப்பாடம் தமிழ் தெரிந்து, பள்ளி நிலையில் தமிழ் கற்றுக் கல்லூரி நிலைக்கு வந்திருப்போருக்கும் என இருவகையாய் அமைக்கப்பட்டுள்ளன.

2. சில பல்கலைக் கழகங்கள், பாடங்களை இரண்டு பாகங்களாய்ப் பிரித்து, முதற்பாகத்தில் ஆங்கிலம், அதனொடு ஓர் இந்திய அல்லது ஐரோப்பிய மொழி என்றும், வேறு சில பாடங்களை மூன்றாகப் பிரித்து, முதலிரண்டில் ஒன்று ஆங்கிலம் ஏனையது மற்றொருமொழி என்றும் அமைந்திருக்கின்றன. இது பொதுப்பாடம் என்றும், தனிப்பாடம் என்றும் இருவகையாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்னையதில் இரண்டாம் பாகத்திலும் பின்னையதில் மூன்றாம் பாகத்திலும் பிற கலை, அறிவியல் பாடங்களைப்போல் அமைவது தனிப்பாடம் என்றும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1	2	3	4	5	6
5.	உசுமானியா	உண்டு	உண்டு	உண்டு	உண்டு
6.	உத்கல் (ஒரிசா)	இல்லை	இல்லை	,,	,,
7.	கல்கத்தா	,,	,,	,,	,,
8.	கோழிக்கோடு	,,	,,	,,	இல்லை
9.	கேரளா	,,	,,	,,	உண்டு
10.	கெளகாத்தி	உண்டு	,,	இல்லை	இல்லை
11.	சர்தார் பட்டேல்	,,	,,	,,	,,
12.	தில்லி	இல்லை	,,	உண்டு	உண்டு
13.	திரு கிருட்டின தேவராயர்	உண்டு	,,	இல்லை	இல்லை
14.	பஞ்சாப்பு	இல்லை	உண்டு	உண்டு	உண்டு
15.	பனாரசு	உண்டு	,,	இல்லை	இல்லை
16.	பங்களூர்	இல்லை	இல்லை	உண்டு	உண்டு
17.	இலக்னோ	உண்டு	உண்டு	,,	,,
18.	நாகார்ச்சுனா	இல்லை	இல்லை	,,	,,
19,	மகதா	,,	,,	,,	,,
20.	மைசூர்	,,	,,	,,	,,

முதுகலை மூதறிஞர் ஆராய்ச்சி பிற : தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலும், உஸ்மானியா, கேரளம், தில்லி, திருவேங்கடவன் பல்கலைக் கழகங்களிலும், தமிழ் முதுகலைப்

3. இப் பல்கலைக் கழகம் தவிர வேறு இடங்களில் சான்றிதழ் படிப்பு ஓராண்டுஎன்றும், கல்விச் சான்றிதழ் பொதுவாக ஈராண்டு என்றும் அமைந்துள்ளன. இங்கு முதல்நிலைச் சான்றிதழ்க் கல்வி இரண்டாண்டள வாகும்.

படிப்பிற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தவிர, கல்கத்தாப் பல் கலைக் கழகத்தில் ஆராய்ச்சி வசதியும் உள்ளது. ஆசிரியர் தங்கள் தகுதியைப் பெருக்கிக்கொள்ள நல்ல வாய்ப்பளிக்கும் நிலையில் அமைந்திருக்கும் மூதறிஞர் பட்டப்படிப்பும் போற்றுதற்குரியது. அதனொடு, அண்ணாமலை, சென்னை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகங்கள் நடத்திவரும் அஞ்சல்வழிக் கல்வியும் குறிப்பிடத்தக்கன. அண்ணாமலையில் தமிழிசைக்கென அமைந் திருக்கும் ஓராண்டுச் சான்றிதழ்ப் படிப்பும், பேச்சுத் தமிழ்ப் பயிற்சிக்காய படிப்பும், சென்னையில் கிடைக்கும் நாட்டுப்புற இலக்கியப் பாடமும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ், தமிழ்ப் பண்பாட்டு அமைப்புகளும் பொதுவாய பாடத் திட்டங் களிலிருந்து வேறுபட்டிருப்பதால் இவை குறிப்பிடத்தக்கன.

புகட்டுமொழியும் தேர்வுமொழியும் : கலை, அறிவியல், வணிகம் இவற்றில் இளங்கலை, முதுகலை நிலைகளில் தமிழைப் புகட்டுமொழியாய்ப் பயன்படுத்தி வருகின்றது. பாரதியார் பல்கலைக் கழகம். சென்னை கலை, அறிவியல், வணிகம், கல்வி இவற்றில் தமிழைப் புகட்டு மொழியாக்கிப் பயன்படுத்த அநுமதி அளிக்கிறது. மதுரைக் காமராசர் ஆங்கிலத்தொடு தமிழையும் பயன்படுத்திவருகிறது. அண்ணாமலையில் இளங்கலைச் சட்டப் படிப்பிலும் பாரதியாரின் முதுகலைப் படிப்பிலும் கற்போர் தமிழில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் : தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை இங்குத் தனியாய்க் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 83இல்மட்டும் கண்ட வளர்ச்சியை விரித்துக் கூறாமல், அப் பல்கலைக் கழகத்தின் பொதுஅமைப்பினைமட்டும் குறிப்பிடு வோம். இப் பல்கலைக்கழகம் ஐந்து நிலைகளில் பதினேழ் துறை கள் இயங்குகின்றன.

கலை, சுவடி இயல், தமிழ் வளர்ச்சி, அறிவியல், மொழி எனும் நிலைகளில் குறிப்பிடத்தக்கன சிற்பம், ஓவியம், இசை, வண்ணம் தீட்டல், அச்சுக்கலை, கல்வெட்டு, வெளிநாட்டா ருக்குத் தமிழ் கற்பித்தல், மொழி பெயர்ப்பு, பதிவியல், சித்த மருத்துவம், பழங்கால அறிவியல், தொழில்துறை, பதிவு ஏடு பாதுகாத்தல், சித்தாந்தம், இலக்கணம், இலக்கியம், மொழி யியல் என்பன.

'தமிழிற்கென்று நிறுவப்பட்ட பல்கலைக் கழகத்தில் திற னாய்விற்கென்று தனிப்புலம் என்னும் நிலையிலோ, துறை

என்னும் நிலையிலோ ஆக்கம் பெருக வேண்டும்' என எல்லாரும், குறிப்பாய் மேற்கு நாடுகளில் திறனாய்வு ஒருபயனுள்ள தனி அறிவியல் துறையாய் வளர்ந்திருத்தலை உணர்ந்திருப்பவர் ஒத்துக்கொள்வர். இது மொழி ஆய்வினையும் இலக்கிய ஆய்வினை நெருங்கி வரச் செய்து தமிழிற்கு மேலும் சிறப்புச் செய்யும் என்பது திண்ணம். வியத்தகு இலக்கியச் செல்வத்தைக் கொண்ட தமிழ் உயர்ந்த திறனாய்வு கொள்கையாலும், திறனாய்வு முறை யாலும் வளர்ந்தோங்கும் என்பதில் ஐயமில்லை. இவை ஒன்றனை யொன்று ஊட்டி வளர்க்கும். மேலும், இப் பல்கலைக் கழகம் அவ்வப்போது ஊக்குவித்துவரும் குறுகிய காலத் தமிழ் ஆய்வு திட்டங்கள் பெரிதும் பயனுள்ளதாய் அமைகின்றன. வேறு கல்லூரிகளிற் பணியாற்றும் ஆசிரியர், அறிஞர் திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் இத் திட்டம் நல்லதொரு முயற்சி யாகும்.

தன்னாட்சிக் கல்லூரிகள் : பாடத்திட்டம், கற்பிக்கும் முறை, தேர்வு இவற்றில் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள், தமிழ் பயிற்றும் வாய்ப்புப் பெற்றவை தமிழ்நாட்டில் 12 உள்ளன. புதியன படைக்க வாய்ப்பிருந்தும் எதிர்பார்க்கும் அளவிற்கு இம் மூன்று நிலைகளிலும் பெரும்மாற்றங்கள் இங்கே புகுத்தப்பட வில்லை என்றே சொல்ல வேண்டும். பெரும்பாலும் தன்னாட்சி பெறுதற்கு முன்பு பல்கலைக் கழகங்களிலிருந்த அதே முறை யையே பெரும்பாலான கல்லூரிகள் பின்பற்றுகின்றன. சில, அண்மையில் பல்கலைக் கழகக் கல்லூரிகளில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டனவோ அவற்றைமட்டும் புகுத்தியுள்ளன.

இக் கல்லூரிகள் அனைத்திலுமுள்ள தமிழ்ப்பாடத் திட்டங் களை இங்கே எடுத்துரைத்தல் முடியாது என்பதனால் மூன்று கல்லூரிகளின் இளங்கலைத் திட்டங்கள்மட்டும் இங்கே ஒன் றாய் இணைத்துக் காட்டப்படுகின்றன. தனிப்பாடத் திட்டமும் இங்கே காட்டப்பட்டுள்ளது. பொதுப் பாடத் திட்டத்தின் ஆக்க மாய மாற்றம் இன்னும் வரவில்லை என்றே தோன்றுகிறது.

இளங்கலை - தமிழ்ப்பாட வகுப்பு
தமிழியற் பாடத் திட்டச் சுருக்கம்

முதற் பருவம் :

தாள் 1 — உரை நடை

தாள் 2 — தமிழக வரலாறும் பண்பாடும்

இரண்டாம் பருவம் :

தாள் 3 — இதழியலின் அடிப்படைக் கூறுகள்
தாள் 4 — செய்யுள்-1

மூன்றாம் பருவம் :

தாள் 5— இதழியல்-நாளிதழுக்குச் செய்தி எழுதுதல்
தாள் 6— இலக்கணம்-1

நான்காம் பருவம் :

தாள் 7—செய்யுள்-2
தாள் 8—இதழியல்-செய்திகளைத் திருத்தியமைத்தல், தலைப்பு வரைதல்.

ஐந்தாம் பருவம் :

தாள் 9 — பேச்சுக்கலை
தாள் 10 — இலக்கணம்-2
தாள் 11 — மொழிபெயர்ப்பியல்
தாள் 12 — கவிதை, சிறுகதை, புதினம், படைப்பியல்

ஆறாம் பருவம் :

தாள் 13 — இலக்கியத் திறனாய்வு
தாள் 14 — மொழி வரலாறு, மொழியியல்
தாள் 15 — நாடக ஆக்கவியல், நடிப்பியல்
தாள் 16 — கல்வெட்டும் பயணவியலும், திட்டக் கட்டுரை யாக்கப்பணி.

கற்பிக்கும் முறையில் புதியன புகுத்த முடியாமல் கடந்த ஆறு ஆண்டுகளாய் இக் கல்லூரிகள் துன்பப்படுதற்குச் சில காரணங்களையும் கண்டுணர முடிகிறது. அக் கல்லூரி ஆசிரியர்களுடன் கலந்துரையாடியதில் கீழ்க் காணும் முடிவிற்கு வரமுடிகிறது.

1. ‘வேலைச்சுமை பெருகுமே’ என்னும் அச்சம்.

2. புதுத் திட்டங்களைப் புகுத்தும் பொழுது எழும் பணச் செலவினைச் சமாளிக்க வழிகாணாமை.

3. தனிப்பட்ட பகைமையினால் ஆசிரியர் ஒருமித்த கருத்திற்கு வரமுடியாமை.

4. ஆசிரியருக்குப் போதிய பயிற்சி இல்லாமை.

5. பழமையான தேர்வு முறைகளைத் திருத்த வழி தெரியாது மயங்குதல்; 'பழய தேர்வு முறைக்குப் பழய கற்பிக்கும் முறையே போதுமானது' என இருத்தல்.

கற்றலும் பாடத் திட்டமும் : அடிப்படையில், அறிஞர் கருத்துப்படி கற்றல் என்பது ஏட்டிலுள்ளதை மனத்தில் நிறுத்தித் திரும்பச் சொல்லுதல் மட்டுமன்று;[2] இதுதான் முதற்படி; இதற்கு மேலே கண்டுணர்தல், அறிவினை ஆக்கத்தில் புகுத்துதல், பகுத்தல், ஒருங்கமைத்தல் மதிப்பிடுதல் ஆக இஃது ஆறு வகைப்படும். பாடத் திட்டத்திலும், கற்பிக்கும் முறையிலும், தேர்விலும் இவ் வறுவகை ஆற்றலையும் வளர்க்கும் முகமாய்ப் பல்கலைக் கழகங்களோ, தன்னாட்சிக் கல்லூரிகளோ முனைவதாய்த் தெரியவில்லை. இந்தப் பரந்த அடிப்படையில் கற்றல் என்றால் என்ன? என்று உணர்ந்து செயல்பட வேண்டும். ஆயினும், இக் கல்லூரிப் பாடத் திட்டங்களில் இதழியல், படைப்பியல், நடிப்பியல், பேச்சுக்கலை இவற்றைப் புகுத்தியிருப்பது மனநிறைவு அளிக்கிறது.

பாடத்திட்டம் என்பது படிக்க வேண்டிய நூல்களின் ஒரு பட்டியல்மட்டும் அன்று; நூல்கள் கருவிகளே; கற்றல்தான் குறிக்கோள். ஆகவே, பாடத் திட்டம் முதலில் இந்தத் திட்டத்தின் குறிக்கோள்களைத் தெளிவாய் வரைமுறை செய்து, அக் குறிக்கோள்களை அடைதலில் எந்த அளவிற்கு எத்தனை விழுக்காடு வெற்றிபெற முயலலாம் என்பதனைக் கூறியிருக்க வேண்டும்; 'தேர்வு முறை என்றால் என்ன?' என்பதனைத் தெளிவாய் விளக்கியிருக்க வேண்டும். நம் எண்ணங்களையும் ஆவலையும் காட்டும் பதிவேடாய் அது விரிவாய் அமைய வேண்டும். 1983 லும் கூட, நம் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்கள் திட்டங்களாய் அமையாமல், நூற்பட்டியலாய்மட்டும் அமைந்துள்ளமை வருந்தத்தக்கது. குறிப்பிட்ட நூலை ஆதாரமாய்க் கொண்டு மேற்குறித்த ஆறு நோக்கங்களையும் அடையும் வழிகாட்டியாய்ப் படைப்புக் கல்விக்குத் துணைப் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்படல் வேண்டும்.

'ஒருமொழியை அல்லது இலக்கியத்தைக் கற்றுக்கொள்ளும் பொழுது அதற்காய பாடத் திட்டத்தில் அதனைக் கற்றலின்

---

2. பெஞ்சமின் ச. புளூமும் பிறரும், **கல்விக் குறிக்கோளின் தர அமைப்பு, கையேடு-1 அறிதல் பிரிவு** (நியூயார்க்: டேவிட் மெக்கே குழு, பதிவு, 1956).

நோக்கம் யாது? என்பதனைக் குறிப்பிடாமல், எத்திறமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தால் இவ் வேடுகளைப் படிக்க வேண்டும்?' என்பதனைக் குறிப்பிடாமல், படிக்க வேண்டிய நூற் பட்டியலைமட்டும் குறிப்பதனால் ஏற்படும் இடர்ப்பாடுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். 'நூலைப் படித்து, அதிற்கூறப்பட்ட செய்திகளை மனத்தில் வைத்துத் தேர்வில் அதனைக் கொட்டு தல்' என்னும் தீய பழக்கம் இதனால்தான் வருகிறது. கற்றலின் நோக்கத்தை விரித்துக் கூறுதலே பாடத் திட்டத்தின் நோக்க மாகும்.

இன்னல்கள்: கற்போர் எண்ணிக்கை : 1983இல் பல்கலைக் கழக மட்டத்தில் நம்மை எதிர்நோக்கி நிற்கும் இன்னல்கள் யாவை? முதலாவது முதுகலை இலக்கியம், இளங்கலைத் தனிப் பாட இலக்கியம். இவற்றில் சேர்ந்து பயிலும் மாணவர் எண் ணிக்கை குறைவாய் இருத்தல், இதுமேலும் குறைந்து கொண்டே வருதல். 'தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் முதுகலைத் தமிழ்வகுப்பில் ஒருமாணவர்தான் இருக்கிறார்' என்பது வருந்தத் தக்கது. 'ஆங்கில இலக்கியப் பயிற்சிக்கு வரும் மாணவர் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே போகிறது' என்பதனை யும் மறந்துவிடக் கூடாது. 'தமிழ் இலக்கியம்மட்டுமே எமக்கு வேண்டா' என்று அவர்கள் சொல்லவில்லை. தமிழ்நாட்டிலுள்ள ஒருகல்லூரியில் முதுகலை ஆங்கிலத்தில் மூன்றுபேர்மட்டும் உள்ளனர். வேறொரு கல்லூரியில் ஆங்கிலத் தனிப் பாடப் பிரிவை விரும்பிக் கேட்டவர் பத்துப் பேரே. அதே கல்லூரியில் இந் நிலையில் தமிழை நாடி வந்தவர் ஒன்பது பேர். இதற்கும் குறைவாய மாணவர்களோடு கல்லூரிகளும் பல்கலைக் கழகங் களும் நடந்துவருகின்றன. 'கலைப் பாடங்களைக் கற்போர் எண் ணிக்கை படிப்படியாய்க் குறைந்துவருகிறது' என்பதனையும் நினைவிற் கொள்ளல் வேண்டும். 1977-78இல் மொத்த மாணவர் தொகையில் 44 விழுக்காடாய் இருந்தது; 82-83 இல் 40ஆய்க் குறைந்தது. இக்கணிப்பு நான்கு சதமாய்ப் பெருகிவந்த வணிகவியல் கற்போர் தொகையையும் உள்ளிட்டது.[3] 'குறைந்த எண்ணிக்கை நிறைந்த கல்விக்கு வழிவகுக்கு,மென்று நாடி வருபவரின் எண்ணிக்கை குறைந்து வருதல் கவலை யளிக்கக் கூடியதே. 'தமிழில் பட்டம் பெற்றவர்க்கு வேலை வாய்ப்புக்

---

3. **பல்கலைக் கழக மானியக்குழு 1983-84 ஆண்டிற்காய அறிக்கை** (புது டெல்லி; பல்கலைக் கழக மானியக்குழு, ஆண்டு இல்லை), ப. 7.

சேர்த்துப் பார்க்க: அவ்வாறே, 81-82 அறிக்கை, ப. 3

குறைவு' என்று கருதப்படுகிறது. ஆயினும், 'கலைஞர்க்கும், பேச்சாளர்க்கும், எழுத்தாளர்க்கும் நம்மவரிடையே இருக்கும் செல்வாக்கினையும் முதன்மையினையும் பார்க்கும்பொழுது கற்க வருவார் ஏன் தயங்குகின்றர்?' என்னும் ஐயம் எழுகிறது. நம் பாடத் திட்டம், பயிற்சிமுறை' நோக்கம் இவை, பெருமைதரும் இவ் வாய்வு நிலைகளுக்கு இளஞர்களைப் பண்படுத்துவதாய் அமையவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. ஆகவே, வாழ்க்கைக்குப் பயன்படும் முறையில் இதழியல், படைப்பியல், பேச்சுக் கலை, நடிப்பியல் இவற்றைத் தமிழ்மொழி இலக்கியம் இவற்றின் அடிப்படையிற் பாடத் திட்டங்களிற் புகுத்த வேண்டும்.

இலக்கியத்தைப் போற்றுதல், உருவாக்குதல் ஓர்அரிய கலை; இக் கலை, நான்கு சுவர் சூழ்ந்த அறையில் அடைபட்டுக் கிடப்பதன்று. 'திரைப்படக் கலையும், இதழ் ஆக்கக் கலையும், பேச்சுக் கலையும் பெருகி வரும்பொழுது கலை வளர வேண்டிய இடம், விரிந்து பரந்த காட்சி அரங்குகள், இசை அரங்குகள், கல்லூரி அறைகளல்ல' என்னும் எண்ணம் தம்மையும் அறியாமலேயே'கற்போர் உள்ளத்தில் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஆதலின், கற்பதைப் படைப்புக் கலையாய் ஆக்கம் செய்தால் தமிழும் வளரும்; 'அது வாழ்க்கைக்கும் பயன்படும். குறைந்த ஆசிரியர் துணையுடன் தாமே இலக்கியத்தைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு மாணவர்க்கும் பெருக வேண்டும். இஃது அவர்களது ஈடுபாட்டைப் பெருக்கும்.

பரிந்துரை : பல்கலைக் கழக மானியக் குழு அமைத்த வல்லுநர் குழுவின் பரிந்துரை இதற்காய, செம்மையாய வழியினைக் காட்டுகிறது. அதன் பரிந்துரை[4], 'இந்திய மொழிகள் ஆற்றக் கூடிய பெரும்பணியை வலியுறுத்தி, மொழியைக் கற்றுக் கொள்வதிலும் கற்பிப்பதிலும் புதுமுறைகள் புக வேண்டும்' என்றும், 'மொழியை ஏன் கற்கிறோம்? என்னும் எண்ணத்திலேயே ஒருமாற்றம் வேண்டும்' என்றும் கேட்டுக்கொள்கிறது; 'மொழிப் பாடத் திட்டங்களை மாற்றியமைத்துக் கற்றதனை ஆக்கத்தில் செலுத்தும் பயிற்சி பெருக வேண்டும்' என்று வலியுறுத்துகிறது; இதழியல், மொழி பெயர்ப்பு, புத்தக வெளியீட்டு இயல், அகராதியியல், அச்சுக்கலை, விளம்பரக் கலை, சுருக்கி வரைதல்

---

4. **பல்கலைக் கழக மானியக் குழு 1983-84 ஆண்டிற்காய அறிக்கை** (புது டெல்லி; பல்கலைக் கழக மானியக் குழு, ஆண்டு இல்லை), ப. 17.

போன்றவை பாடத் திட்டத்திற் புகுத்தப்பட வேண்டும்' என்று கருதுகிறது; 'இவை மொழி அறிவினை நடைமுறைக்குக் கொண்டுவரும் திட்டங்களாய் அமைய வேண்டும்' என்கிறது; 'நம் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இப் பரிந்துரைகளைச் செயலளவில் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று கூற முடியாது. ஆயினும், 'தேவையற்ற தயக்கமும் பயமும் புதுப்பாடத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் இருக்கக் கூடிய ஆர்வத்தையும் துணிவையும் தடுத்து நிறுத்தப் பார்க்கின்றன' என்று கூறவேண்டியுள்ளது.

உதவித் தொகை : 1982-83இல் பல்கலைக் கழக மானியக் குழுக் கலைத் துறைக்காக 52 பெரும்ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 18 லட்சம் ரூபாக் கொடுத்தது. இதில் 15 தற்கால இந்திய மொழிக்குரிய திட்டங்களுக்கு இத் தொகையில் 4 லட்சம் பங்கு அஃதாவது மொழியில்லாத வேறு கலைத்துறைத் திட்டம் ஒவ்வொன்றற்கும் சராசரியாய் 39 ஆயிரம் கொடுக்கப்படும் பொழுது மொழித் திட்டங்கள் ஒவ்வொன்றற்கும் 24 ஆயிரம் மட்டுமே கொடுக்கப்பட்டது. சிறுதிட்டங்களுக்குமட்டுமே இத் தொகை அதிகமாய்க் கொடுக்கப்படுகிறது. இப் பெரும்திட்டங்கள் 8 மாநிலங்களில்மட்டுமே நடைபெற்றுவருகின்றன; தமிழ் நாட்டில் இது நடைபெறவில்லை என்று தெரிகிறது.[5] பொதுவாய் அறிவியல் துறைகளுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை பல கட்டங்களில் கலைத்துறைக்குக் கொடுக்கப்படும் தொகையைப்போல் இருபங்கு ஆகும். இத்தகைய கட்டுகளுக்கு இடையேதான் மொழி வளர்ப்பு நடைபெற வேண்டியுள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

திட்டப்பணி : முதுகலை மாணாக்கர் பொருள் ஒன்றனைத் தெரிவுசெய்து, அதனை அடுத்த செய்திகளை எல்லாம் தாமே திரட்டி ஒழுங்குற அமைத்து, ஆராய்ச்சியின் முதல்நிலை என்று சொல்லும் அளவிற்குத் திட்டப்பணி செய்து பட்டம் பெறத் தகுதி பெறுகின்றனர். ஒருதாளிற்குள்ள மதிப்பெண்கள் இதற்கும் கொடுக்கப்படுகிறது. '83இல் இது வேண்டுமா வேண்டாவா' என்று பல கேள்விகள் எழுந்தன. பல்கலைக் கழகங்கள் இத் திட்டத்திற்கெனக் கையேடுகள் வெளியிட்டுள்ளன. ஆயினும், திட்ட வேலையின் நோக்கம்இன்னமும் மாணாக்கருக்கோ, ஆசிரியருக்கோ முற்றிலும் தெளிவாகவில்லை. இதற்காய வேலைப்

---

5. **பல்கலைக் கழக மானியக்குழு 1983-84ஆம் ஆண்டிற்காய அறிக்கை** (புது தில்லி; பல்கலைக் கழக மானியக் குழு, ஆண்டு இல்லை), பப. 29-30.

பணுவினை எவ்வாறு கணக்கிடுவது? என்பது தெளிவாய் இல்லாத தாலும் மாணாக்கர் தாமே இதனைச் செய்கின்றனரா? பெரும் பாலும் 'இஃது ஆய்வு நிலை' என்பதனை உணராது, வேறு நூல் களிலிருந்து எடுத்து எழுதுகின்றனரா? என்பதனைக் காண்பதில் சிரமம் இருப்பதாலும் ஆசிரியர்கள் இதனை விரும்புவதில்லை. மாணாக்கருக்கோ இது கூடுதல் பளுவாய் அமைகிறது. மேலும், இது திட்டப் பணியாக அமைவதால் போக்குவரத்துச் செலவு உட்பட ஏற்படும் பொருட்செலவினை மாணாக்கர் ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். செலவைத் தவிர்க்க வேண்டும் என்றால், இருக்கு மிடத்தில் இருந்துகொண்டே நூல் களைப் பார்த்துத் தொகுப்பதுதான் எளிது. 83இல் சில ஆசிரியக் கூட்டமைப்புகள் 'திட்டப்பணியை வேண்டா' என்று பல்கலைக் கழகங்களுக்கு எடுத்துக் கூறி வந்தன. எனினும், தம் முயற்சி யால் திட்டப் பணியை நன்கு முடித்த மாணாக்கருள் பெரும் பான்மையோர் தாமே செய்த வேலையாய் இஃது இருப்பதால் மனநிறைவு இருப்பதாய்த் தெரிவிக்கின்றனர்.

கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரி ஆசிரியர் 1984 முதற்பகுதியில் திட்டப்பணிபற்றிக் கருத்தரங்கு ஒன்று நடத்தி னர். இக் கல்லூரி ஆசிரியர் செய்தது நல்லதொகு முயற்சியாகும். பல்கலைக் கழகங்களில் இம் முயற்சி நடத்தல் போற்றுதற்குரி யது. தனியாகக் கல்லூரி ஆசிரியர் இதனைச் செய்தல் பெரிதும் போற்றுதற்குரியது. ஆயினும், இருக்கும் குழப்பமாய நிலையை இது நன்கு எடுத்துக்காட்டுவதாய் அமைந்தது. கருத்தரங்கில் கட்டுரை வழங்கிய பேராசிரியரும் பலரும் தம்தம் ஆராய்ச்சிப் பட்டத்தை அடுத்த கேள்விகளையே கேட்டனர். அதற்குக் கீழே மாணாக்கர் நிலையில், முதுகலை நிலையில், திட்டப் பணி யினைப்பற்றிப் பலர் கவலைப்படவே இல்லை. பெரும்பாலாய கட்டுரைகள் ஆழ்ந்த கருத்துகளை நன்கு அலசி ஆராய்ந்தன. ஆனால், அவை யாவும் பேராசிரியர் நிலையில் நடக்கும் ஆராய்ச்சி பற்றியனவே. ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் இடையில் இருக்கும் பெரும்இடைவெளியை இதில் நன்கு காண முடிந்தது. 'கற்பிக்கும் கலையில் கல்லூரி ஆசிரியர் எவ்வளவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்' என்பது மிகத் தெளிவாய்த் தெரிந்தது. அதனால், அங்கிருந்த மாணவர் தம் இன்னல்களைத் தெளிவாய் எடுத்துரைத்தனர். 1. திட்டப் பணிக்கும் பல்கலைக் கழகம் பண உதவி செய்ய வேண்டும், 2. இறுதிப் பருவத்தில் வேறு தேர்வு தாள்கள் எழுதும்நிலை இருத்தல் கூடாது. 3. '83-84ஆம் ஆண்டு மாணாக்கருக்குத் திட்டப்பணி நீக்கப்பட வேண்டும்' என்று மாணவர் பாரதிதாசன் பல்கலைக் கழகத்

திற்குப் பரிந்துரை செய்தனர். 'திட்டப் பணியைப் பொறுத்த வரை குழப்பமாய நிலை நீடித்துவருகிறது; இதன் விளைவாய்க் களத்திட்ட ஏடுகளின் தரம் குறையும். பல ஆசிரியர் இறுதித் தகுதியை நிரணயிப்பதால் ஒரே சீரான தகுதி எண் கொடுக்கப் படுவதில்லை; இதனை முதலில் மாற்றியமைக்க வேண்டும்; நல்ல முறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்' என்பது அவர்கள் பரிந்துரை.

செய்தித் தொடர்பு: வேறொரு இடர்ப்பாடு, போதிய தகவல் தொடர்பு இன்மையாகும். 'தகவல் தொடர்பிற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் என்ன பிணைப்பு, என்று கேட்கத் தோன்றலாம்; தகவல் தொடர்பு ஊக்கத்தை ஊட்டும்; இவ் வூக்கத்திலிருந்து பிறப்பது ஆக்கம்; அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்; இந்தியப் பல்கலைக் கழகங்களின் ஒருங்கமைப்பு வெளியிட்டு வரும் **செய்தி** என்னும் வார இதழ் அவ் வப்பொழுது பல் கலைக்கழகங்கள் ஏற்றுக்கொள்ளும் அறிஞர் பட்ட ஆய்வுகள் என்ன என்ன? என்பதனை முறைப்படுத் வெளியிட்டுவருகிறது. அவற்றில் தமிழ் ஆய்வு ஏடுகள் பெரும்பாலும் குறிப்பிடப்படுவ தில்லை. 83இல் வெளியாய ஆய்வுகளில் ஐந்து சதம்கூட அவற் றில் இடம்பெறவில்லை. அவற்றிலும் பெரும்பாலானவை கேரளம், அடுத்துத் திருவேங்கடவன் பல்கலைக் கழகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகளேயாகும். தமிழ்ப்பணி நன்கு நடக்கும் தமிழ் நாட்டிலுள்ள ஒருபல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றுக் கொள்ளப்படுவதாகவே தில்லியிலுள்ள பதிவேடுகளில் விவரம் காணப்படுவதில்லை.[7] இங்கிருந்து தகவல் வரவில்லை என்று காரணம் கூறப்படுகிறது. மறைவாய் நமக்குள்ளே சொல்லப்புடுவன பழங்கதைகள் மட்டுமல்ல; புதுக் கதைகளும் கூடத்தான்.

கருத்தரங்கில் கண்ட தமிழ்: '1983இல் தமிழ் எந்த அள விற்கு வளர்ச்சி கண்டுள்ளது' என்று கணித்திட வேறு ஒருமுறை யையும் கையாளலாம். 1978இல் நடந்த சில கருத்தரங்குகளில் தெரிவிக்கப்பட்ட எண்ணங்களை, 83லும் 84 தொடக்கத் திலும் தெரிவிக்கப்பட்ட சில கருத்துகளொடு ஒப்பிட்டுப் பார்க்க

---

6. **பல்கலைக் கழகச் செய்தி** (புதுதில்லி: இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பு)

7. பார்க்க, **பல்கலைக் கழகங்களின் கையேடு 1983-84** (புதுதில்லி: இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்ட மைப்பு, 1984)

லாம். இக் கருத்தரங்குகளில் பரிமாறிக் கொள்ளப்பட்ட எண்ணங்கள் இதற்குப் பெரிதும் பயன்படும். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 'நாள்கள் வளர்தல்போல் தமிழ் ஆர்வமும் வளர்ந்துவருகிறது' என்று எண்ண இடம் உள்ளது. 83 மார்ச்சுத் திங்களில் தில்லியில் சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடந்த அனைத்துலக இலக்கிய மொழிபெயர்ப்பு முதல்மாநாட்டில் தமிழிற்கு அளிக்கப்பட்ட உயரிய இடத்தை மறக்க முடியாது. சிறந்த கன்னட எழுத்தாளர் பெரியவர் ஒருவர், திராவிட மொழிகளுள் தமிழ் பெற்றிருக்கும் முதன்மையையும் அதன் தொன்மையையும் எத் தயக்கமும் இல்லாது எடுத்துக்காட்டினார். பிரேசில் நாட்டு அம்மையார் 'இந்திய மொழிகள்' என்று குறிப்பிடும்பொழுது சமசுகிருதத்தையும் தமிழையும்தான் குறிப்பிட்டார். கனடா நாட்டு ருசிய மொழிப் பேராசிரியர் கண்ணகிக்கிய புரட்சிக்கனலை ருசிய இளைஞர் கண்டு வியப்பதாய்த் தம் மொழி பெயர்ப்பு நூலைப் பயன்படுத்தியோரிடம் கண்டதைச் சொல்லி மகிழ்ந்தார். தில்லித் தமிழ் எழுத்தாளர் 'தமிழ்நாட்டில் நடக்கும் தமிழ்ப் பணியைப்பற்றிப் போதுமான செய்தி தமக்குக் கிடைக்கவில்லையே' என்று ஏங்கினார். கெளகாத்தி பேராசிரியர் சங்க இலக்கியங்களை ஆசாம் மொழியில் பெயர்க்க ஆர்வமும் தகுதியும் உள்ள அறிஞர்களைத் தேடியலையும் ஆர்வத்தையும் காணமுடிந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இத் தகையதொரு பெருமை இந்த அளவில் இருந்ததாய் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இது மேலும்மேலும் வளரும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

முதறிஞர் பட்டம்: தென்னகப் பல்கலைக் கழகங்களில் பொதுவாய் **முதறிஞர்** பட்டப் பாடத் திட்டம் கீழ்க்காணுமாறு அமைகிறது.

தாள் 1 — ஆய்வுநெறி

தாள் 2 — இலக்கியம்

(எ-டு) 1. சிற்றிலக்கியங்களில் மதக்கோட்பாடு
அல்லது
2. இருபதாம் நூற்றாண்டு இலக்கியம்

தாள் 3 — தம் ஆய்வுபொருள்

இது தவிர ஆய்வு ஏடு ஒன்று கொடுத்தல் வேண்டும். ஓர் ஆண்டு முழுநேர மாணாக்கரும், ஈராண்டு பகுதிநேர மாணாக்

கரும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் ஈராண்டு தொடர் கோடைமுறை மாணாக்கரும் உள்ளனர். இவர்களில் பகுதிநேர மாணாக்கர் இருபிரிவினருள் பெரும்பான்மை ஆசிரியரே.

ஆய்வு பட்டம்: நல்ல பல ஆய்வு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும், செய்தித் தொடர்பு இன்மை காரண மாய் ஒன்றிரண்டு இடங்களில் தேவையற்ற முறையில் ஒரே பொருள் திரும்பத் திரும்ப ஆராயப்படுகிறது. ஆய்வுபொருள் வங்கியின்மூலம் இது தவிர்க்கப்பட வேண்டும், இல்லையென் றால் இவ்வுயரிய நிலையிலும்கூடப் பார்த்து எழுதிச் சேர்க்கும் பழக்கம் வந்து புகுந்துவிடும்.

வானொலியில்: தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் சில, வானொலியில் சேவைச் செய்திகள் பகுதியிலும், நாளிதழ் களில் இன்றைய நிகழ்ச்சிப் பகுதியிலும், அன்று நடக்கும் கருத் தரங்குகளைப்பற்றிக் குறிப்பிட வகை செய்கின்றன. மக்கள் தொடர்பிற்கு இஃது ஒரு நல்ல புதுமுயற்சியாகும்.

தமிழ் வளர: நான்கு வகைப் பின்னணியில் தமிழ் வளர்ச்சி ஊக்கம் பெறமுடியும். இவற்றில் ஒன்று 'ஏற்கெனவே நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது'; மற்றொன்று '1983இல் நல்லதொரு ஏற்றம் கண்டுள்ளது' எனலாம். பிறிதொன்று 'வளர்ச்சியில் தொடக்கத்தை இவ் வாண்டில் எய்தியது' எனக் கொள்ளலாம். அடுத்தது, 'வளர்ச்சி என்னும் சொல்லைப் பயன்படுத்தும் அளவிற்கு ஆக்கம் பெறவில்லை' என்று தோன்றுகிறது.

மொழியியல்: முதலாவதாய் இங்குக் குறிப்பிடப்படுவது மொழியியல். இதன் வளர்ச்சியையும் இதனால் தமிழிற்கு விளைந்த ஆக்கத்தையும் நாம் அறிவோம். அண்ணாமலை, கேரளப் பல்கலைக் கழகங்கள் பல வாண்டுகளாய்ச் செய்துவரும் பணி மறக்கவியலாது.

மொழி பெயர்ப்பு: இங்கு இரண்டாவதாய்க் குறிப்பிடப் படுவது மொழிபெயர்ப்பு. பல்கலைக் கழகங்கள் ஆங்கில முது நிலைப் பாடத்திட்ட ஆங்கில, தமிழ்ப் பெயர்ப்பின் ஒருதாளாய் அமைத்துள்ளமை, தமிழிற்கும் ஆக்கம் தருகிறது. 1983இல் பாரதிதாசன் பல்கலைக் கழக ஆங்கிலத்துறை நடத்திய மொழி பெயர்ப்புக் கருத்தரங்கில் இந்த ஆக்க முயற்சிகளின் நல்ல விளைவுகளை உணர முடிந்தது. தமிழ் ஆங்கில மொழிபெயர்ப் பினையே ஆய்வுபட்டத்தின் பொருளாய் எடுத்து ஆய்வுசெய்யும் முயற்சி நடப்பதனைக் கண்டுகொள்ள முடிந்தது.

தமிழ் கற்பிக்கும் கலை: மூன்றாவதாய் இங்கே குறிப்பிடப் படுவது தமிழ் கற்பிக்கும் கலையை அறிவியல் நிலையில் ஆழ்ந்து ஆராய்தல். 'இதன் தொடக்கம் 83இல் நன்கு வேரூன்றத் தொடங்கிவிட்டது' எனக் கூறலாம். 84இல் மார்ச்சுத் திங்களில் மைசூரில் இந்திய மொழி மையத்தில் நடந்த தமிழ், தெலுங்கு, மலையாள மொழி கற்பித்தல் கருத்தரங்கில் படிக்கப்பட்ட சில கட்டுரைகள், இந்த உண்மையை உணர்த்துகின்றன.[8] பலவாண்டு களாய் மேலை நாட்டு மொழிகளின் சொத்தாய் இருந்துவரும் கற்பித்தல் என்னும் கலையின் பாற்பட்ட பயனுள்ள பல சொற் கள், அழகு தமிழில் வழங்கப்பட்டதனைக் காண முடிந்தது; 'நூற்றுக்கு மேற்பட்ட மாணவர் அஞ்சல்வழித் தமிழ் பயின்று பயிற்சியாசிரியர்களாய் இருக்கிறார்கள்' என்றும் அறிய முடிந்தது. இம் முயற்சிகள் மேலும் வளர வேண்டும்.

திறனாய்வு: நான்காவதாய் இங்கே குறிப்பிட்டது திறனாய்வு துறையாகும். இஃது இங்கு முன்பே சற்றுக் கலக்கத் துடன் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. தமிழ் என்னும் பெரும் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருக்கும் தமிழர் மேற்கு நாட்டுத் திறனாய்வு உலகத்தொடு பயனுள்ள முறையில் தொடர்பு கொள்ள, அவற்றை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் கருத் தரங்குகளும் அவற்றைப் படித்துப் பயன்பெற அவற்றின் மொழி பெயர்ப்புகளும் எழுதப்பட்டால் பெரும்பயன் விளையும்.

காலம் வரும்: 1983இல் நடந்தவற்றை உற்றுப் பார்த் தால் 'பல புதிய திருப்பங்கள் ஏற்பட்டுத் தமிழ்ப்பணி ஓங்கும் வாய்ப்புப் பெருகி உள்ளது' என்று மனநிறைவு கொள்ளலாம். 'வளர்ச்சியின் வேகம் அடுத்து வரும் ஆண்டுகளில் மிகுதிப்படும்' என்று எண்ண இடம் ஏற்படுகிறது.

இணைப்புக் கட்டுரையிற் கையாளப்பட்டுள்ள சில அரிய சொற்களுக்கு ஏற்ற ஆங்கில நேர்வழிச் சொற்கள், அகர வரிசை யில் அமைக்கப்பட்டுள்ளன.

---

8. பார்க்க: ம. க. சிவகாமசுந்தரி, **தமிழ்ச் செய்யுள் கற்பித் தலில் அலகுமுறை அணுகுதலின் தகைத்திறம்** - அச்சிட்டு வெளியிடப்படாதது. மைசூர்க் கருத்தரங்கில் 7-3-'84 அன்று வாசிக்கப்பட்டது.

கலைச்சொற்கள்

அலகு முறை	—	Modular
அறிதல் பிரிவு	—	Cognitive Domain
அறிவை ஆக்கத்தில் புகுத்தல்	—	Applicaticn
ஒருங்கமைத்தல்	—	Synthesis
கண்டுபிடித்தல்	—	Comprehension
கல்விச் சான்றிதழ்	—	Diploma
சான்றிதழ்	—	Certificate
தகைத்திறம்	—	Effectiveness
தர அமைப்பு	—	Taxonomy
திட்டப் பணி	—	Project Work
நிலைபுலம்	—	Faculty
பகுத்தல்	—	Analysis
மதிப்பிடுதல்	—	Evaluation, Judgement
மனத்தில் நிறுத்தித் திரும்பச் சொல்லல்	—	Knowledge (the ability to recall)

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் (காரிய வட்டம்) தமிழ் ஆய்வு

இல. குளோரியா சுந்தரமதி

வெளிமாநிலப் பல்கலைக் கழகங்களும் தமிழ்க் கல்வி, ஆய்வு, வளர்ச்சியில் ஈடுபடுதலை உணர முடிகிறது. முதுகலை, எம்.ஃபில்., பிஎச்.டி. பட்டக் கல்வி கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் தொடர்கிறது. உரையாசிரியர்வழித் தொல்காப்பியச் சொல்-பொருள் அடைவினை அமைத்தல், தமிழ்க் கலைக் களஞ்சியக் கட்டுரைகளின் திறனாய்வு போன்றன தனித்தன்மையுடைய பொருட்கட்டுரை முயற்சிகள். மலையாள மொழிபெயர்ப்புக் குறிப்பிடத்தக்கது.

1983 இல் தங்கள் பொருட்கட்டுரைகளைச் சமர்ப்பித்த 1981-83 முதுகலை வகுப்பு மாணவரும், 1981-82 எம்.ஃபில். வகுப்பு மாணவரும் ஓர்ஆய்வு திட்டத்தின்பாற்பட்ட தலைப்பில் தங்கள் பொருட் கட்டுரைகளை உருவாக்கியுள்ளனர். முன்னவர் (முதுகலை) தொல்காப்பியத்தின் (எழுத்து, சொல், பொருள்) சொல்லடைவினை உரையாசிரியர் வழங்கும் பொருளொடு வழங்கியுள்ளார். எம்.ஃபில். மாணவருள் மூவர் தமிழ்க் கலைக் களஞ்சியத்தைத் திறனாயும் முகமாய்த் தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் அமைந்துள்ள இலக்கிய வரலாறு, சமயம், கேரளம்பற்றிய கட்டுரைகளைத் தொகுத்தும் வகுத்தும் விளக்கி உள்ளனர்.

1983 இல் துறைவெளியீடாய் ஒருநூலும் ஓர்ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதியும் வெளிவந்துள்ளன. 1983 இல் முற்றுப் பெற்ற எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி. மாணவர் பொருட் கட்டுரைத் தலைப்புகள், ஆசிரியர் வெளியீடுகள்பற்றிய விளக்கங்கள் வரன்முறையாய்த் தரப்பெற்றுள்ளன.

முதுகலை ஆய்வேடு-1983

தலைப்பு	ஆய்வாளர்	மேற்பார்வையாளர்
1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-சொல்லடைவும் உரையாசிரியர் அகராதியும்	டி. மனோ	டாக்டர் சி. சுப்பிரமணியப் பிள்ளை
2. தொல்காப்பியச் சொல்லடைவும் உரையாசிரியர் அகராதியும் - சொல்லதிகாரம் -இளம்பூரணர், சேனாவரையம், கல்லாடனார் உரை	எஸ். இராசேந்திரன்	டாக்டர். கே. சுப்பிரமணியன்
3. தொல்காப்பியச் சொல்லடைவும் உரையாசிரியர் அகராதியும் -சொல்லதிகாரம்-தெய்வச் சிலையார், நச்சினார்க் கினியர், அரசு (பழைய) உரை)	மேபல் கிளாடிஸ்	டாக்டர் கே. நாச்சிமுத்து
4. தொல்காப்பியச் சொல்லடைவும் உரையாசிரியர் அகராதியும்-பொருளதிகாரம் இளம்பூரணர்	டார்லி மேபல்	டாக்டர் எம். இளையபெருமாள்
5. தொல்காப்பியச் சொல்லடைவும் உரையாசிரியர் அகராதியும்-பொருளதிகாரம், பேரா சிரியர், நச்சினார்க் கினியர்	ஆர்.பிரபா, ஞான குமாரி	டாக்டர் (திருமதி எல். குளோரியா சுந்தரமதி

எம். ஃபில். ஆய்வேடு - 1983

தலைப்பு	ஆய்வாளர்	மேற்பார்வையாளர்
தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் சமயம்	ரெஞ்சினி ஸ்வர்பாய்	டாக்டர் (திருமதி) எல். குளோரியா சுந்தரமதி
தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் இலக்கிய வரலாறு	மகிழ்கமலம்	,,
தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் கேரளம்	விஜயகுமாரி	டாக்டர் கே. நாச்சிமுத்து
சுந்தர இராமசாமியின் சிறுகதைகள் ஒருதிறனாய்வு	ஸ்டீபன்சன்	டாக்டர் கே. சுப்பிரமணியம்
இயேசு காவியம்-ஒரு திறனாய்வு	வசந்தா	டாக்டர் சி. சுப்பிர மணியப் பிள்ளை
செல்வாக்குப் பெற்ற தமிழ் வார-இதழ்களில் வாசகரைக் கவரும் காரணிகள்	ஜெசி ஆக்னஸ்	டாக்டர் எம். இளைய பெருமாள்

பிஎச். டி. ஆய்வுகள் - 1983

தலைப்பு	ஆய்வாளர்	மேற்பார்வையாளர்
1. Synthetic structure of 20th Century Tamil Poems	Dhasarathan	Dr. S.V. Subramanian
2. Structural study of Tamil short stories and Typology of motifs	Beulah Mercy	Dr. M. Elayaperumal

அளிக்கப்பெற்ற பிஎச்.டி. ஆய்வுகள் 1983

1.	Appelative Verbs or Nouns-Structure and Distribution	S. Alagesan	Dr. M. Elayaperumal
2.	A Comparative Study of Kambaramayanam and Adhiyathiya Ramayanam by Eluthaccan	Padmanabhan Thampi	Dr. K. Nachimuthu
3.	A Sociological Study of Tamil Folk-ballads	Sheela Asirvatham	

Department Publication-1983

1.	Research Papers Vol. XII-XIII	Editor K. Subramanian
2.	Malayala Basha Vyakaranam (Tamil Translation)	Dr. M. Elayaperumal and Dr. K. Nachimuthu

Publication by the Staff-1983

1. Dr. M. Elayaperumal

1. Book-Malayala Mozhiyilakkanam, Vol. II with Dr. K. Nachimuthu, Dept, of Tamil, Kerala University, pp. 136, 1983.
2. Article-Uyarthnai-A Grammatical Note, Research Papers, Dept. of Tamil, University of Kerala. Vol, XII-XIII, 1983.

2. Dr. K. Subramanian
Articles Published

1. A Study of the Nic Naming Practices found in the Tamil Brahmin Community of Trivandrum-XIIIth All India Conference of Dravidian Linguistics, Tanjavur.

2. Structural analysis of Oral Transmission of Knowledge in the Fishermen Folk song of the Kannyakumari Dt. **Research Papers**, Dept. of Tamil, University of Kerala Vol. XII-XIII, 1983.

3. Dr. (Mrs.) L. Gloria Sundramathy
Articles Published

1. காரண காரியத் தொடர்பின் அடியாய் எழும் சில கவிதை வெளியீடுகள்.

   Research Papers, Dept. of Tamil, University of Kerala, Vol. XII-XIII, 1983.

2. அகப் பாடல்களில் உட்கூற்று அல்லது கொண்டுரைக்கும் கூற்று—ஆய்வு கோவை, 15ஆம் மாநாட்டுக் கட்டுரை கள், பாளையங்கோட்டை Vol. I 1983.

4. Dr. K. Nachimuthu
Articles Published

1. 'Konkiluyar Kotuvay' **Ratnasamy Mudaliyar Sastiaptapurti** Vol. pp. 1-16, 1983.
2. 'Languages and some late Medieval Tamil Malayalam Hybrid works' **Ayvukkovai-Proceedings of the** fifteenth Conference of the A.I.U.T.T.A. Palayamkottai, 1983.
3. 'Kasiyapan Kavithaikal oru katitham' **Annam Vituthuthu** No. 5, pp. 42-43, 1983.
4. Adi Dravidas in the cultural History of Tamilnadu **Research Papers**, Dept. of Tamil University of Kerala Vol. XII-XIII, 1983.
5. Topothesia, Book Review, Indian Geographic Journa December, 1983.

Books Published

1. **Tamil Itappeyarāyvu**, Sobitham Pathippakam, Nager coil, pp xx + 213, 1983.

2. **Malayala Mozhiyilakkanam,** Vol. II with Dr. M. Elaya-Perumal, Tamil Dept, Kerala University, pp. 136, 1983.

5. **Dr. C. Subramania Pillai**
Articles Published

1. Code-Switching and Code-mixing in a Short Story- **Ayvukkoval**-Proceedings of the fifteenth Conference of the A.I.U.T.T.A. Palayamkottai, 1983.

2. The Repetitive Expressions in Kalingahtup parani **Research Paper,** Dept. of Tamil, University of Kerala, Vol. XII-XIII, 1983.

சிங்கப்பூரில் தமிழ்

எஸ். எஸ். சர்மா

சிங்கப்பூர் ஆட்சியில் தமிழ், ஆட்சிமொழியாயும், கல்வியில் இரண்டாம் மொழியாயும் இருந்தபோதும், தமிழ் மாணவருள் 50 விழுக்காட்டினரே ஆறாம் படிவத்திற்கு மேல் செல்கின்றனர். தொழில்நுட்பக் கல்வி மாணவர், தமிழில் கணினி கண்டுபிடித்துள்ளனர். சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் அந் நாட்டின் தமிழும் தமிழ் இலக்கியமும்பற்றிய ஆய்வரங்கம் இவ் வாண்டு நடந்தது. தமிழ்முரசு, தமிழ்நேசன் போன்ற இதழ்கள் தமிழ்ச் சிறு கதைகளை வெளியிடுகின்றன. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் படைப்புகள் அந் நாட்டு வானொலியிலும், தொலைக் காட்சியிலும் இடம்பெறுகின்றன. இவற்றிலும், மேடையிலும் நாடகங்களும் அரங்கேறின; கவிதை, கட்டுரை இலக்கிய வகைகளும் வளர்ந்தன. கோயில் குடமுழுக்குகள் சமய வளர்ச்சியைக் காட்டுகின்றன. திருக்குறள் மாநாட்டில் வா. செ. குழந்தைசாமி உரை யாற்றினார்.

1983ஆம் ஆண்டு !

இந்த ஆண்டில் சிங்கப்பூர்க் குடியரசில் தமிழ்வளர்ச்சி மன நிறைவளிப்பதாகவே அமைந்தது.

20 இலட்சம் மக்கள்தொகை கொண்ட சின்னஞ்சிறு குடியரசாய சிங்கப்பூரில், ஒன்றரை லட்சம்பேர் இந்தியர். இவர்களுள் தமிழ்மொழி பேசுவோர் எண்ணிக்கை ஏறத்தாழ எண்பதினாயிரம்!

இருப்பினும், 'சிங்கப்பூரில் ஆட்சிமொழியாய் உள்ள நான்கு மொழிகளுள் தமிழும் ஒன்று' என்பது குறிப்பிடத்தக்கது (இதர 3 மொழிகள் ஆங்கிலம், சீனம், மலாய்).

தமிழர் தமிழகத்திற்கு வெளியே பல நாடுகளில் வாழ்ந்தாலும், 'வெளிநாடு ஒன்றில் தமிழ்மொழி ஆட்சி மொழியாய் இருப்பது சிங்கப்பூரில்மட்டுமே' என்பது நாம் பெருமைப் படக் கூடிய ஒன்றாகும். எனினும், இவ்வாறு கிடைத்த வாய்ப்பினை நிலைநிறுத்தும் பெரும்பொறுப்பு, இன்றைய இளந்தலைமுறையினருக்கும் அதனைத் தொடரும் மரபினருக்கும் உண்டு.

சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் தமிழின் வளர்ச்சியைக் கணிக்கத் தமிழகத்தைப் போல், இலக்கியப் படைப்புகளை மட்டுமே அளவுகோலாகக் கொள்ள முடியாது.

கல்வி, கலை, கலாசாரம், இலக்கியம், சமயம் பொதுவாய் நிகழ்ச்சிகள் இவ்வாறு பல துறைகளிலும் தமிழர் ஆற்றிய பங்கினைக் கண்ணோட்டமிடுவதன்மூலமே அறிந்துகொள்ள முடியும். இவ் வடிப்படையில் இக் கட்டுரை அமைந்துள்ளது.

கல்வி

முதலில் கல்வித் துறையில் தமிழின் பங்கினைக் காண்போம்.

சிங்கப்பூர்ப் பள்ளிக் கூடங்களில் ஆங்கிலத்துடன் சீனம் (மேண்டரின்),மலாய், தமிழ் ஆகியவற்றில் ஒன்றனை இரண்டாம் மொழியாய்க் கற்றல் கட்டாயப் பாடமாகும். இரண்டாம் மொழியில் தேர்வுபெற்றவரே பல்கலைக் கழகத்தில் இடம்பெற முடியும்.

அண்மையில் சிங்கப்பூர்த் தலைமையமைச்சர் **லீகுவான்யூ** மேண்டரின் மொழி பேசும் இயக்கத்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில், ''தாய்மொழி உணர்வு நமக்கு இருக்கும்வரை ஆங்கிலத்தை நம் தேசிய மொழியாய்க்கொள்ள முடியாது'' என்றார். 'பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் ஆங்கிலம் தொடர்பு மொழியாய் ஆதிக்கம் பெற்றிருந்தாலும் தாய்மொழி இன்றியமையாதது' என்பது வலியுறுத்தப்பட்டுவருகிறது. 'தாய் மொழி உணர்வினை நம் இளய தலைமுறையினர் பெற வேண்டும்' என்பதில் சிங்கப்பூரிலுள்ள தமிழர் அமைப்புகளும் தமிழ்அறிஞர்களும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் 150 ஆண்டுகளுக்கு மேலாய் இருந்த சிங்கப்பூரில் வாழ்ந்த தமிழர் மரபினர் எவ்வாறோ மொழிக்கு அடிமையாகிவிட்டனர்; தாய்மொழி அறிவில் பின்தங்கிவிட்டனர். ஆங்கிலம் வீட்டு மொழியான

நூல் சிந்தனை, உரையாடல், நாகரிகம் யாவும் படிப்படியாய் அம் மொழியிலேயே நிகழ்லாயின.

சிங்கப்பூர் தன்னாட்சி பெற்று 25 ஆண்டு காலக் கட்டத்தை அடைந்துள்ளது. சிங்கப்பூர் தன்னாட்சி பெற்ற பிறகே தாய் மொழியில் நாட்டம் ஏற்படத் தொடங்கியது.

கல்வித் துறையில் தமிழ் மாணவர் பின்தங்கியிருத்தலைக் கருத்திற்கொண்டு **சிங்கப்பூர்த் தமிழர் பேரவை** நூற்றுக் காணக்காய தமிழ் மாணவர்க்குத் தனிவகுப்புகளை நடத்தி உதவிவருகிறது.

1983இல் ஆறு வட்டாரங்களில் 1,500 மாணவர்க்கு உதவிக் கல்வி வகுப்புகளைத் தமிழர் பேரவை நடத்தியுள்ளது. அடுத்த ஆண்டில் இந்த மாணவர் எண்ணிக்கை இரட்டிப்பாகும் அறிகுறிகள் உள்ளன.

'கல்வியில் தமிழ் மாணவர் இன்னும் அதிகக் கவனம் காட்ட வேண்டும்' என்கிறார் தமிழர் பேரவையின் தலைவர் **கோ. கந்தசாமி.** ''தமிழ் மாணவருள் 50 விழுக்காட்டினரே ஆறாம் படிவத்திற்குமேல் செல்கின்றனர். இவர்களுள் 10 முதல் 15 விழுக்காட்டினர் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பினை எட்டுகின்றனர். இறுதியில் 1.4 விழுக்காட்டினர் தேசியப் பல்கலைக் கழகம் அல்லது தொழில் நுட்பக் கல்லூரிக்குப் போகின்றனர்'' எனக் கணிக்கிறார் கோ. கந்தசாமி. தமிழ் மாணவரின் கல்வித் தரத்தை மேம்படுத்தப் பேரவை மேற்கொண்டுள்ள அரும்பணி பாராட்டுக்குரியது.

சிங்கப்பூரில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் தமிழை இரண்டாம் மொழியாய்ப் பயின்றுவருகின்றனர்.

தமிழில் கணினி: சிங்கப்பூரில் இன்று எல்லாத் துறைகளிலும் கணினி [கம்பியூட்டர்] விரிவாய்ப் பயன்பட்டுவருகிறது. தமிழிலும் இத் தகைய கணினியை இயக்கும் முறையைத் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மாணவர் கண்டுபிடித்திருத்தல் பாராட்டுக்குரியது.

அறநெறிப் பாடம்: சிங்கப்பூர்ப் பள்ளிகளில் 1984 முதல் உயர்நிலை 3,4 நிலைகளில் சமய அறிவு கட்டாயப் பாடமாக்கப் பட்டுள்ளது.

இந்து, முஸ்லிம், கிறித்துவ, புத்த, சீக்கிய, கன்பூஷிய சமயப் பாடங்களைக் கற்பிக்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இந்து சமயக் கல்வி ஆங்கிலத்தில் கற்பிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. 'தமிழ் மாணவர் தமிழில் சமயப் பாடங்கள் கற்க வசதி செய்யவேண்டு'மென்று தமிழ் ஆசிரியர் சங்கமும் பிற அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சமய அறிவு கற்பிக்கப்படும் வகுப்பறைகளில் இறைவணக் கமோ, வழிபாடு செய்வதோ, சமயச் சின்னங்களோ அனுமதிக் கப்படவில்லை; சமயத்தையும் தழுவ ஆசிரியர் பிரச்சாரம் செய்யக்கூடாது; ''சமயப் புரிந்துணர்வு, நற்பண்பு, நேசப் பான்மையை வளர்ப்பது ஆகியவையே இவ் வறநெறிப் பாட வகுப்புகளின் நோக்கமாய் இருக்கவேண்டும்'' என்கிறார் கல்வித் துணை அமைச்சர் **டாக்டர் டே எங் சூன்.**

ஆய்வரங்க மாநாடு: ''சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கிய மும்'' என்னும் ஆய்வரங்கம் 28-8-'83 இல் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

நாடாளு மன்ற உறுப்பினர் சந்திரதாஸ் தலைமையில் நடை பெற்ற இவ் வாய்வரங்கில் எட்டு ஆய்வு கட்டுரைகள் வழங்கப் பட்டன. தமிழ் எழுத்துத் தொடர்பில் **டாக்டர் திண்ணப்பனும்** ''தற்கால இலக்கியத்தின் போக்குப்பற்றி மலேயாப் பல்கலைக் கழக இந்தியத் துறை விரிவுரையாளர் **டாக்டர் இரா. தண்டாயுத மும்** கட்டுரை படித்தனர்.

சிங்கப்பூர்த் தமிழர் பேரவை இளைஞர் மன்றமும் 18-12-'83இல் ஓர் ஆய்வரங்கம் நடத்தியது.

1983இல் தமிழ்மொழி தமிழ் இலக்கியம், தமிழர் கல்வி, தமிழர் சமூக அமைப்புகள், பொருளாதார முன்னேற்றம் ஆகிய ஐந்து ஆய்வு பட்டறைகள் நடத்தப்பட்டன.

சிங்கப்பூர் இராபின்ஸ் பள்ளித் தமிழ் மாணவர் அமைத்த இராபின்ஸ் முத்தமிழ் மன்றத்தின் வெள்ளி விழாச் சிறப்பாய் நடத்தப்பட்டது. 1958 இல் தமிழாசிரியராய் இருந்த **சி.ஜே. டேவிட்** இம் மன்றத்தைத் தொடங்கிவைத்தார்.

எழுத்துச் சீர்திருத்தம்: தமிழக அரசினர் செய்துள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தைச் சிங்கப்பூர் ஏற்றுள்ளது.

1984 சனவரியில் தொடக்கப்பள்ளிமுதல் புதிய எழுத்துச் சீர்திருத்தம் (தமிழ் நெடுங்கணக்கின் 13 எழுத்துகளில் மாற்றம்) கொண்டுவரப்படுகிறது. 1987 முதல் அனைத்து நிலைத் தேர்விலும் ஒழுங்குபடுத்தப்பட்ட புதிய எழுத்துமுறை கொண்டுவரப் படும்.

சிங்கப்பூரில் தமிழ் முரசு நாளிதழ் இவ் வெழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றுகிறது.

மரபுவழித் திறன்: 1983 தேசிய நாளில் சிங்கப்பூர்த் தலைமையமைச்சர் ஆற்றிய உரையில், 'பிள்ளைகளின் அறிவு திறன் மரபுவழியில் பெறப்படுகிறது' என்பதனை வலியுறுத்தினார். 'பட்டதாரிப் பெண்கள் திருமணம் செய்யாதிருப்பதும் பிள்ளை பெறாதிருப்பதும் அறிவுள்ள சந்ததியினர் தோன்ற வழி செய்யாது' என்று இவர் கூறிய கருத்துக் கடும்விவாதத்தை எழுப்பியது.

பட்டதாரிகள் அதிகக் குழந்தைகள் பெறவும் பிள்ளைகள் வருமானவரி விலக்குப் பெறவும் இப்போது ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பள்ளிக்கூடங்களிலும் அறிவு திறன் உள்ள பிள்ளைகள் வடிகட்டப்பட்டுத் தனிச் சிறப்பு வகுப்புகளுக்கு எக்ஸ்பிரஸ் ஸ்டீரீம் (Express Stream) அனுப்பப்படுகிறது.

சிங்கப்பூரில் தமிழ்க் கல்வித் துறையில் சிறந்த பணியாற்றி வருவதில் உமறுப் புலவர் தமிழ் நிலையம், குறிப்பிடத் தக்கது. இதில் 54 ஆங்கிலப் பள்ளிகளைச் சேர்ந்த 792 மாணவ, மாணவியர் தமிழ்க்கல்வி பயில்கின்றனர்.

உமறுப் புலவர் தமிழ் நிலையத்தில் பெரியதொரு நூல் நிலையமும் ஒலி, ஒளிப்படச் சாதனங்களும் உள்ளன.

நடனம், வயலின், தபேலா, இசை வகுப்புகளும் இங்கே நடத்தப்படுகின்றன.

கல்வித் துறையில் தமிழின் பங்கினைக் கண்ணோட்டமிட்ட நாம், இனி இலக்கியத் துறையைக் கவனிப்போம்.

எழுத்துத் துறை

சிங்கப்பூர்த் தமிழ்எழுத்தாளர் படைப்புகளைத் தமிழ்முரசு, தமிழ்நேசன் ஆகிய நாளிதழ்களும் ''இந்தியன் மூவி நியூஸ்'' மாத இதழும் வெளியிடுகின்றன. மலேசியாவிலிருந்து வெளியிடப்படும் இதழ்களிலும் அவ்வப்போது சிங்கப்பூர் எழுத்தாளர் படைப்புகள் வெளிவருகின்றன.

சிங்கப்பூர் வானொலி,தொலைக் காட்சியிலும் எழுத்தாளர் படைப்புகள் இடம்பெறுகின்றன.

சிங்கப்பூர் எழுத்தாளர் படைப்பால் வெளிவந்த சிறுகதைகள்:

நாள்	கதையின் தலைப்பு	எழுதியவர்	வெளியான இதழ்
9- 1-83	செல்லாக் காசு	குமாரி த. கமலா சரஸ்வதி	தமிழ் முரசு
16- 1-83	அலைகள் ஓய்வதே இல்லை	திருமதி அன்னம் வேல்முருகன்	,,
16- 1-83	இது தாமரையின் கதை	குமாரி இராணி	,,
30- 1-83	அவன் செய்த பாவம்	ச. பொன்னுசாமி	,,
6- 2-83	என் அருமை சாந்தா	எஸ். ஹாஜாதீன் (கேபான் கார்டன்)	,,
,,	அன்பே அம்மா	திருநாவுக்கரசு (ஜூரோங்)	,,
27- 2-83	நினைவாலயம்	சங்கரி இராமாநுசம்	,,
6- 3-83	இது என் தலைவிதி	சித. பழநிசாமி	,,
,,	மனைவி அமைவதெல்லாம்	க. சங்கையா	,,
20- 3-88	நிம்மதியைத் தேடி	கே. இராசமாணிக்கம்	,,
10- 4-83	பெண்ணின் மனநிலை	சங்கரி இராமாநுசம்	,,

1	2	3	4
10- 4-83	உறவுகள் ஊஞ்சலாடுகின்றன	மா. இளங்கண்ணன்	தமிழ் நேசன்
17- 4-83	யார் குற்றம்?	ப. சாந்தி (செம்பாவாங்)	தமிழ் முரசு
24- 4-83	ஏமாற்றந்தானே?	கே. இராசமாணிக்கம்	,,
16- 5-83	பார்வையின் அர்த்தங்கள்	கா. சங்கையா	,,
12- 6-83	வெள்ளை நிறத்தில் ஒரு பச்சைக் கிளி	எம். ஏ. நாராயணன் (பூன்லே)	,,
3- 7-83	படிதாண்டிய பத்தினி	எம். ஏ. நாராயணன்	தமிழ் நேசன்
,,	மலர்ந்த வாழ்வு	திருமதி சரஸ்வதி கந்தையா	,,
31- 7-83	தெய்வீக உறவு	குமாரி ராஜா கிருஷ்ணன் லட்சுமி (யூனூஸ் கிரசண்ட்)	தமிழ் முரசு
,,	நெஞ்சே அமைதி பெறுவாயா?	இரா. அம்மணி	,,
,,	சபதம்	ப. சாந்தி	,,
5- 8-83	வாழ்வா? சாவா	திருமதி மலர்விழி (பெண்டிமீயர் ரோடு)	,,
7- 8-83	பயணத்தைத் தொடர்கிறேன்	குமாரி இராசா கிருஷ்ணன் லட்சுமி	,,
,,	நான் வாழும் வாழ்வு	கே. இராசமாணிக்கம்	,,
14- 8-83	உயர்ந்த உள்ளம்	கே. இராசமாணிக்கம்	,,
,,	மயக்கம் தெளிகிறது	பெரு. கோவிந்தராசு (பூன்லே)	,,
,,	கடவுளே துணை	மும்தாஜ் பீவி	,,
21- 8-83	உடலும் உள்ளமும்	க. கனக சுந்தரம்	தமிழ் நேசன்
16-10-83	டெலிபோன்	கமலா துரை	தமிழ் முரசு
,,	புனித உறவுகள்	ம. துரைராசு	,,

1	2	3	4
16-10-83	விசிறி வாழை	இலலிதா இராமன்	தமிழ்முரசு
9-10-83	எப்போது விடியும்?	திருமதி செயந்தி சிவலிங்கம் (தாமான் ஜூரோங்)	,,
,,	இறுதி அஞ்சலி	சமூகன் ரோமசன்மா	,,
,,	பழிக்குப் பழி	திருமதி புஷ்பா (கெப்பல் ரோடு)	,,
,,	பத்து நிமிடங்கள்	வீ. அப்பண்ணா (ஜூரோங்)	,,
23-10-83	அழியாத முடிவு	குமாரி உமா கிருஷ்ணன் (தோப்பாயோ)	,,
,,	மலர்ந்தும் மலராத பாதிமலர்	திருமதி அன்னம் வேல்முருகன்	,,
,,	வள்ளி சொன்ன கதை	இரா. செல்லப்பன்	,,
6-11-83	உமா	கமலாதுரை	,,
4-11-83	தலைத் தீபாவளி	மா. இளங்கண்ணன்	,,
13-11-83	கோபம்	அலி	,,
,,	காதல் நெஞ்சம்	எஸ். வேலாயுதம் (பூன்லே)	,,
20-11-83	இராதாம்மா	கமலா துரை	,,
,,	செவ்வந்தி	திருமதி செயந்தி சிவலிங்கம் (ஜெய்சி)	,,
,,	வள்ளியின் கல்யாணப் பரிசு	இரா. செல்லப்பன்	,,
27-11-83	காளாஞ்சி	மா. இளங்கண்ணன்	வானம்பாடி (மலேசியா வார இதழ்)
,,	நம்முடைமை	மு. செகபர் அலி	தமிழ் முரசு
4-12-83	ஓடுகாலி	சமூகன் சோமசன்மா	,,

1	2	3	4
4-12-83	வள்ளியின் அன்பு	இரா. செல்லப்பன்	தமிழ் முரசு
11-12-83	பப்பி	கமலாதுரை	,,
,,	வள்ளி தந்த வீணை	இரா. செல்லப்பன்	,,
,,	பரிசத்திற்குப் போனாள்	மா. இளங்கண்ணன்	,,
18-12-83	மன்னிக்க வேண்டுகிறேன்	வீரப்பன் லட்சுமி	,,
25-12-83	கல்லறை	இரா. செல்லப்பன்	,,
,,	குறை செயல்	மு. ஜெகபர் அலி	,,
,,	தண்டனைக்குரிய நியாயங்கள்	எம். ஏ. நாராயணன்	தமிழ் நேசன்

இந்தியன் மூவி நியூஸ் 83 மே இதழில் திருமதி கமலாதேவி அரவிந்தன் எழுதிய கதை **''பொம்மலாட்டம்''**; பிப்ரவரி 83 இதழில் திருமதி சரஸ்வதி கந்தையா எழுதிய கதை **'' முற்பகல் செய்யின்''.**

சிங்கப்பூர்க் கலாச்சார அமைச்சு நடத்திய சிறுகதைப் போட்டியில் குமாரி வீரப்பன் லட்சுமி எழுதிய **''யார் காரணம்?''** இரண்டாம் பரிசு (வெள்ளி 1,500) பெற்றது; ஒய்வி தமிழரசி எழுதிய **''கொடுப்பினை''** மூன்றாம் பரிசு பெற்றது.

கட்டுரைகள்

சிறுகதைகள் எழுதுவதில் காட்டப்படும் ஆர்வம், கட்டுரை எழுதுவதில் காணப்படுவதில்லை.

அரசியல், சமூகம், சமயம், விளையாட்டு, அறிவியல், பொதுநிகழ்ச்சிகள்பற்றிய கட்டுரைகள், வருணனைகள் திறனாய்வுகள் எழுதுவோர் இன்னும் பெருக வேண்டும். இதில் ஏற்பட்டுள்ள தோய்வினைப் போக்க எழுத்தாளர் முயல வேண்டும்.

சிங்கப்பூரில், கட்டுரை படைத்தவருள் **இரா. அம்மணி** குறிப்பிடத் தக்கவர். ''அத்தையின் அநுபவக் கதைகள்'' என்னும் தொடரில் வாரந்தோறும் முரசில் இவர் எழுதி வருகிறார்.

''ஒருசொல் கேளீர்'' என்னும் கட்டுரைத் தொடரை வானொலியில் ஒலிபரப்பிவருகிறார் **தி. சு. மோகனம்.** இக் கட்டுரை நமது மொழி வளத்தைக் காட்டுகிறது.

''**சிவப்பு விளக்குப்**பற்றி இரத்தினா கணேசன் (நேசன் 31-6-83), கட்டுரை எழுதியிருந்தார்.

''தராசு'' என்பதுபற்றியும் (முரசு 27-11-83), **'' இன் சொல்'**பற்றியும் (முரசு 18-12-83) திருமதி கமலாதுரை கட்டுரைகள் எழுதியிருந்தார். **''வரவும் செலவும்''** பற்றிச்செல்வி (முரசு 13-11-83) ஒருகட்டுரை எழுதியிருந்தார்.

'' தென்கிழக் காசியாவில் இந்து சமயம் '' என்னும் தொடர் கட்டுரையை இலங்கைத் தினகரன் வார மஞ்சரியில் இக் கட்டுரை யாளர் (எஸ். எஸ். சர்மா) எழுதினார். ''கோவிலும் கலை

களும்''பற்றிச் செண்பக விநாயகர் கோயில் கும்பாபிஷேக மலரிலும், ''சிங்கப்பூர்க் கோயில்கள்''பற்றி உருத்திரகாளி யம்மன் ஆலயக் கும்பாபிஷேக மலரிலும் இவர் எழுதியிருந்தார்.

கவிதை

கவிதைத் துறையில் ஈடுபாடு காட்டும் பாவலர் சிங்கப்பூரில் பெருகியுள்ளனர்.

''பாரதி ஒருபுதினம்'' என்னும் கவிதைமூலம் **ந. பழநிவேலு** (22-3-83 நேசன்) பாரதி நூற்றாண்டினை நினைவு கூர்ந்தார்.

நாளிதழ்களில் வெளிவந்த நூற்றுக் கணக்காய கவிதைகளில் முத்து மாணிக்கத்தின் **'துன்பம் நீக்கு'** (நேசன் 16-5-83), அமல தாசனின் **'பாரதி ஒருபுதிர்'** பரணனின் **'பாரதி ஒருபுதுமை'** (நேசன் 11-9-83), சிங்கை முகிலனின் **''நினைவு பாதை,''** உமையாள் இராமநாதனின் **''ருத்திரகாளி அன்னையே''** (முரசு (16-10-83) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

''வாழ்க செந்தமிழ்'' என்னும் தலைப்பில் நாரண புதுமைப் பித்தன் எழுதிய கவிதை (நேசன் 20-11-83), நம் கவனத்தைக் கவர்ந்தது.

''சிங்கை தேசியப் பல்கலைக் கழகச்
செந்தமிழ்ப் பிரிவினிலே—ஒரு
விந்தை நிகழ்ந்தது எண்பத்து மூன்று
வளராவணித் திங்களிலே

அறிவியல் துறையில் அருந்தமிழ் மொழியாள்
அரியணை நிலைத்திடவே—மின்
பொறியியல் பயின்று கணினியில் தமிழைப்
படைத்தவர் வாழியரே''

என இந்தக் கவிதைத் தொடர், சிங்கப்பூரில் கணினியை முதன் முதலாய் உருவாக்கியவரைப் பாராட்டியது.

''ஆறாம் தமிழ் விழா அமைக்க முனைந்தனர் காண்'' என சிங்கப்பூரில் ஆறாம் உலகத் தமிழ் மாநாடு கூட்டப்போவதை வரவேற்று முருகதாசன், முத்துமாணிக்கம், மெ. இளமாறன் ஆகியோர் பாமாலை புனைந்தனர். மேலும், **''பேபர் மலைமீது கழல் வலை''** (அமலதாசன்), **மனக்குரல்** (பரணன்),

ப. நன்முல்லை, முருகதாசன், கடையநல்லூர் ஜமீலா ஆகியோரின் கவிதைகள், நேசன் 18-12-83 இதழிற்குச் சிறப்புச் சேர்த்தன.

சிங்கப்பூர்த் தேசிய நாளையொட்டி வெளிவந்த கவிதைகளுள் முத்தமிழனின் **''இனமாண்பு''** (நேசன் 10-8-84), டி. எஸ். பொன்னுசாமியின் **''தேசிய நாளே வாழி''** ஆகியவை சிறப்பாய் இருந்தன. 9-8-83இல் வந்த முரசு தேசிய நாள் வெளியீட்டில் க. து. மு. இக்பால், மு. தங்கராசன், பரணன், அமலதாசன், தி.ந.ப. சாமி ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றன. நாரண புதுமைப் பித்தன், பிரதமர் லீகுவான் கியூவைப் பாராட்டி, **''ஓரருமை மாத்தலைவன்''** என்னும் கவிதையைக் கவினுற அமைத்திருந்தார். தலைமையமைச்சர் லீயின் பிறந்த நாளை ஒட்டி, மு. தங்கராசன் இயற்றிய **''மனத்தினில் உறைந்தோய் வாழி''**யும் (முரசு 9-10-84) குறிப்பிடத் தக்கது.

இஃதுஒரு புதுமை தானே! வானொலியிலும் வாரந்தொறும் கவிஞர்களின் பாமாலைகள் ஒலிபரப்பாயின.

சிங்கப்பூரில் தமிழகக் கவிஞரின் வழக்காடு மன்றம் ஒன்றும் நடைபெற்றது. தமிழகப் பேராசிரியர் டாக்டர் ச. சங்கர்லால், கவிஞர் அரு. நாகப்பன், பேராசிரியர் அய்க்கண், திருமதி சோலை நாகப்பன் ஆகியோர் இதில் பங்குகொண்டனர். 'வழக்காடு மன்றம், பட்டி மன்றங்கள் பேச்சுத் திறனையும் ஆய்வு புலமையையும் வெளிப்படுத்துகின்றன' என்பதில் ஐயமில்லை.

அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத்தின் திருக்குட முழுக்குப் பெருவிழா, 24-11-1983இல் சிறப்பாய் நடைபெற்றது. அழகிய இராசகோபுரம், தோரணவாயிலுடன் இரட்டை அடுக்கில் அமைந்த திருமண மண்டபம், அழகிய மண்டபங்கள், சிற்பங்கள் விமானங்களுடன் அமைந்த இந்த ஆலயத்தின் குடமுழுக்கு விழாவில், குடியரசு தலைவர் **சி.வி. தேவன் நாயர்** கலந்துகொண்டார்.

45 நாள் மண்டலாபிஷேக நிகழ்ச்சியை ஒட்டி இசை, நடன நிகழ்ச்சிகளுடன் கவியரங்கும் நடைபெற்றது. கந்த புராணம், கந்தர்கலி வெண்பா, கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, திருமுருகாற்றுப் படை போன்ற தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கப் பட்டன.

தண்டாயுதபாணி ஆலய குடமுழக்கினைச் சிறப்பிக்கப் பல வண்ணங்கள் தாங்கிய படங்களை ''ஸ்டிரேய்ட்ஸ் டைம்ஸ்''

ஆங்கில நாளேடு, ''தமிழ் முரசு'', ''தமிழ் நேசன்'' ஆகியவை வெளியிட்டன. அச்சுக் கலையின் நவீன வளர்ச்சியை இவை காட்டின!

நேசன் சிறப்புப் பக்கத்தில் (24-11-83) தண்டபாணி குட முழுக்குப்பற்றிப் **புலவர் சேதுராமன்** பாடிய கவிதை குறிப்பிடத் தக்கது. **''சிங்கை நகர் வளமுறத் தங்கியருள் புரிந்திடும் தெய்வமே தண்டபாணி''** என்று போற்றுகிறார்.

''குமரன் அருளால் கோடி நலம் எய்தி வாழ்க'' என்னும் ஆசிரிய விருத்தத்தைச் **சோம. இராமசாமி** (முரசு 24-11-83) இயற்றியிருந்தார்.

தமிழன் அழகிய கலை வண்ணத்தைக் காட்டும் மற்றொரு புதிய ஆலயத்தின் குடமுழுக்கும் 1983 இல் நடைபெற்றது. அருள்மிகு உருத்திரகாளியம்மன் ஆலயமே அது. ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயக் குடமுழுக்கும் நடைபெற்றது. ஆலயங்கள் புதுப்பொலிவு பெற்றுக் காட்சியளித்தல், பல இனங்கள் வாழும் நம் நாட்டில் நம் கலாசாரச் சின்னங்களாய்த் திகழ்கின்றன.

தமிழ் நேசன்: சிங்கப்பூரின் அண்டைநாடாய மலேசியாவி லிருந்து மூன்று தமிழ் நாளிதழ்கள் வெளிவருகின்றன; **அவை: தமிழ் நேசன், தினமணி, தமிழ் ஓசை.**

மூத்த இதழாய தமிழ்நேசன் 60ஆம் ஆண்டு மணிவிழாச் கொண்டாடுதலை மகிழ்ச்சியுடன் நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.

சிங்கப்பூரிலும் பரவலாய முறையில் விற்பனையாகும் நேசன், விரிவாய்ச் செய்திகளை வெளியிடுவதொடு, மக்கள் கருத்துகளையும் துணிவுடன் வெளியிட்டுவருகிறது.

1924 செப்டம்பர் 10இல் **கி. நரசிம்ம ஐயங்கார்** தொடங்கிய இதழ் முதலில் வார இதழாய் இருந்து, பிறகு 1937 முதல் நாளித ழாயது.

தமிழ் நாட்டில் சுதேசமித்திரனுக்கு அடுத்து, வெளிநாடு ஒன்றில் 60 ஆண்டுகளாய் வெளிவரும் தமிழ்நேசனின் மணிவிழா விற்குத் தமிழ் கூறும் நல்லுலகின் நல்வாழ்த்துகளைக் கூறு வோம்.

நூல் வெளியீடு : பாவலர் முத்து மாணிக்கம், மாணவர் இலக்கியமாகப் ''**பொன்வண்டு**'' நூல் வெளியிட்டார். மற்றொரு பாவலர் முல்லைவாணன், ''**வீணை, கரும்பு, ஊஞ்சல்**'' ஆகிய நூல்களை வெளியிட்டார். ச. வரதன், ''**நீரில் பூத்த நெருப்பு**'' நாடகத்தையும் இரா. நாராயணசாமி, ''**உயர்ந்த உள்ளம்**'' என்னும் நூலையும் வெளியிட்டனர். உள்ளூர்க் கல்வியாளர் (ஜி.எஸ். மாணிக்கம், கு. சந்திரமூர்த்தி, மா. இராசாக்கண்ணு, ரெ. செல்வராசன், அ. முத்தையா) எழுதிய உயர்நிலைப் பள்ளிகளுக்காய தமிழ்ப் பாடநூலும் வெளியிடப்பட்டது.

நாடகம்

1983 நாடக விழாவில் சிங்கபூர்த் தமிழர் இயக்கம், ''**நல்ல தீர்ப்பு**'' நாடகத்தை அரங்கேற்றியது. எஸ். வி. நாதன் கதை வசனம் எழுதி இயக்கிய இந் நாடகத்தில் சுந்தரம், ஸ்ரீதேவி, ஆரூர்ச் சபாபதி, சங்கையா ஆகியோர் நடித்தனர். வெண்ணிலாக் கலை அரங்கம், ''**கண் திறந்தது**'' நாடகத்தை அரங்கேற்றியது. ''**குடும்பத்தில் குழப்பம்**'' என்னும் நாடகத்தை நடத்தியது. கலைஞர் சங்கம். தேசிய நாடக விழா நான்குமொழி நாடக வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி வருகிறது. இளம்நகரத்தார் ''**பட்டினத்தார்**'' நாடகத்தை அரங்கேற்றினர். இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற நாடகங்களை அரங்கேற்றிய சிங்கப்பூர் வானொலியின் தமிழ்ப் பகுதியினர், 1983ஆம் ஆண்டில் ''**நள தமயந்தி**'' இசை நாடகத்தை நடத்தினர்.

தொலைக் காட்சிப் பகுதியினர் கூத்துப் பட்டறை நடத்திய தொடு மூன்று நாடகங்களையும் நடத்தினர். சிங்கப்பூரில் நாடகப் பயிற்சி தருதற் கெனத் தமிழகத்திலிருந்து **கோபாலி** அவர்களை இரண்டாண்டு ஒப்பந்தத்தில் சிங்கப்பூர் வானொலிக் கழகம் தருவித்தது.

நாடக, திரைப்படப் புகழ்க் கலைஞர் டி. வெங்கடராமன், டி. ஆர். லதா, அனிதா மெத்யூஸ் ஆகியோரும் தமிழகத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையிற் சிங்கப்பூர் வானொலி-தொலைக் காட்சியில் பணியாற்ற வரவழைக்கப்பட்டனர்.

சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகம், 29-5-83இல் ''**சபாஷ் சம்பத்**'' என்ற நாடகத்தை நடத்தியது. வெங்கடராமன், சித்திரா, விசயகுமாரி, ஜமுனாராணி, சுசீலா பெருமாள், சின்னப்பா ஆகியோர் இதில் நடித்தனர். கோபாலி இந் நாடகத்தைத்

தயாரித்திருந்தார். வானொலிப் பிரிவினர், இன்னிசை இரவு நிகழ்ச்சி ஒன்றனையும் 15-7-83இல் நடத்தினர்.

சிங்கப்பூர்த் தொலைக்காட்சியினர், ''டெலி டெக்ஸ்ட்'' என்னும் தகவல் ஒலிபரப்பினை 1-8-83இல் தொடங்கினர். இதில் எந்நேரமும் ஒருபொத்தானை அழுத்துவதன்மூலம் நாம் விரும்பிய தகவலை உடனே அறிந்துகொள்ள முடியும். விமானங்கள் புறப்படுவது, வருவதுபற்றிய நேரம், வானிலை, விலைவாசி போன்றவற்றைப்பற்றிய ஏராளமான தகவல்களோடு, அன்றாட உலகச் செய்திகளையும் இந்த ''டெலிடெக்ஸ்டில்'' (தொலைக் காட்சித் தகவல் சாதனம்) தெரிந்துகொள்ளலாம்.

கலைத்துறை

சிங்கப்பூர்க் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கலை விழாவிற் சிங்கப்பூரிலுள்ள பலகலை அமைப்புகளும் பங்கு பெற்று, நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தின.

சிங்கப்பூர்த் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம், 29-6-83இல் திருக்குறள் மாநாடு நடத்தியது. பேராசிரியர் **வா. செ. குழந்தைசாமி** (சென்னை, அண்ணா பொறியியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) இதில் சிறப்புரை ஆற்றினார்.

இந்திய நுண்கலைக் கழகம், தமிழர் பேரவை, நாமக்கல் தாலுக்கா நலன்பிவிருத்திச் சங்கம், இந்து நிலையம் போன்ற பல அமைப்புகளும் சிறந்த கலை நிகழ்ச்சிகளைப் படைத்தன.

சிங்கப்பூர்த் தேசிய நாளை ஒட்டி, இருமாபெரும்தமிழ்க் குழு நடனங்களைக் குமாரி சாந்தி சர்மா, குமாரி ஜெயந்தி சர்மா (கட்டுரையாளர் புதல்வியர்) படைத்தனர். 9-8-83இல் ஜூரோங் ஸ்டேடியத்தில் வசந்த விழா நிகழ்ச்சியை உருவாக்கினர். இதில் 200 பேர் பங்கெடுத்தனர். அன்று மாலை குயின்ஸ் டவுன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற தேசிய தின விழாவில் குமாரி சாந்தி **70 பெண்களைக்கொண்டு** தயாரித்துப் படைத்த சிறப்பான நிகழ்ச்சி **''உதய ஞாயிறு''**.

இந்தியக் கலை மன்றம் (இதன் தலைவர் கட்டுரையாளர்), சுற்றுப் பயணிகளைக் கவரும் விதத்தில் உல்லாசத் தீவாய சந்தோஷாவில் தீபாவளி நிகழ்ச்சியைப் படைத்தது. இந் நடனங்களையும் அலங்கார நிகழ்ச்சியையும் சாந்தி, செயந்தி கவனித்

தனர். நாடாளு மன்ற உறுப்பினர் எம். கே. ஜப்பார் தலைமை வகித்தார்.

பரதக் கலையை முறைப்படி வளர்க்கும் அமைப்புகளில் ஒன்று அப்சரஸ் நாட்டியக் குழு. இதற்கு நடன ஆசிரியையாய் இருப்பவர் திருமதி நீலா சத்தியலிங்கம். இவர் கணவர் சத்திய லிங்கம் சிறந்த பாடகர். புதல்வியர் மோகனா, நந்தனா ஆகியோரும் இசையிலும் நடனத்திலும் திறமை பெற்றவர். இவர்களின் அப்சரஸ் நாட்டியக் குழுவினைச் சேர்ந்த 18பேர் திருமதி சத்தியலிங்கம் தலைமையில் ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகரில் ஒருவாரம் நடன நிகழ்ச்சிகளை நடத்தினர். தமிழ் நடனக் கலையின் சிறப்பினைச் சிங்கப்பூர்க் கலைஞர் கடல் கடந்துசென்று காட்டியது பாராட்டுக்குரியதாகும்.

சிங்கப்பூரில் தமிழ்க்கலை, சமய, கலாச்சார வளர்ச்சிக்குத் தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் வந்த அத் துறை சார்ந்த வல்லுநர் பெரிதும் உதவியுள்ளனர்.

திருக்குறள் வி. முனுசாமி, புலவர் கீரன், இலண்டன் கே. ஞானசூரியன், தமிழகச் செம்மல் சுவாமிநாதன் ஆகியோரின் செந்தமிழ் உரைகளைக்கேட்க முடிந்தது. கதாகாலட்சேபப் புகழ் திருமதி இராஜம் சாரநாதன், சிக்கல் சகோதரிகள், கலைமணி குஞ்சுமணி, திருமதி நீலா (புல்லாங்குழல்), பக்திப் பாடல் புகழ் திருமதி ஜி. சரஸ்வதி, சங்கு வாத்தியப் புகழ் வித்துவான் டி. எஸ். மகாலிங்கக் குருக்கள், திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் (பரதம்), ஜெயந்தி இராசகோபால் (பரதம்), மஞ்சரி, பாடகர் ஜெய விஜயா, இஸ்லாமியப் பாடகர் அத்தா அலி அசாத், டாக்டர் சரஸ்வதி இராமநாதன் ஆகியோர் 1983இல் சிங்கப்பூருக்கு வருகையளித்து இசை, கலை, சமய வளர்ச்சிக்கு ஊக்க மூட்டினர்.

திருமுறை மாநாட்டின் மூன்று நாள்கள் தமிழ்த் திருமுறைகளின் சிறப்புரைகளைக் கேட்க முடிந்தது. இந்து சமய இறை வழிபாடுபற்றிய ஆய்வரங்கம் ஒன்றனை இந்து சபை நடத்தியது. தமிழ் முஸ்லிம்களின் அமைப்புகள் ஒன்றிணைந்து மீலாத் விழாவினை நடத்தின.

இவ்வாறு சமய, கலைச் சொற்பொழிவுகள், ஆய்வரங்கு, இலக்கியப் படைப்பு, கல்வி நாட்டம், விழாக்கள்வழிச் சிங்கப்பூரில் தமிழ் வாழ்கிறது.

மலேசியாவில் தமிழ்

இரா. தண்டாயுதம்

*மலேசியாவில் ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ்த் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. தொடர்ந்து, பல்கலைக் கழகம்வரை தமிழ் கற்க வாய்ப்புண்டு. சில தமிழ் இதழ்கள் வெளிவருவதொடு, வானொலியில் தமிழிற்கென ஒர்ஒலியலை ஒதுக்கப்பட்டுள்ளது. புத்தக வெளியீட்டு நிறுவனம் இல்லாதபோதும் தனியார், தம் நூல்களை அச்சில் கொணர்கின்றனர், இவ்வாண்டில் ஒருநாவலும், ஒருசிறுகதைத் தொகுதியும், ஒருகட்டுரைத் தொகுதியும், மூன்று கவிதைக் தொகுதிகளும் வெளிவந்தன. 1972இல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய நாவல் போட்டியில் பரிசு பெற்ற ஐ. இளவழகுவின் '**இலட்சியப் பயணம்**', இவ்வாண்டுதான் அச்சேறிற்று. சிறுகதைகளில் போதைப் பழக்கம், குடிப்பழக்கம், கல்விப் பிற்போக்கு, பொருளாதாரப் பிற்போக்கு, குடும்பப் பிரச்சினை போன்றன இடம்பெறுகின்றன. கலியபெருமாள் மூன்று நூல்கள் வெளியிட்டு முன்னிற்கிறார்.*

மலாய்க்காரர், சீனர், இந்தியர் என மூப் பெரும்இனங்கள் வாழும் நாடு மலேசியா. இவர்களுள் மலாய்க்காரர்க்கும், சீனருக்கும் அடுத்த நிலையில் எண்ணிக்கையில் இந்தியர் வாழ்கின்றனர். 1980இல் எடுத்த புள்ளிவிவரக் கணக்கின்படி மலேசிய மக்கள் தொகையில் இந்தியர் எண்ணிக்கை 1,239,000 ஆகும். இது மொத்த மக்கள்தொகையில் 10.5 விழுக்காடு. இதில் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் தமிழர். இவர்களுள் 60 விழுக்காட்டினர் தோட்டப் புறங்களில் வாழ்வதாய்ப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தமிழர்க்காக இந் நாட்டில் ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ்த் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இடைநிலைப் பள்ளிகளில்

தமிழ் இல்லாவிட்டாலும், பதினைந்து தமிழ் மாணவர் கேட்டால் ஒருதமிழ் வகுப்புத் தொடங்கக் கல்வியமைச்சு அனுமதி அளித்துள்ளது. மலேசியக் கல்விச் சான்றிதழ் (SPM), மலேசியப் பள்ளியிறுதிக் கல்விச் சான்றிதழ் (STMP) ஆகிய வற்றில் தமிழும் தமிழிலக்கியமும் தேர்வு பாடங்களாயுள்ளன. இவற்றில் தேறிப் பல்கலைக் கழகம் புகுந்தால், மலேயாப் பல் கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையில் தொடர்ந்து தமிழும் தமிழ் இலக்கியமும் கற்க வாய்ப்புகள் உள்ளன. தமிழில் மூன்று நாளிதழ்கள், ஒருவார இதழ், மூன்று மாத இதழ்கள் வெளிவருவ தொடு மலேசிய வானொலியும் தமிழிற்காக ஓர்ஒலியலைலையைக் கொண்டுள்ளது. 'புத்தக வெளியீட்டு நிறுவனங்கள்' எனத் தனி யாய் இல்லாவிட்டாலும். எழுத்தாளரே தங்கள் நூல்களை அச்சிட்டு வெளியிடுகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறு பல நூல்கள் வெளியிடப்பட்டன. என்றாலும், அண்மைக் காலமாய் இத் துறையில் ஒருசோர்வு ஏற்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. பெரும்முதலீடு செய்து எழுத்தாளரே நூல்களை வெளியிட வேண்டிய நிலை, விற்பனைக்கு வெளியீட்டு விழாக்களையே நம்பியிருக்க வேண்டிய நிலை, அவ் விழாக்களிலும் பெருந் தொகை கொடுத்து நூல் வாங்குவோரை எதிர்பார்த்திருக்கும் நிலை போன்றன இச் சோர்விற்குக் காரணங்களாகும். வாசகர் நூல்களை விரும்பி வாங்காததொடு, நூல்கள் அவர்களையடைய ஒருநிலையாய வழியில்லாமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றி லிருந்து விடுபட மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்ப் புத்தகப் பண்ணை ஒன்றனை உருவாக்க இவ் வாண்டில் முயற்சி எடுத்துள்ளது.

இவ் வாண்டில் வெளிவந்த நூல்களில் ஒருநாவலும், ஒரு சிறுகதைத் தொகுதியும், ஒருகட்டுரைத் தொகுதியும், மூன்று கவிதைத் தொகுதிகளும் அடங்கும்.

க. கலியபெருமாளின் நூல்கள்: மலேசியத் தமிழ் எழுத் தாளர் அமைப்புகளின் தேசியப் பேரவைத் தலைவராய் இருப் பவர் **க. கலியபெருமாள்**. அவர் பேரா மாநில எழுத்தாளர் சங்கத் தலைவராய்ப் பல ஆண்டுகள் பணியாற்றினார்; எழுத்தாளராயும் கவிஞராயும், பேச்சாளராயும் மலேசியத் தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானவர். 'அடிப்படைத் தமிழ்', 'நீத்தார் கடன் நெறி முறைகள்' முதலாய பல நூல்களின் ஆசிரியர். இவருடைய **'தென்றல் சிரிக்கிறது'**, **'செந்தமிழர் சிந்தனைகள்'** **'பாடு பாப்பா'** என்னும் மூன்று நூல்கள் இவ் வாண்டில் வெளிவந்துள்ளன.

தென்றல் சிரிக்கிறது: இஃது ஒருசிறுகதைத் தொகுதி. பல ஆண்டுகளாய்ப் பல்வேறு இதழ்களில் இவர் எழுதிவந்த சிறு கதைகள் இத் தொகுதியில் உள்ளன.

இத் தொகுதியில் உள்ள பத்துக் கதைகளுள் 'தென்றல் சிரிக்கிறது', 'இது எப்படி இருக்கு?' எனும் இரண்டு கதைகளும் சிறப்பாய்க் குறிப்பிடத் தக்கன.

தோட்டப் புறங்களில் உள்ள சாதிப் பிரச்சினையையும், தமிழரின் பொதுவாய இயல்புகளையும் சற்றுக் கடுமையாகவே சுட்டிக் காட்டும் கதை 'தென்றல் சிரிக்கிறது!' ஒருசெம்பனைத் தோட்டத்தில் கதை நடக்கிறது; உயர்சாதி இந்துக்களுக்கும் தாழ்ந்த சாதி இந்துக்களுக்கும் சண்டை மூள்கிறது. பிணங் களுக்குக் குழிவெட்ட மறுப்பதும், கோயிலில் நுழைதலைத் தடுப்பதும் சண்டைக்குக் காரணங்கள். இவற்றைத் தீர்த்து வைக்கத் துரையே வருகிறார்; தலைக்குத் தலை பேசாமல் இருக்க, ஒவ்வொரு பகுதிக்கும் ஒருதலைவரைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறார்; அதனொடு நில்லாமல் மாவட்ட அதிகாரி **துவான் முகமது ஹம்ஸாவையும்** வரவழைக்கிறார்; ''இந்தியர் அர்த்த மில்லாத இச் சாதிப் பிரச்சனைக்காக உயிரையே விடக்கூடிய புத்திசாலியர்; அதனால், போலீஸ் ரிசர்வ் யூனிட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளேன்'' என்கிறார்.

உயர்சாதி இந்துக்களின் தலைவராய அப்பாசாமி கங்காணி, ''நம்ம தோட்டத்திலே காலங் காலமா நடந்துவந்த முறைப்படி இச் சாதிக்காரர் கோயிலிலே திருவிழாவிற்குச் சமைக்கக் கூடாது; அதனொடு 'சாவுக்கு ஊர்சொல்றதும் குழிவெட்றதும்' இவனுங்கதான் செய்யணும்; இப்பச் செய்ய மறுக்கிறாங்க; அந்தப் பழக்கத்தை மீண்டும் கொண்டுவந்திட்டால் இந்த வருஷம் தைப்பூசம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடக்கும்'' எனத் தம் பக்க முடிபினை வெளியிடுகிறார்.

அடுத்த பக்கத்திலிருந்து பொன்னுசாமிக் கங்காணி பேச எழுகிறார்; ''நாங்கள் தெரிந்தோ, தெரியாமலோ இந்துங்க; எங்கள் தெய்வம் முருகனுங்க; அந்தக் கோயிலுக்கு மாதம் ஒரு வெள்ளி சந்தாக் கொடுக்கிறோம்; நாங்கள் உள்ளே போய்க் கும்பிட்டாலோ, சமைத்தாலோ தீட்டாம்; ஆனால், சுடலை வேலைகளை நாங்க செய்தா தீட்டில்லையாம்; அதனாலே நாங்கள்தான் செய்யணுமாம்; அந்தக் காலத்திலே உலகம் புரியாமல் ஜனங்க எதையோ செய்தாங்க; இப்ப ஜனங்க

கொஞ்சம் படிச்சிருக்காங்க; அவங்களை வற்புறுத்த முடியுங்களா? தகப்பனே பிள்ளையை வற்புறுத்தி வேலை சொல்ல முடியாதபோது, ஊர் மக்களை வற்புறுத்தி வேலை சொல்ல நம்மாலே முடியுங்களா?'' என்று தம் பக்கக் கருத்தினை அவர் கூறுகிறார்.

பற்பல ஆண்டுகளாய் அங்கு வேரூன்றி நிற்கும் இப் பிரச்சினை நன்கு அலசப்பட்டு துரையால் மூன்று முடிபுகள்கூறப்படுகின்றன. ,'இனித் தோட்டத்தில் 'பெரிய சாதி' எனப் பேசாமல் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்; யாராவது இறந்தால் அவரைச் சார்ந்தவர்களே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும்; தோட்டத்தில் ஒற்றுமை ஏற்படும்வரை திருவிழா இல்லை'' என்பனவே அம் முடிபுகள். அவர் முடிபுகளைக் கூறி முடித்ததும், மாவட்ட அதிகாரி தாம் சொல்ல வந்ததைச் சொல்லுதற்காக எழுகிறார். அந்தப் பகுதி மக்கள் நல்ல சாலையில்லாமல் துன்பப்படுவதைக் கண்ட அரசாங்கம், ஒரு நல்ல தார்ச்சாலை போட முடிவு செய்திருப்பதை அவர் கூறியதும், கூடியிருந்த அனைவரும் கைதட்டி வரவேற்கின்றனர்; தொடர்ந்து, ''அந்தச் சாலை உங்கள் கோயில் பக்கமாய் வருகிறபடியால் ஒருகால் கோயிலை அப்புறப் படுத்த வேண்டிவரலாம்; அப்படி ஒருநிலை ஏற்பட்டால் நீங்கள் உதவி செய்ய வேண்டும்'' என்கிறார். கூட்டத்தில் ஏற்படும் சிறுசலசலப்பு, நான்கு கதவுகள் பக்கமும் நின்ற காவலர்களைப் பார்த்தவுடன் அடங்கிவிடுகிறது.

தாய் வீட்டுச் சீதனமாய்த் தமிழர்களொடு இங்கு வந்த சாதி, இன்னும் தோட்டப் புறங்களில் வேரூன்றி நிற்பதனையும், 'சிப்பாயைக் கண்டஞ்சும்' குணம் இன்னும் சிலவிடங்களில் மறையாது நிற்பதனையும் இக் கதை மிக அழுத்தமாய்க் காட்டுகிறது.

நல்ல நோக்கத்தொடு அரசாங்கம் போடும் திட்டங்கள் சில சமயங்களில் வசதியானவரையும் சென்று சேர்வதைக் காட்டும் கதை 'இது எப்படி இருக்கு?'

மன்னார்சாமியும் சாமிக்கண்ணுவும் உருக்கிரும்பு உடைக்கும் தொழிலாளர்; சொற்ப வருமானமும் நிறைந்த குடும்பமும் உடையவர்; ஒருசீக்கியர் வீட்டின் பின்புறம் இருக்கும் இரண்டு அறைகளில் ஆளுக் கொன்றாய் வாடகைக்குப் பிடித்துத் தங்குகின்றனர். வீட்டில் குளிக்க வசதியில்லாததால் ஈயக் குட்டையில் குளிப்பதுதான் இவர்கள் வழக்கம். அவ்வாறு குளிக்கும்போது

ஒருநாள் மன்னார்சாமிக்கு, 'அங்கேயே ஒருகுடிசை போட்டுக் கொண்டு குடியேறிவிட்டால் என்ன?' என்று தோன்றுகிறது. நான்கெழுத்துப் படித்த சாமிக்கண்ணுவோ, அரசாங்கத்துக்கு முறையாக எழுதி, அனுமதி பெற்றுக் குடிசை போடலாம்' என் கிறார்; அனுமதி கேட்டுக் கடிதமும் எழுதுகிறார். மன்னார் சாமியோ அவ்வாறெல்லாம் எழுதாமல் அடுத்துவரும் சீனப் பெருநாளில் அங்கொரு சிறுவீடு கட்டிக்கொண்டு குடியேறி விடுகிறார். அவரைப் பின்பற்றிச் சில நாள்களிலேயே அங்குப் பல வீடுகள் முளைத்துவிடுகின்றன. சாமிக்கண்ணு அரசாங் கத்தின் பதிலுக்காகக் காத்திருக்கிறார். குடியேறிய சில காலத்தி லேயே அந்த மணல்வெளிக் கிராமத்தில் ஈயமண் இருப்பதாய்க் கண்டுபிடிக்கப்படுகிறது; அவ் வளவுதான்! அங்குக் குடியேறிய அவ்வளவு பேருக்கும் பக்கத்திலுள்ள தரிசு நிலத்தில் வீடுகட்ட நிலம் கொடுத்து, அந் நிலத்தை அரசு மீட்டுக்கொள்கிறது. "இதனில் ஒருவேடிக்கை என்னவென்றால், நிலமில்லாதவர்க்கு நிலம் கிடைத்தமைவரை சரியே, ஆனால், நிலமும் வீடுமுள்ள அந்த வீட்டுக்கார அம்மாளுக்கும் ஒருலாட்டு நிலம் கிடைத் துள்ளதே! இது எப்படி?'' எனக் கதை முடிகிறது.

திட்டங்கள் ஏழைகளுக் கென்றாலும், சில வசதியானவர் களும் தங்கள் செல்வாக்கால் அவற்றில் பங்கு பெறுவதை இக் கதை அழகாகச் சுட்டிக்காட்டுகிறது.

போதைப் பொருள் உட்கொள்ளும் பழக்கம் ஒருதலை முறையொடு நில்லாமல் அடுத்தடுத்து வரும்தலைமுறைகளையும் பாதிப்பதை 'மூன்றுமணி நேரம்' கதை உணர்த்துகிறது. 'காலத்திற்கேற்ப வணிக முறைகளை மாற்றிக்கொண்டாலே முன்னேற முடியும்' என்பது 'முதலாளி என்ன செய்வார்?' என்னும் கதையின் கருப் பொருள்.

பிற கதைகள் மனித உணர்வுகளை அடிப்படையாய்க் கொண்டவை.

செந்தமிழ்ச் சிந்தனைகள்: இந் நூல் பதினொரு கட்டுரை களைக் கொண்டது. தமிழர் வாழ்க்கையில் இன்று காணப்படும் பல குறைபாடுகளை ஆசிரியர் இக் கட்டுரைகளில் சுட்டிக் காட்டி யுள்ளார். "தமிழர் மிகச் சிறந்த மொழிக்கும், மிக உயர்ந்த பண்பாட்டுக்கும் உரியவர்'' என்று வரலாறுகள் கூறுகின்றன; ஆனால், வாழ்க்கையில் இல்லை; தமிழர் எதனை எடுத்துக் கொண்டாலும் தெளிவான சிந்தனை இல்லாத, வழிநடத்தும் வாழ்க்கை முறை இல்லாத, ஏளனத்திற்குரிய வாழ்க்கை நிலை

யில் உள்ளனர். தமிழரைத் தமிழ் பேசும் பலர் எடுப்பார் கைப் பிள்ளை போல நடத்தக் காணுகின்றோம். இவற்றுக் கெல்லாம் என்ன காரணம்? என்று கால்நூற்றாண்டாய்ச் சிந்தித்து, அவ்வப்போது எழுதிய கட்டுரைகளே இந் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழர் வாழக்கையொடு தொடர்புடைய பல செய்திகளையும் ஆசிரியர் இதில் சுட்டிக்காட்டியுள்ளார். 'தம்முடைய இன வரலாற்றை முறையாய் அறியாமையால் தம் இனத்தின் மீதே எழுந்த ஒருவெறுப்பு மனப்பான்மை, 'ஒன்றே குலம்'; 'ஒருவனே தேவன்' என்று ஒருபக்கம் பேசிக்கொண்டு மற்றொரு பக்கம் சாதிக் கோட்டைகளில் வாழும் போலித் தன்மை, 'உலகம் ஒன்று; தெய்வம் ஒன்று' என்று கூறிக்கொண்டு உட்சமயப் பூசல்களை வளர்க்கும் அறியாமை ஆகியவையே 'தமிழர் குலத்தைப் பீடித்திருக்கும் நோய்கள்' என்பது இவர் கருத்து. இந் நோய்கள் நீங்க, வழிபாடு, உணவு, உடை, சிந்தனை முதலாய அனைத்திலும் ஏற்பட வேண்டிய மாற்றங்களையே இந் நூலின் கட்டுரைகள் விளக்குகின்றன.

பாடு பாப்பா : தம் கால்நூற்றாண்டுக்கும் மிகுதியாய ஆசிரியத் தொழிலிலே அவ்வப்போது "குழந்தைகள் வீர உணர்வொடு வளரவேண்டும்" என்பது, இக் கவிதைகளில், வற்புறுத்தப்பட்டுள்ள ஒருமுக்கியக் கருத்தாகும். ஔவையின் 'ஆத்திசூடி' கூறி, அதே சந்தத்தில் கவிஞர் புதிய ஆத்திசூடி பாடிச் சந்தத்தை முடித்துவைத்திருக்கும் 'ஆத்திசூடி அணிந்த ஜோடி' இத் தொகுதியின் தலைசிறந்த பாடலாய் விளங்குகிறது.

" அறம் செய விரும்பு; அன்புநெறி கரும்பு.
ஆறுவது சினம்; ஆளுவது குணம்.
இயல்வது கரவேல்; இன்றமிழ் மறவேல்.
ஈவது விலக்கேல்; ஈகையைத் துறக்கேல்.
உடையது விளம்பேல்; உள்ளதைப் புலம்பேல்.
ஊக்கமது கைவிடேல்; ஊத்தைகளை மெய்விடேல்.
எண்எழுத்து இகழேல்; என்றும் தன்னைப் புகழேல்.
ஏற்பது இகழ்ச்சி; ஏமாற்றம் புகழ்ச்சி.
ஐயம் இட்டுண்; ஐக்கியம் நாட்டுக்கண்.
ஒப்புர வொழுகு; ஒப்பியதில் பழகு.
ஓதுவது ஒழியேல்; ஓதியதைப் பழியேல்.

ஔவியம் பேசேல்; ஔடதம் ஏசேல்.

அஃகம் சுருக்கேல்; அக்கினி பெருக்கேல்''

என்பது அப் பாடல். சந்த அழகொடு, சிந்தனை ஆழமும் நிறைந்தது இது.

கவிதைத் தொகுதிகள்

இளங்கோ கவிதைகள் : நெகிரி செம்பலான் மாநிலத்தைச் சேர்ந்த **சி. மா. இளங்கோ** கவிதைகள், இப் பெயருடன் வெளி வந்துள்ளன. ஒருகுறுங்காவியமும், பல்வேறு பொருள்களில் பாடப்பட்ட பிற கவிதைகளும் இத் தொகுப்பில் இடம்பெற் றுள்ளன.

'கொலைகாரி' என்னும் குறுங்காவியம் தோட்டப்புறப் பின்னணியில் அமைந்துள்ளது. கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருபாட்டாளிப் பெண், தான் கொலைகாரியாய்க் கதையை நீதிபதி ஒருவர்முன் கூறுவது போல, இக் காவியம் அமைந் துள்ளது. தோட்டக் காடுகளில் அழகான இளம்பெண்களிடம் கங்காணிமாரும், கிராணிமாரும் நடந்துகொள்ளும் முறையே இக் கதையின் அடிப்படை.

''பால்வெட்டுந் தொழிலாளி குமரியென்றால்,
பாதிக்கு மேல்மரங்கள் வெட்டித் தந்து,
கால்இஞ்சி அரைஇஞ்சி பக்கக் கோடு
கால்பாகம் நீண்டாலும் கவலை இல்லை!
வயதான முதியோர்கள் பழைய காட்டில்
வடிவழகு கன்னியரோ கண்ணுக் காட்டில்
கயமைக்கே ஆணிவேர் போன்றோர் தம்மைக்
கடமைதனில் இருத்திடுதல் சரியோ சொல்வீர்''

என அவள் கேட்கிறாள். தன்னிடம் தவறாக நடந்துகொண்ட ஒருகிராணியைக் கொலை செய்யவும் அவள் தயங்கவில்லை.

''புலிவாயி லகப்பட்ட மான்கள் கூடப்
போராட்டம் நடத்தாமல் சாவ தில்லை;
எலியதனை எடுத்துக்கொண் டாலும் பூனை
இன்னலுறும் படிசெய்த கதைகள் கண்போம்;
இளமேனி நங்கையரை ஆண்கள் சில்லோர்,
ஏமாளிக் கூட்டத்தா ரென்றே எண்ணிப்

புலிபோன்று பாய்கின்றார் காம நோயால்
புத்திவரச் செய்வதுதான் மகளிர் வேலை''

என அவள் தன் செயலுக்கு நியாயமும் காட்டுகிறாள். 'அறியாமையை அணிகலனாய்க் கொண்ட அக் காலத் தோட்டப் பெண்ணைப் போல் இக் காலத் தோட்டப்பெண் இல்லை' என்பதே கவிஞர் இக் காவியத்தின்மூலம் உணர்த்தும் உண்மை.

கவிஞர் மரபுகவிதையில் நாட்டம் மிகுந்தவர்; அதனைத் 'தொண்டன்' என்னும் கவிதையில் ஓர்உவமைமூலம் அழகாய் வெளிப்படுத்தியுள்ளார்.

''வெண்பாவிற் குரியதளை வெண்ட ளைபோல்
வெற்றிப்பா விற்குத்தலை தொண்ட னாவான்
பண்ணுக்கே கண்போன்ற இலக்க ணத்தைப்
பாராது புனைகின்ற கவிதை யைப்போல்
மண்ணுக்கே உதவாத செயலைச் செய்வோன்,
மாணிக்க வெண்பாவில் கலித்த ளையைப்
பண்புக்குப் புறமாக எழுது வோரின்
பயனற்ற செயலொக்கும்! தொண்டும் ஆகா!''

என்பது அக் கவிதை.

வேர்கள் ; கவிஞர் **வெ. தேசகுருவின்** 'வேர்கள்', பல்வேறு பொருள்களைப்பற்றிப் பாடப்பட்ட ஒருகவிதைத் தொகுப்பு. மொட்டு, மலர், காய், கனி என்னும் அங்கங்களில் இயற்கை முதல் மலையகத்தில் தமிழ்நிலைவரை அவர் பாடுகிறார்.

''மஞ்சமதில் தூங்குவதால் உடலுக் கின்பம்;
மதுக்கவியில் நீந்துவதால் மனத்திற் கின்பம்;
வெஞ்சமரில் வீரன்கை வாள்போல் அன்றோ,
மெத்தநல யாப்புக்குள் கவிதை துள்ளும்!''

என்னும் கவிதைப் பகுதி யாப்பில் அவருக்குள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது.

நாவல் : மலேசியத் தமிழ் இலக்கிய வகைகளிலே நாடகத்திற்கு அடுத்தபடி அதிகம் வளராத துறை நாவல் எனலாம். இதன் வரலாறு அறுபதாண்டு காலத்தது என்றாலும், அத்தி

பூத்தாற் போலவே இங்கே நாவல்கள் பூக்கின்றன. பல அருமை யான நாவல்களுக்கு வேண்டிய கதைப் பொருள்கள் எத்தனை யெத்தனையோ இந்த ஒருநூற்றாண்டு காலத் தமிழர் வாழ்வில் காணப்படுகின்றன. எனினும், ஏனோ அவை யெல்லாம் இன்னும் நாவல் வடிவம் பெறாமலே இருக்கின்றன.

இச் சூழ்நிலையில் இவ் வாண்டு வெளிவந்துள்ள **ஐ. இளவழகுவின்** 'இலட்சியப் பயணம்' மலேசியத் தமிழ் நாவல் களிலேயே ஒருசிறப்பு வாய்ந்த நாவலாய் அமைகிறது. 424 பக்கங்களில் ஆன இந் நாவலே இதுவரை வெளிவந்துள்ள நாவல்களில் அளவாலும் பெரிதாய் அமைகிறது.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இந் நாட்டுத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஒத்துழைப்பொடு 1972இல் ஒருநாவல் போட்டியை அறிவித்தது. மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாவல் எழுதுதற்கென நடந்த போட்டிகளில் இதுவே முதன்மையானது. 1975இல் அறிவிக்கப்பட்ட முடிபு களின்படி இது முதற்பரிசினைப் பெற்று, அவ் வாண்டே நூல் வடிவமும் பெற்றுள்ளது.

இந் நாவலின் ஆசிரியர் ஐ. இளவழகு, ஏற்கெனவே மலேசியத் தமிழ் வாசகர்க்குச் சிறந்த கவிஞராய் நன்கு அறிமுக மானவர். 1968ஆம் ஆண்டிலே பேரா மன்னர் **'பாவலர்'** என்னும் விருது வழங்கி இவரைச் சிறப்பித்தார். **'வேலன் வெண்பா நூறு'** இவரது கவிதை நூல். **'மனிதன் கதை'** என்னும் ஒருகட்டுரை நூலையும் இவர் வெளியிட்டுள்ளார்.

தோட்டப் புறத்திலேயே பிறந்து வளர்ந்தவரான இளவழகு, தோட்டப்புறப் பின்னணியிலேயே இந் நாவலை அமைத் துள்ளார். இதன் கதைத் தலைவன் மாதவன்; தோட்டப் பாட்டாளிகளில் ஒருவன்; எனினும், மற்றப்பாட்டாளிகளிலிருந்து வேறுபட்டுத் தனக்குள் ஒருகுறிக்கோளை வளர்த்துக்கொள் கிறான்; அதற்காகத் தன் காதலையும் தியாகம் செய்யத் துணிகிறான்; இறுதியில் தன் இலட்சியப்படியே ஒருதோட்ட முதலாளியாகிப் 'பாட்டாளித் தோட்டம்' என்று தோட்டத் திற்குப் பெயரிட்டு, தொழிலாளர்க்காகத் தான் செய்ய வேண்டிய நன்மைகளை யெல்லாம் திட்டமிட்டு ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்கிறான். மலேசியா விடுதலை பெற்றபின் தோட்டத் துண்டாடலால் பாதிக்கப்பட்ட காலத்திலிருந்து கதை தொடங்கி வளர்கிறது. கதையமைப்பு, நிகழ்ச்சிகள்

கதைமாந்தப் படைப்பு முதலிய அனைத்திலும் இந் நாவல் சிறந்து விளங்குகிறது.

தாளிகைச் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் : இவ்வாண்டு மலேசியத் தமிழ்த் தாளிகைகளில் சுமார் இருநூறு கதைகளும் ஐநூறு கவிதைகளும் வெளிவந்துள்ளன.

மலேசியத் தமிழர் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளைக் காட்டும் கதைகள்முதல், தனிமனித உணர்வுகளின் அடிப்படையில் எழுந்த கதைகள்வரை இவற்றில் உள்ளன.

பெரி. நீல. பழநிவேலனின் பணமுடிப்பு: இது மேடைப் பொய்களில் ஒன்றனை மையமாய்க் கொண்டது, விளம்பரத்திற்காக மேடைகளில் இரண்டாயிரமும் ஆயிரமும் அறிவித்துவிட்டு, நூறும் ஐம்பதும் தனியே தந்து, தங்களை விடுவித்துக்கொள்ளும் பெரிய மனிதர்களை இக் கதை அடையாளம் காட்டுகிறது. நீண்ட காலம் பொதுப்பணியாற்றிய பூவழகனார்க்கு விழா எடுக்கிறார் வடிவேலனார். அதன்மூலம் தமக்கும் சற்று வருவாய் தேடிக்கொள்வதே அவர் நோக்கம். சொல் ஒன்றும் செயலொன்றுமாய் வாழும் பல பெரிய மனிதர்கள், பெரிய தொகைகளை அறிவித்துச் சிறிய தொகைகளை உறைகளில் போட்டுத் தருகின்றனர். பதினைந்தாயிரம் வெள்ளி சேர்ந்திருப்பதாய்ப் பெருமையுடன் அறிவிக்கப்படுகிறது. பொதுத் தொண்டர் பூவழகனார் இவ் வகை விழாக்களின் இரகசியம் அறிந்தவர்; அத் தொகையை அப்படியே தமிழ்க் கல்வி நிதிக்குத் தந்துவிடும்படி விழா ஏற்பாட்டாளரிடம் கூறிவிடுகிறார். அவர்களும் நிதிதந்தவர்களும் செய்வதறியாது திகைப்பதாய்க் கதை முடிகிறது.

பல ஆண்டுகளாய்ச் சிறுகதைகள் எழுதிவரும் **ரெ. கார்த்திகேசுவின்** 'இருட்டில் ஓர்இதயம்,' போதைப்பித்தன் என்று தெரிந்தபின் தன் தம்பியையே கைது செய்யும் ஓர்அண்ணனின் கடமையுணர்வினைக் காட்டுகிறது.

போதைப் பழக்கம், குடிப்பழக்கம், கல்விப் பிற்போக்கு, பொருளாதாரப் பிற்போக்கு, குடும்பப் பிரச்சினைகள் முதலாயினவும் கதைகளில் இடம்பெற்றுள்ளன.

இவ் வாண்டு வெளிவந்த சுமார் இருநூறு புதுக்கவிதைகளில் பல்வேறு பொருள்கள் இடம்பெற்றுள்ளன. **தாப்பா ஏ. எஸ். பிரான்ஸிஸ்** இத் துறையில் மிகுதியாய்க் கவனம் செலுத்தியுள்ளளார். 'மீண்டும் பிறப்பாயா?' எனும் அவரது கவிதை குறிப்பிடத்தக்கது.

மீட்புத்
தூதறிவிக்கப் பிறந்த
யேசு பாலனே.........!

நீ
சமாதான மழை பொழிந்த
நாட்டில்
ஓயாத குண்டு மழை.........!

உன்
காலடி சுமந்த வீதிகளில்
காயாத
குருதி வெள்ளம்.........!

நீ
கல்லறைப் பிணம்
எழுப்பிய ஊரில்
வாழும் உயிர்கள்
கல்லறைக்குக்
கட்டாயப் பயணம்
அனுப்பப்படுகிறார்கள்.........!

நல்லன்பைத்
துறவுக் காட்டிற்கு அனுப்பிய
பாவ நெஞ்சங்களோ,
ஆணிகளையும்
சிலுவைகளையும்
ஏந்தி நிற்கிறார்கள்.........!

மாசற்ற பிஞ்சுகளின்
கைகளில்
துப்பாக்கிகள்
எழுதுகோல்களாய்த்
தரப்படுகின்றன.........!

உலகில்
மனித வாய்களுக்கு
உணவில்லை;
ஆனால்,
பீரங்கி வாய்களுக்கோ
ஓய்வில்லை.........!

உன்
சமாதானப் பிறப்பின்
அர்த்தம் அனர்த்தமாகிவிட்டது.........!

உன்
இரத்தம் வடித்த
அன்புப் போதனை
ஏட்டுச்சுரைக்கா யாகிவிட்டது.........!

யேசு தேவனே!
மீண்டும் பிறப்பாயா?
கல்நெஞ்சங்களில்
நல்அன்பை விதைப்பாயா!

வ. எ.	நூல்வகை	நூற்பெயர்	ஆசிரியர்	வெளியீடு
1.	நாவல்	இலச்சியப் பயணம்	இளவழகு, ஐ.	உதய சூரியன் நிலையம், சிறப்பான்
2.	சிறுகதை	தென்றல் சிரிக்கிறது	கலியபெருமாள், க., ஈப்போ,	தமிழ்க் குயில் பதிப்பகம்.
3.	கட்டுரை	செந்தமிழ்ச் சிந்தனைகள்	கலியபெருமாள், க., ஈப்போ.	தமிழ்க் குயில் பதிப்பகம்,
4.	கவிதை	இளங்கோ கவிதைகள்	இளங்கோ, சி. மா., சிரம்பான்	சரிகாட் இளவேணி.
	,,	பாடு பாப்பா	கலியபெருமாள், க., ஈப்போ.	தமிழ்க் குயில் பதிப்பகம்.
	,,	வேர்கள்	தேசகுரு, வெ., பத்துமலை	பத்துமலைத் தமிழ், இளஞர் மணிமன்றம்

ACTIVITIES OF SYDNEY TAMIL SANGAM

Vijaya Chandra Jayaram
& Suseela Jayaram

The Sydney Tamil Sangam, in New South Wales, Australia, is a home away from home for the Tamils living in Australia, conducting bi-monthly Tamil classes for the children, arranging get - togethers, and cultural programmes on festival days keep them in continuous touch with each other and the mother tongue.

It gives great pleasure in announcing that there is only one TAMIL SANGAM existing in Australia. All the Tamils have unanimously agreed to forget their differences and to work under one banner "Sydney Tamil Sangam", respecting the time honoured motto, "United We stand; divided we fall". It's equally important to point out that the Sangam has been incorporated under the Corporate Affairs Commission of N.S.W., Australia with limited liability-thus giving the Sangam the stablilty and credibility it deserves.

During the year (1983-84) we celebrated Deepavali in a very colourful manner, befitting the Tamils; Bharatiyar's Day celebrations also coincided with the Deepavali functions. We had a tableau in which Bharathiyar singing one of his famous songs-"ஓடி விளையாடு பாப்பா"-'was portrayed. Many children participated in it and the adults who gathered there were delighted at the children's enthusiasm and capability. Later there was a song concert followed by delicious Indian (Madras) food, prepared by our ladies.

Deepavali would not be complete without fire crakers. Children and adults immensely enjoyed fire works, etc.,

We celebrated Navarathri and the ladies did it in a nice fashion with the arrangement of dolls-கொலு-with a vast collections of dolls.

Another very successful function was a dance recital by Pushpa Bhuyan and her desciples organised by the Sangam. It was well attended and the audience were thrilled at their wonderful performance.

During December, X' Mas was celebrated with the full participations of children in which NATIVITY was enacted, Singing Carol Songs, etc.

Pongal as usual was a colourful event with plenty of games for young and not so young, followed by short speech about Pongal day and 'காணும் பொங்கல்' Day's importance. It was followed by 'feast'.

We conduct Tamil Classes for all children every 2nd and 4th Saturdays.

சிறப்புச் சொல்லடைவு

(எண்—பக்க எண்)

அகமது மரைக்காயர் 39
அகராதி நிகண்டு 4
அண்ணல் நபி 30
அனந்த பத்மநாபன் 75
அப்துர் ரவூர் பாகவி 75
ஆபூர்வராக கீர்த்தனைகள் 44
அம்மணி, இரா. 145
அம்மன் சத்திய நாதன் 75
அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாறு 112
அய்யாசாமி, மா 21
அரக்கன் மாயாண்டி 65
அரங்க ராசன், ச 35
அரசமுத்து 25
அருட்செல்வி, பா 41, 50
அருட்பா இசையமுதம் 43
அருணாசலம், வி 6
அலகாபாது பல்கலைக்கழகம் 115
அலிகார் பல்கலைக்கழகம் 115
அழகர் ராமானுஜம், வெ 41
அழகப்பராசு, த 39
அழகியல் 87
அழகேசன், சு 32
அறநெறிப்பாடம் 138
அறிவொளி, அ 75
அன்னிதாமசு 30, 39, 40
அனுஷாவின் சந்தேகம் 65
ஆக்கிரா பல்கலைக்கழகம் 115
ஆங்கிலத்தில் தமிழ் வரலாற்று நூல்கள் 109
ஆசிரமத்தில் ஆராய்ச்சி 66
ஆதாயதால் வந்த ஆபத்து 66
ஆதித்தன், ஏ 27
ஆந்திரா பல்கலைக் கழகம் 115
ஆய்வரங்க மாநாடு 139
ஆய்வேடுகள் 12
ஆராய்ச்சி நிறுவனங்கள் 115
ஆல்பர்ட், தே 114
ஆழ்வார்கள் வரலாறு 56
ஆளவந்தார், ஆர் 39, 42, 111
இசை நூல்கள் 42
இதுதான் இஸ்லாம் 70
இந்தியக் கட்டடக்கலை நூல்கள் 105
இயேசு காவியம் ஒரு திறனாய்வு 132
இராசராசன், ச 13
இராஜேந்திரன், எஸ் 13
இராமசாமி, சோம 148
இராமநாதன், எஸ். இ 45
இராமராசன், எல். கே 45
இராமன், மு. கோ 18
இராஜமய்யர், பி. இ 45
இலக்கண ஆய்வு 19
இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள் 35
இலக்கிய நூல்கள் 59
இளங்கோ கவிதைகள் 158
இளங்கோ, சி. மா 158
இளவழகு, ஐ 160
இஸ்லாத்தை அறிந்து கொள்ளுங்கள் 72
இஸ்லாம் ஓர் அறிமுகம் 79
இஸ்லாமிய வாழ்க்கை முறை 79
உதய ஞாயிறு 150

உதவி என்பது யாது 66
உபாசனா மார்க்கம் 70
உயர்ந்த உள்ளம் 149
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 34
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள் 3, 7
உவம உருபுகள் 41
உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையப் பதிப்புகள் 3
ஊஞ்சலிலக்கியம் 7
ஊர்ப் பெயர் நூல்கள் 111
எம்ஃபில் ஆய்வேடு-1983 138
எழுத்துச் சீர்திருத்தம் 139
ஃபீடல் காஸ்ட்ரோ 108
கட்டுரைகள் 19, 145
கடிகாசலம், ந 49
கண் திறந்தது 149
கதை வடிவில் வரலாறு 109
கந்தசாமி, கோ 138
கம்பரின் சமயக் கொள்கை 59
கருத்தரங்கில் கண்ட தமிழ் 125
கல்வி 137
கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள் 111
கலியபெருமாள், சு 153
கலைச் சொற்கள் 129
கலைத் துறை 150
கவிதை 146
கவிதைத் தொகுதிகள் 158
கற்றலும், பாடத்திட்டமும் 120
கன்னிப்போர் 62
கஜேந்திர சாபம் 65
காசிம் புலவர் திருப்புகழ் 59
காஞ்சி காமாட்சி 53
காஞ்சி புராணம் 5
கார்த்திகேசு, நெ 161
கிருட்டிணமூர்த்தி, சா 37
கிருட்டிணன், இரா 24
கீதாலட்சுமி, வே 41
குர்ஆனை அணுகும் முறை 79
குரு ராசர் பிருந்தாவன் மகிமை 57
குழந்தை சாமி, வ. செ 150
குளோரியா சுந்தரமதி, இல. 130
கேதாரி கௌரி விரதம் 74
கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் தமிழாய்வு 130
கோதண்டராமன், பொன். 33, 35
கோவிந்தன், சி 33
கௌமது முஹிய்யத்தீன் பிள்ளைத்தமிழ் 59
சக்கரபாணி, கே. 48
சச்சிதானந்தம், க. வா. 33
சசிவல்லி, எஸ் 39, 40, 98
சண்முக சுப்பிரமணியம், மா. 76
சண்முகம், செ. வை. 34
சத்திய பாமா 15
சந்திரசேகரன், மெய் 39
சமயக் கொள்கை விளக்க நூல்கள் 68
சமய நூல் 51
சர்மா, எஸ். எஸ். 136
சரித்திரம் போற்றும் சேரர் கதை 109
சரோஜினிபாய், எஸ். எம் 26
சாயபு மரைக்காயர், மு. சி 71
சாவித்திரி கௌரி பூசை 74
சான்றோர் வரலாற்று நூல்கள் 55
சிங்கப்பூரில் தமிழ் 136
சித்தர் வெண்பா 12
சிதம்பர ரகசியம் 73

சிந்து இலக்கியம் 9
சிவகாமி, ச 39, 40
சிவஞானம், ம. பொ 76
சிவப்பு விளக்கு 145
சிவலிங்கனார், ஆ 19, 39
சின்னப்பன், தி. இரா 41
சீத்தா ராமன், பா. 37
சுடலை முத்து, க. 37
சுப்பிரமணியர் நூறு 13
சுப்பிரமணியன், பூ 40
சுயம்பு, பி. பெ 37
சுருளிவேல், செ. ப 30
சூதர்வாக்கியம் 15
சூரியவாகட வெண்பா 14
செந்துறை முத்து 76
செப்பேடு 103
செல்லப்பன், சு 76
சென்னி துரேந்திர நாதன் 12
சேசையா, மா. 40, 76
சேதுராமன் 148
சொக்கலிங்கம், நெல்லை, சா 33
சொல் 23
சொல்லின் செல்வி 73
சோமசுந்தரம், வை 41
டே எங் சூன் 139
டேவிட், சி. ஜே 139
தஞ்சைப் பல்கலைக்கழகம் 117
தஞ்சை மராட்டிய செப்பேடுகள் 113
தஞ்சை மாவட்ட நூற் பெயர்கள் 111
தண்டாயுதம், இரா 139,152
தராசு 145
தமிழ் கற்பிக்கும் கலை 128
தமிழ்ச் சுவடி அட்டவணை 10
தமிழ்ச்சுவடிப் பதிப்புகள் 1
தமிழ் நேசன் 148
தமிழில் கணிணி 138
தல வரலாறு 52
தன்னாட்சி கல்லூரிகள் 117
தனிப்பாடல்கள் 6
தனியார் பதிப்புகள் 3, 11
தாப்பா. பிரான்சிஸ், ஏ. என் 161
திண்ணப்பன் 139
திருத்தணிகேசன் இதயாஞ்சலி 45
திருநாவுக்கரசு க. த 40
திருமயிலை உலா 11
திறனாய்வு 128
துர்க்கை சித்தர் 76
தேசகுரு, வே 159
தேவநாராயணன் 48
தொல்காப்பியம் 36
தொல்காப்பியர் காலம் 37
நரசிம்ம ஐயங்கார், கி 148
நலங்கிள்ளி, அரங்க. 29
நளதமயந்தி 149
நஜன் 76
நாகசாமி, இரா 4
நாடகம் 149
நாவல் 159
நிர்மலாதேவி, இரா 10
நூல் வெளியீடு 149
பகவதி, கே 39, 40
பட்டினத்தார் 149
பதிப்புப்பணி 2
பதிப்பு முறை 15
பல்கலைக் கழகங்கள் 115
பழனிவேலு, ந 146
பாகவதக் கதைகள் 64
பாட்டியல் இலக்கண வரலாறு 29, 38
பாரதப் பழங்குடிகள் 107
பாலகிருஷ்ணன், இரா 25
பாலசார நாதன் 4
பாலசுப்பிரமணியன், க 31
பாலசுப்பிரமணியன், சி 31
பாலமுருகன் பதிப்பக வெளியீடு 36

பாஸ்கர மார்த்தாண்டன், பொன் 76
பிச்சை, அ 28
பிரபந்த தீபிகை 30
பிரபாஞானகுமாரி, ஆர் 131
புலியூர் கேசிகன் 77
பூபதி, ம. ரா 38
பெருமாள், ஏ. என் 9
பொருள் 27
மகாலட்சுமி, சு. 23
மணவை முஸ்தபா 77
மதுரைக் காமராஜ்பல்கலைக் கழகம் 34
மருத்துவ நூல்கள் 81, 90
மல்லிகா, பா 38
மலேசியாவில் தமிழ் 152
மனையியல் 81
மனோ, டி 131
மஹதி 71
மாணிக்கம், பா 26
மாணிக்க வாசகர் 56
மாதவன், வே. இரா 1, 8, 39, 40
மாருதிதாசன் 77
மிழலைத் தொண்டன் 77
மீனாட்சியம்மன் திருப்புகழ் 8
முகம்மது காசீம் மிஸ்பாஹி, எஸ் 77
முகம்மது தாஹா, மு 77
முத்தப்பன், பழ. 9
முதுகலை ஆய்வேடு-1983, 131
முருகேசன் இரா. 31
முஹியித்தீன் பிள்ளைத் தமிழ் 77
மூதறிஞர் பட்டம் 126
மெய்க்கீர்த்தி 102
மெய்யப்பன் 77
மோகனம், தி. சு 145
யூதர்களின் வரலாறு 57
ரதி ராசு 72
ரஷீதா 71, 77
ரெஞ்சனி ஸ்வர்னமாய் 132
லங்குபள்ளி சின்னசாமி நாயுடு 77
வசந்தா 132
வடமலை நிகண்டு 4
வர்ம சூத்திரம் 15
வரலாற்று நூல்கள் 52
வன்மீக நாதன், கோ 77
விநாயகம், வே 14
விராலிமலை வேலவர் குறவஞ்சி 11
விஜயகுமாரி 132
விஜயலட்சுமி, ர 40
வீரப்பன, பா 33
வீராசாமி, தா. வே 39
வெங்கட்ராவ், வே 78
வெள்ளைக்காரன் கதை 9
வேர்கள் 159
வேலன் வெண்பா நூறு 160
வேலாயுதனார், மு. த 78
ஜான் செல்வராசு 15
ஜெசி ஆக்னஸ் 132
ஜெய செந்தில்நாதன் 77
ஸ்ரீ சுப்பிரமணிய ஹிருதயம் 74
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பஞ்ச ரத்தினம் 44
ஷெரீப், க. மு 75, 77
ஷோடச கணபதி 67
ஸ்டீபன்சன் 132
ஸங்கீத ஸம்ரதாயப்ரதர்சிநீ 44
ஹஜ் 72
Alagesan, S 133
Berlah mercy 132
Dhasera than 132
Elaya Perumal 133
Malaya moliyilakhanam 133
Nachimuthu 133
Research Papers 134
Padmanabhan Thampi 133
Sheela Asirvatham 133
Subramania Pillai, C 135
Subramanian, M 133
Tamil polity 113

✱

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை-600113

புதிய வெளியீடுகள்

1.	தொல்காப்பியம்—பொருள்—களவியல்	... 85 00
2.	The Contributions of the Tamils to Indian Culture	
	Vol, 1. Language & Literature	... 18 00
	Vol. 2 Art & Architecture	... 30 00
	Vol. 3 Socio Cultural Aspects	... 90 00
	Vol. 4 Religion & Philosophy	... 80 00
3.	எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி-1	... 47 00
4.	சிவகிரி குமர சதகம்	... 39 00
5.	புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை	... 27 00
6.	தேரையர் அந்தாதி	... 33 00
7.	குசலவர் சுவாமி கதை	... 36 00
8.	குணவாகடம்	... 40 00
9.	தோட்டுக்காரி கதை	... 28 00
10.	சங்கத் தமிழரின் மனிதநேய மணி நெறிகள்	... 24 00
11.	உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு	... 35 00
12.	Selected Poems of Bharadhidasan Translation—Tamil—English	... 60 00
13.	,, ,, ,, —Tamil—Malayalam	... 60 00
14.	,, ,, ,, —Tamil—Kannada	... 60 00
15.	,, ,, ,, —Tamil—Telugu	... 60 00
16.	பாரெலாம் பரந்த தமிழர்	... 25 00
17.	காண்டேகரும் கா. ஸ்ரீ.ஸ்ரீ.யும்	... 18 00
18.	Chieftains of the Sangam Age	... 20 00
19.	A Comparative Study of Tamil and Japanese	... 15 00
20.	தமிழும் பிற துறைகளும்	... 35 00
21.	பெண்ணியம்	... 25 00
22.	விலங்கியலும் தமிழியலும்	... 10 00
23.	தமிழும் தெலுங்கும்	... 15 00
24.	தமிழ் ஆய்வுக் களங்கள்	... 70 00
25.	வ. உ. சி.யும் தமிழும்	... 18 00
26.	தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புக்கள்	... 14 00
27.	புதுமைப்பித்தன். கதைகளில் சமுதாய விமரிசனம்	... 20 00
28.	கனகாபிஷேக மாலை—திறனாய்வு	... 16 00
29.	இருபதின் கவிதைகளில் சமூக நீதிக்கோட்பாடு	... 20 00
30.	பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்	... 60 00
31.	தொல்காப்பியம்—பொருள்—பொருளியல்	... 32 00